# அகத்தியர் தேவாரத்திரட்டு

உரையுடன்

கழக வெளியீடு

கழக வெளியீடு : ௯க

உ

திருச்சிற்றம்பலம்

# அகத்தியர் தேவாரத்திரட்டு

[அகத்திய முனிவர் திரட்டியருளிய
தேவாரப் பதிகங்கள்]

கயப்பாக்கம்

சதாசிவ செட்டியாரவர்கள் பி ஏ

எழுதிய

பதவுரை, விளக்கவுரையுடன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6.     1966     சென்னை-1.

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed 1: 1925
Reprint : June, 1929; July, 1947;
May, 1955; June, 1966

Q23 : 417xIx
K6

# AGATHIYAR THEVARATH THIRATTU

Appar Achakam, Madras-1.

# பதிப்புரை

ஒரு நாட்டு மொழியுள் அமைந்து விளங்கும் நூல் வகையுள், அந்நாட்டின் உயிரெனத் திகழும் சமயச் சார்பான நூல்களே மக்கட்கு விழுப்பய னளிப்பனவாம். ஒரு நாட்டு மக்கள் விலங்கியற்கையினின்றும் நீங்கி மக்கட் பண்புடன் மேம்பட்டு நிற்பது, அவர்கள் மேற்கொண் டொழுகும் சமய மாண்புக்கும் சமயநூல்களின் சிறப் புக்கும் உற்ற பயனாகும். ஆகவே ஒரு நாட்டின் சமய மேம்பாடே அந்நாட்டு மக்கட்பண்பின் மேம்பாடாகும். சமயத்துறையில் சிறப்புறாத நாடு விலங்கியல் மாக்களைப் பெற்ற நாடேயாம் என்க. நந் தமிழ்நாட்டை நோக்கின், உலகத் தோற்றத்தில் முதற் சமயமாய்த் தோன்றிய நம் சைவசமயமே எவ்வகைச் சமயத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் பெருஞ் சமயமாய்த் திகழ்கின்றது.

இப்பெருஞ் சமயம் புறச் சமயத்தால் நலிவுற்ற ஒரு காலத்தே, அது, பண்டைப்பெருஞ் சிறப்புடன் நின்று பொலியுமாறும், வழிவழிச் சிறந்து பெருகுமாறும் தொண்டாற்றிச் சிறந்தவர்கள் ஞானசம்பந்தர், நாவுக் கரசர், சுந்தரர் என்ற மூவருமாவர் என்பதை யாவரு மறிவர். இவர்கள் இறைவனை மனமுருகிப் பாடிய தேவாரமே தற்காலத்துச் சைவசமயத்துக்கு உயிராய்த் திகழ்கின்றது. இத் தேவாரப் பதிகங்களே மக்கள் மனத்தில் பத்தி என்னும் பயிரை வளர்க்கும் பெருங்கொண்டல்களாய்த் திகழ்கின்றன.

நமக்குக் கிடைத்திருக்கும் தேவாரப் பதிகங்கள் எழுநூற்றுத் தொண்ணூற்றேழாகும். இத் தேவாரம் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டுப் பெருநூலாய்த் திகழ்கின்றது. இதன் சுருக்க நூலாக "அகத்தியர் தேவாரத் திரட்" டென்னும் இந்நூல், நாடோறும் ஓதிப் பயன் பெறும் பொருட்டுச், சிவாலய முனிவர் என்ற தமிழ் முனிவரின் விருப்பத்திற் கிணங்கத் தொகுக்கப்பட்டுத் தமிழ் நாட்டில் உலவி வருவதாகும். இதனை அன்புடன் நாடோறும் ஓதுவோர் தேவாரம் அடங்கலும் ஓதினவர் ஆவர் என்பது ஆன்றோர் கருத்து.

மூவர் தேவாரப் பதிகங்களின் தெளிபயனாய் வடித்தெடுத்து ஆக்கப்பெற்ற இந் நூலின்கண் அமைந்த இருபத்தைந்து பதிகங்களையேனும், சைவசமயமாம் முதற் சமயத்துப் பிறந்தோர் நாடோறும் ஓதியுணர்ந்து வாழ்க்கைப்பயன் எய்துவாராக. இந்நூலைப் பொருளுணர்ச்சி பெற ஓத வேண்டிச், சைவசமய சீலராய்த் திகழ்ந்த க. சதாசிவ செட்டியாரவர்களின் இன்னுரையோடு மகிழ்வுடன் வெளியிடுகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# முன்னுரை

சமயாதீதப் பழைமை வாய்ந்த சைவசமயச் சார்பினை யடைந்த எல்லவர்க்கும் கீழவனாகை எண்ண ஒருவனுண் டெனின், அவன் யானே. அன்றியும் 'கல்லாத புலைறிவிற் கடைப்பட்ட நாயேன்,' 'செம்மை நலமறியாத சிதடன்,' 'நுண்மாண் நுழைபுல மில்லான்' என்பனவாதியாகப் பெரியார் பணித்த யாவும் எனக்கே உரியன. இனையனாதலின் யான் யாதொரு செயலினையும் செய்தற்கு அறிவாற் றல்கள் சிறிதும் அமையாதவன் என்று சொல்லவேண்டிய தின்றே! இஃதிவ்வாறாகப் பசுகரணம் நீங்கிப் பதிகரணம் பெற்ற உண்மை நாயன்மார்களது திருவாக்குக்களை உரைத் தற்கு முன்னுற்ற காரண நிகழ்ச்சிகள் யாவெனின் அவை பின் வருவனவாம்.

எளியேனது வாழுள்முறையில் என்னால் அறிந்து விரும்பாமலே என் கைபபட்ட முதற்புத்தகம் **அகத்தியர் தேவாரத்திரட்டே.** அவ்வாறு பெற்ற பருவமும் செவ்வனே உணர்ச்சி கூடாத சிறுபருவமென்பதும் சொல்லத்தக்கதே யாம். சொல்லும் பொருளுமறியாத அவ்வடிநாட் டொட்டே அது நாடோறும் ஓதப்பெற்றது. ஓத ஓத உள்ளூற ஓர் ஆர்வம் பெருகிற்று. என்றும் இதனை விடற்க வென ஓர் உறுதியும் காழ்த்தது. திருவருளும் இதற்குத் துணை செய்வதாயிற்று.

பிறகு காலப்போக்கில் பல சமயங்களில் பல உண் மைகள் தோன்றி நிலவுவனவாயின. அவையிற்றையெல்

லாம் அவ்வப்போது எனது நல்லூழ் காரணமாக நானுற்ற பல நல்லன்பரிடம் உரைத்தாங்கு உரைத்தாங்கு அவர் அவைகளையும் அவைபற்றி என்னையும் பாராட்டி ஊக்குவாராயினர். அதுவே காலவளவில் அடியேனை அடங்கன் முறையினையும், அஃது ஏனைய திருமுறைகளையும் அடைவித்தது. பன்னிரு திருமுறையினைக் கிடைத்தவாறு இதுவே. 'திருமுறை பன்னிரண்டு; காலவளவினமைந்த மாதம் பன்னிரண்டு' என்னும் சிற்றறிவு இடைப்பட்டு, 'இத் திருமுறை பன்னிரண்டினையும் பன்னிரண்டு மாதங்களின் முறையாக மாதத்திற்கு ஒருமுறையாக ஓதி ஆண்டளவில் முடித்தல் வேண்டும்,' என்னும் அவாவினை விளைத்தது. அவ் அவாவும் என்னைவிட்டகலாது நின்று நிலவுவதாய்த் திருமுறையினை முப்பத்தோராம் முறையாக இப்போது ஓதச்செய்கிறது. இச்செயல் என்றுமுளதாக, இறைவன் இன்னருள் புரிக. பெரியோர் ஆசிகூறுக; பத்தர் பல்லாண்டிசைக்க. நிற்க, இந்நியமம் ஒன்றே என்னை இப்போ தவனாகச் செய்தது என்பேன். அதற்கு யானியற்றும் கைம்மாறு யாதென அறியேன். அறிவினும் ஆற்றுஞ் செயலிலாதவனென வறிகின்றேன். இனி இந்நிலையில் யான் இடரினும் தளரினும் எனது உறுநோய் தொடரினும், உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் அதனைத் தெய்வமென யாண்டும் எப்போதும் கும்பிட்டு வழிபடுவதொன்றே செயத்தக்கதாம். இதனான் எளியேனுக்கு அத் திருமுறைகளினமைந்த சிறிய பற்றினைந்தென யாரும் அறிதல் சாலும். இனி நிகழ்ச்சி கூறுவேன்.

திருமுறைகளிலேயும் அவைகளை யுடையாராகிய உண்மை நாயன்மாரிடத்திலேயும் உற்ற பற்றொன்றே, அவைகளையும் அவரையும் உலகினுக்குணர்த்துமாறு

உலகையாளுடைய உமையம்மையாருக்கு ஒப்புயர்வில்லா வொரு தனிமுதல்வன் கூறிப் பொலியும் சிவரகசிய மகேதிகாசத்தை வெளியிடத் தூண்டிற்று. அதனைச் செய்து முடிக்கும் அறிவாற்றல் ஒரு சிறிதுமில்லாதவனென என்னைக் கண்டுவைத்தும் மேற்கொண்டு தொடங்கச் செய்ததும் அவ் ஆசை மிகுதியே. ஆயினும் 'முயற்சி திருவினை யாக்கும்' என்னும் உண்மை விளங்கவோ என்னோ அது பல தலங்களை யடைவித்தது; பல நன்னீராடச் செய்தது; பல மூர்த்தங்களைத் தரிசிப்பித்தது; பல பெரியோரைச் சந்திப்பித்தது; பல மடங்களிற் புகுவித்தது; பல சபைகளிற் செலுத்தியது. நலமதொன்றடைதற்கு உறும் இடையூறு பல வளவா மன்றோ! பல இன்னல்கள் இடையுற்றன; உறுதியென உலகினர் பற்றும் உறுதொழிலையும் ஒழித்தேன். நாட்டவரும் வீட்டவரும் ஆர்த்தனர். நவைநெறி விலக்கித் திருநெறி காட்டும் திருமுறை, அவற்றை நாணுமாறின்றிப் பூணுமாறு செய்தது. யாதாயினும் எண்டோண் முக்கண் எம்மானது இச்சை நிகழ்வதாக.

இஃதிவ்வாறாக, ஏழையேன் சென்ற சென்ற சபைகளினும், தலங்களினும் திருமுறைகளைப்பற்றி உரை நிகழ்த்தும்போதெல்லாம் சந்தித்த அப்பெரியார் பலரும் புழுத்த நாயினுங் கடையனாய என்னையும் பொருளென வெண்ணித் 'திருமுறைச் சார்பாக ஏதாயினும் ஒன்று செய்யுங்கள்' என்று வற்புறுத்துவாராயினர். அவர் என்பாற் கொண்ட நல்லெண்ணம் என்னை ஒருவாறு ஊக்கி யாளாக்குவதாக அமைந்தஞான்று, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைவனாகச் சென்றேன், சென்று சந்தித்த செந்நெறிச் செல்வர் பலர், ஆண்டும்

அஃதே கூறி வேண்டினர். இவ்வளவு நிகழ்ந்தும் அரைமன முடையவனாகவே இருந்தேன். இருந்தவனைத் தட்டி யெழுப்பி இச் சிறு முயற்சியினைச் செய்யுமாறு தொழிற் படுத்திவிட்டவை திருமுறையினும் அதனை யுடையார்மாட் டும் ஒரு சிறிதும் பயிலாதவர்களும், பயினும் நல்லூழ் வாய்க்கப் பெறாதவர்களுமாய சிலர், பொருளல்லாத பொருட்பேறொன்றையே பெரிதாகக் கருதித், திருமுறை களிற் சில பகுதிகட்கும் அகத்தியத் தேவாரத் திரட்டிற்கும் தமது உணர்ச்சித் தடுமாற்றத்திற்கு ஏற்றவாறு கண்டு வெளியிட்டு வெளியாய வெளியீடுகளே யாம்.

இஞ்ஞான்றே என் ஆப்த நண்பரும் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக அமைச்சருமான சைவத்திருவாளர் வ. திருவரங்கம்பிள்ளை யவர்கள் எளியேனை, அகத்தியர் தேவாரத்திரட்டினைக் கையிற் கொடுத்து, இதற்கு ஒருரை காணவேண்டுமென ஏவுவாராயினர். இவ் ஏவுகையே கடைசியாக எளியேனை, இதனைச் செய்தற்கு எவ்வாற்றானும் யான் போதிய னல்லனென என்னை யானே கண்டுவைத் தும், துணிந்து இறங்கி யிதனைச் செய்வித்தது.

செய்யுங் காலமெல்லாம் 'நான் இது செய்வேன்' என் னும் தற்போதம் என்னிடத்து எப்போதும் நிகழாமையை யானறிவேன் ; என்னெஞ் சறியும் ; என்னுள்ளங் கவர் கள்வனு மறிவான். இதனால் யான் அஞ்சுவ தியாதொன்று மில்லை ; அஞ்ச வருவது மில்லை. ஏழையேன் செய்த இவ் வேலையில் கொள்ளத் தக்க வுளவெனின் அவை இறைவன் திருவுளச் செயலாம் ; தள்ளத்தக்கவை யுளவெனின் அவை அறிவினைத் தகையும் மறைப்புச் செயலெனத் தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார் எம்மை யுடைமை எமை யிகழார். இகழ்வாரெனின், அவை புறமாதலிற் கேளா மென்ப.

இதனை யுரைக்குங்கால் பல சொற்களும் பல தொடர்களும் பல பாட்டுக்களும் பொருள் காண முடியாதிருந்த போதெல்லாம் எளியேன் என் புன்மதிகொண்டு நிச்சயம் பண்ணிவிடுவது மிகப் பெருங் குற்றமென்று உட்கொண்டு அவைகள் திருமுறைகளின் வேறிடங்களில் வருவன கொண்டு ஒப்புநோக்கி நிச்சயித்தலைச் செயலாகக்கொண்டு நின்றேன். மறைக்கு மேற்கோள் மறையேயன்றி வேறொன்றின்றாகலான் திருமுறை வாக்கியங்களே எடுத்துக் காட்டப் பட்டன வன்றி வேறுரைகள் கொள்ளப்படவில்லை. சிறுபான்மையாகக் கொண்டவைகள் அம் மறைகளைப் பின்பற்றும் செயல்பற்றியே யாகும்.

மீண்டும் யான் வேண்டுவதொன்றுண்டெனின், அது சைவவுலகத்தையும் தமிழுலகத்தையும் இச் சிறு வேலையைக் கண்ணோட்டஞ் செய்து பாராட்டிக் கொள்ளுமாறு வேண்டுவதே யாம். இது பிறிதொரு முறை யான் செய்யுமாறு இறைவ னாணையால் என்னைச் சாருமேல், மேல் திருவருள் துணைசெய்வது கொண்டும், என் ஆப்த நண்பராகிய சைவத் திருவாளர் துணை செய்வது கொண்டும், இதனைத் திருத்திச் சிறக்க அமைக்க எண்ணியுள்ளேன். இதுவே எனது எளிய விண்ணப்பம்.

சபாக்கிருகம்
சைவசமய பத்தசன
சபை, சென்னை.
குரோதனவாண்டு
மேடமதி.

சிவ சிவனடியா ரடியார்களின்
சரண கமலங்களிற்
றொண்டு பூண்டொழுக விரும்பும்
க. சதாசிவன்

# உள்ளுறை


பக்கம்

தேவாரத்திரட்டின் வரலாறு 11
ஆசிரியர் வரலாறு 12
திருப்பதிகக் கருத்துரை ௩

**திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் பதிகங்கள்**

திருப்பிரமபுரம் ௭
திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் ௩௮
பஞ்சாக்கரத் திருப்பதிகம் ௪௭
நமச்சிவாயத் திருப்பதிகம் ௫௮
திருப்பதிக்கோவை ௮௬
திருவெழுகூற்றிருக்கை ௧௨௨
திருக்கடவூர்மயானம் ௧௩௫
திருவாழ்கொளிபுத்தூர் ௧௭௫
திருப்பூந்தாராய் ௨௦௭
கோளறு திருப்பதிகம் ௨௩௩

**திருநாவுக்கரசுநாயனார் பதிகங்கள்**

திருவதிகைவீரட்டானம் ௧௯
நமச்சிவாயத் திருப்பதிகம் ௬௬
திருப்பதிக்கோவை ௯௮
கோயில்திருவிருத்தம் ௧௪௫
திருப்பூவணம் ௧௫௫
திருவதிகைவீரட்டானம் ௧௮௫
திருக்கயிலாயம் ௨௧௭
திருவாரூர்த்திருவிருத்தம் ௨௪௪

**சுந்தரமூர்த்திநாயனார் பதிகங்கள்**

திருவெண்ணெய்நல்லூர் ௩௧
திருப்பாண்டிக்கொடுமுடி ௭௫
ஊர்த்தொகை ௧௧௧
திருக்கடவூர்மயானம் ௧௬௬
திருப்புன்கூர் ௧௯௬
திருக்கழுக்குன்றம் ௨௨௭
திருத்தொண்டத்தொகை ௨௫௨

பாட்டு முதற்குறிப்பகராதி ௨௬௪

# அகத்தியர் தேவாரத் திரட்டின் வரலாறு

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்னும் சைவசமய ஆசிரியர் மூவரும் சுடருருவாகிய சிவ பரம்பொருளே முழுமுதற்கடவுள் என்று உயிர்கள் அறிந்து வழிபட்டு உய்யுமாறு அருளிச்செய்த தமிழ்மறைகளாய தேவாரம் ஓரிலக்கத்து ஈராயிரந் திருப்பதிகங்களை உடையன. அவைகளுள் எழுநூற்றுத் தொண்ணூற்றேழு பதிகங்கள் ஒழிந்து ஒழிந்தன இறைவன் திருவுளப்பாங்கின்படி இறந்துபோயின. எஞ்சிநின்ற இவற்றைத் திருவாரூரிலே அரசாண்ட அபயகுலசேகர சோழ மன்னன் வேண்டுகோளின்படி, திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரது அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகள், தில்லையிலே பொற்சபையின் மருங்கிலே திருவறையிலே கண்டெடுத்து ஏழு திருமுறைகளாக வகுத்து உலகிற்கு உதவியருளினார். இவ்வேழு திருமுறைகளை அடங்கன்முறை என்று சொல்லப்பெறும்.

கல்வி அறிவு ஒழுக்கங்களிலே சிறந்து விளங்கிய சிவாலய முனிவரென்பார் இவ் அடங்கன் முறையினது பெருமையையும், இதனை முறையோடு நாடோறும் ஓதுபவர் வீடுபேறடைவர் என்பதையும் அறிந்து நாடோறும் அவ்வாறு ஓத விழைந்தனர். ஆயினும், அது முற்றுப்பெறுமையினாலே அவர் தில்லையையடைந்து பொற்சபையிலே ஐந்தொழில் இன்பக்கூத் தியற்றும் சிவபெருமானை வணங்கித், தமது கருத்து முற்றுப்பெறுமாறு பன்னெடுங்காலம் தவஞ்செய்தார். அதுகாலை, 'சிவாலய முனிவனே! நீ பொதிய மலையிலே உறையும் அகத்திய முனிவனையடையின் உனது கருத்து முற்றுப்பெறும்' என்று ஒரு வான்மொழி எழுந்தது. அதனைக் கேட்ட அவர் கூத்தப்பிரானை வணங்கி விடைபெற்றுப் பொதியிலை யடைந்து மூவாண்டு அருந்தவஞ் செய்தார். அகத்திய முனிவர் அதற்கிரங்கி வெளிப்பட்டு அடங்கன்முறை முழுவதையும் அவருக்கு எடுத்தியம்பிப் பொருள் அருளிச்செய்து அதனினின்றும் இருபத்தைந்து திருப்பதிகங்களைத் திரட்டி ',இவைகளை முறையே ஓதின் அடங்கன்முறை முழுவதையும் ஓதியதன் பயன் கிடைக்கு'' மென்று கூறிக் கொடுத்து மறைந்தருளினார். சிவாலய முனிவர் அவ்வாறே அவ் இருபத்தைந்து பதிகங்களையும் நாடோறும் நெடுங்காலம் ஓதிக் கொண்டிருந்து வீடுபேற்றை யடைந்தனர்.

# ஆசிரியர் வரலாறு

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

சோழவளநாட்டிலே சீர்காழியிலே அந்தணர் குலத்திற் கௌணியர் கோத்திரத்தையுடைய சிவபாதவிருதயர் தவத்திற் றோன்றிய ஆளுடைய பிள்ளையார் என்பவர் தம் தந்தை திருக் குளத்திற்குப் போகிறபோது உடன்போய் அவர் நீரில் மூழ்கிய போது பிதாவைக் காணுமல் குளக்கரையினின்று அழுகையில் பரமசிவம் உமாதேவியாரோடு தோன்ற, உமையாள் தந்த பொற்கிண்ணத் திருமுலைப்பாலையுண்டு திருஞானசம்பந்தர் எனத் திருப்பேர் பெற்றனர். இவர் தோணியப்பரைத் "தோடுடைய செவியன்" என்னுந் தேவாரத்தாற் றுதித்துத் தந்தையார் தோளிற் சுமந்துசெல்லத், திருக்கோலக்காவிற்குச் சென்று கைகொட்டித் தேவாரமோதப், பெருமான் பொற்றாள மருளப் பெற்றனர். திருவரத்துறையில் முத்துச்சிவிகை பெற்றனர். திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லிமழவன் மகளுக்கிருந்த முயலகநோயை நிவர்த்தித்துத், திருப்பட்டீச்சுரத்தில் முத்துப் பந்தரைப் பெற்றுத், தந்தையார் செய்யும் யாகத்துக்கு உதவி யாகும்படி ஆவடுதுறையில் உலவாக்கிழி பெற்றுத்தந்து அவரைச் சீகாழிக்கு அனுப்பினர். பின்னர் ஆலயவழிபாட்டுக்காகத் திருமருகலை யடைய, அங்கு அரவின் விடத்தா லிறந்த செட்டிப் பிள்ளையை உயிர்ப்பித்துத், திருவீழிமிழலையில் படிக்காசுபெற்று மகேசுவரபூசையை நடத்தினர். பின்பு சின்ஞளில் திருநாவுக்கரசு நாயனருடன் சென்று வேதாரணியத்தில் அவராற் றிறப்பித்த கற்கதவைத்தேவாரமோதி யடைத்தனர். மதுரையில் பாண்டிமா தேவியார், குலச்சிறைநாயனர் விருப்பத்தின்படி எழுந்தருளி, அங்குச் சமணரின் சார்பால் அம்மதம்புக்க அரசனுக்கு அடியவர் காரணமாக வந்த சுரநோயைப்போக்கி, நீராலும் நெருப்பாலும் சமணர்களை வென்று சைவப்பயிரைத் தழைப்பித்துத், திருக் கொள்ளம்பூதூரில் ஓடத்தைத் தேவாரமோதிக் கடப்பித்தனர். பின்னர்த் தம்மை எதிர்த்த புத்தன் றலையில் இடியை வீழ்த்தித், திருஓத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாகப் பாடித், திருமயிலையில் அங்கத்தை அணங்காக்கித், திருமணநல்லூரில் விவாக முடித்துச் சிவசோதியில், அம்மணத்திற்கு வந்திருந்த அடியவர் பலரையும் கலப்பித்துத் தாமுங்கலந்து உலகத்தை வாழ்வித்தனர்.

## திருநாவுக்கரசு நாயனர்

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாள மரபில் புகழனருக்குத் திலகவதியாரும், மருணீக்கியாரும் பிறந்தார்கள். மருணீக்கியார் சமணர்போதனையாற் சைவசமயத்தைத் துறந்து சமணராய்த் தருமசேனரென்று பேர் பெற்றிருக்கையில், தமக்கை திலகவதியார் திருவதிகையில் சிவாலயத் தொண்டு செய்துகொண்டு தம்பியரான மருணீக்கியாரின் விதியைக் குறித்துச் சிவபெருமானிடம் விண்ணப்பித்துக் கொள்ளுவர். இவர் விண்ணப்பத்திற்கு இரங்கிய சிவபெருமான் அவருக்குச் சூலைநோயை ஏவ, அந்நோய் திடீரென உண்டாயிற்று. அதனைப் பொறுத அவர் திலகவதியாருக்குத் தெரிவிக்க, அவர் திருநீறளித்து ஐந்தெழுத்தை அறிவுறுத்தித் திருவதிகையில் சிவசந்நிதானத்திற் கொண்டுபோய்விட, அவர் பரமசிவத்தைத் தியானித்துக் 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்னுந் தேவாரமோதிச் சூலைநோய் நீங்கப்பெற்றனர். அருமைத் திருப்பாசுரங்களைப் பாடப்பெறுந் திருவாக்குடைமையின் இவருக்குத் திருநாவுக்கரசரெனத் திருப்பெயர் உண்டாயிற்று. இவர் சமண சமயத்திலிருந்து சைவராயினமையின் இவரிடம் பகைகொண்ட சமணர்கள் தமதரையனுக்குணர்த்த, அவன் தன் மந்திரியை விட்டு நாயனரை அழைப்பிக்கவும், அரசனை மதியாது வெறுத்ததேயன்றிப், பின்னும் சிவ கட்டளையால் ஆவன ஆகுகவென்று துணிந்து சென்று அச் சமணரால் நீற்றறையில் வைத்தபோதும், விடமுண்பித்தபோதும், யானைக் காலில் இடற விட்டபோதும், கற்றூணிற் பிணித்துக் கடலிலிட்டபோதும் ஐந்தெழுத்தோதியிருந்து ஊறுநீங்கி உலகமேத்த நின்றனர். பின்னர்ச் சிவபெருமானல் திருத்தூங்கானை மாடத்தில் இடபக்குறியும் சூலக்குறியும் பெற்றும், திருநல்லூரில் திருவடி சூட்டப்பெற்றும், அப்பூதி நாயனரின் மகனுயிரை அரவுவிடத்தினின்றும் மீட்பித்தும், திருவீழிமிழலையில் பொற்காசு பெற்று அடியவர்கட்கு அமுதளித்தும் திருமறைக்காட்டில் கற்கதவைத் திறப்பித்தும் திருவையாற்றில் கைலைக்காட்சி கண்டும், பன்னாள் பரமசிவத்தின் அருட்பெருக்கை உலகுக்கறிவித்து ஆங்காங்குத் தேவாரமோதித் திருப்புகலூரில் உழவாரத்தொண்டு செய்யாநிற்கையில், தம்மை

மாயப்பெருங்கடலில் வீழ்த்தவந்த வானவர் மங்கையரை மதியாதும், அவர் மயலில் படாதும் உழவாரத் தொண்டு செய்யும்போது, சோதனையாக எதிர் தோன்றிய பொன்னையும் மணியையும், பருக்கைக் கற்களைப்போல் பொருட்படுத்தாது அப்புறமெறிந்தும் 'எண்ணுகே னென்சொல்லி எண்ணுகேனே' என்னுந் தேவாரமோதிச் சிவபெருமான் திருவடி நீழலைப் பெற்றனர்.

## சுந்தரமூர்த்தி நாயனார்

கயிலாயத்தில் பரமசிவத்துக்குப் பூமாலை தொடுத்தல் முதலிய தொண்டுகளைச் செய்துகொண்டிருந்த ஆலால சுந்தரர் ஒருநாள் பூ வெடுக்கப் பூங்காவிற்குப் போனபோது, அவ்விடத்திற் பூக் கொய்துகொண்டிருந்த அநிந்திதை, கமலினியென்னும் உமையம்மை தோழிகளிடத்தில் மனஞ்சென்றதையும் அம்மாதர்களும் இவரிடத்தில் உள்ளங் கொண்டதையும் சிவபெருமானறிந்து, ஆலால சுந்தரரையும் அம் மாதர்களையும் பூமியில் பிறக்கும்படி கட்டளையிட்டனர். அக்காரணத்தினால் திருமுனைப்பாடி நாட்டிலே திருவாரூரிலே வாழ்கின்ற சடையனாரென்னும் ஆதிசைவ அந்தணருக்குத் திருமைந்தராய், இசைஞானியார் திருவயிற்றினிடமாகப் பிறந்து, நம்பியாரூரர் என்னுந் திருப்பேர் பெற்று வளர்ந்து வருகையில், அந்நாட்டரசராகிய நரசிங்க முனையனார், சடையனார் இசைவு பெற்றுத் தமக்குப் புத்திரராகப் பெற்றுக்கொண்டு, தமது குலத்துக்குரிய வில்வித்தை முதலாகியதும், அந்தணர் குலத்திற்குரிய வேதாகம சாத்திரங்களையும் கற்பித்துச் சடங்கவிசிவாசாரியார் குமாரத்தியை மணம்பேசி நம்பியாரூரருக்கு மணவினை நடத்தும்போது, சிவபிரான் ஒரு கிழ அந்தணர் வடிவங்கொண்டு வந்து தமக்கு 'நீ அடிமை' என்று வழக்கிட்டு அழைத்துக்கொண்டு அருட்டுறை யென்னும் ஆலயத்துட் சென்று மறைந்து விடைமே லிவர்ந்து 'நீ முன்னமே நமக்குத் தொண்டன் ; ஆகையால் இப்போது உன்னைத் தடுத் தாட்கொண்டோம். இன்று முதல் நீ நம்மைப் பித்தன் என்று அடியெடுத்துப் பாடக் கடவை,' என்று அருளிச்செய்ய, அவர் அவ்வாறே பாடுவாராயினர். பின்னும் இவ்வாறே தலமெங்கும் பாடக் கடவையென்று கட்டளையிட, அதைக் கேட்டுச் சுந்தரரும்

தலங்கள்தோறுஞ்சென்று திருப்பதிகங்கள் பாடி மகிழ்ந்து கூத்தாடித் திருவாரூரிலிருக்க, முன்னமே பார்வதியாரின் தோழிக ளிருவரில் சுவாமியின் கட்டளைப்படி கமலினி யென் பவள் கணிகை மாதினிடத்தில் பிறந்து பரவையார் என்னும் பேர்பெற்று வளர்ந்தனர். சுந்தரமூர்த்திகள் அப் பெண்ணைப் பரமசிவத்தின் திருவருளால் மணம்செய்துகொண்டு பல தலங் களைத் தரிசித்துத் திருவொற்றியூர்க் கெழுந்தருளிச் சுவாமியைத் தரிசித்துக்கொண்டிருந்தனர். அப்போது நாயிறு என்னும் ஊரிலே நாயிறுகிழார் என்பவருக்கு அனிந்திதை புத்திரியாராகப் பிறந்து சங்கிலியார் என்னுந் திருப்பேர் பூண்டு மிகுந்த சிவபத்தி யுடன் திருவொற்றியூரை யடைந்து திருத்தொண்டு செய்து கொண்டிருத்தலைக் கண்டு விருப்பங்கொண்டு, (அதைச் சிவ பெருமான் மூலமாயறிந்த சங்கிலியார் தம்மைவிட்டுப் பிரியாதபடி உறுதிமொழியை விரும்ப, அங்ஙனமே மகிழமரத்தடியில் சுவாமி முன்னிலையில் உறுதி செய்து கொடுத்து) மணம் செய்து கொண்டு சிலநாளிருந்து திருவாரூருக்குப் போகப் புறப்பட்டுத் திருவொற்றியூர் எல்லையைக் கடந்தவுடனே தம் இரண்டு கண் களும் பார்வை நீங்க, மனவருத்தத்தோடு திருவெண்பாக்க மடைந்து பதிகமோதி ஊன்றுகோல் பெற்றுக், காஞ்சியை யடைந்து பதிகமோதி ஒருகண் பெற்றுக், திருவாரூருக்குச் சென்று மற்றொரு கண்ணும் பெற்றுச் சிவபெருமானைத் தூது விடுத்துப் பரவையாருடலை நீக்கி, அவ்விடத்திற் சிலநாளிருந்து மலைநாட்டுக் கெழுந்தருளினர். அங்கு அவிநாசி வழியில் முதலை யுண்ட பிள்ளையை மீட்டுக் கொடுத்துச் சேரமான் பெருமாணய னூர் எதிர்கொண்டு வரவேற்க, இருவருந் திருவஞ்சைக்களத்தி லிருக்கையில் பரமசிவத்தின் கட்டளைப்படி தேவர்கள் வெள்ளை யானையை யனுப்பச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளை யானையின் மீதும், சேரமான்பெருமாணயனூர் குதிரையின்மீதுமாக எழுந் தருளித் திருக்கயிலாயத்திற்குச் சென்று இருவருஞ் சுவாமியின் திருவருள் பெற்று மகிழ்ச்சியிற் றிளைத்தார்கள். பார்வதி தேவியா ருத்தரவின்படி பரவையாரும் சங்கிலியாரும் கைலையை யடைந்து முன்போல் உமையம்மைக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தார்கள்.

---

திருச்சிற்றம்பலம்

# தேவாரச் சிறப்பு

கொண்டுகுல சேகரனும் கோன்பால் வந்து
குஞ்சரத்தோன் அருள்செய்த கொள்கை யெல்லாம்
மண்டுபெருங் காதலுடன் சொல்லி அந்த
வண்டமிழின் பெருமைதனை வகுத்துச் சொல்வார்
கண்டபெரு மந்திரமே மூவர் பாடல்
கைகாணு மந்திரங்கண் ணுதலோன் கூறல்
எண்டிசையுஞ் சிவனருளைப் பெறுதற் காக
இம்மொழியின் பெருமையையான் இயம்பக் கேள்.

அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடும்
அதுபோலன் றிதுவென்றும் உளதா முண்மைப்
பரபதமும் தற்பரமும் பரனே யன்றிப்
பலரில்லை யென்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாதாற் றெதிரே யோடும்
என்புக்கும் உயிர்கொடுக்கும் இடுநஞ் சாற்றும்
கரியைவளை விக்குங்கல் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே.

—திருமுறைகண்ட புராணம், கரு, கஎ

திருச்சிற்றம்பலம்

உ

*திருச்சிற்றம்பலம்.*

## அகத்திய மகாமுனிவர்

*திரட்டியருளிய*

# தேவாரத்திரட்டு

# மூலமும் உரையும்

---

*தேவார நுதலிய பொருள்*

நேரிசை வெண்பா

குருவுருவும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயில்
அரனுருவும் என்தலைமேல் ஆக்கும்—திருவடியும்
சிட்டான அர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலயர்க்கென்று
இட்டார் அகத்தியனார் எட்டு.

(பதவுரை) *குருஉருவும் - முழுமுதற் பரம்பொருளாகிய இறைவன் ஞானசாரியத் திருமேனி தாங்கிவந்து பக்குவான்மாக்கட்குச் செய்யும் அருட்டிறமும், வெண்ணீறும் - திருவெண்ணீறும், எழுத்து அஞ்சும் - திருவைந்தெழுத்தும், கோயிலும் - திருக்கோயிலும், அரனுருவும்-சிவபெருமானது திருவுருவும், என் தலைமேல் ஆக்கும் திருவடியும் - புல்லிய எனது தலைமேலணியாகச் சூட்டுகின்ற திருவடியும், சிட்டான அர்ச்சனையும்-மேன்மை தங்கிய சிவார்ச்சனையும், தொண்டும் - அடிமைத்திறமும், எட்டும் - ஆகிய இவ் வெட்டினையும் தெளியவுணர்த்தும் திருப்பதிகங்*

களை, அகத்தியனார் - அகத்திய மகாமுனிவர், சிவாலயர்க்கு என்று - தம்மை வழிபட்டிரந்த சிவாலய முனிவர்பொருட்டு, இட்டார் - தொகுத்துக் கொடுத்தருளினார் என்றவாறு.

உம்மைகள் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது.

குருவுரு - தொன்றுதொட்டே மலமற்றுத் தன்னைக் கூடினவர்களாலும் கூடாதவர்களாலும் அறிதற்கரிய எங்கும் நிறைந்த விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூத்திற ஆன்மாக்களையும் முறையே, தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூவகையாலும் அருள்செய்து மும்மலங்களையும் வீழ்த்தி அருளமுதம் உண்பித்துத் திருவடியில் வேறற நிற்பிக்கச் செய்துவரு முறையில், சகலருக்குப் படர்க்கையில் தோன்றி யருள்புரியும் குருவடிவம்.

வெண்ணீறு - அவ்விறைவன் றிருவருளாகிய இறைவியின் வடிவம்.

எழுத்தஞ்சு - இறைவனது நாமமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷர மந்திரம்.

கோயில் - பசுகரணங்களா லறியாவண்ணம் எங்கும் நிறைந்த இறைவன் ஆன்மாக்களின் பொருட்டுத் தயிரின்கண் நெய்போலக் கலந்திருந்து சிறப்பு விளக்கத்தோடு எழுந்தருளியிருக்கும் தெய்வத் தானங்கள்.

அரனுருவம் - சிவனது உருவத்திருமேனி.

ஆட்கொள்ளும் ஆன்மாக்கள் முடிக்கணியாகச் சூட்டுகின்ற முறைபற்றி என் தலைமேலாக்குந் திருவடி எனப்பட்டது. இஃது 'உருவென்றுணரப்படாத அடி' எனப்படும் திருவருளைக் குறிக்குமாகலின் 'என்றலைமேலாக்குந் திருவடி' என்றது தோன்றாத் துணையாயிருந்து ஆன்மாக்களின் மாசு துடைத்துத் தன்னை அவைகட்குத் தந்து அந்தமில் பேரின்பத்திருத்தும் இறைவனது அருட்டிறத்தை உள்ளுறைப் பொருளாய்க் கொண்டுளது.

சிட்டம் - மேன்மை; கடைகுறைந்து நின்றது.

பிறவிப் பெருங்கடல் நீந்தி வீடுபேறு அடைய விரும்பும் உயிர்களுக்கு இன்றியமையா வழிகள் இவையேயாதலின், இவ் வழிகள் எட்டும் ஆசிரியர் அகத்தியனாரால் சிவாலய முனிவர்க்குத் தொகுத்துத் தந்தருளப்பட்டன.

## திருப்பதிகக் கருத்துரை

### நிலைமண்டில ஆசிரியப்பா

தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகும்
நீற்றுப் பதிகம் நிகழ்த்துங் காலை
மாற்றுப் பரையின் வரலா றாகும்
௫. துஞ்சல் காதல் சொற்றுணை மற்றும்
அஞ்செழுத் துண்மை யருளிய தாகும்
ஆரூர் தில்லை காட்டூர் மூன்றும்
சீரார் கோயில் திறமைய தாகும்
ஒருரு வரிய பாளை வடிவே
௧௦. மருவா ரென்ற வண்டமி ழைந்தும்
திருவார் மேனிச் செய்திய தாகும்
பொடியுடை யரவணை யந்த ணாளன்
அடியிணை தந்த அருளே யாகும்
பந்து வேற்று கொன்றிவை மூன்றும்
௧௫. நந்தலில் அருச்சனை நாட்டிய தாகும்
வேய்குலந் தில்லை யெனுமிவை மூன்றும்
நாயனும் அடிமையும் நாட்டிய தாகும்
இப்பரி சகத்திய முனிவன் இருநிலத்
தொப்பரு மூவர் ஓதுதே வாரம்
௨௦. முழுதையுஞ் சிவாலய முனிக்கறி வித்துப்
பழுதிலா அவையுட் பரிந்தெடுத் திருபத்
தைந்துயர் பதிகமும் அறிவுறத் திரட்டி
எண்ணரும் அடங்கல் யாவையும் உணரும்
புண்ணியம் இவைகொடு பொருந்தும் என்றவன்
௨௫. தனக்கருள் செய்தனன் தகவுற அதனல்
தீதிலா அகத்தியத் திரட்டினை உலகில்
ஓதினர் அடங்கலும் ஓதின ராவரே.

(ப - ரை.) தோடு கூற்று பித்தா மூன்றும் - 'தோடு' 'கூற்று' 'பித்தா' என்னும் மொழிகளுள் ஒரோவொன்றை முறையே முதலாகவுடைய மூன்று திருப்பதிகங்களும், பீடு உடை தேசிகன் பேர் அருள் ஆகும் - ஒப்புயர்வற்ற பெருமையையுடைய ஞானதேசிகனது பெரிய திருவருட்டிறத்தை விளக்கும் தன்மையவாகும்; நீற்றுப்பதிகம் - 'மந்திரம்' என்னும் முதன்மொழியை உடைய திருவெண்ணீற்றுத் திருப்பதிகம் ஒன்றும், நிகழ்த்துங்கால - எடுத்துக் கூறுமிடத்து, மாற்றுப்பரையின் வரலாறு ஆகும் - பிறவிக்கேதுவாகிய மலத்தை நீக்குதற்குரிய பராசத்தியின் சொரூபக் கிரமத்தை விளக்கும் தன்மையதாகும்; துஞ்சல் காதல் சொற்றுணை மற்றும் - 'துஞ்சல்' 'காதல்' 'சொற்றுணை' 'மற்று' என்பவற்றை முறையே முதலாக உடைய நான்கு திருப்பதிகங்களும், அஞ்சு எழுத்து உண்மை அருளியது ஆகும் - திருவைந்தெழுத்தின் உண்மையினை அருளிச் செய்தனவாகும்; ஆரூர் தில்லை காட்டூர் மூன்றும் - ''ஆரூர்' 'தில்லை' 'காட்டூர்' என்பவற்றை முறையே முதலாக உடைய மூன்று திருப்பதிகங்களும், சீர் ஆர் கோயில் திறமையது ஆகும் - சிறப்பினையுடைய திருக்கோயிற் றிறத்தினை விளக்குவனவாகும்; ஒருரு வரிய பாளை வடிவே மருவார் என்ற வண்தமிழ் ஐந்தும் - 'ஒருரு' 'வரிய' 'பாளை' 'வடிவேறு' 'மருவார்' என்று சொல்லப்பட்டவைகளை முறையே முதலாக உடைய வளப்பம் பொருந்திய தமிழ்ப்பதிகங்கள் ஐந்தும், திரு ஆர் மேனி செய்தியது ஆகும் - கண்டோரைத் தன் வயமாக்கும் சிவபெருமானது திரு உருவத்தைச் சொல்லும் தன்மையவாகும்; பொடியுடை அரவணை அந்தணாளன் - 'பொடியுடை' 'அரவணை' 'அந்தணாளன்' என்னும் தொடர்களை முறையே முதலாக உடைய திருப்பதிகங்கள் மூன்றும், அடியிணை தந்த அருளே ஆகும் - சிவபெருமானது திருவடிகளிரண்டும் நல்கும் அருட்டிறத்தை விளக்குவனவாகும்; பந்து வேற்று கொன்று இவை மூன்றும் - 'பந்து' 'வேற்று' 'கொன்று' என்னும் இவற்றை முறையே முதலாக உடைய இம் மூன்று திருப்பதிகங்களும், நற்றல் இல் அருச்சனை நாட்டியது ஆகும் - கெடுதலில்லாத சிவார்ச்சனையின் திறத்தை நிலை பொறுத்திய தன்மையவாகும்; வேய் குலம் தில்லை எனும் இவை மூன்றும் - 'வேய்' 'குலம்' 'தில்லை' என்னும் மொழிகளை முறையே முதலாக உடைய இம்மூன்று திருப்பதிகங்களும், நாயனும் அடிமையும் நாட்டியது ஆகும் - ஆண்டான் அடிமைத்திறத்தை நிலைநாட்டிய தன்மையவாகும்; இ பரிசு - மேலே சொல்லப்பட்ட இந்த முறையில், அகத்திய முனிவன் - அகத்திய மகாமுனிவர், இருநிலத்து - இப்பெரிய நிலவுலகத்தில், ஒப்பு அரு மூவர் - தம்மைத்தாமே நிகர்க்கும் சைவசமயகுரவர் மூவர், ஓது தேவாரம் முழுதையும் - திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருப்பதிகங்கள் முழுவதையும்,

சிவாலயமுனிக்கு - சிவாலய முனிவருக்கு, அறிவித்து - அறியுமாறு கூறி, பழுது இலா அவையுள் - முச்குணவயப்பட்டு முறை மறந்து உரைக்குநர் பாக்களிற் காணப்படும் குற்றம் சிறிதும் தம் பாலில்லாத அத்திருப்பதிகங்களுள், உயர் இருபத்தைந்து பதிகமும் - மேலான இத் திருப்பதிகங்களிருபத்தைந்தையும் பரிந்து எடுத்து - விரும்பி எடுத்து, அறிவுறத் திரட்டி - ஓதுவோர்க்கு உண்மை ஞானம் பொருந்தும்படி திரட்டியருளி, எண் அரும் - அளவிறந்த, அடங்கல் யாவையும் - அடங்கன்முறைத் திருப்பதிகங்கள் எல்லாவற்றையும், உணரும் புண்ணியம் - ஓதி யுணரும் புண்ணியம், இவைகொடு பொருந்தும் என்று - இவ் விருபத்தைந்து திருப்பதிகங்களையும் ஓதியுணர்தலால் வந்து கூடுமென்று, அவன் தனக்கு - அச் சிவாலய முனிவருக்கு, அருள் செய்தனன் - அருளிச் செய்தார்; அதனால் - அக்காரணம் பற்றி, தீது இலா அகத்தியத் திரட்டினை - குற்றமற்ற 'அகத்தியத் திரட்டு' என்னும் இத்திருமுறையை உலகில் - புண்ணிய பூமியாகிய இவ்வுலகத்தில், தகவுற - ஓதும் முறை பொருந்தும்படி ஓதுகின்றவர்கள், அடங்கலும் ஓதினர் ஆவர் - அடங்கன் முறைத் திருப்பதிகங்கள் எல்லாவற்றையும் ஓதினவராவார்கள் என்றவாறு.

பீடுடைத் தேசிகன்-பழைமையாகக் கிடந்து வருத்துகிற மல மறுத்தாளும் பெருமையுடைய ஞானாசாரியன். பரை - பராசத்தி, பரை ஆதி இச்சை ஞானம் கிரியை என்னும் ஐவகைச் சத்திகளுள்ளும் முதற் சத்தியான மூலசத்தி. திருநீறு பராசத்தி சம்பந்தமுடைய தென்பது "பராவணமாவது நீறு" என்னும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்கானே பெறப்படுகின்றது. 'மாற்றுப்பரை' என்னும் பெயர், முன்னர்த் திரோதான சத்தியாய் நின்ற வதுவே பின்னர் அநுக்கிரக சத்தியாய் மாறு முண்மையைக் குறிக்கும் என்ப. அஞ்செழுத்து - ஸ்ரீ பஞ்சாட்சரம்.

'அடியிணை' ஊன்றிய பாதமும் தூக்கிய பாதமும்; இவை முறையே மறக் கருணையையும் அறக் கருணையையும் குறிக்கும். அருச்சனை - சிவவழிபாடு.

'நந்தலில் அருச்சனை'யாவது இறப்பில் தவமாகிய சிவார்ச்சனை. முழுமுதற் கடவுளை யல்லது பிறரைக் குறித்துச் செய்யும் அருச்சனையானது மாறுந்தன்மைத்தாய பதமுத்தியை யல்லாமல் 'அந்தமிலின்பத் தழிவில் வீடா'கிய பரமுத்தியைத் தர வல்ல தன்மூகலின் அது நந்தும் அருச்சனையாம். நாயன் - நாயகன். மூவர் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் தேவாரம் அருளிய சைவசமய குரவர் மூவர். தொகைக் குறிப்பு.

# மூவர் ஓது தேவாரம்

## ஆதியில் பாடப்பட்டன

| | | |
|---|---|---|
| திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் | கசு000 | பதிகங்கள் |
| திருநாவுக்கரசுநாயனார் | சுக000 | ,, |
| சுந்தரமூர்த்திநாயனார் | நஎ000 | ,, |

ஆக-க0உ000 திருப்பதிகங்கள்

## இப்போது உள்ளன

இவைகள் மூவர் முதலியோரால் ஸ்ரீ சிதம்பரத்தில் திருவறையிலே சேமிக்கப்பட்டிருந்து கரையான் மூடிச் சிதைத்தனவாகவும், நடேசப்பிரான் திருவருளால் அவற்றுள் எஞ்சி நின்றவையே திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் திருவருள் துணைகொண்டு நம்பியாண்டார் நம்பிகள் அபயகுலசேகர சோழ ராஜாவின் முன்னிலையில் திரட்டியருளிய ஏழு திருமுறைகளாக விளங்கும் எகசு திருப்பதிகங்கள் அடங்கிய அடங்கன் முறையாம். இதன் விவரணம் வருமாறு:—

| நாயனார் | தலப்பதிகத் தொகை | பொதுப்பதிகத் தொகை | இரண்டின் றொகை |
|---|---|---|---|
| திருஞானசம்பந்தர் | நஎஎ | எ | நஅச |
| திருநாவுக்கரசர் | உஎரு | நஎ | நகஉ |
| சுந்தரமூர்த்திகள் | கூரு | ரு | க00 |
| ஆக | எசஎ | சுகூ | எகூசு |

அடங்கல் - அடங்கன் முறை. தகவுற - தகவு - சைவ சீலம் வாய்ந்து தீக்ஷை பெற்றுப் பண்முறையில் ஓதும் நியமம். அகத்தியத்திரட்டு - அகத்தியத்தேவாரத்திரட்டு - நூற்பெயர். இப்பாயிரத்தில் அகத்தியத்திரட்டெனவே யாப்பும், நூற்பெயரும், செய்தோனும், சிவாலய முனிக்கு எனவே கேட்போரும், வழியும், 'எண்ணரு மடங்கலியாவையு மூணரும் புண்ணிய மிவைகொடு பொருந்தும்' எனவே, பயனும், 'இப்பரிசு' எனவே நுதலிய பொருளும், 'தோடு கூற்றுப் பித்தா......நாயனு மடிமையும் காட்டிய தாகும்' எனவே நுதலிய பொருளின் வகையும் கூறியவாறு காண்க. தமிழ் வழங்கு நிலமே இந்நூல் வழங்கு நிலமென எல்லையும் குறிப்பிற் கொள்க. மேற்போந்த வெண்பாவும் அகவலும் பிற்காலத்து அபியுக்தர் திருவாக்குகளாகக் காண்கின்றன.

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

# திருப்பிரமபுரம்

---

## பண் - நட்டபாடை

### குருவருள்

திருச்சிற்றம்பலம்

**தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்**
**காடுடையசுட லைப்பொடிபூசியென்னுள் ளங்கவர்கள்வன்**
**ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த**
**பீடுடையபிர மாபுரமேவிய பெம்மான்இவனன்றே.**

(ப - ரை.) *தோடு உடைய - தோட்டினையணிந்த, செவியன் - திருச்செவியை உடையவனாய், விடையேறி - இடப வாகனத்தை யூர்ந்து, ஓர் தூவெண் மதிசூடி - ஒப்பற்ற தூய்மையுடைய வெள்ளிய சந்திரனைச் சிரத்திற் சூடி, சுடலை காடு உடைய - சுடுகாட்டிலுள்ள, பொடி பூசி - விபூதியை யணிந்து, என் உள்ளம் கவர்கள்வன் - என்னைத் தன்வயப்படுத்திக்கொண்டவன், எடு உடைய - இதழ்களை உடைய, மலரான் - மலர்களால், முனைநாள் - முற்காலத்து, பணிந்து எத்த - அருச்சித்து வழிபட்டதனால், அருள்செய்த - இன்று என்னை யாட்கொண்டு ஆளுடையபிள்ளையாரெனவும், திருமுலைப்பால் ஊட்டுவித்துத் திருவருள் ஞானத்தைப் பாலித்து ஞானசம்பந்தனெனவும் அநுக்கிரகஞ் செய்தருளிய, பீடுடைய - பெருமையையுடைய, பிரமாபுரம் - பிரமதேவர் வழிபட்டேத்திய இங்கு, மேவிய - எழுந்தருளியிருக்கும், பெம்மான் இவன் - பெருமானாகிய இதோ என் கண்முன் தோன்றும் இவ்விறைவனே என்றவாறு.*

*இத்திருப்பதிகம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், தம் பொருட்டுச் சீகாழிப்பிரம தீர்த்தக்கரையில் தோணியப்பர் உமை அம்மையாரோடு எழுந்தளிச் சிவஞானங்குழைத்த திருமுலைப் பாலை ஊட்டுவிக்க உண்டகாலத்துத் தம் தந்தையாகிய சிவ*

பாதவிருதயர் குளத்தினின்றும் தமது வழிபாடு முடித்து எழுந்த போது இதனைக் கண்டு 'எச்சில் மயங்க இப்பாலை ஊட்டியவர் யாவர்' எனக் கேட்க, தமது சிறுவிரலை எடுத்துச் சுட்டி ஆகாயத்திலே இடபாரூடராய் உமாசகிதராய் எழுந்தருளியுள்ள சிவபெருமானைக் காட்டி ஓதி யருளியதாம்.

தோடு - பெண்கள் அணியும் காதணி. சிவபெருமானைத் துதிக்கின்ற இப்பதிகத்தில் நாயனர், தமக்குக் கிடைத்த திருவருளை வியந்து பாராட்டி இறைவியினது அணிகலமான தோட்டினைக் கூறியருளினார். உமையொருபாகன் இறைவனாதலின், அம்மை பாகத்துத் தோடும் இறைவர் பாகத்துக் குழையும் அணிந்த கோலமே, "தோடுடையான் ஒரு காதிற்றூய குழை தாழ" "தோடு பெய்தொரு காதினிற் குழைதூங்க" "தோலும் துகிலும் குழையும் சுருடோடும்" எனத் திருவருட்பாக்களில் யாண்டும் வருமாறு காண்க. தம்மைக்கேட்ட தந்தையார்க்குப் பிரமபுர மேவிய இறைவனைத் திருவடையாளங்களுடன் விளக்கிக் காட்டியதும், உலகத்தோர் வீடு (மோட்சம்) பெற எடுத்தருளப் பட்டதும், பிள்ளையார், தமக்குக் கிடைத்த பேரருட்டிறத்தைப் பாராட்டித் துதித்ததுமாகிய இப்பதிகத்தின் றொடக்கத்தில், அத்துதியை ஏற்றுக் கொள்ளுமாறு "தோடுடைய செவிய" னெனத் திருச்செவியைச் சிறப்பித்தருளினரென்க. அன்றியும் இது, முன்னொரு காலத்து அசுவதரன், கம்பளன் என்னும் இரண்டு கந்தருவர்கள் சிவபெருமானைப் பாடிக் காதிற் குழையுருவமாக இருக்கப் பெற்றுக்கொண்டார்களாதலின், பண்ணிசையோடு தாம்பாடும் திருப்பதிகத்தையும் ஏற்றருள்வர் என்னும் குறிப்புத் தோன்றுமாறு நிற்றலும் காண்க.

விடை - தருமவிடை ; ஓர் தூவெண்மதி - இறைவன் அணிகிற சந்திரனது ஒப்பற்ற தன்மையும் தூய்மையும், களங்கமின்மையும் கூறப்பட்டன. சுடலைக்காடு - எல்லாவற்றையும் சுட்டெரிக்குங் காடு. இது நிவிர்த்தி கலை, பிரதிட்டா கலை, வித்தியா கலை, சாந்தி கலை, சாந்தியாதீத கலை என்னும் ஐந்து கலைகளிலுமடங்கிய (சுத்தமாயா புவனாந்தம்) எல்லா உலகங்களையும் அழிக்கும் மாபெரும் ஊழிக் காலத்து உண்டாவது. பொடி - பிரமவிட்டுணுவாதிய பெருந் தேவர்கள் யாவரும் வீந்த சுடலை நீறு.

**விபூதி**—"வீந்த சுடலை விபூதி தரித்திருவர், கூர்ந்த தலைமாலை கொண்டவரார்" என்னும் தெய்வீகவுலா எடுத்துக் காட்டை ஓர்க. 'உள்ளம்' என்பதற்குச் சிவயோதம் என்றே பொருளுரைத்தலுங் கூடும். "பதியான ஞான முனிவன்" என்று பிள்ளையாரே தம்மைப்பற்றிப் பிறிதோரிடத்திற் கூறியுள்ளதும் இக்கருத்தை வற்புறுத்தும். "ஏழுடையான் பொழில்...

............" எனவருந் திருக்கோவையார்ச் செய்யுளில் "என்னை முன்னுளுடையான்" என வருவதும், உரையாசிரியர் "எனக்கு ஆட்படுந் தன்மை யுண்டாவதற்கு முன்னே என்னை யாள்வதொரு புதிதாகிய முறைமையை யுடையான்" என்று விளக்கியிருப்பதும் கருதிக் கொள்க. இறைவன், "சாவியவனுடனிருந்தும் காணாத தற்பரனாய்" எவ்வகையோரானும் தன் முனைப்புடன் காணாதபடி உயிரின்கண் ஒளித்திருந்தருளும் அங்கணனாதலின் - "உள்ளங் கவர்கள்வன்" என்றார். உள்ளம் - ஆன்மா. உயிர்களில் இறைவன் எஞ்ஞான்றும் பிரிவற நின்றுள்ளானாயினும், அவைகட்குத் தன் இருப்பை உணர்த்தி வெளிப்படல் அவைகட்குப் பக்குவம் வந்தபோதேயாகலின், "உள்ளங்கவர்" என்ற செய்தி சுத்த நிலையெய்திய பின்னரே உணரத்தக்க தொன்றென்பது பெறப்படும். "எடுடைய மலரான்" நான் முகனென்று கூறுவாருமுளர். பிரமாபுரமென்றலானே அது இடைத்தலின் மிகை யென்க. இந்நாயனாரே முற்காலத்துப் பூசித்த காரணம்பற்றி இஞ்ஞான்று அருள் செய்யப்பெற்றமையே ஈண்டுக் கருதப்பெற்றதை "பாலனாய தொண்டு செய்து பண்டுமின்று முன்னையே" எனவும், "என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து முன்னைநீ புரி நல்வினைப் பயனிடை" எனவும் இவரே வேறிடங்களிற் கூறுமாற்றாற் காண்க. எத்த - எச்சம் காரணப்பொருட்டு. பீடு - பெருமை. ஊழிக் காலத்தும் அழியப்பெறாது மிதந்த பெருமை. பிரமபுரம் - சீகாழி.

தமிழ் மறை அருளிச் செய்வான் றொடங்கிய நாயனார் மறை மூலமாகிய பிரணவம் உரைத்தே வேதம் உரைத்தல் முறையாதலின், 'தோடு' என்னும் முதன்மொழியில் ஓகாரம் புணர்த்தியுரைத்தார். அப்பிரணவநாதமும் சடாகாசமாகிய பூதாகாசத்தினன்றிச் சிதாகாசமாகிய தகராகாசத்திற்றோன்றும் சுத்தநாதமாதலின், தகரம் கூட்டி யுரைக்கப்பட்டதென்க. அன்றியும் இந் நாயனாரது முதற்றிருமுறையின் முதற்பதிகத்தின் முதலடியின் முதன் மொழியின் முதலெழுத்தாய இவ்வோகாரம் பன்னிரண்டாந் திருமுறையான திருத்தொண்டர் புராணத்தின் ஈற்றுச் சருக்கத்தின் ஈற்றுச்செய்யுளின் ஈற்றடியின் இறுதிச் சொல்லின் ஈற்றெழுத்தாகிய மகாரத்தோடு புணர்ந்து "ஓம்" என முடிந்து தமிழ்வேதமாகிய திருமுறைகள் யாவும் பிரணவ வித்தில் தோன்றியடங்கி நிற்கும் தன்மையை விளக்குவதுங் காண்க. இன்னும் இத்திருப்பாட்டில் இறைவன் உயிர்கட்குச் செய்யும் ஐந்தொழில்களில் படைப்பு ஊழிக்காலத்து இறைவனையடைந்து பிறப்பில்லாத என்றுமுள்ள தன்மையை வேண்டிய அறக் கடவுளை வெள்விடையாகப் படைத்து ஊர்தியாகக் கொண்

டருளினன் என்னும் வரலாற்றானும்; திதி, தக்கனால் அடைந்த தனது பெருஞ்சாபம் எவ்வெத்தேவர்களாலும் நீக்கப்பெறாத சந்திரன் இறைவனைச் சரண்புக, அவ்விறைவன் அதை நீக்கி அச்சந்திரனைத் தனது திருமுடியில் அணிந்து காத்தருளினன் என்னும் வரலாற்றானும்; சங்காரம், சர்வ சங்காரஞ் செய்யும் கடவுள்தானாகும் வரலாற்றானும்; திரோதானம், இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீக்கமற நிறைந்திருந்தும் அதனை அவைகள் அறியாதவாறு வினைப்போகப் புசிப்பின் பொருட்டு அவற்றிற்கு ஒளித்து நிற்கும் வரலாற்றானும்; அநுக்கிரகம், தம்மை வழிபடும் எல்லோர்க்கும் அருளும் வரலாற்றானும் அறியப்படும் என்பார் "விடையேறி" "தூவெண்மதிசூடி" "காடுடைய சுடலைப் பொடிபூசி", "உள்ளங் கவர்கள்வன்" "முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த" என்னும் குறிப்புக்களைப் பிள்ளையார் முறையே அருளியுள்ள பெற்றி பாராட்டத்தக்கதென்ப. (க)

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால்தொழுதேத்தப்
பெற்றம்ஊர்ந்தபிர மாபுரமேவிய பெம்மான் இவனன்றே.

(ப - ரை.) முற்றல் ஆமை - முதிர்ந்த ஆமை ஓடு, இளநாகம் ஓடு - இளம்பாம்பு எனும் இவைகளோடு, ஏனம் முளை கொம்பு - பன்றியின் முளைபோன்ற கொம்பு, அவைபூண்டு - ஆகிய அவைகளை அணிகலனாக அணிந்து, வற்றல் ஓடு - தசைகழிந்த பிரமனது தலை ஓட்டினை, கலனா - பலிப்பாத்திரமாக, பலிதேர்ந்து - (தேவர்களது குருதியும் அகந்தையும்) பிச்சையாகக் கொண்டு, எனது உள்ளம் கவர் கள்வன் - என்னைத் தன்வயப்படுத்திக் கொண்டவன், கற்றல் கேட்டல் உடையார் - வீட்டுநெறிக்கு ஏதுவாகிய உண்மை நூல்களைக் கற்றலும் கேட்டலுமுடையவர்களாகிய, பெரியார் - பெரியார்கள், கழல் - பற்றும் பற்றாகிய இறைவன் திருவடிகளை, கையால் - தமது கைகளால், தொழுது ஏத்த - வணங்கித் துதிக்க, பெற்றம் - இடபத்தை, ஊர்ந்த - ஊர்தியாகக் கொண்டருளிய, பிரமாபுரம் மேவிய - சீகாழியில் எழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே என்றவாறு.

முற்றல் ஆமை, இளநாகம் - பலகோடி ஊழிகளைத் தமது ஆயுளாகப்பெற்ற விட்டுணு மூர்த்தியின் கூர்மாவதாரத்தில் வந்த ஓடும், சில சதுர்யுகங்களைத் தமது ஆயுளாகக்கொண்ட அநந்தனாதிய நாகங்களும் ஆதலால் முதுமையும் இளமையும் ஏற்படுமாறு காண்க. ஏனமுளைக்கொம்பு - விட்டுணு மூர்த்தி வராகாவ

தாரத்திற்கொண்ட வக்ரதந்தம். இவற்றின் வரலாறுகளை "ஆமைவடிவந் தனிலும் ஆதி வராகந்தனிலும், மாமுது கோட்டைக் கவர்ந்தவரார்" என்பதனுனறிக. ஆகவென்றது ஈறுகுறைந்து நின்றது. பலி தேர்ந்தது, தாருகாவனத்தில் பலி தேர்ந்ததும் ஆம். கற்றல் கேட்டலுடையார்...கற்றல் கேட்டல் இல்லாதவராகிய மற்றவர் மாட்டு இறைவன் விளக்கமுறுத லில்லாமையால் அவை உடையார் தொழுதேத்த எனக் கூறப்பட்டது. இதனைக் "கல்லார் நெஞ்சின் நில்லான் ஈசன்" "கற்றவர் வணங்கும் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமா கடலை, மற்றவர் அறியா மாணிக்க மலையை" எனவரும் தேவாரத்தானும், திருவிசைப்பாவானும் ஓர்ந்து கொள்க. கற்றலுங் கேட்டலும் கூறவே உபலக்கணத்தால் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கூடுதல் முதலியவும் கொள்ள இடனுண்டு. ஊரும் பேரும் குறியுங் குணமுஞ் செயலும் ஒன்றுமில்லாத இறைவன் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டுத் தனது கருணையே திருமேனியாகக் கொண்டு எழுந்தருள்வனுதலின் "கற்றல்.........பெரியார்.........எத்த.........ஊர்ந்த.........பெம்மான்" ஆயினனென்க. (உ)

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தஇன வெள்வளைசோரஎன் உள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தஉல கின்முதலாகிய ஓரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மான்இவனன்றே.

(ப-ரை.) நீர்பரந்த - கங்கை நீர் பரந்த, நிமிர் - நீண்ட, புன்சடைமேல் - புல்லிய சடையின்மேல். ஓர் நிலாவெண்மதி - ஒப்பற்ற ஒளியையுடைய வெள்ளிய சந்திரனை, சூடி - திருமுடியில் தரித்து, ஏர்பரந்த - அழகுமிக்க, இனம் - கூட்டமாகிய, வெள்வளை சோர - வெள்ளிய வளையல் கழன்று விழுமாறு, என் உள்ளம் கவர் கள்வன் - என்னைத் தன்வயமாக்கிக்கொண்டவன், ஊர் பரந்த - ஊர்கள் நிறைந்து பரவிய, உலகின் - இவ்வுலகினிடத்து, முதல் ஆகிய - முதன்மைபெற்ற, ஓர் ஊர் இது என்ன - ஒப்பற்ற ஊர் இது என்று எடுத்துக்கூற, பேர்பரந்த - புகழ்மிக்க, பிரமாபுரம் மேவிய - சீகாழியின்கண் எழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானுகிய இவனே என்றவாறு.

நீர் - கங்காநதி: ஆகுபெயர். இறைவனை நாயகனுக்கித் துறைப் பொருளில் வைத்துக் கூறியதனுல் வளைசோர்தல் கூறப்பட்டது. பிரமாபுரமாகிய சீகாழி படைப்புக்காலத் தொடக்கத்திற்றேன்றி ஊழிக்கால வெள்ளத்தினும் அழிவுருது தோணியாய் முதற்றேவராற் சுமக்கப்பட்டு நிலை பெற்ற தன்மையாதலின் தோணிபுரமென்னும் பெயர்த்தாய் "ஊர்பரந்த உலகின்.........

பேர்பரந்த பிரமாபுர" மாயிற்றென்க. இதனைப் "பார்கொண்டு மூடிக் கடல் கொண்ட ஞான்று நின்பாதமெல்லாம் நாலஞ்சு புள்ளினமேந்தின வென்பர்" என்னுந் திருவிருத்தத்தால் அறிக. (௯)

விண்மகிழ்ந்தமதில் எய்ததும்அன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பில்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மான்இவனன்றே.

(ப - ரை.) விண்மகிழ்ந்த - வானின்கண் திரிதந்து மகிழ்ந்த, மதில் - மும்மதில்களையும், எய்ததும் அன்றி - எய்தழித்ததே யன்றி, விளங்கு - பிரகாசிக்கின்ற, தலை ஓட்டில் - நான்முகனது வெண்டலை யோட்டின்கண், உண்மகிழ்ந்து - மனமகிழ்ந்து, பலி தேரிய வந்து - பலி ஏற்குமாறு எழுந்தருளி, எனது உள்ளம் கவர்கள்வன் - என்னைத் தன் வயமாக்கிக் கொண்டவன், மண் மகிழ்ந்த - பூவுலகத்தை விரும்பிய, அரவம் - பாம்பும், மலர் கொன்றை - கொன்றை மலர் மாலையும், மலிந்த - நிறைந்த, வரை மார்பில் - மலைபோலுந் திருமார்பின்கண், பெண்மகிழ்ந்த - உமா தேவியாரை வைத்து மகிழ்ந்த, பிரமாபுர மேவிய - சீகாழிப்பதி யின்கண் எழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே என்றவாறு.

விண்மகிழ்ந்த என்பதில் மகிழ்தல் சஞ்சரித்தல் என்னும் பொருள்பட நின்றது. மதில்: ஆகுபெயர். திரிபுரம் - பொன் வெள்ளி இரும்பாலாகிய முப்புரங்கள். தாருகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்னும் மூன்றசுரர்களால் ஆளப்பெற்றன. புரங் களை இறைவன் தனது புன்னகையினால் எரித்த தெனினும் எய்த என்றது கொண்ட கோலம்பற்றி உபசரித்துக் கூறிய கிரம மென்க. மண்மகிழ்ந்த பெம்மான் எனவும், பெண் மகிழ்ந்த பெம்மான் எனவுங் கூட்டுக. கொன்றை - திருவடையாளமாலை. மார்பிற் பெண் மகிழ்தல் - உமாதேவியாரை யொரு பக்கத்திற் றரித்தல்.

தேரிய - தேரும்பொருட்டு; செய்திய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். (௪)

ஒருமைபெண்மைஉடை யன்சடையன்விடை ஊரும்மிவனென்ன
அருமையாகஉரை செய்யஅமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மான்இவனன்றே.

(ப - ரை.) ஒருமை - ஒரு (வாம) பாகத்தில், பெண்மையுடையன் - பெண்டன்மையை (உமாதேவியை)க் கொண்டவன், சடையன்-சடைக்கற்றையை உடையவன், விடை ஊரும் இவன் - எருதேறி அருளுகின்றவன், என்ன - என்று, அருமையாக-அரிய பெருமைகளைப் பாராட்டி, உரைசெய்ய - தொழுமாறு, அமர்ந்து - விரும்பி, எனது உள்ளம் கவர்கள்வன் - என்னைத் தன்வயப்படுத்திக்கொண்டவன், கருமைபெற்ற - கருநிறம்பொருந்திய, கடல் கொள்ள - கடல் கவரும்படி எழ, இது - இப்பதி, ஓர்காலம் - முன் ஒரு காலத்தில், மிதந்தது என்ன - தோணியாகி மிதந்த தென்னப் புராணங்கள் புகழும்படி, பெருமைபெற்ற - சிறப்பு வாய்ந்த, பிரமாபுரமேவிய - சீகாழியின்கண் எழுந்தருளியுள்ள பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே என்றவாறு.

ஒருமை - ஒன்றெனு எண்ணுப் பொருள்மேல் நின்றது. ஒருமை பெண்மை யுடையன் எனவே ஒருமை ஆண்மையுடையன் என்பதும் போதருமாறு காண்க. ஒருமை சடையன் எனவும் கூட்டி, ஒருமை குழலன் எனவும் வருவித்துப் பொருளுரைத்தலும் சாலும். இத்தகைய இறும்பூதுடைய திருவுருவனாய் இப்பெற்றியனெனத் தேர்ந்துரைத்தல் கூடாமையின் உரைத்தல் அருமையாயிற் றென்க. இறைவன் அன்பரது உள்ளத்தை விரும்பி விரைந்து சேறலின், அமர்ந்து கவர்கள்வனாயினான். கடல்கொள்ள மிதந்தது முன்னர் உரைக்கப்பட்டது. காலம் - யுகம் என்னும் பொருட்டு. பன்னீருகத்துப் பன்னிரு பெயர் பெற்று மகிமை வாய்ந்த பொருள் பதினோராந்திருமுறையுள் திருவெண்காட்டடிகளது திருக்கழுமல மும்மணிக்கோவையிற் பாராட்டியுரைக்கப் பட்டது. (கு).

மறைகலந்தஒலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தஇன வெள்வளைசோரஎன் உள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மான்இவனன்றே.

(ப - ரை.) மறைஒலி கலந்த - வேதத்தின் சுரங்களோடு கூடிய, பாடலோடு - சாம கானத்தோடு, ஆடலர் ஆகி - திருநடனத்தை யுடையவர் ஆகி, மழு ஏந்தி - மழுவினைத் தரித்து, இறை கலந்த - கையினிடத்துப் பொருந்திய, இனவெள்வளை - கூட்டமாகிய வெள்ளிய வளையல்கள், சோர - சோர்ந்து விழுமாறு, என் உள்ளம் கவர்கள்வன் - என்னைத் தன்வயப்படுத்திக்கொண்டவன், கறைகலந்த - இருள்செறிந்த, கடிஆர் - மணம்பொருந்திய, பொழில் - பூஞ்சோலைகளிடத்தும், நீடு உயர் சோலை - நீண்டு உயர்ந்த சோலைகளிடத்தும், கதிர் சிந்த - தனது ஒளிக்கதிர்கள்

சிந்தும்படி, பிறை கலந்த - சந்திரன் பொருந்தித் தவழ்கின்ற, பிரமாபுரமேவிய - சீகாழியின்கண் எழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே என்றவாறு.

மறைஒலி - வேதசுரம் - உதாத்தம் அனுதாத்தம் முதலியன. இறைவன் - சாமகானத்தில் விருப்பமுடையன் என்பதை 'சாம கானப் பிரிய' என்னும் நாமமுடையனாதலாலறிக. பாடலோ டாட லுடையனாதலை "பாரிடம் பாணிசெய்ய பறைக்கட்செறுபல் கணப்பேய், சீரோடும்பாடலாட லிலயஞ் சிதையாத கொள்கைத், தாரிடும் போர்விடையன்" என்னும் இவரது திருவாக்கு வலி யுறுத்துமாறு காண்க. மழு - பரசு. ஒருவகைப் படை; 'பரசு ஹஸ்தன்' என்பதும் இறைவன் நாமம். இறை - கையிறை. தங்கல் எனப் பொருள் கொண்டு கையினிற் செறிந்து தங்கிய கூட்டமாகிய வளைகள், ஒவ்வொன்றாகச் சோர்ந்து கழன்றன எனலும் பொருந்தும்: "செறி வளைகள் ஒவ்வொன்றாகச் சென்ற வாறே" என்பது தமிழ்வேதம். கறை - இருள். "வெயில் கண்டறியா வீங்கிருட்பிழம்பினை" யுடைய வென்று கூறுமாறு அறிக. பொழில் - திருநந்தனவனம். சோலை - தோப்பு. (சு)

சடைமுயங்குபுன லன்அனலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்கும்அர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மான்இவனன்றே.

(ப - ரை.) சடைமுயங்கு - சடையிற்றங்கிய, புனலன் - கங்கையையுடையவனும், அனலன் - (கையினில்) மழுவினை யுடையவனும் ஆகி, எரிவீசி - நெருப்பினைச் சிந்தி, சதிர்வு எய்த - அழகு பொருந்தும்படி, உடைமுயங்கும் - ஆடையின்மேற் பொருந் திய, அரவோடு - பாம்புக்கச்சோடு, உழிதந்து - திரிந்து வந்து, எனதுள்ளம் கவர்கள்வன் - என்னைத் தன்வயப்படுத்திக் கொண் டவன், கடல் முயங்கு - கடலோடு கலக்கின்ற, கழிசூழ் - கழி சூழ்ந்த, குளிர் - குளிர்ச்சியையுடைய, கானல் - சோலையினிடத்து, அம் - அழகிய, பொன் சிறகு அன்னம் - பொன்னிறம் வாய்ந்த சிறகினையுடைய அன்னச்சேவல்கள், பெடை - அன்னப் பெடை களை. முயங்கு - கலக்கின்ற, பிரமாபுரமேவிய - சீகாழியின்கண் எழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே என்றவாறு.

அனல் - "சாற்றியிடு மங்கியிலே சங்காரம்" என்றபடி அழித் தற் குறியீடாக இறைவன் கையினில் ஏந்திய எரியாகும். சதிர்வு - பெருமையுமாம். உடை - புலித்தோல், மான்றோல்,

யானைத்தோல் முதலியவற்றாகிய தோலுடை. அவை நெகிழா தவாறு அவைகளை இறுக்கிக் கட்டிய நாகக்கச்சு - ஈண்டுக்கூறிய அரவு. உழிதரல் - திரிதல். கானல் - கடற்கரைச் சோலை. பெடை எனப் பின் வருதலின் அன்னம் என்பது சேவலையுணர்த் திற்று. சீகாழி - கடல் முயங்கும் கழி சூழ்ந்த தலம். 'மகரவார் கடல் வந்தணவும் மணற் கானல் வாய்ப், புகலி ஞானசம்பந்தன்' என்னும் திருவாக்கும் இதனை வலியுறுத்தும். (எ)

வியரிலங்குவரை உந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கைஅரை யன்வலிசெற்றெனதுள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும் உலகிற்பலஊழிகள் தோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மான்இவனன்றே.

(ப - ரை.) வியர் இலங்கு - வியர்வு பொருந்திய, வரை உந்திய - திருக்கைலாய மலையை ஊக்கி எடுத்த, தோள்களை - தோள்களால், வீரம் விளைவித்த - வீரத்தன்மை பொருந்துவித்த, உயர் இலங்கை அரையன் - மதில்கள் உயர்ந்த இலங்கைக் கரசனாகிய இராவணனது, வலி செற்று - வலியைக் கெடுத்து, என துள்ளம் கவர்கள்வன் - என்னைத் தன் வயப்படுத்திக் கொண்டவன், துயர் இலங்கும் - துன்பம் பொருந்தி விளங்குகின்ற, உலகில் - இவ்வுலகில், பல ஊழிகள் - பல கற்பங்கள், தோன்றும் பொழுதெல்லாம் - உண்டாகும்போதெல்லாம், பெயர் இலங்கு - தன் பெயர் கெடாது தானும் நிலைபெற்று விளங்குகின்ற, பிரமாபுர மேவிய - சீகாழியின்கண் எழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே என்றவாறு.

வியர் இலங்கு தோள்கள் என்க. தோள்களை: வேற்றுமை மயக்கம். வரை யுந்திய தோள்கள் - மலையை வென்று விளங்கும் தோள்கள் என்று வரையுந்திய வென்பதைப் பொது வகையில் தோளுக்கடையாக்கலுமாம். உந்திய என்பதனைச் செய்திய என்னும் எச்சமாக்கி, உந்துதற்குத் தோள்களை வீரம் விளைவித்த என்னலும் ஆம். வீரம் விளைவித்த - ஒரு சொல்லாய் இரண்டாவதற்கு முடிபாம். திருக்கைலாய மலையை மிக்க வீரத்தோடு பெயர்த்தெடுத்த இராவணனைத் தனது கால் விரல் நுனியால் எளிதென நசுக்கி அழுவித்து இராவணன் என்னும் பெயர் கொடுத்தருளினன் இறைவன் என்க. துயர் - பிறவித்துன்பம். பிறவித் துன்பத்தை விளைவிக்கின்ற மூலமலத்தைப் பக்குவமாக்குமாறு உலகினை அடிக்கடி ஒடுக்கி மீட்டும் தோற்றுவித்தலால் உலகிற் பல ஊழிகள் தோன்றுவனவாயின. வாச்சியமாகிய தலம் கெடாது நிலைபெற்று விளங்குகின்றமையின் வாசகமாகிய பெயரும் கெடாது இலங்குகின்றதென்பதாம். (அ)

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்தாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தான்என துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளிர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மான் இவனன்றே.

(ப - ரை.) மாலொடு - திருமாலொடு, தண் தாமரையானும் - குளிர்ந்த தாமரையை இருக்கையாகவுடைய நான்முகனும், தாள் நுதல் செய்து - திருவடியையும் திருமுடியையும் முறையே வரைந்துகொண்டு (மண்ணிடந்தும் விண்பறந்தும்), இறை காணிய - இறைவனைக் காணுமாறு, நீணுதல் செய்து ஒழிய - (ஏனமாயும் அன்னமாயும்) பேருருவெடுத்து நெடுந்தூரம் சென்று முயன்றும் காணதொழிய, நிமிர்ந்தான் - எல்லை காண்பரிய பெரிய நெருப்புருவாய் வெளிப்பட்டு நின்றவனாய், எனது உள்ளம் கவர்கள்வன் - என்னைத் தன்வயப்படுத்திக்கொண்டவன், வாள் நுதல் செய் - ஒளிபொருந்திய நெற்றியை உடைய, மகளிர் முதலாகிய - பெண்கள் முதலான, வையத்தவர் - உலகத்தவர்கள், ஏத்த - துதித்து வணங்க, பேணுதல் செய் - அவர்களைக் காப்பாற்றியருளுகின்ற, பிரமாபுரமேவிய - சீகாழியின்கண் எழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே என்றவாறு.

தாள் - திருவடி. நுதல் - நெற்றி; ஆகுபெயராய்த் திருமுடியை உணர்த்திற்று. காணிய - செய்யிய என்னும் எச்சம். நீளுதல் - நீணுதல் எனத் திரிந்து நின்றது. "எங்கள் பெருமான் பாதமிரண்டும் வினவில் பாதாளமேழினுக்கப்பால், சோதிமணி முடிசொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை, ஆதிகுணமொன்றுமிலான் அந்தமிலான்" என்னுந் திருவாசகத்தாற் காண்க.

நீணுதல் - நீளுதல். தன்னையடைந்து வழிபட்டவரைக் காக்கும் பெற்றியுடைமைபற்றி வையத்தவரேத்தப் பேணுதல்செய் பிரமாபுரமாயிற்று. (௬)

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லஉல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்இதுஎன்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மான் இவனன்றே.

(ப - ரை.) புத்தரோடு - புத்தர்களோடு, பொறியில் சமணும் - அறிவில்லாத சமணர்களும், புறம் கூற - புறங்கூறவும்,

நெறிநில்லா - நன்னெறியில் நில்லாத, உலகம் - உலகத்தவர், ஒத்தசொல்ல - தம்மனத்துக் கியைந்தவற்றைச் சொல்லவும், பலிதேர்ந்து - பலி ஏற்று, எனது உள்ளம் கவர்கள்வன் - என்னைத் தன்வயப்படுத்திக்கொண்டவன், மத்தம் - மதம் பொருந்திய, யானை - யானையானது, மறுக - (மனஞ்சுழலுமாறு) வருந்துமாறு, உரிபோர்த்தது - அதன் தோலை (உரித்து)ப் போர்த்துக் கொண்டதாகிய, இது ஓர் மாயம் என்ன - இது ஒரு மாயச் செய்கையாம் என்று சொல்லும் வண்ணம், பித்தர்போலும் - பித்தரைப்போன்று, பிரமாபுரமேவிய - சீகாழியின்கண் எழுந்தருளிய, பெம்மான் இவன் - பெருமானாகிய இவனே.

புத்தர், சமணர் இவர் இருவரும் புறப்புறச் சமயவாதிகளாவர். இவருள் புத்தர், சௌத்ராந்திகர், மாத்யமிகர், வைபாடிகர், யோகாசாரர் என நால்வகைப்படுவர். புறங்கூறுதல் - புறச்சமயம் பற்றி இகழ்ந்து கூறுதல். நெறிநில்லாமை - பலர் நல்ல சமயிகளாகப் பிறந்தும் வேதசிவாகமங்களாகிய முதனூல்கள் கூறும் ஒழுக்கநெறியில் நில்லாமை. ஒத்தசொல்லல் - உண்மையறியாது தம் மனம் போனவாறு பிதற்றுதல். உலகம் : ஈண்டு நெறிநில்லா என்னும் அடைமொழியால் இழிந்தோரை உணர்த்தி நின்றது. யானை - கயாசுரன். இவ்வசுரனுக்கஞ்சிக் காசி மணிகர்ணிகையில் இறைவனைச் சரண் புகுந்த தேவர்களும் முனிவர்களும் அவன் கொண்ட கோலங்கண்டு பயந்து கண்பொத்தித் திறத்தற்குள் இறைவன்தன் ஒரு திருவடியை அசுரன் தலையிலூன்றி மற்றொரு தாளைத் தொடையினிறுத்தித் திருக்கை நகங்களினால் முதுகைப் பிளந்து உரியினைப் போர்த்து நின்றானாதலின் இது பெருவியப்பிற்குரிய மாயச்செய்கையாயிற்று.

"வியரிலங்குவரை" என்னும் திருப்பாட்டில் இறைவன் மண்ணுலகத்தில் வாழ்கின்றவர்கள் பிழைத்த (தவறுசெய்த) வழியும் தன்னை வந்து சரணடையின் அவர்களைப் பெருங்கருணையினால் பொறுத்து ஆட்கொண்டருள்வன் என்பதை யறிவிக்க மலையெடுத்துப் பிழைப்பட்டுப் பின் சாமம் பாடி யுய்ந்த இராவணனையும், அடுத்த திருப்பாட்டில் விண்ணுலகத்துள்ளோரே யாயினும் தம் முனைப்பிழந்து வணங்குவார்க்கே அருளுவன் என்பதை யறிவிக்கச் சிற்றறிவாலே அடிமுடி யறிவோமெனச் செருக்கி யழிந்து பின் திருவைந்தெழுத்தாற் றொழுது வணங்கி யுய்ந்த பிரம விட்டுணுக்களையும், குறிப்பிட்டு, அதற்கடுத்த திருப்பாட்டில் முழு முதல்வராகிய சிவபெருமானை வழிபடும் உண்மை நெறியாகிய பழைய சைவநெறியை யறியாத புறச்சமயத்தவருள்ளும் மிகக் கீழ்ப்பட்ட அறிவினராவர் புத்தர், சமணர்கள் எனவும் ஆளுடைய பிள்ளையார் எடுத்துக்காட்டி அவர்கள் அவ்விழிந்த

நிலைகளில் செல்லலாகாதெனக் கருணை மிகுதியாற் கூறினரென்க. இதனைத் திருத்தொண்டர் புராணம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவரலாறு எஎ, எஅ, எகூ-வது திருவிருத்தங்களாலறிக. இந்நியமம் பெரும்பாலும் இவர் பதிகந்தோறுங் காண்க. (கഠ)

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மான் இவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தல்எளிதாமே.

(ப - ரை.) அருநெறிய - அரிய நெறிகளை உடைய, மறை வல்ல - வேதங்களில் வல்லவனாகிய, முனி - பிரமதேவராது, அலர்மேய - மலர்கள் நிறைந்த, அகன் பொய்கை - அகன்ற பிரம தீர்த்தத்தையுடைய, பிரமாபுரமேவிய திருப்பிரமபுரத்தில் எழுந்தருளிய, பெருநெறிய - செந்நெறியையுடைய, பெம்மான் இவன் தன்னை - பெருமானாகிய இவனை, ஒரு நெறிய - ஒருமைப்பட்ட, மனம் வைத்து உணர் - மனங்கொண்டறிகின்ற, ஞானசம்பந்தன் - திருஞானசம்பந்தன், உரை செய்த-பாடிய; திருநெறிய தமிழ் - திருநெறித் தமிழாகிய இப்பதிகத்தை, வல்லவர் - ஓதவல்லவர், தொல்வினை - தமதுபழவினை, தீர்தல் - நீங்கப் பெறுதல், எளிது ஆம் - எளிதாம் என்றவாறு.

அருநெறி - தத்தம் பரிபாகங்கட்கேற்ப மேற்கொண்டொழுகுமாறு இறைவனாலமைக்கப்பெற்ற பல அரிய சமய நெறிகள். நெறி - வழி. பெருநெறிய பெம்மான் என்று கூட்டுக. பெருநெறி - மேலான செந்நெறி: முத்திநெறி. இதுவே சமயாதீத வைதிக சைவம். "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க" என்பதாகிய அளவைகளால் உய்த்துணர்க. பொய்கை - பிரம தீர்த்தம். இத்தீர்த்தம், "கடையுகத்தின் றனிவெள்ளம் பல விரிக்குங் கருப்பம்போல், இடையறாப் பெருந்தீர்த்தமெவற்றுக்கும் பிறப்பிடமாய், விடையுயர்த்தார் திருத்தோணிப் பற்றுவிடா மேன்மைய தாந்தட" மாதலின் அகன் பொய்கை எனச் சிறப்பிக்கப்பட்டது. ஒரு நெறிய மனம் - சிவ கரணம். திருநெறியதமிழ் - திருநெறித் தமிழ்மறை. இத் திருப்பாட்டுப் பல சுருதியென்னும் திருக்கடைக் காப்பு என்க. இது பழையநூல் வழக்காம். தொல்வினை - சென்ற பல பிறவிகளினும் ஈட்டி அனுபவியாது எஞ்சிநிற்கும் பழவினை. (கக)

# திருநாவுக்கரசு நாயனார்

# திருவதிகைவீரட்டானம்

---

## பண் – கொல்லி

### குருவருள்

*திருச்சிற்றம்பலம்*

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
  கொடுமை பலசெய் தனநான் அறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
  பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
  குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
  வீரட் டானத் துறையம் மானே.

(ப - ரை.) *கெடிலம் - திருக்கெடிலக்கரையிலுள்ள, அதிகை வீரட்டானத்து - திருவதிகை வீரட்டானம் என்னும் திருக்கோயிலில், உறை - எழுந்தருளியுள்ள, அம்மானே - தந்தையே (இறைவனே), கூற்று ஆயின ஆறு-சூலைநோயானது கூற்றுவனைப்போல் வந்து வருத்துகின்ற வகையை, விலக்ககிலீர் - நீக்கியருளுகின்றீரில்லை, செய்தன பலகொடுமை - அதற்கேதுவாக முன்செய்தனவாய பல கொடுமைகளை, நானறியேன் - நான் அறியமாட்டேன், ஏற்றாய் - (எனினும் எளியேனையும்) ஏன்று கொண்டவராகிய (தேவரீரது) உம்முடைய, அடிக்கே - திருவடியையே, இரவும் பகலும் எப்பொழுதும் - இரவுபகலாகிய எந்நேரத்திலும், பிரியாது - இடைவிடாமல், வணங்குவன் - தொழுகின்றேன், தோற்றாது - புலப்படாமல், என் வயிற்றின் அகம்படி - எனது வயிற்றின் உள்ளிடத்தே, குடரோடு துடக்கி முடக்கியிட - குடரோடு சுற்றி முறுக்காநிற்க, அடியேன் - அடியேன், ஆற்றேன் - பொறுக்கமாட்டேன் என்றவாறு.*

நாயனுர் தம் பெற்ரோர் இறந்த பின்னர் நிலையாமையுணர்ந்து எல்லாவற்றையும் துறந்து இறைவன் உண்மை யுணர்த்தாமையால், கொல்லாமை மறைந்துறையும் சமண் சமயத்தில் வீழ்ந்து அச்சமயத்துறையில் நன்கு பழகி அச்சமயிகட்கு ஆசாரியராய்த் தருமசேனரெனப் பெயர்பெற்று ஒழுகு நாளில், அவரது தமக்கையாராகிய திலகவதியம்மையார் இவரைச் சைவத்துறைக்கு ஏற்றுமாறு, இடைவிடாது இறைவன் திருவடியில் விண்ணப்பித்தனர். அதற்கேற்ப இறைவன் சூலையை அவருக்கு அருள அதைப் பொறுக்கலாற்ருதும் சமண் சார்பிற் றீரப்பெருதும் தம் தமக்கையாரை யடைந்து திருவதிகை வீரட்டானத்து இறைவன் திருமுன்னே சூலைதீரப் பாடியது இத்திருப்பதிகம்.

கூற்று - இயமன். ஆன்மாக்களின் உடலுயிர்களை வேறு பிரித்தலின் ஏற்பட்ட காரணப்பெயர். கூற்று ஆயினவாறு - ஒன்றையும் ஒப்புச்சொல்லவரிய கூற்றுவ னிழைக்குந் துன்பம் இச் சூலை. அவ்வாருதலை,

"அடைவிலமண் புரிதரும சேனர்வயிற் றடையுமது
வடவனலுங் கொடுவிடமும் வச்சிரமும் பிறவுமாங்
கொடியவெலா மொன்ருகு மெனக்குடரி னகங்குடையப்
படருழந்து நடுங்கியமண் பாழியறை யிடைவீழ்ந்தார்"

என்பதனு லறிக. 'கூற்று' என்பதனைச் 'சொல்' என்று பொருள் படுத்தி, இவர் திருக் கைலாயத்தில் வாகீச முனிவராயிருந்துழி, மலையின்கீழ்க் கிடந்து வருந்திய இராவணனுக்குச் 'சங்கரன் சாமகானப் பிரியன்' என்று விரகறிவித்துத் தப்பச் செய்தமையின், இறைவன் இவரை மண்ணுலகிற்கு அனுப்பி, இத்துணைத் துன்பமடையச் செய்தனனென்பது கருதி, அவர் என் கூற்று எனக்கே கூற்ருய் விளைந்ததெனக் குறிப்பித்தாரென் றலுமாம். முன்னெருகால், கோதாவரிக்கரையில் தம்மை யடைந்து உண்மை விஞவிய முனிவர்களுக்குத் தமது ஆற்றலுணர்த்துமாறு சமண்சமயமே மெய்ச்சமயம் என்று துணிபு கூறியபோது அம் முனிவரால் நேர்ந்த சாபங் காரணமென அகத்திய பக்தவிலாசம் கூறும். ஈண்டும் சொல் விளைந்த விதமே கருதப்படுமென்க. அருள்பெறும் நாயனுர்க்குப் பக்குவப்படுத்துமாறு திரோதான சக்தி இச் சூலை வடிவாக அருளப்பட்டதென்க. 'ஏற்ருய்' என்பதனை விளியாகக் கொண்டுரைத்தலுமாம்.

அத்தா! உன் அடியேனை அன்பா லார்த்தாய்
அருளுேக்கிற் றீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியைநீ எளியை யானுய்
எனையாண்டு கொண்டிரங்கி ஏன்று கொண்டாய்

பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையு மெம்பரமோ? ஐய! ஐயோ!
எம்பெருமான் திருக்கருணை இருந்த வாறே!

என்னும் திருத்தாண்டகமும் இங்குக் கருதற்பாற்று. இஃது இடபத்தை வாகனமாகக் கொண்டவரே என்றும் பொருள்படுமாறு காண்க. தோற்றாது - அருவமாக. அகம்படி - உள்ளிடம். குடர் - குடல்; ஈற்றுப்போலி. கெடிலம் - இது நடுநாட்டிலுள்ளதாகிய ஒரு மிகச் சிறந்த ஆறு. இதனைக் "கெங்கைய தெனப்படும் கெடில வாணரே" என்னும் தேவாரத்தானும், "தென்றிசையிற் கங்கையென்னும் திருக்கெடிலம் திளைத்தாடி" என்னும் திருத்தொண்டர்புராணத்தானும் அறிக. அதிகை - திருவதிகை வீரட்டானம். இது நடுநாட்டிலுள்ள தேவாரத்தலம் 22 ல் ஒன்று. அட்டவீரட்டத்தில் ஒன்று. இது முப்புரங்களையும் எரித்த இடம். (திரிபுரதகனம் செய்தது.) (க)

நெஞ்சம் உமக்கே யிடமா கவைத்தேன்
நினையா தொருபோ துமிருந் தறியேன்
வஞ்சம் மிதுவொப் பதுகண் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
நஞ்சா கிவந்தென் னைநலி வதனை
நணுகா மல்துரந் துகரந் துமிடர்
அஞ்சே லுமென்னீர் அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

(ப - ரை.) அதிகைக்கெடில வீரட்டானத்துறை அம்மானே-, நெஞ்சம் - எனது மனத்தை, உமக்கே - கடவுளாகிய உமக்கே, இடமாக வைத்தேன் - உறைவிடமாக அமைத்தேன், ஒருபோதும் - ஒரு காலத்தும், நினையாது இருந்து அறியேன் - உம்மை நினையாதிருந்திருக்கமாட்டேன்; (எனினும்) இது ஒப்பது - இதைப்போன்றதாகிய, வஞ்சம் - வஞ்சத்தனமுள்ளதொரு நோயை, கண்டறியேன் - பார்த்தறிந்ததில்லை; வயிற்றோடு - குடரோடு, துடக்கிமுடக்கியிட - கலந்து முறுக்கும்படி, நஞ்சு ஆகி வந்து - விடம்போல் தோன்றி, என்னை நலிவதனை - என்னை வருத்துவதை, நணுகாமல் - என்னைச் சேராமல், துரந்து - நீக்கி, கரந்தும் இடர் - ஒழியச் செய்கிருமில்லை, அஞ்சேலும் என்னீர் - அஞ்சற்க என்று கூறியருளினீருமில்லை.

நெஞ்சமுமக்கே யிடமாக வைத்தேன் என்பதனை 'இறைவா உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லால் எங்களுத்தமனே' என்னுந் திருவாசகத்தோடு ஒத்து நோக்குக. ஏகாரம் தேற்றப் பொருளதாம். வஞ்சம் - சூலைநோயானது கரந்து நின்று வருத்துதல்பற்றி இவ்வாறு கூறப்பட்டது. கரத்தல் - ஒழித்தல்; இல்லையாகச் செய்தல் சமண்சமயச் சார்பிலிருந்த காலத்து இறைவனை இகழ்ந்ததை நாயனுர் தாமே தமது திருவாக்கால், "ஏழையேன் நான் பண்டிகழ்ந்தவாறே" என்று கூறியிருப்பவும், ஈண்டு "நினையாதொருபோது மிருந்தறியேன்" என்று அருளுமாறு என்னை யெனின், திருவருட்பிரகாசமடைந்து சிவகரணம் பெற்றமையான் சமண்சமயச்சார்பும் இறைவன் ஆணையான் ஏற்பட்டு ஆண்டுச் செய்த வழிபாடும் முழுமுதற் றலைமையுடைய இறைவனையே சாருமாதலின் அவ்வாறு கூறியதென்க. இதனை "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனுர்தாம் வருவர்" என்னும் திருவாக்கும், "விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயஞ்செய்தே, எரிவினற் சொன்னுரேனும் எம்பிராற் கேற்றதாகும்" என்னும் திருவாக்கும் வலியுறுத்துமாறு காண்க. (உ)

பணிந்தா ரனபா வங்கள்பாற் றவல்லீர்
　　படுவெண் தலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே உமக்காட் செய்துவா ழலுற்றால்
　　சுடுகின்றதுசூ லைதவிர்த் தருளீர்
பிணிந்தார் பொடிகொண் டுமெய்பூ சவல்லீர்
　　பெற்றம் ஏற்றுகந் தீர்சுற்றும்வெண் தலைகொண்டு
அணிந்தீ ரடிகேள் அதிகைக் கெடில
　　வீரட் டானத் துறையம் மானே.

(ப - ரை.) அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே-, பணிந்தாரன - வணங்கினவர்களுடைய, பாவங்கள் - பாவங்களை, பாற்றவல்லீர் - ஒழிக்கும் வன்மையுடையீர், வெண்படு தலையில் - வெள்ளிய படுதலையில், பலிகொண்டு உழல்வீர் - பலி ஏற்றுத் திரிவீர், பிணிந்தார் - இறந்தாரது, பொடி கொண்டு- சாம்பலை, மெய்பூசவல்லீர் - திருமேனியிற் பூசிக்கொள்ள வல்லவராகின்றீர், பெற்றம் - இடபத்தை, உகந்து ஏற்றீர் - விரும்பி ஊர்தியாகக் கொண்டீர், வெண்தலைகொண்டு - வெள்ளிய தலைமாலையை, சுற்றும் - திருமேனிமுழுதும், அணிந்தீர் - அணிந்துகொண்டீர், (இவைபோலும் பல பெருமைகளையுடைய) அடி-

கேள் - கடவுளே, உமக்கே - தேவரீருக்கே, துணிந்து - துணிவு கொண்டு, ஆள்செய்து - ஆட்பட்டு, வாழலுற்றால்-வாழத்தொடங்கினால். சூலைசுடுகின்றது - சூலைநோய் வருத்துகின்றது, தவிர்த்து அருளீர் - விலக்கி யருள்புரிவீராக.

பணிந்தாரன - இதில் அன் சாரியையும், அ ஆறன் பன்மை யுருபுமாம். பாற்றுதல் - ஒழித்தல். படுதலை - தசைகழிந்த தலையோடு. துணிந்தே யுமக்கு - என்பதில் ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. சுடுகின்றது சூலை என்பதனைச் சுடுகின்றதாகிய சூலையை என்று செயப்படு பொருளாக்கித் தவிர்த்தருளீர் என்பதனோடு கூட்டியுரைத்தலும் ஒன்று. பிணித்தல் - இறத்தல். பொடி - சுடலைப் பொடி. ஏற்று என்பதைத் தொழிற் பெயராகக் கொண்டு எருது ஏறுதலை விரும்பினீர் என்று பொருள் கோடலு மொன்று. வெண்டலை - வெண்டலைமாலை. (௩)

முன்னம் அடியேன் அறியா மையினுன்
முனிந்தென்னை நலிந் துமுடக் கியிடப்
பின்னை அடியேன் உமக்கா ளும்பட்டேன்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
தன்னை அடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
தலையா யவர்தங் கடனு வதுதான்
அன்னம் நடையார் அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

(ப - ரை.) அன்னம் நடையார் - அன்ன நடையினையுடைய பெண்கள் வாழ்கின்ற, அதிகைக்கெடில வீரட்டானத்துறை அம்மானே—, முன்னம் - முன்னே, அடியேன் - அடியேனது, அறியாமையினுன் - அறியாமை காரணமாக, (சூலை) என்னை - அடியேனை, முனிந்து - சினந்து, நலிந்து - வருத்தி, முடக்கியிட - மூறுக்குதலினுல், பின்னை - பின்னே, அடியேன் - ஏழையேன், உமக்கு ஆளும்பட்டேன் - உமக்கு ஆட்படவும் செய்தேன், (ஆதலால்) சுடுகின்றது சூலை - வருத்துவதாகிய சூலைநோயை, தவிர்த்து அருளீர் - விலக்கியருள்செய்வீராக. (யாதுபற்றி யெனின்), தன்னை அடைந்தார் - தம்மை அடைக்கலம் புகுந்தவர்களது, வினை - வினைகளை, தீர்ப்பது அன்றோ - ஒழித்தருளுவதன்றோ, தலையாயவர்தம் - பெரியாரது, கடன் ஆவது - செய்கையாவது என்றவாறு.

'நம்பாருளாமையினுல், கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம்' குறுகினவர் நாயனுராதலால், 'முன்னமடியே

னறியாமையினால்' என்று கூறினரென்க. பின்னை - இறைவன் அருளிய கொடிய சூலை நோய் சமண் பாழியிற் றீராதபோது அடைக்கலம் புகுந்தவர், எத்தகைய குற்றம் செய்தவரெனினும் அதனைப் பாராட்டாது காத்தருளுதல் தலைவர் கடமையாதலின் இவ்வாறு கூறப்பட்டதென்க. (ச)

காத்தாள் பவர்கா வலிகழ்ந் தமையால்
  கரைநின் றவர்கண் டுகொளேன் றுசொல்லி
நீத்தா யகயம் புகநூக் கியிட
  நிலைக்கொள் ளும்வழித் துறையொன் றறியேன்
வார்த்தை இதுவொப் பதுகேட் டறியேன்
  வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
ஆர்த்தார் புனலார் அதிகைக் கெடில
  வீரட் டானத் துறையம் மானே.

(ப - ரை.) ஆர்த்து - ஆரவாரித்து, ஆர் - நிறைந்த, புனல் ஆர் - நீர்பொருந்திய, அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே-, கரை நின்றவர் - கரையில் நின்றவர்களாய், காத்து ஆள்பவர் - (வீழாமற்) காத்தாள்கின்றவர்களது, காவல் - பாதுகாப்பை, இகழ்ந்தமையால் - அவமதித்த காரணத்தால், கண்டு கொள் என்று - நீயே அறிந்துகொள்வாய் என்று, சொல்லி-, நீத்தாய கயம் - நிலைத்தலில்லாத குளத்தில், புக - முழுகுமாறு, நூக்கியிட - தள்ளிவிட, நிலைகொள்ளும் - நிலைபெறும், வழி துறை - வழியாவது துறையாவது, ஒன்று - ஒன்றை, அறியேன்- அறிகின்றேனில்லை; இது ஒப்பது வார்த்தை - (தள்ளி நீயே கண்டுகொள் என்று சொல்லும்) இதுபோல்வதாகிய வார்த்தையை, கேட்டறியேன் - வேறெங்கும் கேட்டறிந்தேன் இல்லை. வயிற்றோடு - வயிற்றினிடத்துக் குடரோடு, துடக்கி முடக்கியிட- கலந்து முறுக்கியிட; ஆற்றேன் என்றவாறு.

உம்மை வணங்குதலைக் கைவிட்டுப் பிறதுறையில் வீழ்ந்தமையால் காத்தலைக் கைவிட்டு இவ்வாறு சூலையினால் வருந்துமாறு செய்தல் தவறினகாலத்தும் பெரியார் அருள்செய்தலையின்றிக் கைவிடாராதலின், கேளாத செய்கையாயிருக்கின்றதென்றபடி. கரைநின்றவராய்க் காத்தாள்பவர் என்று கூட்டுக. நீத்து - பெரு வெள்ளம். துறை - நீர்த்துறை. உலகத்துள்ள சமயங்கள் யாவும் ஆன்மாக்கட்கு இறங்கும் ஒவ்வொரு துறையாய் அமைந்தும் அவை யாவும் நிலையாதனவாயும், இடிந்து பாழ்பட்டனவாயும், வழுக்குந் தன்மையவாயும், முதலை முதலிய கொடிய

பிராணிகள் வாழுமிடமாயும், பாச நிறைந்தனவாயும், கீழ்மக்கள் இறங்கும் பெற்றியவாயும் உள்ளமையின், இக்குற்றமொன்று மின்றிச் சிறந்த துறையே ஏறியிறங்கும் துறையாக அமையுமாதலின் இவ்வாறு கூறியதென்க. இதனை 'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க' என்பதனாலறிக. 'ஆற்றேன்' என்னும் வினைமுற்று அவாய்நிலையான் வருவிக்கப்பட்டது. (ரு)

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
 தமிழோ டிசைபா டன்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
 உன்னா மமென்னா வின்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகோண் டுழல்வாய்
 உடலுள் உறுசூ லைதவிர்த் தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
 வீரட் டானத் துறையம் மானே.

(ப - ரை.) அதிகைக்கெடில வீரட்டானத்துறை அம்மானே-, சலம் பூ ஒடு தூபம் - திருமஞ்சனம்செய்து திருப்பள்ளித் தாமம் சாத்துதலோடு தூபமிடுவதையும், மறந்து அறியேன்- மறந்திருந்தேனில்லை. தமிழோடு - தமிழ்ப்பதிகத்தோடு, இசை பாடல் - இசைபாடுதலையும், மறந்து அறியேன் - மறந்திருந்தேனில்லை, நலம் தீங்கினும் - நன்மை தீமைகளினும், உன்னை மறந்தறியேன் - தேவரீரை மறந்திருந்தேனில்லை, உன் நாமம் - தேவரீரது திருநாமத்தை, என் நாவின் – அடியேன் நாவினால் (வழுத்துவதை), மறந்தறியேன் - மறந்திருக்கமாட்டேன், உலந்தார் தலையின் - இறந்தவர்களது (பிரமதேவரது) தலையோட்டில், பலிகொண்டு உழல்வாய் - பலிகொண்டு திரிவோரே, உடல் உள்ளுறு சூலை - என் உடம்பினுள்ளே பொருந்தி வருத்துகிற சூலைநோயை, தவிர்த்து அருளாய் - நீக்கியருளுகின்றீரில்லை, (அதனால்) அடியேன் - அடியேன், அலந்தேன் - துன்பமுழந்தேன் என்றவாறு.

தமிழ் - தமிழ்ப்பாடல் : ஆகுபெயர். இசை - ஏழிசையாலும் பண்ணிசை. நாமம் - இறைவன் திருநாமமாகிய திருவைந்தெழுத்து; திருநாமங்களுமாம்; எல்லார் பெயரும் அவர் பெயரே. உலந்தார் தலை - நான்முகன் தலையோடு. உடல் : ஈண்டு வயிறு. எவரும் எங்கும் செய்யும் பூசையும் தியானமும் (விச்சுவாதிகனும் விச்சுவசேவியனுமாகிய) சிவனையே யடையும் முறைமைபற்றி இடையே சமண்சமயச் சார்பிற் செய்தனவும் தவிர்தலில்லையாகி

இறைவனைச் சார்தலினாலும், அவ்வாறு இடையிற் செய்தனவாகிய அவையும் இறைவன் திருவருளினாலேயே நேர்ந்தனவாதலானும் இவ்வாறு கூறியதென்க. முன்னு முரைத்தாம்; கண்டு கொள்க. (சா)

உயர்ந்தேன் மனைவாழ்க் கையுமோண் பொருளும்
ஒருவர் தலைகா வலிலா மையினால்
வயந்தே உமக்காட் செய்துவா ழலுற்றால்
வலிக்கின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பயந்தே யென்வயிற் றினகம் படியே
பறித்துப் புரட்டி அறுத்தீர்த் திடநான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

(ப - ரை.) அதிகைக்கெடில வீரட்டானத்துறை அம்மானே-, தலைகாவல்-(அறிவுறுத்திப் பாதுகாக்கும்) சிறந்த காவலாம், ஒருவர் - ஒருவரும், இல்லாமையினால் - இல்லாத காரணத்தால், மனைவாழ்க்கையும் - இல்வாழ்க்கையும், ஒண்பொருளும் - அதற்குரித்தாகிய வளவிய பொருளும் என இவற்றால், உயர்ந்தேன் - உயர்ந்தவனாகக் கருதிச் செருக்கினேன், அதனால், வயந்து - நயந்து, உமக்கு ஆள் செய்து - (உம்மைப் பற்றுக்கோடாகக்கொண்டு) உமக்கு ஆட்பட்டு, வாழலுற்றால் - வாழத் தொடங்கினால், வலிக்கின்றது சூலை - வருத்துவதாகிய சூலைநோயினை, தவிர்த்தருளீர் - விலக்கியருளுகின்றீரில்லை, என் வயிற்றில் அகம்படியே - என் வயிற்றின் உள்ளிடத்தில், பறித்து - பற்றியீர்த்து, புரட்டி - புரள்வித்து, அறுத்து ஈர்த்திட - அறுத்து இழுக்க, நான் பயந்து அயர்ந்தேன் - யான் அஞ்சி இளைத்தேன் என்றவாறு.

முன்னே அறியாது நிலையுதலில்லாத இல்வாழ்க்கையையும் பொருளையும் பொருளாகக் கருதிச் செருக்கி உயர்ந்தேன்; பின்னர் அறிந்து உமக்கு ஆட்பட்டு வாழத்தொடங்கியும் சூலை வருத்துவது திருவருளுக் கழகிதன்று; ஒழித்தருளுதல்வேண்டும் என்றபடி. உயர்தல் - சிறப்புக்கருதித் தருக்கல். ஒண்மை - வளமை, மிகுதியையும் மேன்மையையும் விளக்கிநிற்கின்றது. தலைமை - முதன்மை உயர்வு. வயந்து - வசப்பட்டு எனினுமாம். வலிக்கின்றதென்பதனை வினையாக்கிச் சூலையை எழுவாயாகக் கொண்டுரைத்தலும் ஒன்று. பறித்தல் - அகழ்தலுமாம். சூலை குடரைப்பற்றி வருத்தும் நோயானமையின் பறித்தல், புரட்டல்,

அறுத்தல், ஈர்த்தல் முதலிய தன்மை காட்டப்பட்டன. சூலை மகாரோகங்களுள் ஒன்று. (எ)

வலித்தேன் மனைவாழ்க் கைமகிழ்ந் தடியேன்
வஞ்சம் மனம்ஒன் றுமிலா மையினால்
சலித்தால் ஒருவர் துணையா ருமில்லைச்
சங்க வெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தே என்வயிற் றினகம் படியே
கலக்கி மலக்கிட் டுக்கவர்ந் துதின்ன
அலுத்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

(ப - ரை.) அதிகைக்கெடில வீரட்டனத்துறை அம்மானே-, அடியேன் - அடியேன், வஞ்சம் - வஞ்சம் பொருந்திய; மனம் - மனம், ஒன்று மிலாமையினால் - ஒருசிறிது மில்லாமையினால், மனை வாழ்க்கை - இல்வாழ்க்கையில், மகிழ்ந்து - மகிழ்வுற்று, வலித்தேன் - மனவுறுதிகொண்டு தருக்கினேன் (எனினும்), சலித்தால் - மனஞ்சலிப்படைந்தால், துணை - துணையாவார், யார் ஒருவரும் இல்லை - யாரொருவரும் இல்லையாம், வெண் - வெண்ணிறம் பொருந்திய, சங்கம் குழை - சங்கக் குழையை அணிந்த, காது உடை - திருச்செவியையுடைய, எம்பெருமான் - எம் தலைவரே, (சூலையானது) என் வயிற்றின் அகம்படியே - எனது வயிற்றின் உள்ளிடத்தில், கலித்து - இரைந்து, கலக்கி - குழப்பி, மலக்கிட்டு - முறுக்கியிட்டு, கவர்ந்து - (என்னுயிரைக்) கொள்ளைகொண்டு, தின்ன - உண்ணலால், அலுத்தேன் - தாங்கலாற்றாது இளைத்தேன் என்றவாறு.

வலித்தல் - மனவுறுதி கொள்ளல். ஒன்று - சிறிதென்னும் பொருளில் வந்தது. யாரொருவரும் என்று கூட்டியுரைக்க. 'சங்கக் குழை - "சங்கக் குழையார் செவியார்," "சங்கவெண் குழையோர் காதிற் கோமான்" என வரும் திருவாக்குக்களையும் காண்க. ஒரு காதிற் குழை யென்றது மற்றொரு காதிற் றோடுடையராகலின் என்க. கலித்தல் - சத்தித்தல். கவர்ந்து தின்னல் - அறியாது நின்று வருத்தி யுண்ணுதல். மலக்கிடுதல் - மற்போர் செய்வதை யொத்து வருத்துதல். இவர் 'தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க் காசினிமேற் புகழ்விளங்க'ப் பல பசு புண்ணியங்களைச் செய்தாரன்றிப் பதிபுண்ணியஞ் செய்து இறைவனையடைந்தாரில்லையாதலின் 'உயர்ந்தேன் மனை வாழ்க்கை,' 'வலித்தேன் மனை வாழ்க்கை' என்றாரென்க. (அ)

பொன்போ லமிளிர் வதோர்மே னியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியேன் றிவற்றை
நணுகா மல்துரந் துகரந் துமிடீர்
என்போ லிகளும் மையினித் தெளியார்
அடியார் படுவ திதுவே ஆகில்
அன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

(ப - ரை.) *அதிகைக் கெடில வீரட்டானத்து உறை அம் மானே-, பொன் போல - பொன்னைப்போல; மிளிர்வது - விளங்குவதாகிய, ஓர் மேனியினீர்-உவமை கூறுதற்கரிய திருமேனியையுடையவரே, மெலியும் - நலிந்து தேய்ந்த, பிறையீர் - பிறையை அணிந்தவரே, துன்பு - துன்பமும், கவலை - கவலையும், பிணி - நோயும், என்று இவற்றை - என்று எண்ணப்பட்ட இவற்றை, நணுகாமல் - என்பாற் சேராமல். துரந்து - அகற்றி, கரந்தும் இடீர் - ஒழித்தீருமில்லை, அடியார் - தேவரீருடைய அடியவர்கள், படுவது இதுவே யாகில் - படுந்துன்பம் இது என்றால்; என் போலிகள் - என் போன்றவராகிய அறிவிலிகள், இனி - இனிமேல், உம்மை - உம்மை, தெளியார் - தலைவராகக் கண்டு உறுதி கொள்ளார் (எனினும்), அன்பே - தேவரீரிடத்துச் செய்யும் அன்பொன்றுமே, அமையும் - யான் செய்வதற்குரியதாய் அமையும் என்றவாறு.*

*'பொன் போல மிளிர்வதோர் மேனியினீர்' என்பதனை 'பொன்னார் மேனியனே,' 'பொன் செய்த மேனியினீர்' என்பனவாதிய திருவாக்குக்களோடு வைத்துக் காண்க. துன்பமே: ஏகாரம் எண்ணுப் பொருளது. கவலை பிணி என்பவற்றோடும் கூட்டுக. இதனைப் 'பொன்னே மணிதானே வயிரம்மே பொருதுந்தி' என்பதனுட் காண்க. யாம் செய்தவற்றிற்குச் சிவன் பொறுப்பல்லன் என்று வந்தவற்றை யனுபவித்துக்கொண்டு பெரியோர் அடிமைசெயத் துணிவர். அறிவிலிகள் அவ்வாறு துணியார் என்பதுபற்றி 'என் போலிகள் உம்மை யினித் தெளியார்' என்றனரென்க. இனி, யான் படும் இதனைக் கண்டு என்னை எடுத்துக் கூறி இனித் தெளியமாட்டார்கள் என்றபடி. அமையும்-சாலும், பொருந்தும். இச்செய்யுட் பொருளை 'இடர்களையாரேனும் எமக்கிரங்கா ரேனும், படரு நெறிபணியா ரேனும் - சுடருருவில், என்பறாக் கோலத்து எரியாடு மெம்மானார்க்*

கன்பரு தென்னஞ் சுவர்க்கு' என்னும் காரைக்காலம்மையார் திருவாக்கோடு ஒட்டிக் காண்க. (கூ)

போர்த்தாய் அங்கோர் ஆனையின் ஈருரிதோல்
புறங்கா டரங்கா நடமா டவல்லாய்
ஆர்த்தா னரக்கன் றனைமால் வரைக்கீழ்
அடர்த்திட் டருள்செய் தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் மெழுந்தால்
என்வே தனையா னவிலக்கியிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

(ப - ரை.) ஆர்த்து - ஆரவாரித்து, ஆர்புனல் சூழ் - மிக்க நீர் சூழ்ந்த, அதிகைக்கெடில வீரட்டானத்து உறை அம்மானே-, அங்கு - காசியில், ஓர் யானையின் - ஒரு யானையினது, ஈர் உரி தோல் - வகிர்ந்து உரித்த தோலை, போர்த்தாய் - போர்த்தருளிய வரே, புறங்காடு - பேரொடுக்கச் சுடுகாட்டை, அரங்காக - ஆடரங் காகக் கொண்டு, நடமாடவல்லாய் - நடமாடவல்லவரே, ஆர்த் தான் - ஆரவாரித்து வந்தவனாகிய, அரக்கன் தனை - அரக்கனாகிய இராவணனை, மால் வரைக்கீழ் - பெரிய கைலாயமலையின் கீழ், அடர்த்து இட்டு - நெருக்கியிட்டு, அருள் செய்த அது - பின் அருளிரக்கத்தால் அருள் செய்த அதனை, கருதாய் - இப்போது நினைக்கின்றீரில்லை, (அதுபற்றித் தானோ) வேர்த்தும் - வியர்த் தும், புரண்டும் - புரண்டும், விழுந்தும் - கீழ்விழுந்தும், எழுந்தால்- பின் எழுந்தால், என்வேதனை ஆன - என் வேதனைகளை, விலக்கி யிடாய் - விலக்காதிருக்கின்றீர் என்றவாறு.

அங்கு என்னும் சுட்டுக் காசியை யுணர்த்திற்று. ஓர் யானை - கயாசுரன். ஈர்தல் - நகத்தால் வகிர்தல். உரித்தல் - தசையி னின்றும் வேறுபடுத்தல். ஆடரங்கு - நடனசபை. ஆர்த்தல் - இதனைப் பேர்த்தெடுத்தெறிந்து செல்வேன் என்று ஆரவாரித் தல். மால் வரை - திருக்கைலாயம். "ஊழிதோ றூழிமுற்று முயர்பொன் னொடித்தான் மலை" யாதலின் இது மால் வரை என்னப்பட்டது. இவ்வாறு செருக்குற்றுப் பெயர்த்துச் சிவனை யிகழ்ந்த இராவணனையும், இசைபாடி யழுத பின்பு, நாளும் பேரும் வாளும் கொடுத்தாண்டு கொண்ட அதனைக் கருதுவீரா யின் அறியாமையினாற் சமண் சமயப்படுகுழி வீழ்ந்து பெருமானைப் பிழைத்த என்னையும் பொறுத்து என் துன்பத்தை விலக்கி யருள் புரிவீர் என்றபடியாம். இந்நாயனார் சிவாபராதஞ் செய்த இராவ

ணனுக்கருள் புரிந்தவாறு தமக்கும் அருள் புரிந்த செய்கையை உன்னியும் இந் நாயனாரே முன்பு திருக்கைலாயத்தில் இராவண னுக்கு இரங்கி விரகறிவித்தமை பற்றித் தமக்கு ஏற்பட்ட முற் செய்தியை நினைவு கூர்ந்தும் தமது திருப்பதிகத்து இறுதி தோறும் இராவணனது செய்கையைக் குறிப்பிடும் நினைவுடைய ராயின ரென்பதனை,

'இத்தன்மை நிகழ்ந்துழி நாவின்மொழிக்
கிறையாகிய வன்பரு மிந்நெடுநாட்
சித்தந்திகழ் தீவினை யேனடையுந்
திருவோவிது வென்று தெருண்டறியா
அத்தன்மைய னாய விராவணனுக்
கருளுங்கரு ணைத்திற மானவதன்
மெய்த்தன்மை யறிந்து துதிப்பதுவே
மேல்கொண்டு வணங்கினர் மெய்யுறவே'

என்னும் திருத்தொண்டர்புராணத் திருவிருத்தத்தால் அறிக. (௧0)

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்திநாயனர்

# திருவெண்ணெய் நல்லூர்

---

## பண்-இந்தளம்

### குருவருள்

*திருச்சிற்றம்பலம்*

பித்தாபிறை சூடபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருள்
அத்தாஉனக் காளாயினி அல்லேனென லாமே. [துறையுள்

(ப - ரை.) *பித்தா - பித்தரே, பிறைசூட - பிறையை யணிந்தவரே, பெருமானே - தலைவரே, அருள் ஆளா - அருளை யாளுகின்றவரே, எத்தான் - எத்தகைய காரணத்தானும், மறவாது - உம்மை மறவாமல், நினைக்கின்றேன் - நினைக்கின்றவனாகிய எனது, மனத்து - மனத்தினிடத்தில், உன்னை வைத்தாய்- உம்மை எழுந்தருளச் செய்தவரே, பெண்ணை - பெண்ணையாற்றின், தென்பால் - தென் கரையிலுள்ள, வெண்ணெய் நல்லூர் - திருவெண்ணெய் நல்லூரில், அருட்டுறையுள் - திருவருட்டுறையென்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள, அத்தா-தந்தையே, உனக்கு - தேவரீருக்கு, ஆளாய் - அடிமைப்பட்டு, இனி - அதன் மேலும், அல்லேன் எனல் - ஆள் அல்லேன் என்று கூறல், ஆகுமே - தகுமோ என்றவாறு.*

*இத்திருப்பதிகம், சுந்தரமூர்த்திநாயனர், இறைவன் தமக்குத் திருக்கைலாய மலையில் திருவாக்கருளியபடி கிழப்பார்ப்பனராய்த் தம் திருமணக்காலத்து எழுந்தருளித், தமக்கு அடிமையென்று வழக்கிட்டுத் திருவெண்ணெய்நல்லூர் அவையில் அவ்வுரியை மூலவோலைகொண்டு மெய்ப்பித்துத் தடுத்தாட் கொண்டு, திருவருட்டுறையில் உமையொடு இடபவாகனத்தில் காட்சி கொடுத்துத் தம்மைப் பாடுக என்றபோது பாடியருளியதாம்.*

*நாயனர் இறைவனைநோக்கித், 'தேவரீரை எப்படி யறிந்து எப்படிப் பாடுவேன்' என்றபோது 'பித்தன்' என்றே பாடுக ஆணையை மறுத்தற்கஞ்சிப் 'பித்தா' என்று*

விளித்துப் பாடினாரேனும், நீர் மதியிழந்த பித்தனல்லீர், மதியுடையீரே, எல்லா வுயிர்கட்கும் தலைமை பூண் பெருமானாவீர்; கருணையோடு திருவருள் நல்கும் தன்மையராவீர் என்று குறிப்பித்துத் துதித்த முறைமையை உற்றுநோக்குக. பெண்ணை - இது தென்பெண்ணையாறு. திருவெண்ணெய்நல்லூர் - நடுநாட்டுத் தேவாரத்திருத்தலங்கள் உஉ இல் ஒன்று. ஆளாயினியல்லேன் எனல் - தாம் ஏனைய ஆன்மாக்களை யொப்பப் பொதுவகையானும், திருக்கைலாயத்தில் தமது பிறப்புக்காலமுதல் சிறப்புவகையானும் ஆட்பட்டிருந்தும், நிலவுலகத்து வந்து அதனை மறந்த காலத்து இறைவன் எழுந்தருளி நினைவு படுத்தியும் தம்மை அந்தணரென்றும், அவருள்ளும் ஆதிசைவரென்றும், ஆதலால் தாம் அடிமையாதலில்லை யென்றும் மறுத்து எதிர்மொழிந்தமை. ஆமே - தகாது - பெரிய குற்றமாம் என்றபடி. ஏகாரம் எதிர்மறைப் பொருளது. (க)

நாயேன்பல நாளும்நினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெறல் ஆகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருள்
ஆயாஉனக் காளாயினி அல்லேனென லாமே. [துறையுள்

(11 - ரை.) நாயேன் - நாய்த்தன்மையுடையேன், பல நாளும் - இந் நெடுநாட்களாக, உன்னை - தேவரீரை, மனத்து - மனத்தில், நினைப்பு இன்றி - நினைத்தலின்றி, பேயாய் - பேய் போல, திரிந்து எய்த்தேன் - திரிந்து இளைத்தேன், (எனினும் உம்முடைய அருளிரக்கத்தால்,) பெறல் ஆகா - பெறுதற்கரிய, அருள்பெற்றேன் - திருவருளைப் பெற்றேன், வேய் ஆர் - மூங்கில்கள் நிறைந்த, பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்—, ஆயா - தாயானவனே, உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே -, என்றவாறு.

நாயேன் - நாய்த்தன்மையேன்; புலன்களில் நாய்போல அலைந்து திரிபவன் என்றபடி. பணிவு கருதி அடியார் உரைக்கும் மரபுமொழி. பேய் - தங்கள் தீய ஊழை அடையுமாறு ஆவி உடலுடன் படைக்கப்படும் உயிர்கள்; எனவே எங்கும் அலைந்து திரியும் தன்மையனாம். சிவபிரானுடன் இருந்து பாடியாடும் கணங்களுள் ஒன்றாகிய பேய் அன்று ஈண்டுக் கூறியது. (உ)

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருள்
அன்னேஉனக் காளாயினி அல்லேனென லாமே. [துறையுள்

(ப - ரை.) மன்ன - மிகுதியாக, மறவாது - மறவாமல், உன்னை - தேவரீரை, மனத்து - மனத்தில், நினைக்கின்றேன் - தியானிக்கின்றேன், பொன்னே - பொன்னையும், மணியே - மணியையும், வயிரம்மே - வயிரத்தையும், பொருது - அலைத்துமோதி, உந்தி - கரையிற் செலுத்தி, மின்ஆர் - மின்னிர்கின்ற, பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் —, அன்னே - தாயே, உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே—, என்றவாறு.

மன்னே என்பதற்கு அரசே என்று விளிப்பொருள் கொள்ளலுமாம். 'மன்னனாய் மன்னவர்க்கோ ரமுதமானாய்' என்னும் திருவாக்கு உன்னத்தக்கது. பொன்னே மணிதானே வயிரம்மே - ஏகாரங்கள் எண்ணுப்பொருளன. பொருதல் - அலைத்தல். (ரு)

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தீ
கோடியேன்பல போய்யேஉரைப் பேனைக்குறிக் கோள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருள் துறையுள்
அடிகேள்உனக் காளாயினி அல்லேனென லாமே.

(ப - ரை.) பெற்றமூர்தீ - இடபத்தை ஊர்ந்தருள்பவரே, இனி - தேவரீர் திருவருள் பெற்றபின், முடியேன் - இறவேன், பிறவேன்-பிறவேன், பெறின்-பிறத்தலைச் செய்யினும், மூவேன் - மூத்தலைச்செய்யேன், பல பொய்யே - பல பொய்களையே, உரைப்பேன் - உரைக்கின்றவனாகிய, கொடியேனை - கொடியவனை, நீ - தேவரீர், குறிக்கொள் - திருவுளம்பற்றிக் காக்கக் கடவீர்; செடிஆர் - செடிகள் நிறைந்த, பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் —, அடிகேள் - கடவுளே, உனக்கு ஆள் ஆய் இனி அல்லேன் எனல் ஆமே—, என்றவாறு.

முடிதல் - இறத்தல். இனி - திருவருள்பெற்றபின் என்னும் பொருண்மேல் நின்றது. முடியேன் பிறவேன் மூவேன் - 'மூவாய் பிறவாய் இறவாய் போற்றி,' என்றும் 'மூப்பதுமில்லை பிறப்பதுமில்லை யிறப்பதுமில்லை' என்றும் வரும் திருவாக்குக்கள் இறைவன் பெற்றியை உரைத்தல்போல இத் திருவாக்கு இறைவன் அருளடைந்து சிவசமானராகிய அடியவர் தன்மையுரைக்குமாறு காண்க. 'கொடியேன் பல பொய்யே யுரைப்பேனை' என்பது பல பொய்யே யுரைக்குங் கொடியேனை எனப் பிரித்துக் கூட்டியுரைக்கப்பட்டது. குறிக்கொள்ளுதல் - திருவருளுக்குப் பாத்திரமாக்கிக் கொள்ளுதல். இதனைக் "கூவித்துக் கொள்ளுந்தனை

ஏற்றார்புர மூன்றுமெரி உண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனைச்செக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருள் துறை
ஆற்றாய்உனக் காளாயினி அல்லேனென லாமே. [யுள்

(ப - ரை.) ஏற்றார் - போரேற்ற பகைவருடைய, புரம் மூன்றும் - மூன்று புரங்களையும், எரிஉண்ண - தீயுண்ணும்படி, சிலைதொட்டாய் - வில்லைத் தாங்கியவரே, தேற்றாதன - தெளிவற்ற சொற்களை, சொல்லி - பிதற்றி, திரிவேனை - அலையக் கடவேனை, செக்கர்வான் - செவ்வானத்தின், நீர் - நிறத்தை, ஏற்றாய் - பொருந்தியவரே, பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்—, ஆற்றாய் - செந்நெறிச் செல்வரே, உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே—, என்றவாறு.

ஏற்றார் - பகைவர். சிலை - கல் மலை; இறைவன்வில் மேரு மலையாதலறிக. தேற்றாதன - நல்லன வாகவேனும் பயனுடைய வாகவேனும் தெளியப்பெறாதன. செக்கர்வானீர் ஏற்றாய் - சிவந்த வானத்தினின் றிழிந்த கங்கையை ஏற்றவரே என்றலுமாம். நீர் - நீர்மை, தன்மை. ஈண்டு நிறம். ஆறு - நன்னெறி; செந்நெறி.

(அ)

மழுவாள்வல னேந்தீமறை ஓதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தல்உன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருள்
அழகாஉனக் காளாயினி அல்லேனென லாமே. [துறையுள்

(ப - ரை.) மழுவாள் - மழுப்படையை, வலன் ஏந்தீ - வலக் கையில் ஏந்தியவரே, மறைஓதீ - மறைகளை அருளிச்செய்தவரே, மங்கை பங்கா - உமாதேவியாரை இடப்பக்கத்திருத்தியவரே, தொழுவா ரவர் - தொழுகின்றவரது, துயர் ஆயின - துன்பங்களாயினவற்றை, தீர்த்தல் - தீர்த்தருளுதல், உனதொழிலே - தேவரீரின் செயலேயாம், செழு வார் - செழுமையும் நீட்சியும் அமைந்த, பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்—, அழகா - அழகியவரே, உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே—, என்றவாறு.

மழுவாள் - மழுவாகிய வாள்: இருபெயரொட்டுப் பண்புத் தொகை. வாள் - படைப்பொதுவை யுணர்த்திற்று. வலன் - வலம்: ஈற்றுப்போலி. மறையோதீ - ஓதுதல் ஈண்டு அருளிச் செய்தல்; இவரே வேதமுதலாகிய சகலகலைக்கும் கர்த்தராகலின்;

மேனி - திருவுருவுடையவரே, எண்ணார் - பகைவரது, புரம் மூன்றும் - மூன்றுபுரங்களையும், எரி உண்ண - தீயுண்ணுமாறு, நகை செய்தாய் - சிரித்தருளியவரே, மண் ஆர் - பூமியிற் சிறப்புடைய, பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்—, அண்ணா - அண்ணனே, ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே—, என்றவாறு.

'தண் ஆர்' என்பதற்குக் குளிர்ந்த ஆத்தி என்று பொருள் கொள்ளலுமாம். மதி - கோள்களுள் ஒன்றாய்க் குளிர்ந்த கிரணங்களுடையதென்ப. கிரகங்களுள் சூரியலோகம் நெருப்பு மண்டலமும் சந்திரலோகம் நீர் மண்டலமும் அங்காரகலோகம் பிருதிவி மண்டலமும் சனிலோகம் வாயுமண்டலமுமாமாறு சாந்தோக்ய உபநிஷத்திற் கண்டது. மேனி - திருமேனி யுடையாரை உணர்த்திற்று. எண்ணார் - பகைவர்; திரிபுர அசுரர். மண் - மாட்சிமை. பூமி - ஈண்டு மண்ணிற் சிறந்த என நின்றது. அண்ணன் - மூத்த சகோதரன்; கடவுள் உடற்பிறப்பினை யொத்தவர். (௬)

ஊனாய்உயி ரானாய்உட லானாய்உல கானாய்
வானாய்நிலன் ஆனாய்கடல் ஆனாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் [துறையுள்
ஆனாயுனக் காளாயினி அல்லேனென லாமே.

(ப - ரை.) ஊன் ஆய் - ஊனாகி, உயிர் ஆனாய் - உயிருமாயினாய், உடல் ஆனாய் - உடம்பானாய், உலகு ஆனாய் - உலகமாயினாய்; வான் ஆய் - ஆகாயமாகி, நிலன் ஆனாய் - பூமியானாய், கடல் ஆனாய் - கடலானாய், மலை ஆனாய் - மலைகளானாய், தேன் ஆர் - தேன் துளிக்கின்ற, பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்—, ஆனாய் - எல்லாமாய் எழுந்தருளியவனே, உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே—, என்றவாறு,

ஊன் - தசை. உடல் - ஊனாலாய உடம்பு. ஊனாய்........ மலையானாய் - இதனால் இறைவனது எல்லாமாந்தன்மை உரைக்கப்பட்டது. தேன் - கரையிலுள்ள மரங்களினின்றும் துளிப்பது. ஆனாய் - பெயர் எல்லாமானவன்.

"வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே"

என்ற திருவாசகமும் இக் கருத்தையே கூற எழுந்ததாம். (௭)

ஏற்றார்புர மூன்றுமெரி உண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருள் துறை
ஆற்றாய்உனக் காளாயினி அல்லேனென லாமே. [யுள்

(ப - ரை.) ஏற்றார் - போரேற்ற பகைவருடைய, புரம் மூன்றும் - மூன்று புரங்களையும், எரி உண்ண - தீயுண்ணும்படி, சிலைதொட்டாய் - வில்லைத் தாங்கியவரே, தேற்றாதன - தெளிவற்ற சொற்களை, சொல்லி - பிதற்றி, திரிவேனோ - அலையக் கடவேனோ, செக்கர்வான் - செவ்வானத்தின், நீர் - நிறத்தை, ஏற்றாய் - பொருந்தியவரே, பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்—, ஆற்றாய் - செந்நெறிச் செல்வரே, உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே—, என்றவாறு.

ஏற்றார் - பகைவர். சிலை - கல் மலை ; இறைவன்வில் மேரு மலையாதலறிக. தேற்றாதன - நல்லன வாகவேனும் பயனுடைய வாகவேனும் தெளியப்பெறாதன. செக்கர்வானீர் ஏற்றாய் - சிவந்த வானத்தினின் றிழிந்த கங்கையை ஏற்றவரே என்றலுமாம். நீர் - நீர்மை, தன்மை ஈண்டு நிறம். ஆறு - நன்னெறி; செந்நெறி. (அ)

மழுவாள்வல னேந்தீமறை ஓதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தல்உன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருள்
அழகாஉனக் காளாயினி அல்லேனென லாமே. [துறையுள்

(ப - ரை.) மழுவாள் - மழுப்படையை, வலன் ஏந்தீ - வலக் கையில் ஏந்தியவரே, மறைஓதீ - மறைகளை அருளிச்செய்தவரே, மங்கை பங்கா - உமாதேவியாரை இடப்பக்கத்திருத்தியவரே, தொழுவா ரவர் - தொழுகின்றவரது, துயர் ஆயின - துன்பங்களாயினவற்றை, தீர்த்தல் - தீர்த்தருளுதல், உனதொழிலே - தேவரீரின் செயலேயாம், செழு வார் - செழுமையும் நீட்சியும் அமைந்த, பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட் டுறையுள்—, அழகா - அழகியவரே, உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே—, என்றவாறு.

மழுவாள் - மழுவாகிய வாள் : இருபெயரொட்டுப் பண்புத் தொகை. வாள் - படைப்பொதுவை யுணர்த்திற்று வலன் - வலம்: ஈற்றுப்போலி. மறையோதீ - ஓதுதல் ஈண்டு அருளிச் செய் தல்; இவரே வேதமுதலாகிய சகலகலைக்கும் கர்த்தராகலின்:

"வேத நான்கும் விரித்தோதியோர் நம்பி" என்பதாதிய பிரமாணம். தொழுவாரவர் - அடியவர்: ஒரு சொன்னீர்மைத்து. அழகா - தேவர்க்கெல்லாந் தலைமைபூண்ட புருடோத்தமனே: விரும்பிச்சேரும் பெற்றியன் எனின் அழகனுதற்கமையுமன்றே. ஆடவரும் விரும்பும் அழகன். இதற்குச் சான்று பகர்தற்கு அரி அர மூர்த்தமே சாலும். வாமதேவன் என்பது இக் கருத்துப் பற்றியேயாம். (௯)

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய் நல்லூரருள் துறையுள்
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே.

(ப - ரை.) கார் ஊர் - கருநிறம் பொருந்திய முகிலாற் பொழியப்பெற்ற, புனல் எய்தி - நீர்நிறைந்து, திரை கையால் - அலைகளாகிய கரங்களால், கரை கல்லி - கரையை அரித்து, பார் ஊர் - உலகிற் பரவிய, புகழ் எய்தி - புகழை அடைந்து, திகழ்-விளங்குகின்ற, பல்மாமணி - பல சிறந்த இரத்தினங்களை, உந்தி - கொழித்து, சீர் ஊர் - சிறப்புப் பொருந்திய, பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள் -, எம்பெருமாற்கு - எம் தலைவருக்கு, ஆரூரன் - ஆரூரனென்னும் அடியேன், ஆள் அல்லேன் - அடிமையல்லேன் என்று கூறுதல், ஆமே - அடுக்குமோ, என்றவாறு.

கார் - கருநிறம்: பண்புப்பெயர். திரைக்கை - அலைகளைக் கைகளாகக் கூறுதல் நூல்வழக்கு. பாரூர்புகழ் - திருவருட்பாக்கள் முதலிய பல பண்டைய நூல்களிலெல்லாம் கூறப்பட்டு உலகம் பாராட்டும் புகழ். ஆரூரன் - நாயனாரது குடிப்பெயர் போலும். இவர் பாட்டனார் எழுதிக் கொடுத்ததாகக் காட்டப்பட்ட முறியோலைக் கைச்சாத்தானும் அவர் பெயருமதுவே யாதலானும் அறியப் பெறும். இவர் தம்மை இவ்வாறு கூறுதலை இவருடைய ஏனைய பதிகங்களினுங் காண்க. (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

# திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம்

---

## பண் - காந்தாரம்

### பரையின் வரலாறு

திருச்சிற்றம்பலம்

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவா யான்திரு நீறே.

(ப - ரை.) மந்திரம் ஆவதும் - மந்திரமாயிருப்பதும், நீறு - திருநீறே, வானவர் மேலதும் - தேவர்கள் தங்கள்மே லணிந்து கொண்டிருப்பதும், நீறு - திருநீறே, சுந்தரமாவதும்-அழகாவதும், நீறு - திருநீறே, துதிக்கப்படுவதும் - வணக்கஞ் செய்யப்படுவதும், நீறு - திருநீறே, தந்திரம் ஆவதும் - வீடுபேற்றிற்கு உபாயமாவதும், நீறு - திருநீறே, சமயத்திலுள்ளதும் - சமயங்கள் தோறு முள்ளதும், நீறு - திருநீறே, இத்தகைய தன்மைவாய்ந்தது, செந்துவர் - சிவந்த பவளம் போன்ற, வாய் - திருவாயினையுடைய, உமை பங்கன் - உமை அம்மையைப் பக்கத்துக் கொண்டவராகிய, திருவாலவாயான் - திருவாலவாயின்கண் எழுந்தருளியுள்ள இறைவனது, திருநீறே - திருநீறேயாம், என்றவாறு.

இத்திருப்பதிகம் நாயனர் கூன் பாண்டியரது சுரநோயைத் தீர்க்கும் பொருட்டு மதுரையில் பாடியருளியதாம்.
இதனை,

"தென்னவன் நோக்கங் கண்டு திருக்கழு மலத்தார் செல்வர்
அன்னவன் வலப்பால் வெப்பை யாலவா யண்ண னீறே
மன்னுமந் திரமு மாகி மருந்துமாய்த் தீர்ப்ப தென்று
பன்னிய மறைக ளேத்திப் பகர்திருப் பதிகம் பாடி"

என்னும் திருத்தொண்டர் புராணத்திருவிருத்தத்தா லறிக.

மந்திரம் - ஸ்ரீ சிவமூல மந்திர முதல் எல்லா மந்திரங்களும். நீறு - நீற்றப்பெறுவது, விபூதி, பஸ்பம். வானவர் மேலது என உயர்ந்தோர் கூறப்பெற்றமையின் ஏனைய உலகத்தவர்கள் மேலதாவதும் கூறுதமையுமாறு காண்க. வான் - மேலுலகம். சுந்தரம் - அழகு. விபூதிப்பூச்சுக் கண்டோர் யாவரையும் தன் வழிப்படுத்தும் தன்மையதாதலே,

"சேலுங் கயலுந் திளைக்குங்கண் ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் கும்மென்று
புண்ணியர் போற்றிசைப்ப"

என்னுந் திருப்பல்லாண்டுத் திருப்பதிகம் வலியுறுத்து மென்க. துதிக்கப்படுவது - வேதங்களே "ஐசுவரியப் பேற்றுக்கு வித்தாயுள்ள இத்தகைய ஸ்ரீ பஸ்மத்தின் பொருட்டு நமஸ்காரம்" என்று துதிக்கு மெனின், துதிக்கப்படுவ தென்பதற்கு ஐயப்பாடென்னை யென்க. தந்திரம் - உபாயம். இது நோய் தீர்த்தற்குரிய மந்திரம், தந்திரம், மருந்து என்னும் மூவகைச் சாதனங்களுள் ஒன்றும். முன்பு மந்திரமும், ஈண்டுத் தந்திரமும், மேல் "உடம்பிடர் தீர்க்கு மின்பம்" என்றலால் மருந்தும் கூறப்பட்டமை காண்க.

"மந்திரமுந் தந்திரமு மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னை"

என்றனர் ஆளுடைய அரசுகள். 'மந்திரம்' வேத மெனவும், 'தந்திரம்' சிவாகமங்களெனவும் உரைத்தலுமாம். இந் நீறே எல்லாச் சமயங்களினும் அவ்வச் சமயத்தார்களால் ஒவ்வொரு வகையாகத் தங்கள் வழிபாட்டிற் கொள்ளப்படுமாற்றைக் கண்டு கேட்டு உய்த்துணர்ந்து கொள்க. வாய் - அரசரம், ஆகுபெயர். திருவாலவாய் - மதுரை. இது முன்னொரு காலத்திற் கடல் கொண்டுபோக மீண்டும் உண்டாகப் பெறுவதற்குத் தம்மை வேண்டிய பாண்டியற்கு இறைவன் தமது கையிலணிந்த சிறு பாம்பொன்றினால் எல்லை காட்டிய காரணத்தால் இப்பெயரெய்திய தென்ப. திருவாலவாயான் திருநீறே இவ்வாறு எல்லாமாகும் தன்மையுடையதா மென்பதிதன் கருத்து. (க)

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆலவா யான்திரு நீறே.

(ப - ரை.) வேதத்தில் உள்ளதும் - வேதத்தில் கூறப்பெற்றுள்ளதும், நீறு - திருநீறே, வெம்துயர் தீர்ப்பதும் - கொடிய துன்பங்களை ஒழிப்பதும், நீறு—, போதம் தருவதும் - மெய்யறிவைப் பயப்பதும், நீறு—; புன்மை தவிர்ப்பதும் - இழிந்த தன்மையை நீக்குவதும், நீறு—, ஓதத்தகுவதும் - படித்தறியத் தக்கதும், நீறு—, உண்மையில் உள்ளதும் - உண்மை நூல்களில் கூறப்பட்டுள்ளதும், நீறு—, இத்தகைய பெருமை வாய்ந்தது, சீதப் புனல் வயல் - குளிர்ந்த நீர்நிறைந்த வயல்களால், சூழ்ந்த - சூழப்பட்ட, திருவாலவாயான் -, திருநீறே - திருநீறேயாம் என்றவாறு.

வேதத்திலுள்ளது - திருநீறு ஒன்றுமே எல்லோரும் அணியும் அடையாளமாகவும் அனைத்து நலங்களையும் பயப்பதாகவும், பிறவித் துன்ப முதலாகவுள்ள எல்லாத் துன்பங்களையும் நீக்குவதாகவும், பிற எல்லாமாகவும் பேசப்பட்ட தன்மையை "விபூதியில்லாத நெற்றியைக் கொளுத்துக" என்பது முதலிய வேத மொழிகளாதி வசனங்கள் உற்று நோக்கிலறியலாம். 'பஸ்மஜாபாலிஃகாலாக்னிருத்ரம்' முதலிய பல உபநிடதங்கள் விபூதியைப் பற்றிப் பேசும். வெந்துயர் - கொடிய பிறவித்துயரம். இது தன்னால் வருவனவும் (ஆதியாத்மிகம்), பிறவுயிர்களால் வருவனவும் (ஆதிபௌதிகம்), தெய்வத்தால் வருவனவும் (ஆதிதைவிகம்) என முப்பகுதியதாம். போதம் - ஞானம். ஆன்மபோதமும் போதமெனவே கூறப்பெறுமெனினும் அதன் கெடுதலே விரும்பப்பெறுவதாகலின் இங்குக் கருதப்பெற்றது சிவஞானமென்க.

புன்மை - உடம்பின்கண் ஏற்படும் தூயஅல்லாப் புன்மைகளும், உயிரைப்பற்றியுள்ள ஆணவமலப் புன்மையுமென்க. திருநீற்றுப்பூச்சே எல்லாச் சிறுமைகளையும் நீக்கும். திருநீற்றை ஆக்னேய ஸ்நாநமாகப் பிரமாண நூல்கள் கூறுமாறும், ஆன்மாக்களின் மலத்தைக் கழுவுவதால் இதற்கு க்ஷாரம் எனப் பெயர் உள்ளவாறும் அறிக. ஓதல் - ஓதியறிதல். உண்மை - உண்மை நூல்கள். (௨)

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

(ப - ரை.) முத்தி தருவதும் - வீடுபேற்றைக் கொடுப்பதும், நீறு - திருநீறே, முனிவர் அணிவதும் - முனிவர்கள்

அணிந்து கொள்வதும், நீறு—, சத்தியமாவதும் - உண்மையாவதும், நீறு—, தக்கோர் புகழ்வதும் - பெரியோர்கள் புகழ்ந்து பேசுவதும், நீறு—, பத்தி தருவதும் - பத்தியைக் கொடுப்பதும், நீறு—, பாவ இனியதும் - துதிக்க இன்பம் பயப்பதாவதும், நீறு—, சித்திதருவதும் - வேண்டும் பொருள்களைத் தருவதும், நீறு—, (இத்தகைய பெருமை வாய்ந்தது) திருவாலவாயான்—, திருநீறே - திருநீறேயாம் என்றவாறு.

முத்தி - மோக்ஷம்: முஞ்ச் என்னும் தாதுவினின்றும் தோன்றி விடுகை என்னும் பொருளதாவது. பரமுத்தி - ஈண்டுக் கருதப்பட்டதென்க. முனிவர் - கடவுளை இடைவிடாது தியானஞ் செய்வோர். சத்தியமாவது - (நாசமில்லாததாய்) உண்மைப் பொருளாவது: நீற்றப்பட்ட விதனை மேல் எவ்விதமாகவும் அழிக்க முடியாமை கருதுக. அழியும் எல்லாவுலகமும் இதன் தன்மையையே முடிவில் அடைவனவாம். தக்கோர் - பெருமை மிக்க பெரியோர். பத்தி - கடவுளிடத்துச் செயப்படும் அன்பு. பாவல் - துதித்தல். சித்தி - அட்டமா சித்திகள்:— அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. இவற்றின் விரிவை எல்லாம் திருவாலவாய்ப்புராணம் முதலியவற்றுட் காண்க. விபூதி என்பது மேலான அருட்செல்வம் ஆகலின், அழியுந் தன்மையவாய செல்வத்தையே யன்றி நிரதிசயமாகிய முத்தியையும் கொடுப்பதாம். (௩)

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணம் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணம் தருவது நீறு திருஆலவா யான்திரு நீறே.

(ப - ரை.) காண இனியதும் - பார்த்தற்கு இன்பம் பயப்பதாவதும், நீறு - திருநீறே, கவினைத் தருவதும் - அழகினைக் கொடுப்பதும், நீறு—, பேணி - விரும்பி, அணிபவர்க்கெல்லாம் - தரித்துக் கொள்பவர்களுக்கெல்லாம், பெருமை கொடுப்பது - பெருமை தருவதும், நீறு—, மாணம் தகைவதும் - மாட்சிமைக் குணமதாவதும், நீறு—, மதியைத் தருவதும் - அறிவைத் தருவதும், நீறு—, சேணம் தருவது - மேலுலக இன்பத்தைக் கொடுப்பதும், நீறு—, திருவாலவாயான்—, திருநீறே - திருநீறேயாம் என்றவாறு.

கவின் - அழகு: மேல் சுந்தரமாவது என்றது தானே அழகியதாயிருப்பது; ஈண்டுத் தான்சேர்ந்த பிற பொருள்களை யழகு

படுத்துவது. பேணல் - பாராட்டல், விரும்பல். மாணம் - மாட்சிமை. தகைவது - தகைவு அது. தகை - மேன்மைக் குணம். தகைவது - நீங்காமற் பிணிப்பதுமாம். மதி - அறிவு, உலகஞானம். போதம் - மெய்யறிவு; முன்னர்க் கூறப்பட்டது. சேணம் - சேண் அம்: மேலுலகத்து அழகிய இன்பமாம். சேணம் என்பவற்றில் அம் சாரியையும் ஆம். (ச)

பூச இனியது நீறு புண்ணியம் ஆவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே.

(ப - ரை.) பூச இனியதும் - தரித்துக்கொள்ள இன்பமாவதும், நீறு—, புண்ணியம் ஆவதும் - புண்ணிய வடிவினதாவதும், நீறு—, பேச இனியதும் - எடுத்துக் கூறுதற்கு இனியதாயிருப்பதும், நீறு—, பெருந்தவத்தோர்களுக்கெல்லாம் - பெரிய தவசிகளுக்கெல்லாம், ஆசை கெடுப்பதும் - அவாவறுப்பதும், நீறு—, அந்தமதாவதும் - எல்லாவற்றின் முடிவாயிருப்பதும், நீறு—, தேசம் புகழ்வதும்-எல்லாவுலகமும் புகழ்ந்து பேசுவதும், நீறு—, (இத்தகைய பெருமையுடையது யாது என்னின்), திருவாலவாயான்—, திருநீறே - திருநீறேயாம் என்றவாறு.

விபூதி சிற்றின்ப விருப்பினராகிய இல்லறத்தினர்க்குப் புண்ணிய முதலிய எல்லா இம்மை யின்பங்களையும் பயப்பதாவதன்றிப் பேரின்ப விருப்பினராகிய பெரிய முனிவர்களுக்குப் பற்றறுதி செய்வித்து முத்திகொடுப்பது மாதலின் ஆசை கெடுப்பதும் நீறு என்னப்பட்டது. அந்தம் - ஈறு; எல்லாப்பதார்த்தங்களும் ஈற்றில் இதனுருவையே எய்துவதாதலின் இவ்வாறு கூறியது. தேசம் : ஆகுபெயர்; தேசத்தவர். (ரு)

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம ளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆலவா யான்திரு நீறே.

(ll - ரை.) அருத்தம் அது ஆவதும் - செல்வமாவதும், நீறு—, அவலம் அறுப்பதும் - துன்பம் துடைப்பதும், நீறு—, வருத்தம் தணிப்பதும் - வருத்தத்தினைக் குறைப்பதும், நீறு—, வானம் அளிப்பதும் - வானுலகம் தருவதும், நீறு—, பொருத்தம் அது ஆவதும்-பொருத்தமாயிருப்பதாவதும், நீறு—, புண்ணியர் -

புண்ணியப் பேற்றினர், பூசும் - பூசிக்கொள்வதும், வெண்ணீறு - திருவெண்ணீறு (இது யாதெனின்,) திருத்தகு-இலக்குமி தங்குகின்ற, மாளிகை சூழ்ந்த - மாளிகைகளால் சூழப்பட்ட, திருவாலவாயான்—, திருநீறே - திருநீறேயாம், என்றவாறு.

அருத்தம் - செல்வம், அவலம் - துன்பம். திருத்தகு - இலக்குமி வசித்தற்குத் தக்க; செல்வமிக்க எனவுமாம். புண்ணியர்-புண்ணியப் பேறுடையர்; புண்ணியம்-சிவ புண்ணியம். (சு)

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியம் ஆவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவா யான்திரு நீறே.

(ப - ரை.) எயிலது அட்டதும் - புரங்களை நீறாக்கியதும், நீறு—, இருமைக்கும் உள்ளதும் - இருமைப்பேற்றிற்கும் துணையாக அமைந்துள்ளதும், நீறு—, பயிலப்படுவதும் - பழகப்படுவதும், நீறு—, பாக்கியம் ஆவதும் - செல்வமாயிருப்பதும், நீறு—, துயிலைத் தடுப்பதும் - இறப்பினை நீக்குவதும், நீறு—, சுத்தமதாவதும் - தூய்மையதாயிருப்பதும், நீறு—, (இது யாதெனின்) அயிலைப்பொலிதரு - கூர்மையால் விளங்குகின்ற, சூலத்து - சூலப்படையையுடைய, ஆலவாயான்—, திருநீறே - திருநீறேயாம் என்றவாறு.

எயில் - புரம், திரிபுரம். அடுதல் - சுடுதல்; சிரித்தெரித்தமை கருதப்பட்டது. இருமை - இம்மை மறுமை யின்பப்பேறு. பாக்கியம் - செல்வம். துயில் - இறப்பு, தூக்கமுமாம். சூலத்தாலவாயான் - "சூலப்படையுடையார் தாமேபோலும்" என்பது தமிழ் வேதம். அயிலை : வேற்றுமை மயக்கம்; ஐ சாரியையுமாம். (எ)

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணம் ஆவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவம் ஆவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவா யான்திரு நீறே.

(ப - ரை) இராவணன் மேலதும் - இராவணன் உடம்பிற் பூசப்பட்டிருப்பதும், நீறு—, எண்ணத்தகுவதும் - (சிறப்புடையதாக) மதிக்கப்படுவதும், நீறு—, பராவணம் ஆவதும் - பராசத்தியின் வண்ணமாயிருப்பதும், நீறு—, பாவம் அறுப்பதும் -

பாவத்தை யறுத்தொழிப்பதும், நீறு—, தராவணம் ஆவதும் - நிலமகளின் வண்ணமாயிருப்பதும், நீறு—, தத்துவம் ஆவதும் - தத்துவ வடிவாயிருப்பதும், நீறு—, அரா - பாம்புகள், அணங்கும் திருமேனி - அணியப்பட்டுள்ள திருவுருவத்தையுடைய, ஆலவாயான்—, திருநீறே - திருநீறேயாம், என்றவாறு.

இராவணன் - விச்சிரவசுவின் புத்திரனாகிய அரக்கர்கோன். மலையின்கீழ் நசுக்குண்டு நெடுங்காலம் கிடந்து அழுதமையின் இப்பெயர் இறைவனால் அருளப்பட்டதென்க. இராவணம் - அழுதல். "பயங்கள் பண்ணி யிராவண னென்றவனைப் பேரியம்பக்கொண்டார்" என்பது தமிழ்மறை. சிறந்த சிவனடியானாதலின் இவனது திருநீற்றுப்பூச்சு எடுத்துக் கூறப்பட்டது. பராவணம் - பரா - பராசத்தி; வடமொழிப் பெயர்; ஸ்ரீலிங்கம் - ஐகார ஈற்றினதாகப் 'பரை' எனத் தமிழில் திரிந்துவரும் - 'நீற்றுப்பதிகம் நிகழ்த்துங்காலை, மாற்றுப்பரையின் வரலாறும்' எனப் பாயிரத்துக் கூறியது காண்க. பாவம் - மாபாதகங்கள் முதலிய எல்லாப் பாவமும், க்ஷாரம் என்பது பாவங்களைக் கழுவுவதால் வந்த பெயராதலாலும் காண்க. தரா - பூமிதேவி, பூதேவி - பூசூக்தத்தில் கூறப்பட்டது இச்சத்தியென்க. தத்துவம் - உண்மைத் தத்துவம். (அ)

மாலொ டயனறி யாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலஉ டம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்டமி டற்றெம் ஆலவா யான்திரு நீறே.

(ப - ரை) மாலொடு - விட்டுணுமூர்த்தியோடு, அயன் - நான்முகனும், அறியாத - அறியப்படாத, வண்ணமும் - தன்மையும், உள்ளதும் - உள்ளதாவதும், நீறு - திருநீறே, மேல் உறை - மேல் உலகத்துறைகின்ற, தேவர்கள் தங்கள் - தேவர்களது, மெய்யதும் - உடம்பின் மேலதாவதும், வெண்பொடி - வெண்பொடியாகிய, நீறு—, ஏல - பொருந்த, உடம்பு - சரீரத்தான் வரும், இடர் - துன்பத்தை, தீர்க்கும் - ஒழிக்கின்ற, இன்பம் தருவதும் - பேரின்பமளிப்பதும், நீறு—, (இது யாதெனின்) ஆலம் அது உண்ட - நஞ்சையமுதாகவுண்ட, மிடற்று - திருக்கழுத்தினையுடைய. எம் - எம்முடைய, ஆலவாயான்—, திருநீறே - திருநீறேயாகும் என்றவாறு.

மாலொடு அயன் - ஒடு உம்மைப்பொருளதேனும் உயர்வு பற்றி வரும் பொருளினையும் உடையதாம். விட்டுணுமூர்த்தி பிரம்மதேவரைப் பார்க்க மிக்க பெருமையுடையரென்பது

நூற்றுணிபாம். திருவெண்ணீறு பரமேச்சுவர வண்ணமுடைய தாதலின் இவரால் அறியப்படாத தன்மை கூறப்பட்டது. மேல்: ஆகுபெயர். வெண்மை - தூய தன்மையுணர்த்துவதாம். உடம்பிடர் - உடம்பான் வருந் துன்பம். உடம்புபற்றி வரும் பல துன்பங்களைக் குறிப்பது மாத்திரமன்றி, உடம்பெடுக்கும் துன்பமாகிய பிறவித் துன்பத்தையும் குறித்து நிற்குமென்க. இதன் நீக்கமே பேரின்பப் பேருமாதலின் உடம்பிடர் தீர்க்கும் இன்பம் என்று தெளிக. ஆலமதுண்ட மிடறு - திருநீலகண்டம். ஆலம் - ஆலகால விடம். (கூ)

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமும் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவா யான்திரு நீறே.

(ப - ரை) குண்டிகைக் கையர்களோடு - நீர்க்குண்டிகையைத் தாங்கிய (கீழ் மக்களாகிய) சமணர்களோடு, சாக்கியர் கூட்டமும் - புத்தர்களது கூட்டமும், கூட - (ஆகிய இவர்களை) ஒருசேர, கண் திகைப்பிப்பதும் - கண் திகைத்து மயங்கச் செய்வதும், நீறு—, கருத இனியதும் - நினைக்க இனியதாயிருப்பதும், நீறு—, எண் திசைப்பட்ட - எட்டுத்திசைகளினும் நிறுவப்பட்ட, பொருளார் - திசைக் காவற்றலைமையுள்ளவர்கள், ஏத்தும் தகையதும் - துதித்தற்குரிய பெருமையுடையதும், நீறு—, (இது யாதெனின்) அண்டத்தவர் - அண்டத் தலைமை வகித்த பெரியவர், பணிந்து ஏத்தும் - வணங்கித் தொழும், ஆலவாயான்—, திருநீறே - திருநீறேயாம், என்றவாறு.

குண்டிகை - நீர்க்கரகம். நோய்களுக்கு அபிமந்திரித்துக் குடிப்பிக்கவும், தெளிக்கவும், பிற காரணங்கள் பற்றியும் நீர் நிறைத்து வைத்துள்ள நீர்க் கரகம். கையர்-கீழ் மக்கள், கையினையுடையர் என்றலுமாம். 'உறிமுடித்த குண்டிகைதங் கையிற் றூக்கி யூத்தைவாய்ச் சமணர்க்கோர் குண்டாக்கனாய்' என்பதும் காணத்தக்கது. சாக்கியர் - புத்தர். கௌதம சாக்யன் - புத்த முதல்வன். புறப்புறச் சமயத்தவர்களாகிய இவர்களது கூட்டம் தேசோமயமாகிய விபூதிப் பூச்சினைக் கண்டு பொறாது கண் கூசும் தன்மையுடையதாதலின் இவ்வாறு கூறப்பட்டதென்க. எண்திசைப்பட்ட பொருளார் - அட்டதிக்குப் பாலகர். இவர் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பார். பொருள் - தலைமை. அண்டத்தவர் - அண்டத் தலைமை வகித்த காலாக்கினிருத்திரர் முதலிய பெரியோர். தேவர் என்பது சாமானியப் பொருள். (௧0)

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னனுடல் உற்ற தீப்பிணி ஆயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

(ப - ரை.) ஆற்றல் - வல்லமையும், அடல் - வெற்றியும் உடைய, விடை - இடபத்தை, ஏறும் - ஊர்ந்தருளுகின்ற, ஆலவாயான் - திருவாலவாய்ச் சிவபெருமானுடைய, திருநீற்றை - திருநீற்றினை, புகலி நிலாவும் - புகலி என்னும் சீர்காழியில் விளங்குகின்ற, பூசுரன் - அந்தணனாகிய, ஞானசம்பந்தன் - திருஞானசம்பந்தன் என்னும் யான், போற்றி - வணங்கி, தேற்றி - அதன் பெருமையினைத் தெளியச்செய்து, தென்னன் உடல் உற்ற - பாண்டியனது உடம்பிற் றோன்றிய, தீப்பிணி ஆயின - கொடிய சுரநோய் முதலியன, தீர - நீங்கும்படி, சாற்றிய - சொல்லிய, பாடல்கள் பத்தும் - பத்துத் திருப்பாட்டுக்களும், வல்லவர் - ஓத வல்லவர்கள், நல்லவர் தாமே - நல்லவர்களாவார்கள்.

ஆற்றல் - போர்செய்யும் வலிமை. அடல் - கொன்று வெற்றி கொள்ளும் தன்மை. புகலி - சீர்காழி; சூரபதுமனுக்கு ஆற்றலிழந்த இந்திரன் தன் துயரொழியுமாறு தன் மனைவியுடன் புகலடைந்து போற்றிய தலமாதலின் இப்பெயர் பெற்றது. பூசுரன் - பூதேவன், பிராமணன். தேற்றல் - இத்தகைய பெருமை வாய்ந்ததென உலகறியத் தெரித்தல். தென்னன் - பாண்டியன். தீப்பிணியாயின - சமணர்கள் தமது திருமடத்திற் புகுத்திய தீயை ஏவியருளியதனால் உண்டாகிய சுரநோயும் உயிரைப்பற்றி வருத்தும் மலப்பிணிப்பால் மேல்வரும் பிறவி நோயும் என எல்லா நோயும் என்க. இவ்வுண்மைகளை,

"திருமுகங் கருணை காட்டத் திருக்கையா னீறு காட்டிப்
பெருமறை துதிக்கு மாற்றாற் பிள்ளையார் போற்றிப் பின்னும்
ஒருமுறை தடவ வங்க ணொழிந்துவெப் பகன்று நீங்க
மருவுதீப் பிணியு நீங்கி வழுதியு முழுது முய்ந்தான்"

(பெரிய புராணம்)

என்னும் பன்னிரண்டாந் திருமுறையாற் காண்க. பதினொராவதாகிய இப்பாட்டுத் திருக்கடைக்காப்பு ஆகலின், அல்லது பயன் கூறுவதாகலின், ஏனைய பத்துமே பதிகமாவது காண்க. (கக)

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்

# பஞ்சாக்கரத் திருப்பதிகம்

---

## பண் - காந்தாரபஞ்சமம்

### அஞ்செழுத்துண்மை

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தோறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சஉ தைத்தன அஞ்செ ழுத்துமே.

(ப - ரை.) அஞ்சு எழுத்தும் ஏ - பஞ்சாக்கரமே: வஞ்சகம் அற்று - கரவு ஒழிந்து, அடிவாழ்த்த - திருவடியைப் போற்ற, வந்த - மேலடர்த்து வந்த, கூற்று - காலனும், அஞ்ச - அஞ்சுமாறு, உதைத்தன - உதைத்துக் காத்தன, (ஆதலால்) துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும் - உறங்குங் காலத்திலும் அஃதிலாத காலத்திலும், (அவற்றை) நெஞ்சகம் - மனம், நைந்து - கசிந்து, நாள்தொறும் - நாடோறும், நினைமின் - நினையக் கடவீர் என்றவாறு.

நாயனுர்க்கு உபநயனப்பருவ மெய்தியபோது அவர் தந்தையாராகிய சிவபாதவிருதயர் முதலிய வைதிக சைவ அந்தணர்கள் அவருக்குப் பூணூற் சடங்கு செய்வித்து, நான்கு மறைகளையும் தந்தோமென்று மந்திரங்களை மொழிய, நாயனுர் அவர்கட்குப் பழைய வேதங்களையெல்லாம் அங்கங்களுடன் எடுத்தியம்பி, அவர்க்குள்ளதாய ஐயந்திரிபுகளை அகற்றி, எல்லா மந்திரங்களும் தோன்றும் முதன் மந்திரம் திருவைந்தெழுத்தேயென்று தெளிவித்து, இத் திருப்பதிகத்தை யருளிச் செய்தார்.

துஞ்சல் - உறங்கல். துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்- சாக்கிர சொப்பன சுழுத்தி முதலிய எல்லா அவத்தைகளினும் என்றபடி. இதனை 'மெய்வகையஞ் சவத்தையினும் நிற்குமுறை ஓதுமுறை விளங்கத் தேற்றி' என்ற திருவாக்காற் காண்க. துஞ்சல் - இறத்தல் என்று பொருள்கொண்டு சொல்லலுமாம். 'வாழி

னுஞ் சாவினும் வருந்தினும்போய், வீழினுமுனகழல் விடுவேனல்லேன்' என்னும் இவரது மற்றொரு திருவாக்குக் காண்க. நெஞ்சகநைந்து நினைத்தல் - காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி நினைத்தல். நாயனார் தம்பால் எழுந்த எல்லையில்லாத பெருங்கருணையினால் உலகத்தவர்க்கு உறுதி கூறும் நெறியில் நாடொறும் நினையின் என ஆணையிட்டருளினரென்க. உள்ளத் தூய்மையோடு வழிபாடு செய்த மார்க்கண்டேயர் மேல் அடர்த்துவந்த கூற்றுவனை யுதைத்து அருள்செய்த செய்தி ஈண்டுக் கருதப்பட்டது. கூற்று - காலன்: முதனிலை திரிந்த தொழிலாகுபெயர். அஞ்செழுத்து - பஞ்சாக்கரம்; திருவைந்தெழுத்து. (க)

மந்திரம் நான்மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே.

(ப - ரை.) மந்திரம் - மறைமொழிகளும், நான்மறை - நான்கு வேதங்களும், ஆகி-ஆய், வானவர் - தேவர்களது, சிந்தையுள் - மனத்தில், நின்று - இருந்து, அவர்தம்மை - அவர்களை, ஆள்வன - ஆண்டருளுந் தன்மையுடையன, செந்தழல் - செவ்விய வேள்வித் தீயை, ஓம்பிய - வளர்க்கின்ற, செம்மை - செந்நெறிச் செல்வர்களாகிய, வேதியர்க்கு - மறையவர்க்கு, அந்தியுள்-மாலைக் காலத்திலே, மந்திரம் - செபிக்கப்படும் மந்திரமாகிய, அஞ்செழுத்துமே - பஞ்சாக்கரமேயாம் என்றவாறு.

மந்திர நான்மறை - மந்திரங்களையுடைய நான்மறையென்றும், நான்மறையின் சாரமான மந்திரமாகி என்றும் ஆம். ஆள்வன அஞ்செழுத்துமே என்று கூட்டுக. சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் என்னும் இரண்டனுள் சொற்பிரபஞ்சம் முன்னர்த் தோன்றுவதாதலானும், இதனுள்ளும் முன்னர்த் தோன்றுவது முதனூலாகிய வேதமாதலானும், இவ்வேத மூலத்திற்கும் காரணமாகியவற்றைத் தோற்றுவிக்கும் பராசக்தியிற்றோன்றிய ஆரணி, சனனி, உரோதயித்திரி என்னும் முச்சத்திகளின் புறவுருவான ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என்னும் ஐந்தொழிற் சத்தியாய் பஞ்சாக்கரம் இருத்தலானும், இப்பஞ்சாக்கரம் பூசை தியானம் செபம் முதலிய எல்லாக் காலத்திலும் ஓதப்படுவதெனினும் மாலைக்காலத்து ஔபாசனத்தில் மந்திரங்களும் அவைகட்குத் தலைமை வகித்த இதுவும் மிக்கு விளங்கித் தோன்றுதலின் ஔபாசனக்கினியுடைய வைதிக சைவத் திருவாளராகிய மறையவர்க்கு 'அந்தியுண் மந்திரம் அஞ்செழுத்துமே' என்றருளியதென்க. செந்தழல்-வைதிகாக்கினி. ஓம்பிய-

இடையறாது பாதுகாத்த. செம்மை - முத்திச் செந்நெறி. அந்தி - மாலைச்சந்தி. (உ)

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே.

(ப-ரை.) ஊனில் - உடம்பில், உயிர்ப்பை - உயிர்த்தலை, ஒடுக்கி-அடக்கி, ஒண்சுடர் - மிக்க ஒளியையுடைய, ஞான விளக்கினை - ஞான விளக்கை, ஏற்றி-மிளிரச் செய்து, நன்புலத்து - நன்மையாகிய இடத்தில், ஏனை வழி திறந்து - மற்றைய வழியாகிய சுழிமுனையைத் திறந்து, ஏத்துவார்க்கு - வழிபடுவார்க்கு, இடர் ஆன - பிறவித் துன்பமானவற்றை, கெடுப்பன - நீக்குந் தன்மை யுடையன, அஞ்செழுத்துமே - பஞ்சாக்கரமேயாம் என்றவாறு.

ஊன்-ஊனாலாய உடம்பு: ஆகுபெயர். உயிர்ப்பு-உயிர்த்தல், சுவாசம். ஒடுக்கி - இடகலை பிங்கலையில் செல்லாது நிறுத்தி. ஒண்சுடர்ஞான விளக்கு - மிக்க ஒளியையுடைய அறிவு விளக்கம். இந்திரியம், அந்தக்கரணம், ஆன்மபோதம் முதலிய எல்லாம் பிரகாசமாய் நிற்பனவெனினும் சடமாய், மறைப்புடையவாய் விளங்க விளக்குவவன்றித் தாமே விளங்காது அப்பிரகாசமாய் நிற்றலின், இறைவனது அருட்சத்தியாகிய சிவசத்தியே காட்டாய்க் காட்டும் சிவஞான தீபமொன்றே அலகில் சோதியாகலின் இவ்வாறு கூறப்பட்டது. ஏனைவழி - இடகலை பிங்கலைகளல்லவாகிய சுழிமுனை. ஏத்துதல்-சிதாகாசமாகிய தகராகாச உபாசனை. இது கைவல்யம் சாந்தோக்கியம் முதலிய உபநிடதங்களில் கூறப்பட்டது. இடர் - பிறவித்துன்பம். இச் செய்யுட் கருத்தினை,

'மூக்கு ணம்புல னைந்துட னடக்கி
மூல வாயுவை யெழுப்பிரு வழியைச்
சிக்கெ னும்படி அடைத்தொரு வழியைத்
திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த்
தக்க அஞ்செழுத் தோரெழுத் தருவார்
தன்மை கண்டருள் தரும்பெரு வெளிக்கே
புக்க முந்தினர் எமதுருப் பெருவார்
புவியில் வேட்டுவன் எடுத்தமென் புழுப்போல்.'

என்னும் திருவாதவூரடிகள் புராணத் திருவிருத்தக் கருத்தோடு வைத்துணர்க. (௩)

நல்லவர் தீயரேனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே.

(ப-ரை.) நல்லவர் தீயர் எனாது - இவர் நல்லவர் இவர் தீயவர் என்று எண்ணுதலின்றி (யாவராயினும்). நச்சினர்-விரும்பினவர்களது, செல்லல் கெட-பிறவித்துன்பங் கெடும்படி, சிவ முத்தி - சிவத்தோடிரண்டறக்கலக்கும் வீடுபேற்றை, காட்டுவ - கொடுப்பனவும், நமன் தமர் - இயமதூதுவர்கள், கொல்ல - கொல்லும்பொருட்டு, கொண்டுபோமிடத்து - கொண்டுசெல்லும் சமயத்தில், அல்லல்-இறுதித்துன்பத்தை, கெடுப்பன-ஒழிப்பனவும், அஞ்செழுத்துமே - பஞ்சாக்கரமேயாம், என்றவாறு.

எனாது - என்னும் பாகுபாடின்றி. நச்சினர் - விரும்பி ஓதுவோர். பிறப்பிறப்புத் துன்பங்களை யொழித்து முத்திகொடுக்குந் தன்மையுடையன பஞ்சாக்கரம் என்பது இதன் கருத்து. சிவமுத்தி - சிவத்தோடு இரண்டறக் கலக்கும் பரமுத்தி. இடம்-காலமெனப் பொருள்தந்து நின்றது. (௪)

கொங்கலர் வன்மதன் வாளி ஐந்தகத்
தங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சுந் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே.

(ப-ரை.) வல்மதன்-இறைவனை ஒழித்தொழிந்த யாவரையும் வேறற்குரிய வன்மை வாய்ந்த காமவேளினது, ஐ ஐம்பொழில் - அந்த ஐவகைத் திணைக்கும் உரிய, கொங்கு அலர் - மணங் கமழ்கின்ற பூக்களாகிய, வாளியும் ஐந்து - அம்புகளும் ஐந்தாம்; அகத்து அங்குஉள - உடம்பினுள்ளே அமைந்த, பூதமும் அஞ்சு - தன்மாத்திரைகளும் ஐந்தாம், தங்கு - இறைவனது திருமேனியில் வசிக்கின்ற, அரவின் படமும் அஞ்சு - பாம்பின் படம் பொருந்திய தலைகளும் ஐந்தாம், தம்உடை - இறைவனது, அங்கையில் - திருக்கரத்தினிடத்து. ஐவிரல் - திருவிரல்களும் ஐந்தாம், எழுத்தும் அஞ்சே - இறைவனது நாமமந்திரமாகிய திருவெழுத்துக்களும் ஐந்தேயாம் என்றவாறு.

கொங்கு பூந்தாதுமாம். அலர், மாரன் வாளியாதல்பற்றித் தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்பவற்றை உணர்த்தி நின்றது. இவை செய்யும் செயல்கள் சொல்லும், நினைவும், வெய்துயிர்த்தலும், இரங்கலும், வெதுப்பும், உணவு நீக்கமும், அழுங்கலும், பிதற்றலும், அயர்ப்பும், மயக்கமும், மரணமும் ஆம். பொழில் உலகமாதலை "பொய்யாத பொழிலேழுந் தாங்கிநின்ற, கற்றூண்காண் காளத்தி காணப்பட்ட கணநாதன்காண்" என்னும் தேவாரமும், "செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை மூவர்கோனாய் நின்றான்" என்னும் திருவாசகமும் உரைக்குமாற்றானும், உலகம் ஐந்திணைப் பாகுபாட்டினையுடைய தாதலைப் பொருளிலக்கண நூல்களுரைக்குமாற்றானும் அறியப் படும். அகரம், திணைப்பாகுபாடு உலகந்தோன்றிய காலந் தொட்டுள்ளதாதலின் பண்டறி சுட்டாயிற்று. அகத்துள என்ற குறிப்பினால் பூதம் சூட்சுமபூதமாகிய தன்மாத்திரையை உணர்த்தி நின்றது. படம்-தலையைக் குறிக்கும், "தோட்டேரே துத்தி யைந்தலைநாகத்தை யாட்டீரே" என்னும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்கும், 'ஐந்தலைய மாசுணங்கொண் டரை யார்க்கும்மே யவனாகில் அதிகைவீ ரட்டனாமே" என்னும் ஆளுடைய அரசின் திருவாக்கும் இறைவன் திருமேனியிற் பாங்காகிய பாம்புக்குத் தலை ஐந்தாதல் குறித்தலறிக. படம் அஞ்சும் என்பதனைப் படமும் அஞ்சு எனப் பிரித்துக் கூட்டியும், வாளி, விரல் என்பவற்றோடு வருவித்துக் கூட்டியும் உம்மை கொள்ளப்பட்டன. ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது.

இத்திருப்பாட்டில் ஆளுடைய பிள்ளையார் இறைவன் திருநாம மந்திரமாகிய திருவைந்தெழுத்தோடு அவ்விறைவன் படைப்பினில் ஐந்தைந்தாய் அமைந்த பிறவற்றையுங்கூட்டி அழகுபெற உரைத்தருளிய திறம் காணப்பெறுகின்றது. இவ்வாறு எண் முறையில் தொகுத்துரைக்கும் நியமத்தைச் சொல்வேந்தரது விடந்தீர்த்த திருப்பதிக்கத்துத் திருப்பாட்டுக்கள் முழுவதினும் காண்க. அன்றியும் சிரபுரச்செல்வர் ஈண்டுரைத் தாங்கு ஆளுடைய அரசின்,

"அஞ்சுகொ லாமவ ராடர வின்படம்
அஞ்சுகொ லாமவர் வெல்புல னைவன
அஞ்சுகொ லாமவர் காயப்பட் டான்கணை
அஞ்சுகொ லாமவ ராடின தாமே"

என்னும் அத் திருப்பதிகத்தின் ஐந்தாந்திருப்பாட்டில் ஐந்தைந் தாகும் அரவின்படமும், தன்மாத்திரைகளும், மாரன்கணைகளும் தொகுக்கப்பட்டமை அறியத்தக்கது. வன்மதன்-வன்மை இறை

வினை யொழித்தொழிந்த யாவரையும் வெல்லும் வன்மை. அவனது வன்மை இறைவனிடத்துச்செல்லாமையை,

"இழித்துகந்தீர் முன்னைவேட மிமையவர்க்கு முரைகள்பேணு
தொழித்துகந்தீர் நீர்முன்கொண்ட வுயர்தவத்தை யமரர்
அழிக்கவந்த காமவேளை யவனுடைய தாதைகாண [வேண்ட
விழித்துகந்த வெற்றியென்னே வேலைசூழ்வெண் காடனீரே."

என்னும் ஆளுடைய நம்பியின் திருவாக்கானும், இஃதன்றி யவனுக்கு இறைவனை யன்றிச் செயலும் இல்லாமையை "வில்லாடன் மார னிருக்கவும் யோகம் விளைத்தவந்நாள், புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே" என்னும் திருவருணைக்கலம்பகத்தானும் அறிக. இதன் விரிவை யெல்லாம் கந்த புராணம் காமதகனப்படலத்துக் காண்க.

இச்செய்யுளுக்கு இவ்வாறு பொருளுரைக்கப்பட்ட தெனினும், மாரனைக்கொண்டு உயிர்களுக்கு இன்பங் கொடுக்குமாறும், உடலகத்துள்ள சூக்கும பூதங்கள் பிரேரிக்கப்படுமாறும் அரவின் படமும் அங்கைத் திருவிரல்களும் அவ்வெழுத்துக்களின் சொரூபமாமாறும், எல்லாம் திருவைந்தெழுத்தின் செயல்களாமெனவும் உய்த்துணர்ந்து கொள்ளப்படும். இவ்வளவேயன்றி எவ்வெவகோட்படு பொருளும் திருவைந்தெழுத்திற் குருவருளாலுய்த்துணர்த்தப்படு மென்பதனை,

"எவ்வெவகோட் படுபொருளு மஞ்செழுத்தி
னடக்கியவற் றியல்பு காட்டி
மெய்வகையஞ் சவத்தையினு நிற்குமுறை
யோதுமுறை விளங்கத் தேற்றி
அவ்வெழுத்தி னுள்ளீடு மறிவித்துச்
சிவபோகத் தழுத்தி நாயேன்
செவ்வினையுங் கைக்கொண்ட வேலப்ப
தேசிகன்றாள் சென்னி சேர்ப்பாம்."

என்னும் திராவிட மாபாடியக்காரரது திருவாக்கு வற்புறுத்துமன்றே. (ரு)

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே.

(ப-ரை.) தும்மல் இருமல்-தும்மல் இருமல்கள், தொடர்ந்த போழ்தினும் - தொடர்ந்து வந்த காலத்திலும், வெம்மை - கொடுமையாகிய, நரகம்விளைந்தபோழ்தினும் - நரகத்துன்பம் ஏற்பட்ட காலத்திலும், இம்மை வினை - இப்பிறப்பில் வருவன வாகிய பிராரத்த கன்மங்கள், அடர்ந்து - மேல்வந்து, எய்தும் போழ்தினும் - வருந்துங் காலத்திலும், அம்மையினும் - மறுபிறப் பிலும், துணை - துணையாயிருப்பன, அஞ்செழுத்துமே - பஞ்சாக் கரமேயாம் என்றவாறு.

தும்மல் இருமல்களும் வாதனையுடைய துன்பங்களாமாதலி னும் தீயவிளைவுகளாமாதலினும் இவை தொடர்ந்தபோழ் தினும் எனக் கூறப்பட்டது.

" தும்ம லோடருந் துயர்தோன் றிடினும்
அம்மல ரடியலா லரற்றா தென்நா "

என வருந் தேவாரத்தையுங் காண்க. வெம்மை-கொடுமை: உயிர் போகப் பெறாது யாதனா சரீரத்தோடு மேலும் மேலும் புதிது புதி தாய் அனுபவிக்கப்படுங் கொடிய தன்மை. நரகவாதனையினுந் துணையாவதை

" இருள்தரு துன்பப் படல மறைப்பமெய்ஞ் ஞானமெனும்
பொருள்தரு கண்ணிழந் துண்பொருள் நாடிப் புகலிழந்த
குருடரும் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின்று
அருள்தரு கைகொடுத் தேற்றும்ஐ யாறன் அடித்தலமே"

என்று அப்பமூர்த்திகளருளிய திருவிருத்தத்தா லறிக. (௬)

வீடுபி றப்பை அறுத்து மேச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாள்தோறும்
மாடுகோ டுப்பன மன்னு மாநடம்
ஆடிஉ கப்பன அஞ்செ ழுத்துமே.

(ப-ரை.) மெச்சினர் - புகழ்ந்தவர்களுடைய, வீடுபிறப்பை - சாதல், பிறத்தல்களை, அறுத்து-ஒழித்து, பீடைகெடுப்பன - துன் பத்தை நீக்குவனவும், பின்னை-மேலும், நாள்தொறும்-தினந்தோ றும், மாடு கொடுப்பன - செல்வத்தைக் கொடுத்துதவுவனவும், மன்னும்-நிலைபெற்ற, மாநடம்-சிறந்த திருநடனத்தை, ஆடி உகப் பன - செய்து களிப்பனவும், (எவையெனின்) அஞ்செழுத்துமே - பஞ்சாக்கரமேயாம் என்றவாறு.

வீடுபிறப்பு - சாதல் பிறத்தல். வீடுதல் - கெடுதல், சாதல் இறைவன் வீடுபிறப்பைக் கெடுத்தலைச் "சாதலும் பிறத்தலுந் தவிர்த்து" என்னும் ஆளுடைய நம்பிகள் திருவாக்கானு மறிக. மாடு-செல்வம்; இம்மை மறுமைகளுக்கு ஆகும் இருவகைச் செல்வங்களுமாம். மாநடம் - எல்லா உயிர்களும் உய்யுமாறு செய்யும் பஞ்சகிருத்திய ஆநந்த நிருத்தம். உகத்தல் - மகிழ்தல்; இம்மகிழ்ச்சியும் ஆன்மோபகாரம் கருதியதன்றித் தம் பொருட்டாவதன்றாம். (எ)

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே.

(ப-ரை) வண்டுஅமர்-வண்டுகள் விரும்புகின்ற, ஓதி-அளகபாரத்தையுடைய, மடந்தை-உமாதேவியார், பேணின-விரும்பி வழி பட்டனவும், பண்டை - முற்காலத்து, இராவணன் - இராவணன், பாடி உய்ந்தன - கானம்பாடி உய்தற்கு ஏதுவாயிருந்தனவும், தொண்டர்கள் - அடியார்கள், கொண்டு - உறுதிப்பொருளாகக்கொண்டு, துதித்தபின் - தோத்திரம் செய்தபின்னர், அவருக்கு-அவ்வடியார்களுக்கு, அண்டம் அளிப்பன-முத்தி உலகைத் தருவனவும், அஞ்செழுத்துமே - பஞ்சாக்கரமேயாம் என்றவாறு.

வண்டமரோதிமடந்தை-ஸ்ரீ உமாதேவியார். தன்னை வேண்டிய இறைவிக்கு இறைவன் அருள்புரிந்து ஸ்ரீ பஞ்சாக்கரத்தை உபதேசித்த செய்தியைத் தென்றிரு முல்லைவாயிற் றேவாரத்தால் அறிக, அது "அணிக்கொண்டே கோதையவணன்று மேத்தவருள் செய்த வெந்தை" என்பது. திருவோமாம்புலியூரினும் இச் செய்தி கூறப்படும். பண்டை - மலையெடுத்து இடர்ப்பட்ட காலத்தைக் குறிக்கின்றது. பாடுதல் - கானக்கிரமத்தில் பாடுதல். ஆளுடைய நாயனாரும் இதனை வேய்ங்குழலில் வைத்துப் பாடியதையும் திருத்தொண்டர் புராணம் கூறும். அண்டம் முத்தியுலகம்; சிவலோகபதம் "அண்டமாள்வதற் கியாதுமையுற வில்லையே" என்பதில் இப் பிரயோகம் காண்க. (அ)

கார்வணன் நான்முகன் காணு தற்கொணுச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தோறும்
பேர்வணம் பேசிப்பி தற்றும் பித்தர்கட்
கார்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே.

(ப - ரை.) கார்வண்ணன் - முகில் நிறமுடைய திருமாலும், நான் முகன் - நான்கு முகங்களையுடைய பிரமனும், காணுதற்கு ஒண்ணு - காணவியலாத. சீர்வணம் - சிறப்பு வாய்ந்த அழகிய, சேவடி - திருவடியை, செவ்வி - செவ்வியறிந்து, நாள்தொறும் - தினந்தோறும் பேர் வண்ணம் - பல பெயர்களால், பேசி - எடுத்தோதி, பிதற்றும் பித்தர்கட்கு - பிதற்றுநிற்கும் அடியவர்க்கு, ஆர்வண்ணம் ஆவன - இன்பம் நுகர்விக்கும் தன்மையுடையன ஆவன, அஞ்செழுத்துமே - பஞ்சாக்கரமேயாம் என்றவாறு.

கார் - முகில், மேகம் நீலநிற முடைமையின் இவ்வாறு கூறப்பட்டது. நான்முகன் - திசைதோறு முகமுடைப் பிரமன். காண்பேமென அகங்கரித்தெழுந்தமையின் "காணுதற் கொணுச் "சீர்வண" முடையன வாயின. "ஆரேனுங் காணு அரன்" என்பது ஆப்த வசனம். பேர்வண்ணம் பேசுதல் - ஒரு நாமம் ஒருருவ மில்லாரை ஆயிரம் திருநாமத்தாற் பாடுதல். பிதற்றுதல் - பலபடி பாராட்டிக் கூறுதல். இப்படித்தெனக் கூறமுடியாமையின் பலபடி பாராட்டுதல். "*உரைமாலையெல்லா முடையவடி, உரையாலுணரப்படாத வடி, அரைமாத்திரையி லடங்குமடி அகிலமளக்கிற் பாரில்லாவடி" என்னுந் திருவாக்கினைக் காண்க. பித்தர் - சிவஞானிகள். பித்தர் பேயர் பாலராதியர் போல்பவர் இவரென்க. ஆர்தல் - நுகர்தல். (கூ)

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திரம் ஆவன அஞ்சே ழுத்துமே.

(ப - ரை.) புத்தர் - புத்தர்களும், சமண்-சமணராகிய, கழுக்கையர் - கழுவினைப்பற்றிய கையினையுடையவர்களும் (ஆகிய இவர்களின்) பொய் கொளா - பொய்யுரைகளைக் கொள்ளாத, சித்தத்தவர்கள் - உள்ளத்தையுடையவர்களாகிய சிவனடியார்கள், தெளிந்து-பரம்பொருளாக ஐயந்திரிபறத் தீர்மானித்து, தேறின- நிச்சயித்த தன்மையுடையனவும், வித்தகம் - ஞானத் திருவுருவத்தையுடைய, நீறு அணிவார் - திருநீற்றினைத் தரிப்பவர்களது, வினைப்பகைக்கு - வினைப்பகையைச் செகுத்தற்கு, அத்திரம் ஆவன - படையாயிருப்பனவும், அஞ்செழுத்துமே - பஞ்சாக்கரமேயாம் என்றவாறு.

புத்தர் - புத்திதத்துவப்பொருள் நிச்சயம் செய்வோர். சமண் கழுக்கையர் - கழுக்கையராகிய சமணர் என்று மாற்றியுரைக்க

* திருவடித் திருத்தாண்டகம் (செய். எ.)

தஞ்சமய நிலைக்கும் கொண்ட கொள்கைக்கும் தவறு வந்தவழித் தம்மை அழித்துக்கொள்ளும் பொருட்டுக் கையினிற் கழுவேந்திய தன்மையர் இவரென்ப. பொய் - பொய்யுரை, கட்டியுரைக்கும் பூர்வபக்க சித்தாந்தம். கையர் பொய் : ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர். தெளிதல் - ஐயந்திரிபு இன்றி நிச்சயித்தல். தேறுதல் - சித்தாந்தமாக அறிதல். சித்தத்தவர் - சிவனடியார், செந்நெறிச் செல்வர். புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்னும் நாற்கூற்று அறுவகைச் சமயத்தும் நின்று, அவ்வச் சமயப்பொருளைச் சிவனருளால் அறிந்து தெளிந்து பிறகு செந்நெறியாகிய சைவசித்தாந்தத்தை அடைந்தவர். இதனை,

"* * * * அறுசமயத் தவராவரைத்
தேற்றுந் தகையன தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
யேற்றுந் தகையன வின்னம்ப ரான்ற னிணையடியே"*

என்னுந் தமிழ்மறையா னறிக. நீறு - மலத்தைக்கழுவிச் சிவஞானத்தைத் தருவதாகலின் வித்தகம் எனப்பட்டது. வினைப்பகை - வினையாகிய பகையென விரிக்க. அத்திரம் - கையிற்றிரமில்லாது செல்லுந்தகையது. சத்திரம் - கையிற்றிரமாகத் தங்குவது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருத்தெளிச்சேரியையடையும்போது ஆண்டுள்ள புத்தர் புத்தநந்தி யென்னும் தம் தலைவனைக் கூட்டிக்கொண்டுவந்து திருச்சின்னம் பரிமாறவொட்டாது தடுக்கத் திருமுறை எழுதும் தொண்டுபூண்ட திரு. சம்பந்த சரணாலய சுவாமிகள் இத் திருப்பாட்டினையோதிப் புத்தநந்தியின் தலையில் இடியிடித்து விழச்செய்தாரென்க. இதனால் உண்மை நாயன்மாரது திருவாக்குக்கள் பயனிறைந்த நிறைமொழி என்பது காண்க. (௧0)

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்து மஞ்சேழுத்
துற்றன வல்லவர் உம்பர் ஆவரே.

(ப - ரை.) நல் தமிழ்-நன்மைபயக்குந் திருநெறித் தமிழ் வல்ல, ஞானசம்பந்தன்-திருஞான சம்பந்தனும், நான் மறை-நான்காகிய வேதங்களையும், கற்றவன்-ஓதாதுணர்ந்தவனும், காழியார் மன்னன் - சீகாழியில் உள்ளார்க்குத் தலைவனும் ஆகிய யான், உன்னிய-கருதிச்சொன்ன, அற்றம் இல்-முடிவு இல்லாத, மாலை -

* அப்பர் திருவிருத்தம் (செய். எ.) (திருவின்னம்பர்)

சொன்மாலையாக வாய்ந்த, ஈர் ஐந்து-பத்துத் திருப்பாட்டுகள், அஞ்செழுத்து உற்றன - திருவைந்தெழுத்துப் பொருந்தின வற்றை, வல்லவர்-ஓதவல்லவர், உம்பர் ஆவர்-தேவர் ஆவார்கள் என்றவாறு.

நற்றமிழ்-இவர் ஓதாதுணர்ந்த முத்தமிழ் விரகராதலின் இவ்வாறு கூறியதென்க. "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்" என ஆளுடையநம்பி யுரைத்ததுங் காண்க. கற்றவன் - முன்னைய ஞானத்தால் ஓதாதுணர்ந்தவன். அற்றம் இல் - முடிவில்லாத, நித்தியத் தன்மைவாய்ந்த மாலையீரைந்து-பத்துத் திருப்பாட்டுக் களானமைந்த பாமாலை. உற்றன - பொருளாகக்கொண்டன. இப்பதிகம் திருவைந்தெழுத்தைப் பெயர் வகையாகக் கூறாமல், "அஞ்செழுத்துமே" என்று எண்வகையாற் கூறுமாற்றால் "அஞ்செழுத்துற்றன" என்றும், பஞ்சாக்கரத் திருப்பதிகம் என்றும் கூறப்பட்டது. அடுத்துவருவது "நமச்சிவாயப்பதிகம்" என்று கூறுமாறும் காணப்பெறும். (கக)

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

# நமச்சிவாயத் திருப்பதிகம்

---

## பண்-கௌசிகம்

அஞ்செழுத் துண்மை

திருச்சிற்றம்பலம்

காதல் ஆகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நல்நெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாம நமச்சி வாயவே.

(ப - ரை.) காதல் ஆகி - அன்பு முதிர்ந்து, கசிந்து - மனம் நெகிழ்ந்து, கண் நீர் மல்கி - கண்களில் நீர் நிறைந்து, ஓதுவார் தமை-ஓதுகின்றவர்களை, நன்னெறிக்கு-முத்திச் சென்னெறிக்கு, உய்ப்பது - செலுத்துவதும். வேதம் நான்கினும் - நான்காகிய வேதங்களுள்ளும், மெய்ப் பொருளாவது - உண்மைப் பொருளா யிருப்பதும், நாதன்-இறைவனது, நாமம்-திருநாம மந்திரமாகிய, நமச்சிவாயவே - 'நமச்சிவாய' வென்னும் திருவைந்தெழுத்துமே யாம் என்றவாறு.

காதல்-பேரன்பு, அன்பின் முதிர்ச்சி. கசிதல்-நெகிழ்தல், மனத்தினைக் கல்லினும் வலியுடையதாகக் கூறுதலின், அதனது பக்குவம் கசிதல் நெகிழ்தல், உருகுதல் என்பன முதலாகக் கூறப்பெறுமென்க. கண்ணீர் மல்குதல் - கண்ணீர் நிறைதல். திருவாதவூரடிகளும்,

"*உள்ளந்தாள் நின்றுச்சி அளவு நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்இணையும் மரமாந்தீ வினையி னேற்கே."

எனக் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கும் முறையை ஓதுமாறு காண்க. ஓதுவார் - வேதமந்திரமாதல் பற்றி ஓதுதல் எனக் கூறப்பட்டது. நன்னெறி - செந்நெறி, முத்திநெறி. இறைவன்

---

* திருவாசகம் :

நாமமே நான்கு வேதங்களிலும் முதல் நடு விறுதியெனும் யாண்டும் உண்மைப் பொருளாகக் கூறப் பெறுதலின், வேதநான்கினு மெய்ப்பொருளாதல் கூறப்பட்டது. இந்நியமம் எல்லாம் சதுர் வேத தாற்பரியமுடையார், சிவதத்துவ விவேக முடையார் திருவாக்குக்களால் பசுமரத்தாணி யறைந்தாங்குக் கூறப் பெறுமாறு கண்டறிக. வேதம் - அறிதற்கருவியாயுள்ளது. நான்கு - இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்பன. நாதன் - தலைவன்; நாதவுருவமாகிய மந்திரம் கூறப் பெறுதலின் அம்மந்திரத்தலைவனும் நாத வடிவினனாதல் சொல்லாமே யமையும். நமச்சிவாய - தூலபஞ்சாக்கரம். இம்மந்திர நியதிகளையெல்லாம் நல்ல ஞான குரவனை யடைந்து அருளப்பெற்றுய்க. (க)

நம்பு வார்நமர் நாவின் நவிற்றினல்
வம்பு நாள்மலர் வார்மது ஒப்பது
செம்போன் ஆர்தில கம்உல குக்கெலாம்
நம்பன் நாம நமச்சி வாயவே.

(ப - ரை-) நம்பன்-இறைவனது, நாமம்-திருநாமமந்திரமாகிய, நமச்சிவாயவே "நமச்சிவாய" என்னும் திருவைந்தெழுத்தே, நமர் - நம்மவராகிய சிவனடியர், நம்புவார் - விருப்பமுடையராய், நாவின் நவிற்றினல் - நாவினல் உச்சரிக்கப்பெறின், வம்பு-மணங் கமழும், நாள்மலர் - அன்றலர்ந்த புதிய மலரினின்றும், வார் - ஒழுகுகின்ற, மது-தேனினையும், உலகுக்கு எல்லாம் - எல்லா உலகங்கட்கும், செம்பொன் - பசும் பொன்னையும், ஆர்திலகம் - விளங்கும் திலகத்தினையும், ஒப்பது - ஒப்பதாய் உள்ளதாம் என்றவாறு.

நம்புவார் - விருப்பமுடையார். நமர் - "நாம் என்பது அடியாகப் பிறந்த பெயர். வம்புநாண் மலர்மது-இதுவே நறுமணமுடையதாயும், இன்சுவை யுடையதாயும், நிறைவுற்றதாயும் இருக்குமாறு அறியப்படும். மது ஒத்தல் - மதுவொத்து இனித்தல். இது பண்புவமம். சிவாநந்தம் மது ஒப்பதும், திலகம் ஒப்பதும் ஈண்டுக் கருதப்பட்டது. சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து எனினும், உலகினர்க்கு அறிவுறுத்துமாறு உலகறிபொருள்மேல் வைத்துக் கூறப்பட்டது. இறைவன் "பொன்வண்ண மெவ் வண்ண மவ்வண்ண" மாகிய திருவுருவுடையனாய் "மேலோர்க்கு மேலோர்க்கு மேலான" வனாய் விளங்கலின் உலகுக்கெலாம் செம்பொனார் திலகமாயினான். நம்பன் - சிவனது இடுகுறிப் பெயருள் ஒன்றாம். 'உலகுக் கெல்லாம் அழகு பயத்தலிற் செம்பொன்னணியன்ற திலக மொப்பதும்...............நமச்சிவாயவே" என்பதும் பொருந்தும். (உ)

நெக்கு ளார்வம் மிகப்பெரு கிநினைந்து
அக்கு மாலைகொ டங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராய்த்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே.

(ப - ரை.) உள் - மனம், நெக்கு-நெகிழ்ந்து, ஆர்வம்-அன்பு, மிகப்பெருகி - மிகுதியாகப் பெருக்கினையடைந்து, அங்கையில் - அழகிய கையினிடத்து, அக்குமாலைகொடு - அக்குமாலையினால், நினைந்து எண்ணுவார் - எண்ணி உருவேற்றுகின்றவர்களை, தக்க-தகுதிவாய்ந்த, வானவராய் - (பெருந்) தேவர்களாய், தகுவிப்பது-பொருத்துவிப்பது, நக்கன்-இறைவனது, நாமம்-நாம மந்திரமாகிய, நமச்சிவாயவே-"நமச்சிவாய" என்னும் திருவைந்தெழுத்துமேயாம் என்றவாறு.

நெகுதல் - உருகுதல். உள் - மனம். இது அந்தக்கரணம் ஆதலின் இவ்வாறு கூறுவதென்க. இடவாகுபெயர். மன நெகிழ்ந்து நினைப்பவர்க்கே சிவன் அருளுவன் என்பதை,

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே."

எனும் திருக்குறுந் தொகையா னறிக.

நினைந்தெண்ணுதல், மானதசெப மெனப்படும். முன்னர் "நாவி னவிற்றுதல்" கூறப்பட்டதனால் இது ஈண்டுச் சொல்லப்பட்டது. தக்கவானவர்-பெருந்தேவர். இத்தேவர் பிறவித்தேவரும் கருமதேவரும் என இருவகைப்படுவர். பிறவித்தேவருள்ளும் முன்னைச் சிறுபுண்ணியத்தால் போகமட்டும் துய்க்கும் பேறுடையரும், பெரும்புண்ணியத்தால் போகப்பேற்றோடு உலகத்தைப் படைத்துக் காக்குந்தலைமை பெற்ற பிரம்ம விட்டுணு முதலிய பெருந்தேவர்களும் என இருவகையின ருண்மை காண்க. நக்கன், இறைவன் இடுகுறிப்பெயர்களுள் ஒன்று. நக்கன் என்னும் காரணப் பெயரின் திரிபு என்னலுமாம். அக்குமாலை - சங்குமணி மாலை. இனம்பற்றி உருத்திராக்க மாலையுமாம். (௩)

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே.

(ப-ரை.) நியமம் - நியமமாக, நினைவார்க்கு - நினைப்பவர் கட்கு, இனியான்-இனியவனும், நெற்றிநயனன்-நெற்றிக்கண்ணை யுடையவனுமான இறைவனது, நாமம்-நாமமந்திரமாகிய, நமச்சி வாய - 'நமச் சிவாய' என்னும் திருவைந்தெழுத்தை, இன் சொலால் - இனிய சொற்களினால், நயம்வந்து ஓதவல்லார்தமை- அன்புண்டாகி ஓதவல்லவர்களை, நண்ணினால் - நெருங்கப்பெறின் இயமன் தூதரும் - யமதூதர்களும், அஞ்சுவர்-அஞ்சி ஒதுங்குவர் என்றவாறு.

திருவைந்தெழுத்தை ஒழுங்காக ஓதவல்லவர்களைக் காலன் தூதர்களும் அஞ்சி அவர்பாற் செல்லார் என்பது கருத்தாகும். அப்பமூர்த்திகளும் இயமதூதரைத் திருவைந்தெழுத்தினை ஓத வல்லாரை நெருங்க வேண்டாமென ஆணை செய்தலை "மன்னுமஞ் செழுத்தாகிய மந்திரம் தன்னிலொன்றுவல் லாரையுஞ் சாரலே" என்னுந் திருவாக்காற் காண்க. நயம்-விருப்பம். நியமம்-ஒழுங்கு. நெற்றி நயனன்-நெற்றிக்கண்ணன். (ஏ)

கோல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

(ப-ரை-) கொல்வாரேனும் - கொலைத்தொழில் உடையவ ரெனினும், குணம்-நற்குணங்களும், பல நன்மைகள் - பலநன்மை களும், இல்லாரேனும் - இல்லாதவரெனினும், நல்லார் - எவர்க் கும் நல்லவராகிய இறைவரது, நாமம்-நாமமந்திரமாகிய, நமச்சி வாய - நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தினை, இயம்புவ ராயிடின் - சொல்வாரெனின், எல்லாத் தீங்கையும் - எல்லாக் கெடுதிகளையும், நீங்குவர் - ஒழியப்பெறுவார்கள், என்பர் - என்று கூறுவர் பெரியார் என்றவாறு.

நல்லார்-தம்மையடைந்தோர்க்கு எத்தகைய நன்மைகளை யும் அடைவிப்பவர். திருவைந்தெழுத்தை ஒருமுறை உச்சரிப் பவர், எல்லாத் தீமைகளும் நீங்கப்பெற்று எல்லா நன்மையும் அடைவர் எனின், இருமுறை மும்முறை கூறுவோர் பெறும் பயன் யாதெனநூல்கள் சொல்லவறியா. இதற்குற்ற சரிதத்தை ஸ்ரீ அரதத்த சரிதத்துள் விரிவாய்க் காண்க. (அ)

மந்த ரம்அன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே.

(ப-ரை.) நந்தி - இறைவனது, நாமம் - நாமமந்திரமாகிய, நமச்சிவாய - நமச்சிவாயவென்னும் திருவைந்தெழுத்தினை, மந்தரம் அன்ன - மந்தரமலையினை ஒத்த, பாவங்கள் - பாவங்களை, மேவிய - பொருந்திய, பந்தனை யவர் தாமும் - பிறவிப்பந்தத்தையுடையவரும், பகர்வரேல் - சொல்லி வணங்குவரேல், வல்வினை - அவரின் வலிய வினைகள், சிந்தும் - சிதைந்தொழியும், செல்வமும் - முத்திச் செல்வமும், மல்கும் - நிறையும் என்றவாறு.

மந்தரம், எழ்மலைகளுள் ஒன்று; கடல் கடைய மத்தாய் நின்றது. பெருமைபற்றிவந்த உவமை. பாவங்கள் - தீவினைகள். பாவங்கள் மேவிய பந்தனை - தீவினைப் பயன் நிறைந்த பிறவிப் பந்தம். பந்தனையவர் - ஒருசொல். செல்வம் - முத்திச் செல்வம். ஆல்: அசை. நந்தி - சிவன் பெயர்களுள் ஒன்று. "நந்திமகன்" என்னும் திருமந்திரத்தால் அறிக; கெடுதலில்லாதவர்; சித்தியர் என்பது பொருள். பிறவிப் பந்தம் கெட்டு முத்திப்பேறு சித்திக்கும் என்பது கருத்து. (சு)

நரகம் எழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய் வாயினர் ஆயின் உருத்திரர்
விரவி யேபுகு வித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே.

(ப-ரை.) நரகம் ஏழ்புக - எழுவகை நரகத்தினும் அழுந்த, நாடினர் ஆயினும் - எண்ணப்பட்டவர் என்றாலும், வரதன் - அருள் செய்பவனாகிய இறைவனது, நாமம் - நாம மந்திரமாகிய, நமச்சிவாய - 'நமச்சிவாய' என்னும் திருவைந்தெழுத்தை, உரை செய் - சொல்லுகின்ற, வாயினர் ஆயின் - வாயினையுடையவர் ஆனால், உருத்திரர் - உருத்திரகணங்களோடு, விரவியே - கலந்து, புகுவித்திடும் - சிவலோகத்தில் புகுமாறு செய்யும், என்பர் - என்று பெரியோர் கூறுவர் என்றவாறு.

எழ்நரகம் - எழுவகை நரகம். அவை - அல்லல், இரௌரவம், கும்பீபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி என்பன. வகையாவன:- இருள், குளிர், புகை, மணல், துயிலாமை, இரத்தம், தீ எனும் இவற்றின் தன்மையுடைமை. நாடினர் - நாடப்பட்டவர் என்னும் பொருளது. செய் வாய் - வினைத்தொகை. உருத்திரர் - உருத்திர கணங்கள். நால்வேறியற்கையராகிய தேவகணத்தைச் சேர்ந்த உருத்திரரை அன்று ஈண்டுக் கருதியது; சிவலோக வாசிகளாகிய உருத்திரகணங்களையென்க. விரவுதல் - சமானமாய்க் கலத்தல். பெரியோரென்பது வருவித் துரைக்கப்பட்டது. வரதன் - சிவனது நாமம்; அபயங்

தந்து காப்பவன் என்னும் பொருளது; "மானேறு கரமுடைய வரதர்போலும்" என்னும் தேவாரங் காண்க. (எ)

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கோள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கோள் நாமம் நமச்சி வாயவே.

(ப - ரை.) இலங்கை மன்னன் - இலங்கைக்கு அரசனாகிய இராவணன், எடுத்த - பெயர்த்து எடுத்த, அடுக்கல்மேல் - திருக்கைலாயமலையின்மேல், சங்கரன் - சங்கரனாகிய இறைவன், தலம் கொள் - இடங் கொண்ட, கால் விரல் - திருவடித் திருவிரலை, ஊன்றலும் - ஊன்றின அளவில், மலங்கி - அழுங்கி, வாய்மொழி செய்தவன் - வாய்விட்டு அழுதவனாகிய அவ்விராவணன், உய்வகை - பிழைக்குமாறு, நலம்கொள் - காத்தலாகிய நன்மையை மேற்கொண்ட, நாமம் - நாம மந்திரம். நமச்சிவாயவே - "நமச்சிவாய" என்னும் திருவைந்தெழுத்துமே யாம்.

இலங்கை மன்னனெனவே இராவணனென்றாயிற்று. எடுத்தவெனெச்சம் அடுக்கல் என்னும் செயப்படுபொருள் கொண்டது. அடுக்கல்-மலை; ஈண்டுத் திருக்கைலாயம். கால்விரலூன்றித் தூய்மைசெய்தமை இறைமைக்குணத்தைக் காட்டுவதாயிற்று. "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்னும் பழமொழிக்கிணங்கப் பிரமனைக் கைந்நகத்தானும், புரத்தைப் புன்னகையானும், மாரவேளைக் கண்விழிப்பாலும் முயற்சியின்றித் தூய்மை செய்தனவெல்லாம் இதனோடு காண்க. விரல்-விரல் நகம்; ஆகுபெயர். நக நுதியால் ஊன்றினதாகவே சரித்திரம் காணப் பெறும். சங்கரன் - தம்மை யடைந்தோர்க்கு நலம் செய்பவன் என்பது பொருள். வாய்மொழி செய்தல் - வாய்விட்டழுதல். அவன் மலங்கி வாயால் மொழிதலைச் செய்து உய்யும் வகை புரத்தலாகிய நலத்தினைக் கொண்ட நாமம் என்றும் பொருள் கொள்ளலாம். (அ)

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகிய லந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே.

(ப - ரை.) போதன்-நான்முகனும், போது அன்ன கண்ணனும் - தாமரைமலரை யொத்த கண்களையுடைய திருமாலும், அண்ணல் தன் - சிவபெருமானது, முடி பாதம் - திருமுடியையும்

திருவடியையும், நேடிய பண்பராய் - தேடுந் தன்மையை மேற்கொண்டவர்களாய், யாதும் - ஒரு சிறிதும், காண்பு - காணுதல், அரிது ஆகி - அருமையாகி, அலந்தவர் - எய்த்து வருந்தியவர், ஓதும் - ஓதிய, நாமம் - நாம மந்திரம், நமச்சிவாயவே - 'நமச்சிவாய' வென்னும் திருவைந்தெழுத்துமே யாம் என்றவாறு.

போதன் - மலர்மே லிருந்தவன்; மலர் - உந்தித்தாமரை. போதன கண்ணன் - செந்தாமரைக்கண்ணன், விட்டுணு மூர்த்தி. அண்ணல் - பெருமையிற் சிறந்தோன். பாதம், முடி, மாற்றி உரைக்கப்பட்டன. யாதும் - ஒரு சிறிதும்: இழிவுசிறப்பு. காண்பு : தொழிற்பெயர். அலத்தல் - இளைத்து வருந்தல். ஓதல் - எடுத்துத் துதித்தல். உயிரறிவு மிக்கோராய்த் தேடியறியாது இளைத்து, அது நீங்கித் திருவைந்தெழுத் தோதி உய்ந்தனர் என்பது இதன் கருத்தாம். (கூ)

கஞ்சி மண்டையர் கையின்உண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே.

(ப - ரை.) விஞ்சை - வித்தையுடைய, அண்டர்கள் - தேவர்கள், வேண்ட - வேண்டிக்கொள்ள, அமுது செய் - அமுதமாகச் செய்தருளிய, நஞ்சு உண் - விடத்தை உண்ட, கண்டன் - திருமிடற்றையுடைய இறைவனது, நமச்சிவாய - நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை, கஞ்சி மண்டையர் - கஞ்சி மண்டையைக் கையிலேந்திய புத்தரும், கையின் உண் - கையிலேற்றுண்கின்ற, கையர்கள் - கீழ்மக்களாகிய சமணர்களும் ஆகிய, வெம் சொல் - கடுஞ்சொற்களை உடைய, மிண்டர் - முருடர், விரவிலர் - அடைய மாட்டார்கள், என்பர் - (என்று) பெரியோர் சொல்வர் என்றவாறு.

கஞ்சி மண்டை - மண்டைபோல்வதோர் பிச்சையேற்கும் மட்கலம். இதனை மணிமேகலை, சக்கரவாளக்கோட்ட முரைத்த காதையானும், நீலகேசித்திரட்டு உரையாசிரியர், "கிழிக்கத்தி, கத்திரிகை, சுண்ணம்புச் செப்பு, வெற்றிலைப்பெட்டி, பாக்குப் பை, பல்லுத் துடைக்கப் பாளை முதலியனவும், தலைவழிக்குங் கத்தி, தீட்டுக்கல், குடை, செருப்பு, மண்டை, கெண்டி முதலியனவும் பிக்ஷுர்கள் கைக்கொள்ளுதற் குரியன" என்பதாலும் அறிக. சமணர் கையிலுண்பதை "கையிலிடுசோறு நின்றுண்ணுங் காதலமணர்" என்னும் வாகீசர் திருவாக்கானுங் காண்க. வெஞ்சொல் - தீமை பயக்கும் கொடுஞ்சொல்: ஆன்மலாபம் பயவாது தீமை பயத்தலால் இவ்வாறு கூறப்பட்டது. மிண்டர் -

விதண்டாவாதஞ் செய்யும் மூருடர். விஞ்சை - கல்வி. அமுது செய்தல் - விடத்தன்மையையொழித் தமுதமாகச் செய்தல். இதனை "ஆலத்தினு லமிர்தாக்கிய கோன்" என்னும் திருக் கோவையாரானு மறிக. நஞ்சுள் என்பது பாடமாயின் உண்டரு ளிய விடந்தங்கிய கண்டத்தினையுடையன் என்று உரைத்துக் கொள்க. (௧0)

நந்தி நாமம் நமச்சி வாயவெனும்
சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெல்லாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.

(ப - ரை.) நந்தி - சிவபெருமானது, நாமம் - நாம மந்திர மாகிய, நமச்சிவாய எனும் - நமச்சிவாய என்று சொல்லப் பெறு கிற, சந்தையால் - பாடும் முறைமையினால், தமிழ் - முத்தமிழ் வல்லவனாகிய, ஞானசம்பந்தன் சொல் - திருஞானசம்பந்தன் சொல்லை, சிந்தையால் மகிழ்ந்து - உள்ளங் களிகூர்ந்து, ஏத்தவல் லார் எல்லாம் - துதிக்க வல்லவர்கள் எல்லாம், பந்தபாசம் - பந்த பாசங்கள், அறுக்க வல்லார்கள் - அறுக்கவல்லுநராவார்கள் என்றவாறு.

சந்தை - பாடும் முறைமை என்று பொருள்படும் ஒரு வட சொல். பந்தபாசம் - பந்திக்கும் வினைக்கயிறு. "அறம் பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டி" என்னுந் திருவாசகங் காண்க. இத் திருப்பதிகத்தினை ஓதவல்லார் எல்லாம் பிறவிப் பிணி யொழியப் பெறுவர் என்பதாம். நாயனார் தமது திருமணத் திற்கு வந்தவராகிய எல்லோரையும் வீடுபேற்றிற் கூட்டுவிக்க வுன்னி அவர்களைத் தூயராக்குமாறு இத் திருப்பதிகத்தை ஓதிக் கேட்பித்துச் சிற்சோதியிற் கலப்பித்தாராதலின், இப் பலனை இது தரும் என்பதற்குள்ள ஐயப்பாடு யாண்டையது என்க. எத்தகைய பந்தத்தையும் அறுத்து வீடுபயக்கும் ஞானநெறியா வது திருவைந்தெழுத்தே என்று கருதி, இவர் நல்லூராப்பெருமண ஆலயத்தில் சிவலோகத் தியாகேசர் சந்நிதியில் இதனை ஓதி, யாவ ரையும் சிற்சோதியிற் கலப்பித்தார் என்பதனை,

"ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவா யச்சொ லாமென்
றூனமீர் நமச்சி வாயத் திருப்பதி கத்தை அங்கண்
வானமும் நிலனும் கேட்க அருள்செய்திம் மணத்தில் வந்தோர்
ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக வென்ன"

என்னும் அருள்மொழித் தேவர் (சேக்கிழார்) திருவாக்கா னறிக. இப் பதிக வரலாறும் இதனாற் கூறப்பட்டதாயிற்று. (௧௧)

---

# திருநாவுக்கரசுநாயனார்

# நமச்சிவாயத் திருப்பதிகம்

---

## பண் - காந்தாரபஞ்சமம்

### அஞ்செழுத்துண்மை

*திருச்சிற்றம்பலம்*

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சி வாயவே

(ப - ரை.) *துணை சொல் - ஆன்மாக்களுக்கு உற்ற துணையென்று சொல்லப்படும், வேதியன் - அந்தணனும், சோதி - ஞான ஒளிப் பிழம்பாகிய, வானவன் - வானோர் தலைவனும் ஆகிய இறைவனது, பொன் - பொலிவினையுடைய, திருந்து - திருத்தமாகிய, துணையடி - இணையடிகளை, பொருந்த - பொருந்தும்படி, கைதொழ - கைதொழுதலால், கல்துணை - கல்லோடு, பூட்டி - சேர்த்துக்கட்டி, ஓர் - ஒப்பு அரிய, கடலிற்பாய்ச்சினும் - கடலிற் புகச் செலுத்தினாலும், நற்றுணையாவது - (அவ்வாறு பாய்ச்சப் பட்டவர்க்கு) உற்ற நல்துணையாவது, நமச்சிவாயவே - நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்துமேயாம் என்றவாறு.*

*சொல்துணை - நூல்களாற் சொல்லப்படுகிற ஆன்மாக்களுக்கு உற்றதுணை என்பதும் ஒன்று. வேதியன் - அந்தணன், வேதங்களை உரைத்தவனெனினுமாம். சோதிவானவன் - அலகில் சோதியன் என்பதூஉ மறிக. பொன் - பொன்போன்ற எனினுமாம். துணையடி - துணைத்தாள். திருத்தம் - மலமற்ற தன்மை. கற்றுணை - கற்றூணை எனக்கொண்டு கற்றூணொடு என உரைத்தாலும் பொருந்தும். ஓர் - அளவிடற்கரிய ஒப்பற்ற தன்மை. நல்துணை - உறுதிபயப்பதாகிய துணை என்க. கல்லே தெப்பமாக மிதந்து கரையேறிய உறுதி ஈண்டுக் காண்க. இத் திருப்பதிகம் நாயனார் தம்மைப் பல்லவ அரசன் ஆணைப்படி சமணர்*

கள் கல்விற்கட்டிக் கடலிற் பாய்ச்சியபோது ஓதியதாம். இந் நாயனாரே தம்மைச் சமணர்கள் கல்விற்கட்டிக் கடலிற் பாய்ச்சியதையும், திருவைந்தெழுத்தை ஓதித் தாம் கரையேறி உய்ந்ததையும்,

"கல்லி னோடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந் தேனன்றே"

என்றும்,

"தாக்கின வாசல மேவினை காட்டியுந் தண்டித்தநோய்
நீக்கின வாநெடு நீரினின் றேற நினைந்தருளி
ஆக்கின வாறடி யேனை யாறன் அடிமைக்கணே
நோக்கின வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெ
னையே"

என்றும் பிறவிடங்களிற் கூறியருளுதலுங் காண்க. (க)

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

(ப - ரை.) பூவினுக்கு - பூக்களுக்கு, அருங்கலம் - அருங்கலமாவது, பொங்குதாமரை - பொலிவுபெற்ற தாமரைமலரே யாம், ஆவினுக்கு - பசுக்களுக்கு, அருங்கலம் - அருங்கலமாவது, அரன் - சிவபெருமான், அஞ்சு ஆடுதல் - அஞ்சாகிய கௌவியங்களில் அபிடேகம் கொண்டருளுதலேயாம், கோவினுக்கு - அரசனுக்கு, அருங்கலம் அருங்கலமாவது, கோட்டம் இல்லது - கோணுதலில்லாததே யாம், நாவினுக்கு - நாவுக்கு, அருங்கலம் - அருங்கலமாவது, நமச்சிவாயவே - சிவநாம மந்திரமாகிய திருவைந்தெழுத்தே யாம் என்றவாறு.

பூ, ஆ : சாதியொருமை, கலம் - பூண். அணி - ஆபரணம். அரன் - சிவன்; தன்னைவழிபடுவோர் பாவங்களை யொழிப்பவன் : வடசொல். அஞ்சு - பஞ்ச கௌவியம். அவை: பால், தயிர், நெய், ஆனீர், ஆப்பி என்பன: ஆடுதற்குரியவென்க. கோ- அரசு: இது சொல்லால் அஃறிணை. கோட்டம் - கோடுதல், நடு நிலையின்றியொரு புறங்கோணுதல், கொடுங்கோலனாதல், கோட்ட

யில்லது - செங்கோலனுதல். நாவினுக்கருங்கலம் - நாவினுக் கணியாகி உறுதி பயப்பிப்பது என்பதாம். (உ)

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

(ப - ரை.) விண் உற - வானத்தைப்பொருந்த, அடுக்கிய - அடுக்கப்பட்ட, விறகில் - விறகுப்போரில், வெவ் அழல் - கொடிய நெருப்பானது, உண்ணிய - உண்ணுமாறு, புகில் - புகுந்தால், அவை - அடுக்கிய அவ்விறகுகள், ஒன்றும் இல்லை ஆம் - ஒரு சிறிதும் இல்லையாய்க் கெட்டொழியும், (அதுபோல), பண்ணிய உலகினில் - படைத்த இந்நில வுலகத்தினில், பயின்ற பாவத்தை - பிறவிதோறும் செய்து திரண்ட தீவினைகளை, நண்ணி நின்று - பொருந்திநின்று, அறுப்பது - இற்றொழியச்செய்வது, நமச்சிவாயவே - நமச்சிவாயவென்னுந் திருவைந்தெழுத்தே யாம் என்றவாறு.

அடுக்கல் - போர்படக் குவித்தல். உண்ணிய - செய்யிய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். பண்ணிய - படைக்கப் பட்ட. பயிலுதல் - பழகுதல், பிறவிதோறும் செய்து ஈட்டுதல். நின்றறுப்பது - நிலைபெற்று நின்று அறுப்பது, நெருப்புத் தான் புகுந்த போரினை எரித்தொழித்துத் தானும் மாய்ந்தொழிதல் போலத் திருவைந்தெழுத்துப் பல பிறவிகளினும் செய்தீட்டிய பாவங்களை யெல்லாம் பொருந்திநின் றழித்துத் தான் கெடாது நிற்பது காண்க. நெருப்புத்தூய்மை செய்வதுபோல, இதுவும் ஆன்மாக்களது பாவம் போக்கித் தூய்மை செய்யுமென்க. (ங)

இடுக்கட்பட் டிருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கிற்பிர் ஆரென்று வினவு வோமல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினும் அருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

(ப - ரை.) இடுக்கட் பட்டு இருக்கினும் - துன்பத்துள் அகப்பட்டுக் கிடப்பினும், விடுக்கிற்பிர் ஆர் என்று - எம்மை இத் துன்பத்தினின்றும் நீங்குவிப்பீர் யாரென்று, யாரையும் - எத் தகையோரையும், இரந்து வினவுவோம் அல்லோம் - இரந்து கேட்போம் அல்லோம், அடுக்கல்கீழ் கிடக்கினும் - மலையின்

ழ் அகப்பட்டுக் கிடத்தலாகிய பெருந்துன்பம் வரப்பெறினும், நாம் உற்ற நடுக்கத்தை - யாம் பொருந்திய நடுக்கத்தினை, அருளின் - கருணையினால், கெடுப்பது - கெட்டொழியச் செய்வது, நமச்சிவாய வே - நமச்சிவாய என்னும் சிவமூல மந்திரமேயாம் (ஆதலின் அதனையே யாம் பேணி வழிபடற்பாலம்) என்றவாறு.

"ஆதலின்......பாலம்" என்பது இசையெச்சம். விடுக்கிற்பிரான் என்பது பாடமாயின், இத் துன்பத்தினின்றும் எம்மை விடுவித்தலால் நீரே எமக்குப் பிரானுவீர் என்று சிவபிரான் அல்லாத யாரையும் யாம் இரந்துகேட்போமல்லோம் என்று பொருள் கொள்க. 'மண்பா தலம்புக்கு' எனவும், 'வானந்துளங்கிலென்' எனவும் வரும் திருவிருத்தங்கள் கருதற்பாலன. விடுக்கு இல்பிரான் என்று பிரித்துரைத்தலும் ஒன்று. அடுக்கல் - மலை: ஆகுபெயர். (ச)

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழும் நீள்முடி
நங்களுக் கருங்கல நமச்சி வாயவே.

(ப - ரை.) விரதிகட்கு எலாம் - தவசிகட்கு எல்லாம், அருங்கலம் - பெறுதற்கரிய அணிகலமாவது, வெந்த நீறு - தீயின்கண் நீற்றப்பட்ட திருநீறேயாம், அந்தணர்க்கு - அந்தணர்களுக்கு, அருங்கலம் - அரிய அணிகலமாவது, அருமறை ஆறங்கம் - அரிய மறைகளும், ஆறுகிய அவற்றின் அங்கங்களுமேயாம், திங்களுக்கு - சந்திரனுக்கு, அருங்கலம் - அரிய அணிகலமாவது, திகழும் - விளங்கும், நீள்முடி - இறைவனது நீண்ட திருமுடியேயாம், நங்களுக்கு - எங்களுக்கு, அருங்கலம் - அரிய அணிகலமாவது, நமச்சிவாயவே - நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்துமேயாம் என்றவாறு.

வெந்தநீறு - சிவாக்கினியில் விளைந்த விபூதி. விரதிகள் - (பாசுபத மாவிரத சீலராகிய) சிவனடியார். இவ்விரதத்திற்கு மேலான விரதமில்லாமையை வேதசிவாகம புராண இதிகாச முதலிய எல்லா நூல்களும் கூறுமாறு அறிக. எலாம் என்றமையால் யாவர்க்கும் இன்றியமையாமை கூறப்பட்டதென்க. அந்தணர் - அழகிய தண்மையாளர்: பிறப்பிலக்கணம் ஒன்றுமே போதாமையும் அதனோடு எல்லா வுயிர்களிடத்தும் இரக்கமுண்மையே சிறப்பிலக்கணமாக வேண்டப்படுதலும் இச்சொல் புலப்படுத்தி நிற்குமென்க. மறை - எல்லாப் பொருள்களையும் தன்னிடத்து இலைமறை காய்போல மறைத்து வைத்திருப்பது.

அங்கம்-உடலுக்கு உறுப்புப்போல வேதங்கட்கு இன்றியமையாத நூல்கள். அவை: சிக்ஷை, வியாகரணம், கற்பம், சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பன. நீண்முடி - இறைவனது திருமுடி: "சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை," "போதார் புனைமுடியும் எல்லாப் பொருண்முடிவே" எனவரும் திருவாக்குக்களால் சொல்லும் பொருளுங் கடந்த தன்மையதாதல் அறியப்படுதலின் நீள் என்னும் அடை பெறுவதாயிற்று. அருங்கலன் எனவே, திருவைந்தெழுத்தில்லாதவர்கள் திருவிலிகளாய்ப் பொலிவிழந்தாராவர் என்பது தெளிக. (ரு)

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கல்லால்
நலமிலன் நாள்தோறும் நல்கு வான்நலன்
குலமிலர் ஆகினும் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

(ப - ரை.) (இறைவன்) சார்ந்தவர்க்கு அல்லால் - தன் தாளிணை அடைந்தார்க்கு அல்லாமல், (பிறர்க்கு) நலம் இலன் - நன்மையைச் செய்யான், (அடைந்தார்க்கு) நாடொறும் - தினந்தோறும், நலன் நல்குவான் - நன்மையைச் செய்வான் (எனினும்) சலம் இலன்-(எவரிடத்தும்) சிறிதும் செற்றமில்லாதவன், (யாது பற்றியாலோவெனின்) சங்கரன் - சங்கரன் என்னும் பெயருடைமையின், (இத்தகைய பெற்றியையுடைய இறைவனதாதலின்) நமச்சிவாய - நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்து, குலம் இலர் ஆகினும் - குலநலம் இல்லாதவரென்றாலும், குலத்துக்கு ஏற்பதோர் - நற்குலத்திற்குப் பொருந்துவதாகிய, நலம் - நன்மையை, மிகக் கொடுப்பது - மிகுதியாகக் கொடுப்பதாம் என்றவாறு.

நண்ணினர்க்கு நன்மை செய்தலும், நண்ணாதார்க்கு அது செய்யாதிருத்தலும் உடையானெனினும், யாவரிடத்தும் சிறிதும் வைரமென்பதில்லாதவன் என்பதை வலியுறுத்தற்குச் சங்கரன் என்று கூறினார். குலநலம் முதலிய கருதி யருளுதலும் அருளாதொழிதலும் இல்லாதவன் என்பது கருத்தாகக் கொள்க. இதனை "நலமில னண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன், சலமிலன் பேர்சங் கரன்" என்னுந் திருவருட்பயனு லறிக. சலம் - வைரம்; தணியாக் கோபம். சங்கரன் - சுகத்தைச் செய்பவன் என்று பொருள்படும் வடசொல். நலன் : ஈற்றுப்போலி. குலம் - குலநலம்; குலத்திற் குரித்தாய தன்மை; இஃது இப் பொருளதாதலை, "குலம் பொல்லேன் குணம் பொல்லேன் குறியும் பொல்லேன்" என உயர் குடிப்பிறப்பினரான வாகீசர் பிறவிடத்திற் கூறுவது கொண்டுங் காணலாகும். (சு)

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே.

(ப - ரை.) உலகினில் - இந் நிலவுலகத்தில், (தொண்டரல்லாதார்) வீடினார் - கெட்டொழிந்தார்கள், விழுமிய - சீரிய, தொண்டர்-திருத் தொண்டர்கள், கூடினார்-தாளிணையைத் தலைப்பட்டார்கள், (யான்) அ நெறி - (அப்பெரியார் சென்றடைந்த) அவ்வீட்டுநெறியை, கூட - கூடுமாறு, சென்றலும் - செல்லலும், ஓடினேன்-ஓடினேன், ஓடிச்சென்று - விரைந்து சென்று, உருவம் காண்டலும் - திருவுருவைக் கண்டபோது, நாடினேன் - அதனது உண்மை யிலக்கணத்தைக் கேட்டறிந்தேன், நாடிற்று - (நாடிய யான்) தலைப்பட்டது, நமச்சிவாயவே - நமச்சிவாய வென்னும் திருவைந் தெழுத்துமேயாம் என்றவாறு.

வீடினார் என்பதைத் தொண்டரோடு கூட்டிச் சீரிய தொண்டர் ஆகிய சிவஞானிகள் உலகில் தற்போதங் கெட்டுச் செத்தவராய்க் கூடினார் என்று உரைத்தலும் ஆம். உலக இயல்பு வீடுதலெனினும் விழுமிய தொண்டர் தமது சைவ வழிபாட்டால் தற்போதங் கெட்டுச சிவநெறி கூடினார். உலகினராகிய சாமானியர் அவ்வாறு செய்யகில்லாது இறந்துபட்டார்கள் என்பது கருத்தாகக் கொள்க. விழுமிய - விழுமம் என்னும் பண்படியாகப் பிறந்த பெயரெச்சம். விழுமம் : பகுதி, அம் : கடைக்குறை, இன் : சாரியை, அ விகுதி, னகரங்கெட்டு யகரந் தோன்றியது. அ : பண்டறி சுட்டு; அந்நெறி - வீட்டுநெறியாகிய செந்நெறி. சென்றல் - செல்லல். உருவம் - தடத்தத் திருமேனி. நாடிற்று: பெயர். இச்செய்யுட் பொருளை யெல்லாம், "முன்னமவனுடைய நாமங் கேட்டாள் மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்" என்னுந் திருத்தாண்டகப் பொருளோடு இயைத்துக்காண்க. (எ)

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

(ப - ரை.) இல்லகம் - வீட்டினுள், விளக்கது - விளக்கென்பது, இருள் கெடுப்பது - புற இருட்டை ஒழிப்பது, சொல்-சொல்லப்பெற்ற, அகவிளக்கது - உள் விளக்காவது, சோதி உள்ளது-

சிவஞானப் பிரகாசத்தை யுடையது, பல்லக விளக்கது - பல விடத்து விளக்கெனப்படுவது, பலரும் காண்பது - எல்லோருங் காணப் பெறுவது, நல் அகம் விளக்கது - நல்ல மனவிளக்காய் அமைவது, நமச்சிவாயவே - நமச்சிவாய வென்னும் திருவைந் தெழுத்துமேயாம் என்றவாறு.

விளக்கு, கண்டம் அகண்டம் கண்டாகண்டம் என மூவகைப் பட்டு, கண்ட விளக்கு - வீட்டு விளக்காயும், அகண்ட விளக்கு - சிவஞானப் பிரகாச விளக்காயும், கண்டா கண்ட விளக்கு - இறைவனுணையான் ஆகாயத்தின் மிளிரும் சூரிய சந்திர அக்கினி யென்னும் முச்சுடர் விளக்காயும் நிலை பெறுவனவாய்த் தத்தம் தன்மைக்கேற்றவாறு பலவிதமாய இருளினை போட்டுமாறு கூறப் பட்டது. இல்லகம் - வீட்டி னுள்ளிடம். விளக்கு : ஆகுபெயர். இருள் - புறவிருள். சொல் - நூல்களாற் பேசப்படுந் தன்மை. சோதி - சிவஞானப் பிரகாசமாகிய அகண்டாகார ஒளி. பல்லக விளக்கு - முச்சுடர். இவை சிவஞான ஒளியைப்போல் அகண்ட மல்லாத வாயும், வீட்டு விளக்கினைப்போல் சுருங்கிய தன்மையல் லாதவாயு மிருத்தலால் கண்டா கண்டமாயின வென்க. இவ் வாறுதலை, 'சோதியே சுடரே சூழொளி விளக்கே'' என்னுந் திருவாக்கிற் கூறிய முறைபற்றிக் காண்க. நல்லக விளக்கு - ஏனைய இருவகை விளக்குகளும் பூதவிருளாகிய புறவிருளைப் போக்குவன வன்றி அகவிருளைப் போக்கி ஆன்மப் பிரகாசத்தை யுண்டுபண்ணு வென்க. (அ)

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசரண் ஆதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி ஆவது நமச்சி வாயவே.

(ப - ரை.) முன்னெறி ஆகிய - எல்லா நெறிகளுக்கும் முற் பட்ட நெறியாகிய, முதல்வன் - முழுமுதற்றலைவனுகிய, முக் கண்ணன் தன் - மூன்று கண்ணையுடைய இறைவனது, நெறியே- நெறியையே, சரண் ஆதல் - யாங்கள் புகலாகச் சென்று சேர்தல், திண்ணமே - உறுதியேயாம், அந் நெறியே சென்று - அம் முன் னெறியைச் சென்றுசேர்ந்து, அங்கு - அதில், அடைந்தவர்க் கெல்லாம் - சிவஞானசித்தியடைந்த சீவன் முத்தர்க்கெல்லாம், நல்நெறியாவது - நல்ல வழியாயிருப்பது, நமச்சிவாயவே - நமச் சிவாய என்னும் திருவைந்தெழுத்தேயாம் என்றவாறு.

முன் - முதன்மை. முதன்மையாகிய நெறி எனவே, இது சன்மார்க்கம் என்பது பெற்றும். இறைவனது நெறியே புகலிட

மாதல் உறுதியாம் என்றும் கொள்ளலாகும். பன்னெறியாகிய பல சமய மார்க்கங்களும் அப்பெற்றியனவாகாது அவற்றுளெல் லாந் தலைமை வாய்ந்த சைவசமய மார்க்கங்களுள்ளும் தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம் என்னும் மார்க்கங் களும் ஆகிய இவற்றிற்கெல்லாம் முன்மார்க்கமாவது சன்மார்க்கம் என்க. இதுவே இறைவன் திருவடி ஞானத்தைப் பயப்பித்துச் சீவன் முத்தத்தன்மையை வருவிப்பதாதலின் முக்கண் முதல்வன் றன்னெறியாயிற்று. ஆன்மாக்களுக்கு மேலாகிய உறுதி பயப்பது இதுவே யாதலின் சாருதல் கூறப்பட்டது. ஏகாரம்: தேற்றம். சென்று - புகலாயடைந்து. அடைந்தோர் - பேறுபெற்றவர். பேறு - சிவத்துவப்பேறு. சன்மார்க்கிகளாகிய சிவஞானிகள் மலநீக்க மடைந்து பூதமுதல் நாதவரையு முள்ள தத்துவதாத்து விகங்களை யெல்லாம் பேய்த்தே ரெனக் கழித்துத் தமது அகமுக தரிசனத்தில் காணாராகவும், நிட்டைகலைந்து இச்சாஞானக் கிரி யைகள் புறமுகத்தே திரும்பியவழிக் காண்பது கொண்டு வாதனை பற்றிச் சலியாமைப் பொருட்டுத் திருவைந்தெழுத்தை உச்சரித்து வாசனை மலம் நீங்கித் தூய்மையெய்தும் வழியே ஈண்டு நன்னெறி யெனப்பட்டது. இதுவே தமிழ்வேத முடையாரால் "பொறி வாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க நெறி" என்று கூறப் பட்டது. முதல்வன் - முழுமுதற் றலைமை யுடையான். இதனை,

"தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை"

என்னுந் திருவாசகத்தா னறிக. இத் திருப்பாட்டுப் பொருளை யெல்லாம் சிவஞானபோத முதலாகிய மெய்யுணர்வு நூல்களில் காண்க. (௯)

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்கண் இல்லையே.

(ப - ரை.) மா - பெருமை வாய்ந்த, பிணைதழுவிய - பெண் மான் போலும், மாது - உமாதேவியாரை, ஓர்பாகத்தன் - ஒருபாகத்து உடையவனது, பூப்பிணை - பூமாலைகள் பொருந்திய, திருந்து அடி - திருந்திய திருவடியினை, பொருந்த - பொருத்த முற, கைதொழ - கைகூப்பித் தொழும்பொருட்டு, நாப்பிணை

தழுவிய - நாவாணியன்ற சொன்மாலையாகிய, நமச்சிவாயப் பத்து-நமச்சிவாயத் திருப்பதிகத்தினை, ஏத்தவல்லார் தமக்கு - துதிக்க வல்லார்களுக்கு, இடுக்கண் - துன்பம், இல்லை - இல்லையாம் என்றவாறு.

ஓர்பாகம் - இடப்பாகம். பூப்பிணை - பூமாலை; பூப்பிணையல் முருக நாயனார் போன்ற திருத்தொண்டர்கள் நியமமாகக் காலந்தோறும் சாத்தும் பூமாலைகள் என்றறிக. பூப்பிணை - பொலிவு பொருந்திய என்றுமாம். திருந்தடி - திருத்தம், நோன்மை, செம்மை, நன்மை முதலிய தன்மை வாய்ந்த திருவடி. நோன்றாள், செந்தாள், நற்றாள் என உண்மை நூல்களில் வரும் சொற்றொடர்களிற் காண்க. பொருந்த - இதனை முதற்றிருப்பாட்டினுங் காண்க. நாப்பிணை - உரைமாலை; நமச்சிவாயப் பத்து; திருவைந்தெழுத்தின் பொருள்பற்றி ஓதிய திருப்பதிகம். (கo)

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்திநாயனர்

# திருப்பாண்டிக்கொடுமுடி

---

## *பண் - பழம்பஞ்சுரம்*

**அஞ்செழுத்துண்மை**

*திருச்சிற்றம்பலம்*

மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாஉனை நான்மறக்கினும்
சொல்லுநாநமச் சிவாயவே.

(ப - ரை.) *எனக்கு - ஒன்றுக்கும் பற்றாத எளிய எனக்கு, பற்று - பற்றும் பற்று, மற்று இன்றி - வேறு இல்லாமல், நின் திருப்பாதமே - நினது திருவடியையே, மனம் - மனத்தினிடத்து, பாவித்தேன் - பற்றாக நினைக்கப்பெற்றேன், பெற்றலும் - நினைக்கப் பெறலும், பிறந்தேன் - பிறந்த தன்மையுடையவனாயினேன், இனி - மேல், பிறவாத தன்மை - பிறக்கப்பெறாத பெற்றிமையை, வந்தெய்தினேன் - கைவந்து கிடைக்கப்பெற்றேன், கற்றவர் - கற்றறிந்த பெரியார், தொழுது ஏத்தும் - தொழுது வணங்கி வாழ்த்துகின்ற, சீர் - சிறப்புவாய்ந்த, கறையூரில் - கறையூரின்கண், பாண்டிக் கொடுமுடி - திருப்பாண்டிக் கொடுமுடியில் எழுந்தருளியிருக்கின்ற, நல் தவா - நல்ல தவ வடிவினை யுடையவனே, உனை - உன்னை, நான் - அடியேன், மறக்கினும் - மறக்கப் பெறினும், நா - எனது நா, நமச்சிவாய - நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை, சொல்லும் - சொல்லிக் கொண்டிருக்கும் என்றவாறு.*

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு" என்னும் தமிழ்மறைக் கேற்ப 'மற்றுப் பற்றெனக்

இன்றி நின்றிருப் பாதமே மனம் பாவித்தேன்' என்றீண்டு உரைக்கப்பட்டதென்க. உலகச் சார்பு கெடவேண்டியதாயும், இறைவன் திருவடிச் சார்பொன்றுமே உணர்ந்து கூடவேண்டிய தாயும், அவ்வாறு கூடினவர்க்குப் பிறவிநோய் சார்தருத லில்லையாயும் உண்மையின் பெற்றனும், பிறவாத தன்மை வந் தெய்தினேன் என்று கூறினாரென்க. பிறத்தல் - ஈண்டுப் பிறவிப்பயனடைதல். "பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்பது பிரமாணம். இனிப் பிறவாமை கூறப்படவே, சாவாமை, மூவாமையும் கூறியது அறியப்படும். கற்றவர் - கசடறக் கற்று அதற்குத் தக நின்ற பெரியர். கறையூர்-வழிபட்ட பாண்டியனது உடற் கறையினைக் கறையூரில் தீர்த்துத் திருப்பணிகொண்ட கதை தலபுராணத்தா னறிக. நற்றவன் - நல்ல தவவடிவினை யுடையன். 'காமனை முனிந்து நெடுஞ்சடை தரித்துக் கவின்றகல் லாடைமேற் புனைந்தி, யாமெலாம் வழுத்துந் துறவி' எனக் காஞ்சிப் புராண வாக்குக் காண்க. மறக்கினும் - மறக்கப் பெறுவதில்லை; ஒரு வாறு மறக்கினும் நாச் சொல்லும் என்றவாறு. இதனால் அவ் வாறு தன்னை யறியாது சொல்லுமாறு நாத்தழும்பேறக் கூறி நாவினைப் பழக்கியுள்ளமை புலனும். இத் துணிவினை "வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால் மற்றுநா னறியேன் மறுமாற்றம்" என்ற திருவாக்கும் வற்புறுத்தும். (க)

இட்டனும்மடி ஏத்துவார்இகழ்ந்
திட்டநாள்மறந் திட்டநாள்
கெட்டநாளிவை என்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடிதொழு
தேத்துபாண்டிக் கொடுமுடி
நட்டவாஉனை நான்மறக்கினும்
சொல்லுநாநமச் சிவாயவே.

(ப - ரை.) அடி ஏத்துவார் - பெருமானின் திருவடிகளைத் துதிக்கின்றவர், இகழ்ந்திட்டநாள் - இகழ்ந்த நாள்களும், மறந் திட்ட நாள் - எண்ணுது மறந்த நாள்களும் ஆகிய, இவை - இவைகள், கெட்டநாள் - தீய நாட்கள், என்றலால் - என்று கூறுதலால், இட்டனும் - இட்டனுகிய அடியேனும், கருதேன் - அவைகளை நல்ல நாட்களாக நினையேன், கிளர்புனல் - விளங்கு கின்ற நீரையுடைய, காவிரி - காவிரியானது, வட்டவாசிகை

கொண்டு - வட்டமான பூமாலைகளால், அடிதொழுது - திருவடியினைத் தொழுது, ஏத்து - துதிக்கின்ற, பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக் கொடுமுடியில், நட்டவா - ஆன்மாக்களைக் கருணையினால் நட்புக்கொண்டவனே, உனை - உன்னை, நான் மறக்கினும்-அடியேன் மறக்கப்பெற்றினும், நா-எனது நாவானது, நமச்சிவாய - நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை, சொல்லும் - இடைவிடாது சொல்லாநிற்கும் என்றவாறு.

இட்டனும் மடி என்பதை இட்டன் நும் அடி எனவும் பிரித்துரைக்கலாம். 'நும் அடியேத்துவார் இகழ்ந்திட்ட நாட்களாவன, தேவரீரை மறந்திட்ட நாட்களே. ஆகலின் அடியேனும் இவைகளைக் கெட்டநாட்கள் என்று அல்லாற் கருதேன்' எனலும் ஒன்று. கெட்டநாள்-கழிந்த நாளென்றும், தீமை பயக்கும் நாளென்றும், இருபொருள் பயக்குமாறு காண்க. கிளர்-நிறைதல், பிரகாசித்தல். காவிரி : கவேரன் என்னும் அரசன் புத்திரி சாப வசத்தால் நதியுரு வடைந்தமையின் இந் நதி இப் பெயர்த்தாயிற்று (தத்திதாந்த நாமபதம்). வட்டவாசிகை - வட்டவடிவினதாகக் கோத்த பூமாலை. நதி அடி தொழு தேத்தல்: தன் இருகரை மருங்கினும் உள்ள மரங்களினின்றும் சிந்தும் மலர்களைத் தன் திரைக்கரங்களாற் சொணர்ந்து கரையினமர்ந்த சிவாலயங்களில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபடுவதாகக் கூறுவது நூல் வழக்கென்க. இதனை,

'வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்
செம்பொன் வார்கரை யெண்ணில் சிவாலயத்
தெம்பி ரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி
உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமால்'

என்று திருத்தொண்டர் புராணங் கூறுவதனாலு மறிக. நட்டவன்-விரும்பினவன் : பாண்டிக் கொடுமுடியை நட்டவன் என்று கூறலுமாம். ஆன்மாக்களை நட்டலாவது இகத்தும் பரத்தும் நீங்காது உடனிருந்து அருள்புரிதலாம். 'எழிசையா யிசைப் பயனா யின்னமுதா யென்னுடைய தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி' என்று இவர் பிறிதோரிடத்திற் கூறுமாறுங் காண்க. (உ)

ஓவுநாளுணர் வழியுநாளுயிர் போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை என்றலாற்கரு தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாஉனை நான்மறக்கினும் சொல்லுநாநமச் சிவாயவே

(ப - ரை.) ஓவும் நாள் இவை - தேவரீரை மறந்திருக்கும் நாட்களான இவை, உணர்வு அழியும் நாள் - அறிவுகெடும் நாட்கள், உயிர்போகும் நாள் - உயிர் போகும் நாட்கள், உயர் பாடைமேல் - பெரிய பாடையின்மேல், காவுநாள் - சுமக்கப்படும் நாட்கள், என்று அலால் - என்று அல்லாமல், கருதேன் - பயனுடையவாகக் கருதேன், கிளர் - விளங்கும், புனல் - நீரையுடைய, காவிரி - காவிரியானது, பாவுதண் புனல் - பரந்த குளிர்ந்த நீர், வந்து இழி - வந்து ஒழுகும், பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய; பரஞ்சோதி நாவலா - சிறந்த ஞானப் பிழம்பாகிய நாவலரே, உனை - தேவரீரை, நான் மறக்கினும் - அடியேன் மறக்கப்பெறினும், நா - நாவானது, நமச்சிவாய - நமச்சிவாய வென்னும் திருவைந்தெழுத்தை, சொல்லும்- சொல்லாநிற்கும் என்றவாறு.

பரஞ்சோதி - ஒப்புயர்வற்ற மேலாய ஞானப் பிழம்பாய திருவுருவுடையர். நாவலன் - மறை முதலிய எல்லாக் கலைகளையும் ஓதியவன். ஈண்டு, நாவன்மை, யாவும் ஓதாதுணர்ந்த முழுமுதற்றன்மை. 'ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி' என்பது தமிழ் வேதம். (ரு)

எல்லையில்புகழ் எம்பிரான்எந்தை
தம்பிரான்என்பொன் மாமணி
கல்லைஉந்திவ ளம்பொழிந்திழி
காவிரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழ தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்லவாஉனை நான்மறக்கினும்
சொல்லுநாநமச் சிவாயவே.

(ப - ரை) எல்லையில் - எல்லையில்லாத, புகழ் - புகழினையுடைய, எம்பிரான் - எம் தலைவரே, எந்தை - எம் தந்தையே, தம்பிரான் - தம்பிரானே, என் - எனது, பொன் - பொன்னே, மாமணி - சிறந்த மாணிக்கமே, கல்லை உந்தி - கற்களை நகர்த்து, வளம் பொழிந்து - வளவிய பொருட்களைக் கொழித்து, இழி- செல்லுகின்ற, காவிரி வாய்க்கரை - காவிரிக் கரையில் உள்ள, நல்லவர் - நல்லவராகிய சிவனடியார், தொழுதேத்தும் - வணங்கித் துதிக்கின்ற, சீர் கறை ஊரில் - சிறந்த கறையூரில், பாண்டிக் கொடுமுடி - திருப்பாண்டிக் கொடுமுடியி லெழுந்தருளிய, வல்லவா - எல்லாம் வல்லவரே, உனை - தேவரீரை, நான் மறக்கினும்-

அடியேன் மறக்கப்பெறினும், நா - நாவானது, நமச்சிவாய-நமச்சிவாய வென்னும் திருவைந்தெழுத்தை, சொல்லும்-சொல்லாநிற்கும் என்றவாறு.

எல்லையில்புகழ், பொருள்சேர் அளவில்புகழ். இறைவன் புகழ் பொருள்சேர் புகழாதலை, "இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்னும் பொய்யாமொழியா னறிக. தம்பிரான் - தனக்கு வேறு தலைவன் இல்லாதவன். இவ்வுலகத்துப் பொருள்களுள் பொன்னும் மணியுமே உயர்ந்த பொருள்களா மாதலின், பொன்னே மணியே என்றதென்க. "இப்பொன்னீ இம்மணிநீ இம்முத்துநீ இறைவனீ ஏறூர்ந்த செல்வனீயே" என்னும் தேவாரம் காண்க. வளம் பொழிதல் - வளவிய மணிமுத்து அகில் சந்தனம் முதலியவற்றைப் பொழிதல். வல்லவன் - எல்லாம் வல்லவன். (ச)

அஞ்சினூர்க்கரண் ஆதியென்றடி
யேனுநான்மிக அஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கருள்
நல்கினாய்க்கழி கின்றதென்
பஞ்சின்மெல்லடிப் பாவைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினும்
சொல்லுநாநமச் சிவாயவே.

(ப - ரை.) அஞ்சினூர்க்கு - பயந்தடைந்தவர்களுக்கு, அரண் ஆதி என்று - புகலாகின்றாய் என்றறிந்து, அடியேன் நானும் - அடியவனாகிய யானும், மிக அஞ்சினேன் - மிகப் பயந்தடைந்தேன் (அடைதலும்), அஞ்சேல் என்று பயப்படுவாய் அல்லை என்று, அடி தொண்டனேற்கு - திருவடித்தொண்டனாகிய எனக்கு, அருள் நல்கினாய்க்கு - திருவருள்செய்தருளிய உமக்கு, அழிகின்றது என் - நட்டமாவதென்னை, பஞ்சின் - பஞ்சினும், மெல் அடி - மென்மையாகிய அடிகளையுடைய, பாவைமார் - பெண்கள், குடைந்து ஆடு - குடைந்து விளையாடுகின்ற, (காவிரிக் கரையிலுள்ள) பாண்டிக் கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியி லெழுந்தருளிய, நஞ்சு அணிகண்ட - விடமணிந்த நீலகண்டத்தையுடையவரே, நான் மறக்கினும் - அடியேன் உம்மை மறந்தாலும், நா - நாவானது, நமச்சிவாய - நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை, சொல்லும் - சொல்லாநிற்கும் என்றவாறு.

அரண் - புகலிடம். அடியேனும் நான் - அடியேன் நானும் என்று உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது. அருணலிநைய்க்கு அழிகின்றதென் - திருவருள்பாலிக்கின்ற தேவரீருக்கு நட்டமாவதென்னை என்றபடி. கருணைக்கடலாகிய உமக்கு ஒரு சிறிது எனக்குத் திருவருள் அருளிய காரணத்தால் குறைவில்லை என்பது கருத்து; இறைவன் குறைவிலா நிறைவனாதலின். குடைந்தாடுதல் கையினால் நீரையடித்து மூழ்கும் நீர்விளையாட்டு. இதனை 'மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரெனக், கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி' என்னுந் திருவாசகத் (திருவெம்பாவை, செய் -௧௧.) தாற் காண்க. பாவைமார் : உவமை யாகுபெயர். (௫)

ஏடுவான்இளந் திங்கள்சூடினை
என்பின்கொல்புலித் தோலின்மேல்
ஆடுபாம்பத ரைக்கசைத்த
அழகனேஅந்தண் காவிரிப்
பாடுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடிச்
சேடனேஉனை நான்மறக்கினும்
சொல்லுநாநமச் சிவாயவே.

(௬ - ரை.) ஏடு - ஏட்டுவடிவினையுடைய, வான் - வானிடத்து ஊரும், இளம் திங்கள் - இளம்பிறையினை, சூடினை - அணிந்தாய், என்பின் - என்புமாலையுடன், கொல் புலித்தோல் - கொலைத்தொழிலையுடைய புலித்தோலின்மீது, ஆடு - ஆடுகின்ற, பாம்பது - பாம்பினையும், அரைக்கு அசைத்த - திருவரையிற் கட்டிய, அழகனே - சுந்தரனே, அம் தண் - அழகும் குளிர்ச்சியும் வாய்ந்த, காவிரி - காவிரியாற்றினது, பாடு - ஓசையினுடைய, தண்புனல் - குளிர்ந்தநீர், வந்து இழி - வந்து ஒழுகுகின்ற, பாண்டிக் கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியில் எழுந்தருளிய, பரஞ்சோதி - மேலான ஞானப்பிழம்பாகிய, சேடனே - மிக்க இளமையுடையனே, உனை - தேவரீரை, நான்மறக்கினும் - அடியேன் மறக்கப்பெறினும், நா - நாவானது, நமச்சிவாய - நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை, சொல்லும் - சொல்லாநிற்கும் என்றவாறு.

ஏடு - இலை; தகடு. ஏடுதிங்கள் தகட்டுவடிவமான பிறைச் சந்திரன். இதனை, "விரிசடைமேல் வெள்ளித்தகடன்ன வெண்பிறைசூடி" என்னும் திருவிருத்தத்தானு மறிக. கொல்புலி:

சொல்: சாதியடை; புற்றரவு என்பதுபோல. யாம்பது என்பதில் அது: பகுதிப்பொருள் விகுதி. அசைத்தல் - கட்டல். "பொன்னார் மேனியனேபுலித் தோலை யரைக்கசைத்து" என்பதிற் காண்க. பாடு - ஓசை. சேடன் - எஞ்சியிருப்போன். இறைவன் என்றும் மூவாத்தன்மையனென்க. (சு)

விரும்பிநின்மலர்ப் பாதமேநினைந்
தேன்வினைகளும் விண்டனன்
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெற
நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பைமென்முலைக் கோதைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
விரும்பனேஉனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச் சிவாயவே.

(ப - ரை). நின் - தேவரீரது, மலர் பாதமே - மலர்போலுந் திருவடிகளையே, விரும்பி - விருப்பங்கொண்டு, நினைந்தேன் - எண்ணினேன், (அதனால்) வினைகளும் - வினைகள் யாவும், விண்டனன் - விட்டொழியப்பெற்றேன், வண்பொழில் - வளப்பம் வாய்ந்த சோலைகள், நெருங்கிச் சூழ்ந்து - நெருக்கமாகச் சூழ்தலால், எழில்பெற - அழகுதோன்ற, நின்ற - இருக்கும், காவிரிக்கோட்டிடை - காவிரியாற்றின் கரையில், குரும்பை - குரும்பைபோலும், மென்முலை - மென்மைவாய்ந்த தனங்களையுடைய, கோதைமார் - பெண்கள், குடைந்தாடு - குடைந்தாடுகின்ற, பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியில் எழுந்தருளிய, விரும்பனே - விரும்புதற்குரியவரே, உனை - தேவரீரை, நான் மறக்கினும் - அடியேன் மறக்கப்பெறினும், நா - நாவானது, நமச்சிவாய - நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை, சொல்லும் - சொல்லாநிற்கும் என்றவாறு.

கோடு - கரை. குரும்பை - தென்னங்குரும்பை. இது தனத்துக்கு உவமையாவதொன்று: "குரும்பை முலைமலர்க் குழலி" என்னுந் தேவாரங் காண்க. கோதை - மாலை. மார் விகுதி புணர்ந்து மாலையணிந்த பெண்களை யுணர்த்திற்று. விரும்பன் - இதனை 'விருப்பன்" என்பதன் மெலித்தலாகக் கொண்டு திருப்பாண்டிக்கொடுமுடியினை விரும்பினவன் என்றுரைப்பினுமாம். (எ)

செம்பொனேர்சடை யாய்திரிபுரந்
தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங்குழ லாளைப்பாகம
மர்ந்துகாவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில் கூவமாமயில்
ஆடுபாண்டிக் கொடுமுடி
நம்பனேஉனை நான்மறக்கினும்
சொல்லுநாநமச் சிவாயவே.

(ப - ரை.) செம்பொன்நேர் - செம்பொன்னை நிகர்த்த, சடையாய் - சடையை யுடையவரே, வம்பு உலாம் - நறுமணங் கமழ்கின்ற, குழலாளை - கூந்தலையுடைய உமாதேவியை, பாகம் அமர்ந்தும் - இடப்பாகத்தில் விரும்பி எழுந்தருளச்செய்தும், திரிபுரம் - முப்புரங்களை, தீ எழ - தீ எழுமாறு, சிலைகோலினாய் - வில்லை வளைத்தருளினீர், காவிரிக்கோட்டிடை - காவிரிக் கரையிடத்து, கொம்பின்மேல் - மரக்கிளைகளின்மேல், குயில் கூவ - குயில்கள் கூவாநிற்க, மாமயில் ஆடு - சிறந்த மயில்கள் ஆடுகின்ற, பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக் கொடுமுடியில் எழுந்தருளியுள்ள நம்பனே - சிவபெருமானே, உனை - கடவுளாகிய உம்மை, நான் மறக்கினும் - அடியேன் மறக்கப்பெறினும், நா - நாவானது, நமச்சிவாய - நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை, சொல்லும் - சொல்லாநிற்கும் என்றவாறு.

செம்பொனேர் சடை - "பொன்னாற் புரிந்திட்ட பொற்சடையென்னப் - பின்னாற் பிறங்க விருந்தவன் பேர்நந்தி" என்னுந் திருமந்திரங் காண்க. திரிபுரம், திரிகின்றபுரம் என்றுவிரிக்க. இதனைத் 'திரியும் முப்புரம் தீப்பிழம்பாக' என்பதாதி தமிழ்வேத வசனங்கள் பற்றிக் காண்க. சிலைகோலுதல் - வில்வளைத்தல்: சிலை யென்பதனை மேருமலை யென்று பொருள்கொண்டு மேருமலையாகிய வில்லைவளைத்து என்று பொருள்கோடலும் பொருந்தும். வம்புலாங்குழல்; வாசனை கமழ்கின்ற குழல்: உமாதேவியாரது குழற்கு வாசனை செயற்கையால் வருவதன்றாய் இயற்கையா யமைந்ததென்க. இதனைக் "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி........அரிவை கூந்தலி னறியவுமுளவோ நீயறியும் பூவே" என்னும் இறைவனது திருவாக்குக் கொண்டறிக. அமர்ந்தும் என்பதில் எச்சவும்மை தொக்கதென்க. மயிலாடுதல்-மயில் சிறகுகளை விரித்துக் கூத்தியரைப் போல் குயிலினது பாட்டுக்கு ஏற்ப நடித்தல். நம்பன், இறைவனது

யெயர். வாசனை கமழ்கின்ற உமாதேவியாரைப் பாகத்திருத்தி இல்லறத்தினை யுடையனும், போர்த்தொழிலினை மேற்கொள்ளக்கூடாத தன்மையுடையனும் இருந்தும், துறவுக்குரிய சடைதரித்தும், போர்க்குரிய சிலைவளைத்தும் செய்த காரியங்கள் என்னே என்றபடி. இஃது இறைவனது எல்லையில் புகழினையுடைய இறைமைக்குணத்தைக் காட்டாநின்றது. இக்கருத்தினை,

"அன்பால் அடிகை தொழுவீர் அறியீரே
மின்போல் மருங்குல் மடவா ளொடுமேவி
இன்பா யிரும்பூ ளையிடங் கொண்டவீசன்
பொன்போற் சடையிற் புனல்வைத் தபொருளே."

என்பதாதிய திருவாக்குக்களைக் கொண்டறிக. (அ)

சாரணன்தந்தை எம்பிரான்எந்தை
தம்பிரான்என்பொன் மாமணியென்று
பேரெண்ணயிர கோடிதேவர்பி
தற்றிநின்றுபி ரிகிலார்
நாரணன்பிர மன்தொழுங்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடிக்
காரணாஉனை நான்மறக்கினும்
சொல்லுநாநமச் சிவாயவே.

(ப - ரை.) சாரணன் - கடவுளே, தந்தை - தந்தையே, எம்பிரான்-எம் தலைவரே, எந்தை தம்பிரான்-என் தந்தைக்குத் தலைவரே, என் பொன் - எனது பொன்னே, மாமணி - சிறந்த மணியே, என்று - என்றழைத்து, பேர் - தேவரீரது திருப்பெயர்களை, எண் - எண்ணுகின்ற, ஆயிர கோடி தேவர் - கணக்கற்ற தேவர்கள், பிதற்றி நின்று - பிதற்றி நின்று, பிரிகிலார்-உம்மைப் பிரியாதிருக்கின்றனர், நாரணன்-திருமாலும், பிரமன்-நான்முகனும், தொழும் - வணங்கித்துதிக்கின்ற, கறையூரில்-கறையூரில், பாண்டிக்கொடுமுடி - திருப்பாண்டிக் கொடுமுடியில் எழுந்தருளியுள்ள காரணா - எல்லாவற்றிற்கும் காரணரே, உனை - தேவரீரை நான் மறக்கினும் - அடியேன் மறக்கப்பெறினும், நா-நாவானது, நமச்சிவாய - நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை, சொல்லும் - சொல்லாநிற்கும் என்றவாறு.

சாரணன்-அடிகள் என்று பொருள்படும். சரணன் என்பது சாரணன் என முதனீண்டு நின்றது. அடிகள் கடவுள் என்பதைக் 'கடவூர் மயானத்துப் பெரிய பெருமான் அடிகளே' என்பதனு லறிக. எந்தை தம்பிரான் - மூதாதை என்றபடி. இறைவனை இப்படிப் பல முறைப்பெயர்களைக்கொண்டு அழைப்பது, இந் நாயனாரே மற்றோரிடத்து, 'எம்மா னெந்தை மூத்தப்பன் ஏழேழ்படிகா லெமையாண்ட, பெம்மான்' என்று கூறுவது கொண்டு அறியப்படும். என் பொன் மாமணி: இவ்விதமா யெல்லாம் கடவுளைக் கூறுவதை, "மணியே பொன்னே மைந்தா மணாளா வென்பார்கட், கணியா னாரூர் ஆதிரைநாளா லது வண்ணம்" என்னும் திருவாக்கும் காட்டாநிற்கும். ஆயிரகோடி- அநேகம் என்னும் பொருளில் வந்தது. பிதற்றிநின்று பிரிகி லாமை, தலையன்பினைக் காட்டாநிற்கும். பிதற்றுதல் - மையல் கொண்டு தம் வசமிழந்து உரை தடுமாறிக் கூறுதல். அடியவர் பித்துப்பெருகப் பிதற்றுதலை,

"சித்தத் துருகிச் சிவனெம் பிரானென்று சிந்தையுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின் றார்பிணி தீர்த்தருளாய்"

என வருவதா லறிக. காரணன், எல்லாவற்றிற்குந் தான் காரணனாய்த் தனக்கு யாதொரு காரணமு மில்லாதவன். (௯)

கோணியபிறை சூடியைக்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப்பிஞ்ஞகப்
பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறைகொன்றைத்
தாரனைப்படப் பாம்பரை
நாணனைத்தொண்டன் ஊரன்சொல்லிவை
சொல்லுவார்க்கில்லை துன்பமே.

(ப - ரை.) கோணிய - வளைந்த, பிறைசூடியை - பிறைச் சந்திரனைச் சூடியவரை, கறையூரில் - கறையூரிலுள்ள, பாண்டிக் கொடுமுடி - திருப்பாண்டிக்கொடுமுடியை, பேணிய - விரும்பிய, பெருமானை - தலைவரை, பிஞ்ஞகப் பித்தனை - தலைக்கோல மணிந்த பித்தரை, பிறப்பில்லியை - பிறத்தலில்லாதவரை, பாண் உலா - கள்ளின்பொருட்டு உலாவுகின்ற, வரி வண்டு - வரி களுடைய வண்டுகள், அறை - ஒலிக்கின்ற, கொன்றைத் தாரனை-

கொன்றைப் பூமாலையையுடையவரை, படப்பாம்பு - படத்தினை யுடைய பாம்பாகிய, அரை நாணை - அரைநாணை யுடைய வரை, தொண்டன் - தொண்டனாகிய, ஊரன் - நம்பியாரூரன், சொல் - சொல்லிய, இவை - இத் திருப்பாட்டுக்களை, சொல்லு வார்க்கு - ஓதுகின்றவர்களுக்கு, துன்பம் இல்லை - துன்பமில்லை யாகும் என்றவாறு.

பிஞ்ஞகம் - தலைக்கோலம்: இதனையுடைமையின் இறை வனுக்குப் பிஞ்ஞகன் என்பதொரு பெயராயிற்று. பாண் - கள், பண் எனினும் ஆம். கொன்றைத் தார் - இறைவனது ஓங்காரத் திருவடையாளமாலை. படப்பாம்பரை நாண்: இறைவனுக்குக் கைக்கங்கணம், தோள்வலயம், விரல்மோதிரம், பூணூல், அரை நாண் முதலிய எல்லாம் பாம்பாதலால் இங்ஙனம் கூறப் பட்டது. (௧0)

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

# திருப்பதிக்கோவை

---

## பண்-இந்தளம்

### கோயிற்றிறம்

*திருச்சிற்றம்பலம்*

ஆரூர்தில்லை அம்பலம் வல்லநல்லம்
வடகச்சியும் அச்சிறு பாக்கம்நல்ல
கூரூர்குட வாயில்கு டந்தைவெண்ணி
கடல்சூழ்கழிப் பாலைதென் கோடிபீடார்
நீரூர்வயல் நின்றியூர் குன்றியூரும்
குருகாவையூர் நாரையூர் நீடுகானப்
பேரூர்நல் நீள்வயல் நெய்த்தானமும்
பிதற்றாய்பிறை சூடிதன் பேரிடமே.

(பொ - ரை.) *திருவாரூர், திருத்தில்லைத் திருவம்பலம், திரு வல்லம், திருநல்லம் வடக்கேயுள்ள திருக்கச்சியேகம்பம், திருவச் சிறுபாக்கம், நன்மைதங்கிய திருக்கூரூர், திருக்குடவாயில், திருக் குடந்தை (கும்பகோணம்), திருவெண்ணியூர், கடல் சூழப்பெற்ற திருக்கழிப் பாலை, தெற்கேயுள்ள திருக்கோடிக் குழகர், பெருமை தங்கிய நீர் நிறைந்த வயல்சூழ்ந்த திருநின்றியூர், திருக்குன்றியூர், திருக்குருகாவூர், திருநாரையூர், சிறந்த திருக்கானப்பேரூர், வள விய பெரிய வயல் சூழ்ந்த திருநெய்த்தானம் ஆகியஇத் திருப்பதிக ளெல்லாம் பிறைசூடியாகிய இறைவரது பெரிய தலங்களென்று பன்முறையும் சொல்லக்கடவாய் என்றவாறு.*

*இப்பொழுது தேவாரப்பதிகமுள்ள திருப்பதிகளைப் பாடல் பெற்ற தலம் எனவும், பதிகம் பெற்றோ பெருமலோ இப்பொழுது பதிகம் இன்றி இருப்பனவற்றுள் வேறு பதிகங்களில் எடுத் தோதப் பெறும் திருப்பதிகளை வைப்புத்தலம் எனவும் கூறுவது மரபு.*

இத்திருப்பாட்டில் திருவாரூர், தில்லையம்பலம் என்னும் சிதம்பரம், கோனேரிராசபுரம் என்று வழங்கும் திருநல்லம், திருக்குடவாயில், திருக்கடமூக்கு, திருவெண்ணி, திருக்கழிப் பாலை, கோடிக்குழகர், திருநின்றியூர், திருக்குருகாவூர், திருநாரை யூர், திருநெய்த்தானம் என்னும் இவைகள் சோழநாட்டுத் தலங்கள்; தீக்காலிவல்லம், திருவலம் என வழங்கும் வல்லம், திருக்கச்சி யேகம்பம், திருவச்சிறுபாக்கம் என்னும் இவை தொண்டைநாட்டுத் தலங்கள்; திருக்கானப் பேரூர் பாண்டிநாட்டுத் தலம்; மற்றைய வைப்புத்தலங்கள். கோடிக்குழகர்: கோடியென்று பேசப்படு தலை ஷை தலத்தேவாரத்தில் ௫ ஆந் திருப்பாட்டினும், திருச்சாய்க் காட்டுத் திருத்தாண்டகத்தில் ௬ ஆந் திருப்பாட்டினுங் காண்க. இத் தலங்களின் மற்றைய விவரங்களையெல்லாம் தல வரலாற்று நூல்களிற் கண்டுகொள்க. (௯)

அண்ணுமலை ஈங்கோயும் அத்திமுத்தா
றகலாமுது குன்றங்கொ டுங்குன்றமும்
கண்ணார்கழுக் குன்றம்கயி லைகோணம்
பயில்கற்குடி காளத்தி வாட்போக்கியும்
பண்ணார்மொழி மங்கையோர் பங்குடையான்
பரங்குன் றம்பருப்பதம் பேணிநின்றே
எண்ணுயிர வும்பகலும் இடும்பைக்
கடல் நீந் தலாங் காரணமே.

(பொ - ரை.) திருவண்ணாமலை, திருவீங்கோய்மலை, திரு வத்தி, திருமணிமுத்தாநதி நீங்காத் திருமுதுகுன்றம், திருக் கொடுங்குன்றம், இடமகன்ற திருக்கழுக்குன்றம், திருக்கயிலா யம், திருக்கோணம், வசித்தற்குரிய திருக்கற்குடி, திருக்காளத்தி, திருவாட்போக்கி, பண்ணமைந்த திருவார்த்தையினையுடைய உமாதேவியை வாமபாகத்திலுடைய இறைவனது திருப்பரங் குன்றம், திருப்பருப்பதம் என்னும் இத் திருமலைகளையெல்லாம் விரும்பி இராப்பகலும் எண்ணக்கடவாய்; அப்படிச் செய்யின் அது துன்பமாகிய பெருங்கடலை நீந்துதற்கு உரிய எதுவாகும் என்றவாறு.

இத்திருப்பாட்டில் இறைவனது திருமலைத் தலங்களெல் லாம் தொகுத்துக் கூறப்பெற்றன வென்க.

கோணம்—ஈழநாட்டுத்தலங்கள் இரண்டனுள் ஒன்றாகிய திருக்கோண மலைபோலும். ஷை தலப்பதிகத்தும் 'கோணமாமலை

யமர்ந்தாரே" என்று கூறுதலானும், மலைகள் தொகுத்துக் கூறப் பெறுதலானும், சோணமென வேறு மலைத்தலம் காணப்பெறுமை யானும் இவ்வாறு ஊகிக்கப்பெற்றது. திருவண்ணமலை, விருத் தாசலம் என்னும் திருமுதுகுன்றம் இவையிரண்டும் நடுநாட்டுத் தலங்கள்; திருவிங்கநாதர்மலை யென வழக்கும் திருவீங்கோய் மலை, உய்யக்கொண்டான்மலை யென வழங்கும் திருக்கற்குடி, இரத்தினகிரி யென வழங்கும் திருவாட்போக்கி, இவை சோழ நாட்டுத்தலங்கள்; பிரான்மலையென வழங்கும் திருக்கொடுங்குன் றம், திருப்பரங்குன்றம், இவை இரண்டும் பாண்டி நாட்டுத் தலங் கள்; திருக்கழுக்குன்றம், திருக்காளத்தி இவை தொண்டை நாட்டுத் தலங்கள்; திருநொடித்தான்மலை என்னும் திருக்கயிலா யம், ஸ்ரீ சைலம் என்னும் திருப்பருப்பதம் இவை இரண்டும் வட நாட்டுத்தலங்கள்; திருக்கோணசலம் ஈழநாட்டுத்தலம்; அத்தி- வைப்புத்தலம். (உ)

அட்டானம் என்றோதிய நாலிரண்டும்
அழகன் உறை காவனைத் துந்துறைகள்
எட்டாந்திரு மூர்த்தியின் காடொன்பதும்
குளமூன்றும் களமஞ்சும் பாடிநான்கும்
மட்டார்குழ லாள்மலை மங்கைபங்கன்
மதிக்கும்மிடம் ஆகிய பாழிமூன்றும்
சிட்டானவன் பாசூரென் றேவிரும்பாய்
அரும்பாவங்கள் ஆயின தேய்ந்தறவே.

(பொ - ரை.) வீரட்டானம் என்று சொல்லப்பெறும் எட் டுத் திருப்பதிகளும், அழகினையுடைய இறைவன் தங்கும் கா எனப் பெறும் எல்லாத் திருப்பதிகளும், துறைகள் எனப்பெறும் திருப் பதிகளும், அட்டமூர்த்தியாகிய இறைவன்காடு என்னும் ஒன் பது திருப்பதிகளும், குளம் என்னும் மூன்று திருப்பதிகளும், களம் என்னும் ஐந்து திருப்பதிகளும், பாடி எனும் நான்கு திருப்பதிகளும், தேன் பெருகும் பூச்சூடிய கூந்தலையுடைய மலை யரையன் மகளாகிய உமாதேவியாரைப் பாகமாகக்கொண்ட இறைவன் மதித்தற்குரிய இடங்களாகிய பாழி என்னும் மூன்று திருத்தலங்களும் மேலான இறைவனது திருப்பாசூர் என்னும் ஊரும் என்று இவைகளை நீங்குதற்கரிய பாவங்களானவை தேய்ந்தொழியும் பொருட்டு விரும்பக்கடவாய் என்றவாறு.

அட்டானம்—வீரட்டானம், எட்டாவன :—திருக்கண்டியூர், திருக்கோவலூர், திருவதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி, திரு

வழுவூர், திருக்குறுக்கை, திருக்கடவூர். திருப்பதிகள் அநேகம் பதிகங்கள் இறக்கப் பெற்றும், வைப்பாகமட்டும் காணப் பெற்றும் வரையறுக்க முடியாதிருக்கின்றமையின் துறைகள் முதலானவற்றிற்குக் கூறிய கணக்குகள் ஒத்துவரவில்லை. கா: திருக்கோலக்கா, திருக்குரக்குக்கா, திருக்கோடிகா, திருவானைக்கா, திருநெல்லிக்கா என ரு-ம், துறை: வடகுரங்காடு துறை, அன்பிலாலந்துறை, திருமாந்துறை, திருப்பாற்றுறை, திருக்கடம்பந்துறை, திருப்பராய்த்துறை, திருச்சோற்றுத்துறை, திருப்பாலைத்துறை, தென்குரங்காடுதுறை, திருவாவடுதுறை, திருமயிலாடுதுறை, பேணு பெருந்துறை, நெல்வாயிலரத்துறை, திருவெண்டுறை என கச-ம், காடு: திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருத்தலையாலங்காடு, கொள்ளிக்காடு, திருமறைக்காடு, திருக்கச்சி நெறிக்கரைக்காடு, திருவாலங்காடு, திருவேற்காடு, தலைச்சங்காடு என கூ-ம், குளம்: திருக்கடிக்குளம் என க-ம் களம் திருவேட்களம், திருநெடுங்களம், திருவஞ்சைக்களம் என ங-ம், பாடி: திருவெதிர்கொள்பாடி, திருவாப்பாடி, திருமழபாடி என ங-ம், பாழி: அத்தைப் பெரும்பாழி என க-ம், ஊர்: திருவாரூர், திருப்பாசூர் முதற்பலவும் பதிகம் பெற்றனவாகக் காண்கின்றன. (திட்டைத் துறை முதலிய: எழுவர் தவத்துறை, பூந்துறை, பெருந்துறை முதலிய துறைகளும், பனங்காடு முதலிய காடுகளும் வளைகுளம், இடைக்குளம், திருக்குளம், பாற்குளம் முதலிய குளங்களும் வைப்புத்தலங்களுள் காண்கின்றன.) மற்றும் வருவனவற்றை மற்றைய திருப்பாட்டுக்களில் எழுதுமவற்றாலறிக. (ங)

அறப்பள்ளியகத்தி யான்பள்ளிவெள்ளைப் பொடிப்பூசி
நீறணி வானமர் காட்டுப்பள்ளி
சிறப்பள்ளி சிராப்பள்ளி செம்பொன்பள்ளி
திருநனி பள்ளிசீர் மகேந்திரத்துப்
பிறப்பில் லவன்பள்ளி வெள்ளச்சடையான்
விரும்பும் மிடைப்பள்ளி வண்சக்கரமால்
உறைப்பால் அடிபோற்றக் கொடுத்தபள்ளி
உணராய் மடநெஞ்சமே உன்னிநின்றே.

(பொ - ரை.) திருவறப்பள்ளி, திருவகத்தியான்பள்ளி, வெள்ளிய திருநீற்றைத் திருமேனியெங்கும் அணிந்து அதன் மேற் றிரிபுண்டரமணியும் இறைவன் விரும்பியுறையும் திருக்காட்டுப் பள்ளி, திருச்சிறப்பள்ளி, திருச்சிராப்பள்ளி, திருச்செம்பொன் பள்ளி, திருநனிபள்ளி, சிறப்புப் பொருந்திய பிறப்பில்லவனாகிய

*இறைவனது திருமகேந்திரப்பள்ளி, கங்கைநீர் வெள்ளத்தையுடைய சடையான் விரும்புகின்ற திருவிடைப்பள்ளி, விட்டுணு மூர்த்தி உறைத்த பத்தியோடு திருவடிகளை வழிபாடு செய்யச் சக்கரதானஞ் செய்த பள்ளி என்னும் இவைகளை, அறிவில்லாத நெஞ்சமே, நினைந்து நின்று அறியக்கடவாய் என்றவாறு.*

*அகத்தியான்பள்ளி, கீழைத் திருக்காட்டுப்பள்ளி, மேலைத் திருக்காட்டுப்பள்ளி, திருச்சிராப்பள்ளி, செம்பொனார் கோவிலென வழங்கும் திருச்செம்பொன்பள்ளி, புன்செய் என்று வழங்கும் திருநனிபள்ளி, திருமகேந்திரப்பள்ளி என்னும் இவை சோழநாட்டுத் தலங்கள். அறப்பள்ளி, இடைப்பள்ளி இவை வைப்புத் தலங்கள். திருச்சக்கரப்பள்ளி சக்கரம் பெற்ற தலமன்றாதலானும் திருவீழிமிழலை முதலிய தலங்கள் பள்ளி எனப்படுவதில்லையாதலானும் சங்கரங்கொடுத்தபள்ளி விளங்கவில்லை.* (ச)

ஆறைவட மாகறல் அம்பரையா
றணியார்பெரு வேளூர் விளமர்தெங்கூர்
சேறைதுலை புகலூரக லாதிவை
.......காதலித் தானவன் சேர்பதியே.

(பொ - ரை.) *திருவாறை வடதளி, வடக்கிலுள்ள திருமாகறல், திருவம்பர்மாகாளம், திருவையாறு, அழகிய திருப்பெருவேளூர், திருவிளமர், திருத்தெங்கூர், திருச்சேறை, திருத்துலை, திருப்புகலூர் என்னும் இவைகளை இறைவன் என்றும் அகலாது எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளாக விரும்பினான் என்றவாறு.*

*இத் திருப்பாட்டு, சிதைந்திருக்கும் திருப்பாட்டுக்களுள் ஒன்று. திருவாறைவடதளி, திருவம்பர் மாகாளம், திருவையாறு, திருப்பெருவேளூர், திருவிளமர், திருத்தெங்கூர், திருச்சேறை, திருப்புகலூர் எனும் இவை சோழநாட்டுத் தலங்கள்; திருமாகறல்-தொண்டைநாட்டுத்தலம்; துலை-வைப்புத்தலம்.* (ரு)

மனவஞ்சர் மற்றோட முன்மாதராரும்
மதிகூர் திருக்கூட லிலாலவாயும்
இனஅஞ்சோ லிலாஇடை மாமருதும்
இரும்பைப்பதி மாகாளம் வெற்றியூரும்
கனமஞ்சன மால்விடை யான்விரும்பும்
கருகாவூர் நல்லூர் பெரும்புலியூர்
தனமேன்சோ லின்தஞ்சம் என்றேநினைமின்
தவமாமலம் ஆயின தானறுமே.

(பொ - ரை.) பொருணிச்சயத்தில் தமக்கு முன்னிற்கமாட்டாமல் வஞ்ச மனத்தவர்களாகிய சமணர்கள் ஓட்டெடுப்ப மாதர் திலகமாகிய மங்கையர்க்கரசியார் அறிவு மிகுதற்கான திருக்கூடலின்கண் உள்ள ஆலவாயும், இனமாகிய கடுஞ்சொற்கள் வழங்கப்பெறுத சிறந்த திருவிடைமருதூரும், திருவிரும்பையுள் உள்ள திருமாகாளமும், திருவெற்றியூரும், பெரிய மேகத்தின் நிறம் வாய்ந்த திருமாலாகிய விடையையுடைய இறைவன் விரும்புகின்ற திருக்கருகாவூர், திருநல்லூர், திருப்பெரும்புலியூர் என்பவைகளும் நமக்குரிய பற்றுக்கோடென்றே பொன்போலும் அழகிய சொற்களால் புகழ்ந்து நினைக்கக்கடவீர்; கொடிய ஆணவமலமானது அடியோடு வேரற்றழியும் என்றவாறு.

மனவஞ்சர் - வஞ்சமனத்தினர்; ஈண்டுச் சமணர். இவர் கொல்லாமையை மேற்கொண்டொழுகுவோர்போலக் காட்டிச் சைவமுனிவர் வாழ்மடத்திற் றீவைத்தல், அரசரைக் கைதவம் பேச ஏவுதல், சைவப்பெரியாரை நீற்றறையிலிடல், நஞ்சூட்டுதல், யானையால் மிதிப்பித்தல், கல்லிற்பூட்டிக் கடலிற்றள்ளல், பகைமைபாராட்டிப் பலதீமைகள் செய்து ஊர்களின்மீது யானை நாக முதலியவற்றை ஏவல், சிவாலயங்களை மறைத்தல், குளங்களைத் தூர்த்தல் முதலிய பல பெருங்கொடுங் காரியங்களைச் செய்தமையின் இவ்வாறு கூறப்பட்டனர் இவர்கள் "ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயனறிகிலா அந்தகரா"யும், "வாயிருந்தமிழே படித்தாளுறு ஆயிரஞ் சமணரா"யும் பொருணிச்சயஞ் செய்து சிவனுக்கு அன்பு செய்யாதவராய், அது செய்யும் "மானினேர் விழி மாதரா"ராகிய மங்கையர்க்கரசியார்க்குத் தோற்று அழிந்த தன்மை இங்குக் கருதியது என்க. அன்றியும் அன்பரை அருகேயழைத்தலும் வன்பரைத் தூரத்தே துறத்தலும் மெய்யடியார் செய்கையாதலானும், இதுபற்றியே உண்மை நூல்கள் "மன்னுக தில்லை வளர்க நம்பத்தர்கள் வஞ்சகர் போயகல" என்றும், "மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின், கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசர்க்கு ஆட்செய்ம்மின்" என்றும் கூறுதலானும் இவ்வாறு கூறப்பட்டதென்பதும் ஆம். கூடல் - மதுரையின் பெயர். "பகைமை கொண்ட மழைக் கடவுள் ஏவிய மேகங்கள் பெய்யும் மழையைத் தடுத்தற்கு இறைவன் ஏவிய நான்கு மேகங்களும் கூடி மாடமாகக் கவிந்து காத்தமையின்" இப் பெயரெய்தியதென்க. 'தவமா மலமாயின தானறுமே' —இதில் 'தவ' என்பது மிகுதிப் பொருள் தரும் உரிச்சொல். தவம் ஆம் மலம் அறும் என்று பிரித்துப் பொருள் கூறுதலுமாம். மதுரையென வழங்கும் கூடலாலவாய் பாண்டிநாட்டுத் தலைநகர். திருவிடைமருதூர், திருக்கருகாவூர், திருநல்லூர், திருப்பெரும்புலியூர் சோழநாட்டுத் தலங்கள். வெற்றியூர் - வைப்புத்தலம்.

வடக்கேயுள்ள மல்லிகார்ச்சுனத்திற்கும், தெற்கேயுள்ள புடார்ச்சுனத்திற்கும் மத்தியில் உள்ளதாதலின் மத்தியார்ச்சுனமெனப் பெயரெய்தியது இடைமருதென்க. அர்ச்சுனம்-மருது. இரும்பை மாகாளம் தொண்டை நாட்டுத் தலம். பெரும் புலியூர் பெரும்பற்றப்புலியூரோடு மயங்கற் பாலதன்று. (சு)

மாட்டூர் மடப்பாச்சி லாச்சிராமம்
முண்டீச் சரம்வாத வூர்வாரணாசி
காட்டூர் கடம்பூர் படம்பக்கம் கொட்டும்
கடலொற்றி யூர்மற்றுறை யூரவையும்
கோட்டூர்திருவா மாத்தூர்கோ ழம்பமும்
......கோடுங்கோவ லூர்திருக் குணவாயில்.

(பொ - ரை.) திருமாட்டூர், மடந்தையுடைய திருப்பாச்சிலாச்சிராமம், திருமுண்டீச்சரம், திருவாதவூர், வாரணாசி, திருக்காட்டூர், திருக்கடம்பூர், படம்பக்க வாத்தியங் கொட்டுகின்ற கடல் சூழ்ந்த திருவொற்றியூர், வளம் பொருந்திய திருத்துறையூர் என்னும் இவைகளும், திருக்கோட்டூர், திருவாமாத்தூர், திருக்கோழம்பம், திருக் (கொடுங்) கோவலூர், திருக்குணவாயில் என்றவாறு.

இத் திருப்பாட்டு ஒருபாதம் சிதைந்துளது. திருப்பாச்சிலாச் சிராமம், மேலக்கடம்பூர் என்னும் கடம்பூர், திருக்கோழம்பம், கோட்டூர் இவை சோழநாட்டுத் தலங்கள்: திருமுண்டீச்சரம், திருத்துறையூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர், இவை நடுநாட்டுத் தலங்கள்; திருவொற்றியூர் தொண்டை நாட்டுத் தலம். மாட்டூர், திருவாதவூர், வாரணாசி, காட்டூர், திருக்குணவாயில் இவை வைப்புத் தலங்கள். மாட்டூர், காட்டூர், கோட்டூர் இவற்றை ஊர்த்தொகையிற் 'காட்டூர்க் கடலே' என்னும் பாட்டினுங் காண்க. திருமுண்டீச்சரம் கிராமமென்றும் வழங்கப்பெறும். வாதவூர் மணிவாசகரது திருவவதாரத்தலம். வாரணாசி - காசி; வாரணை, அசி என்னும் இரு சிற்றாறுகளுக்கு இடையில் உள்ள காரணத்தால் இஃது இப் பெயரெய்திய தென்ப. படம்பக்கம் ஒரு வாத்திய விசேடம். இறைவனைப் பலகைவடிவத் திருவுருவத்தில் வாசுகி பூசித்து இடம் பெற்றமையின் படம்பக்க நாதர் என ஒரு திருநாமம் இறைவனுக்கு உளதாயிற்று. திருக்குணவாயில்வாகீசரது அடைவு திருத்தாண்டகம், எ-ம் திருப்பாட்டினும் பேசப்படுதல் காண்க. (எ)

......குலாவுதிங்கட் சடையான்குளிரும் பரிதிநியமம்
போற்றூரடி யார்வழி பாடொழியாத்
தென்புறம்பயம் பூவணம் பூழியூரும்
காற்றூர்வரை அன்றெடுத்தான்முடி தோள்நெரித்தான்
உறைகோயில் என்றென்று நீகருதே.

(பொ - ரை.) *விளங்குகின்ற பிறையை யணிந்த சடையை யுடைய இறைவன் விரும்பும் திருப்பரிதி நியமம், திருப்போற்றூர், அடியவர்களது வழிபாடு நீங்காத அழகிய திருப்புறம்பயம், திருப் பூவணம், திருப்பூழியூர் எனும் இவைகளும் திருக்காற்றூரும் திருக் கயிலாய மலையை எடுத்த இராவணனது பத்துமுடிகளையும் இருபதுதோள்களையும் நெரித்த இறைவன் வாழ்கின்ற திருக் கோயில்களென்று நீ கருதக்கடவாய் என்றவாறு.*

*இப்பாட்டு மிகவும் சிதைந்துளது. பரிதியப்பார் கோயிலென வழங்கும், திருப்பரிதிநியமம், திருப்புறம்பயம்* இவை சோழநாட்டுத் தலங்கள்; *திருப்பூவணம்* பாண்டிநாட்டுத் தலம்; *போற்றூர் திருப்பூழியூர், காற்றூர்* இவை வைப்புத்தலங்கள். (அ)

நெற்குன்றம் ஓத்தூர் நிறைநீர்மருகல்
நெடுவாயில் குறும்பலா நீடுதிரு
நற்குன்றம் வலம்புர நாகேச்சரம்
நளிர்சோலை யுஞ்சேனை மாகாளம்வாய்மூர்
கற்குன்றம் ஒன்றேந்தி மழைதடுத்த
கடல்வண்ணனும் மாமல ரோனுங்காணாச்
சொற்கென்றும் தொலைவிலா தானுறையும்
குடமூக் கென்றுசொல்லிக் குலாவுமினே.

(பொ - ரை.) *திருநெற்குன்றம், திருவோத்தூர், நிறையும் நீர்சூழ்ந்த திருமருகல், திருநெடுவாயில், குறும்பலாவை விருக்ஷமாகவுடைய திருக்குற்றாலம், சிறந்த திருநற்குன்றம், திருவலம்புரம், திருநாகேசசரம், குளிர்ந்த சோலை சூழ்ந்த திருவுஞ்சேனை மாகாளம், திருவாய்மூர், கோவர்த்தந மலையைக் கையிலேந்தி மழையைத் தடுத்த கடல்போலும் நீல நிறத்தையுடைய விட்டுணு மூர்த்தியும், சிறந்த தாமரை மலரில் வாழும் பிரமதேவரும் அறியாத என்றும் சொல்லுக் கடங்காதவனாகிய இறைவன் வசிக்கும் திருக்குடமூக்கு என்று இவ்வாறு சொல்லிப் பாராட்டுவீராக என்றவாறு.*

கற்குன்றம்-கோவர்த்தனமலை. தன்னை வழிபடாத காரணம் பற்றிச் சினந்து இந்திரன் ஏவிய மேகங்கள் பெய்யும் கன்மழையைத் தடுத்தற்பொருட்டுக் கிருட்டினன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பற்றினர் என்பது புராணக்கதை. மாமலர்-திருவுந்தியந்தாமரை. சொற்கென்றுந் தொலைவிலாமை - எல்லாச் சொற்களாலும் சொல்லியும் மேற்சொல்லின்றி அவற்றைக் கடந்து நிற்கும் நிறைவு. இதனைச் "சொற்பதங்கடந்த தொல்லோன் காண்க" எனவும்,

"..................எங்கள் பெருமான்
பாதமிரண்டும் வினவிற் பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதிமணிமுடிசொல்லின் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதிகுணம் ஒன்றும் இலான் அந்தமிலான்"

எனவும் வரும் (திருவாசகம், குயிற்பத்து, செ. க.) திருவாக்கா லறிக.

குடமூக்கு - கும்பகோணம். திருநெற்குன்றம், திருநெடுவாயில், திருநற்குனறம், உஞ்சேனை மாகாளம் இவை வைப்புத் தலங்கள்; திருவோத்தூர்-தொண்டை நாட்டுத்தலம்; திருமருகல், திருவலம்புரம், திருநாகேச்சரம், திருவாய்மூர், திருக்குடமூக்கு இவை சோழநாட்டுத் தலங்கள்; குறும்பலா.பாண்டிநாட்டுத்தலம், திருநெடுவாயில்—இதனை அடைவு திருத்தாண்டகம் எ-ஆம் திருப்பாட்டினுங் காண்க. உஞ்சேனைமாகாளம்—இது மத்திய இந்தியாவில் உள்ளது விக்கிரமாதித்தன் அரசாண்ட பிரதான நகர். பன்னிரண்டு சோதிலிங்கங்களுள் ஒன்று எழுந்தருளியுள்ளதலம். இதனை வாகீசர் க்ஷேத்திரத் திருக்கோவையும் (அ-ஆம் திருப்பாட்டு), திருவதிகைக் காப்புத் திருத்தாண்டகமும் (கக-ஆம் திருப்பாட்டு, ஐயடிகள் காடவர்கோ னயனார் க்ஷேத்திர வெண்பாவும் (கரு-ஆம் திருப்பாட்டு) கூறுமாறு காண்க. (க)

குத்தங்குடி வேதி குடிபுனல்சூழ்
குருந்தங்குடி தேவன் குடிமருவும்
மத்தங்குடி தண்திரு வண்குடியும்
அலம்புஞ்சலந் தன்சடை வைத்துகந்த
நித்தன்னிம லனுமை யோடுங்கூட
நெடுங்காலம் உறைவிடம் என்றுசொல்லாப்
புத்தர்புறங் கூறிய புன்சமணர்
நெடும்பொய்களை விட்டு நினைந்துய்மினே.

(பொ - ரை.) திருக்குத்தங்குடி, திருவேதிகுடி, நீர்சூழ்ந்த திருக்குருந்தங்குடி, திருந்துதேவன் குடி, நிலைபொருந்திய திருமத்தங்குடி, குளிர்ந்த திருவண்குடி என இவை யாவும், அலம்பாநிற்கும் கங்கைநீரைத் தமது சடையில் வைத்து உவப்படைந்த நித்தத்தன்மையும் நிமலத்தன்மையும் வாய்ந்த இறைவன் உமாதேவியாரோடு பண்டைக்காலந் தொட்டு எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் என்று சொல்லி, புத்தர்களதும், புறங்கூறும் புல்லிய சமணர்களதுமான பெரும் புனைந்துரைகளைக் கைவிட்டு (அடியார்களே நீங்கள் இத்திருத்தலங்களை) நினைந்து உய்யக் கடவீராக. என்றவாறு.

திருக்குத்தங்குடி, திருக்குருந்தங்குடி, திருமத்தங்குடி, திருவண்குடி இவை வைப்புத்தலங்கள்; திருவேதிகுடி, திருந்துதேவன்குடி இவை சோழநாட்டுத்தலங்கள்; தேவன்குடி-திருந்துதேவன்குடி. இறைவன் பிறந்து வளர்ந்து தக்கபருவத்து மணஞ்செய்விக்கப் பெறுத நித்தத்தன்மையும் நிமலத்தன்மையும் வாய்ந்து தமது சக்தி நீக்கமின்றி என்றும் தம்மோடு உறையும் பெற்றியன் என்பது பற்றி "நித்தன் னிமல னுமையோடுங் கூட" என்று கூறியதென்க.

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி"

என்னும் திருவாசகம் இதனை வலியுறுத்து மென்க. வானிடத்தவராய் மூதற்பெருந் தேவர்கள் முதலிய எல்லாத் தேவர்களும் முனிவர்களும் காந்தர்வ யக்க கின்னர கிம்புருடாதியரும், அரக்கரும், மனிதரும் தங்கள் தங்கள் குறைமுடித்துத் திருவடி பெறுமாறு உலகத் தோற்றந் தொட்டுப் பற்பல காலங்களில் இந்நிலவுலகத்துப் பிரதிட்டைசெய்து பூசித்தனவே இப்பெரிய திருத்தலங்கள் ஆமாதலின் நெடுங்கால முறைவிடம் என்று கூறியதாம். இவர் யாவர்களும் பூசிப்பர்களென்பதை, "வானிடத்தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்பர், ஊனெடுத் துழலுமூமர் ஒன்றையுமுணரா ரந்தோ?" என்னும் பிரமாணத்தானும் தலவரலாறுகளானும் கண்டு தெளிக. புத்தர் சமணர் புறப்புறச் சமயிகளாதலின் சொல்லார் என்பதுமொன்று, புறங்கூறுதல் - புறச்சமயமாகிய தங்கள் சமயவாதம்பற்றிக் கூறும் மொழிகளும், சிவநேயர்களாகிய பெரியார் முன்னின்றிப் புறத்தே கூறும் மொழிகளும் என இருவகைமொழிகளையும் இரட்டுற மொழிதலாற் கொள்ளப்பெறுமாறு உரைக்கப்பெற்ற தென்க.

இதனைக், "கேளாம்புறன்" என்னும் மெய்கண்டதேவர் திருவாக் கானுமறிக. இப் பெற்றியைத் திருத்தொண்டர்புராணத்து, திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் புராணங்களுள் விரிவாகக் காணப்பெறலாம். உதாரணமாக :

"வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனுந் திருவதிகை நகரின்கட் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்திலமண் பள்ளியொடு பாழிகளும்
கூடஇடித் துக்கொணர்ந்து குணதரஈச் சரமெடுத்தான்"

எனவும்,

"செய்வதொன் றறிகி லாதார் திகைப்பினுல் திரண்ட சாம்பல்
கையினுற் பிசைந்து தூற்றிப் பார்ப்பது கண்ட மன்னன்
எய்திய நகையி னேடு மேடின்ன மரித்துக் காணும்
பொய்யினுன் மெய்யை யாக்கப் புகுந்தநீர் போமி னென்றுன்"

எனவும் வரும் திருவிருத்தங்களைக் காண்க. (கo)

அம்மானை அருந்தவம் ஆகிநின்ற
அமரர்பெரு மான்பதி யானஉன்னிக்
கோய்ம்மாமலர்ச் சோலை குலாவுகோச்சைக்
கிறைவன்சிவ ஞானசம் பந்தன்சொன்ன
இம்மாலையீ ரைந்துமி ருநிலத்தில்
இரவும்பக லும்நினைந் தேத்திநின்று
விம்மாவெரு வாவிரும் பும்அடியார்
விதியார்பிரி யார்சிவன் சேவடிக்கே.

(பொ - ரை.) எல்லா வுயிர்கட்கும் தந்தையாய் நின்ற இறைவனையும், அரிய தவமே உருவாகின்ற தேவர்கள் தலைவனாகிய அவ்விறைவனின் திருப்பதிகளையும் நினைத்தெண்ணி, கொய்யும் சிறந்த மலர்நிறைந்த சோலை சூழ்ந்த கொச்சையென்னும் சீகாழிக்குத் தலைவனாகிய சிவஞானசம்பந்தன் உரைத்த இத் திருக்ஷேத்திரக் கோவையி னமைந்த பத்துத் திருப்பாட்டுக்களையும் இந்நிலவுலகத்தில் இரவினும் பகலினும் எண்ணித் துதித்து நின்று விம்முதலையும் வெருவுதலையும் செய்து விரும்புகின்ற அடியார்கள் பிறப்பினை யடையாதவராய்ச் சிவபெருமான் திருவடியிற் பிரியாது நிலைபெற்றிருப்பர் என்றவாறு.

அம்மான் - தந்தை. தவசிகளுக்குத் தவசியாய் நிற்கும் பெற்றியன் இறைவன் ஆதலின், 'அருந்தவமாகி நின்ற' என்றார். "காமனை முனிந்து நெடுஞ்சடை தரித்துக் கவின்றகல் லாடை மேற் புனைந்து, யாமெலாம் வழுத்துந் துறவியென் றிருந்தும்" என்னும் காஞ்சிப்புராண வாக்குக் காண்க. கொச்சை - சீகாழி: இது பராசரர் தாம் மச்சகந்தியை ஆற்றிடையிற் பகற்போதிற் கூடியதாற்பெற்ற துர்க்கந்தமும் பாவமும் பழியும் போகப் பூசித்த காரணத்தால் இப் பெயரெய்தியதெனப் புராணங் கூறும். சிவஞானம் - பரஞானம். இம்மாலை - திருக்ஷேத்திரக்கோவை. விம்முதல் - வெதும்பி யழுதல். வெருவுதல் - மெய்சிலிர்த்து நடுங்குதல். விதியார் - விதிக்கப்படார். படு முதலிய குன்றிவந்த நயக்குப் பிரயோகம்; பிறவார் என்பது கருத்து. சேவடிக்கு: சேவடியில், உருபு மயக்கம்.

இத் திருக்ஷேத்திரக் கோவையினும் அடுத்த இரண்டு திருப்பதிகங்களினும் கூறப்பெற்ற வைப்புத் திருத்தலங்களுள் பல இட முதலிய அறியப் பெறாதுள்ளன. இவை காரணமாகச் செய்யப்பெறும் ஆராய்ச்சியில் ஏற்பட்டவற்றைப் பின்னர் எழுதுவோம் (அறிந்த அன்பர் உதவின் உபகாரமாகக் கருதி வந்தனபூர்வமாக ஏற்றுக்கொள்வோமென விண்ணப்பித்துக் கொள்ளலானோம்).

(கக)

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசுநாயனர்
# திருப்பதிக் கோவை

---

## திருத்தாண்டகம்

### கோயிற்றிறம்

*திருச்சிற்றம்பலம்*

தில்லைச்சிற் றம்பலமும் செம்போன் பள்ளி
தேவன் குடிசிராப் பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டம் கோகரணம் கோடி காவும்
முல்லைப் புறவம் முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்தி முற்றம்
கல்லில் திகழ்சீரார் காளத் தியும்
கயிலாய நாதனையே காண லாமே.

(பொ - ரை.) *தில்லைத் திருச்சிற்றம்பலம், திருச்செம் பொன்பள்ளி, திருந்து தேவன்குடி, திருச்சிராப்பள்ளி, திருத் தெங்கூர் கொல்லிமலையிலுள்ள குளிர்ச்சிபொருந்திய திரு வறைப்பள்ளி, திருக்கோவல்வீரட்டானம், திருக்கோகரணம், திருக்கோடிகா, முல்லைக்காட்டிலுள்ள திருமுருகன்பூண்டி, திரு முழையூர், திருப்பழையாறை வடதளி, திருச்சத்திமுற்றம், மலையிற் சிறப்புற்று விளங்கும் திருக்காளத்தி என்னும் இத் திருப் பதிகளிலெல்லாம் கயிலைத் தலைவனாகிய இறைவனைக் கண்டு வணங்கலாகும் என்றவாறு.*

*கொல்லிக்குளிரறைப்பள்ளி - இதனை இந் நாயனரே திரு அடைவு திருத்தாண்டகத்தில் முதற்றிருப்பாட்டில் "கள்ளார் கமழ் கொல்லியறைப்பள்ளி" என்று கூறுவது காண்க. கல்லிற் றிகழ்தல் - திருக்காளத்தி தென்கயிலாய மூன்றனுள் ஒன்றாக விளங்குதலின் மலைகளிற் சிறந்து கயிலையொத்து விளங்குதல். கயிலாய நாதன் - இறைவனாகிய சிவபெருமான். திருச்சிற்றம்*

பலம், திருச் செம்பொன்பள்ளி, திருந்துதேவன்குடி, திருச்சிராப்பள்ளி, திருத்தெங்கூர், திருக்கோடிகா, பழையாறை வடதளி, திருச்சத்தி முற்றம் இவை சோழநாட்டுத் திருப்பதிகள்: கோவல் வீரட்டம் நடுநாட்டுத் தலம்; கோகரணம் துளுவநாட்டுத் தலம்; திருமுருகன்பூண்டி கொங்குநாட்டுத் தலம்; திருக்காளத்தி தொண்டைநாட்டுத்தலம்; திருவறைப்பள்ளி, முழையூர் இவை வைப்புத் தலங்கள். (க)

ஆரூர் மூலட்டானம் ஆனைக் காவும்
ஆக்கூரில் தான்தோன்றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேரா வூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணும்
கூரார் குறுக்கை வீரட் டானமும்
கோட்டூர் குடமூக்குக் கோழம் பமும்
காரார் கழுக்குன்றும் கானப் பேரும்
கயிலாய நாதனையே காண லாமே

(பொ - ரை.) திருவாரூர்த் திருமூலட்டானம், திருவானைக்கா, திருவாக்கூர்த்தான்றோன்றிமாடம், திருவாவூர்ப் பசுபதீச்சரம், திருப்பேரூர், திருப்பிரமபுரம், திருப்பேராவூர், திருப்பெருந்துறை, திருக்காம்பீலி, திருப்பிடவூர், விரும்புஞ் சிறப்பமைந்த திருக்குறுக்கை வீரட்டானம், திருக்கோட்டூர், திருக்குடமூக்கு, திருக்கோழம்பம், மேகங்கள் தவழுகின்ற திருக்கழுக்குன்றம், திருக்கானப்பேரூர் எனும் இத் திருப்பதிகளினெல்லாம் கயிலாய நாதனாகிய இறைவனைக் கண்டு கும்பிடலாகும் என்றவாறு.

திருவாரூரும் உலகிற்கு மூலாதாரத்தானமாக நூல்களால் பேசப்படுதலால் மூலட்டானம் எனப்பட்டது, "திருவளர் ஆரூர் மூலம்" என்பது ஆலவாய்ப் புராணம். சிதம்பரம், மதுரை முதலியவும் ஆதாரத்தலங்களாதலின் ஆண்டும் மூலட்டான முறை பேசப்படுதல் காண்க. ஆக்கூரிற் றான்றோன்றிமாடம்: ஆக்கூர் - தலம்; தான்றோன்றிமாடம் - திருக்கோயில்; திருவாவூர் பசுபதீச் சரமும் இவ்வாறே யமைந்துள்ளது காண்க. பேரூர்- இது கொங்குநாட்டிலுள்ள திருப்பேரூர்: மேலைச்சிதம்பரம் என்று வழங்கும். இத் திருப்பதியை ஆளுடையநம்பிகள் ஊர்த்தொகையில், "பேரூருறைவாய் பட்டிப்பெருமான் பிறவா நெறியானே" என்றும், கோயிற்றிருப்பதிகத்தில் "மீகொங்கி லணிகாஞ்சி

வாய்ப்பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்றம்பலத்தே பெற்றா மன்றே' என்றும் பாடியருளினர். பிரமபுரம் - சீகாழி. பேராவூர் - இதனை அடைவு திருத்தாண்டகம் ௪ ஆம் திருப்பாட்டும் திருவீழி மிழலை (உ) திருத்தாண்டகம் ந ஆம் திருப்பாட்டும் கூறும். பெருந் துறை - மணிவாசகமூர்த்தியை ஆட்கொண்டருளிய திருப்பதி: 'பேணு பெருந்துறை' என உரைத்தலும் ஒன்று. காம்பீலி - நேசநாயனர் திருவவதாரத் தலம். திருத்தொண்டர்புராணம், நேசநாயனர் புராணம் ௧ ஆம் திருப்பாட்டுக் காண்க. பிடவூர்-சேர மான்பெருமாணுயனர் திருக்கயிலையில் அரங்கேற்றிய ஆதி யுலாவை அங்குக் கேட்டவராகிய சாத்தனர் இத் திருப்பிடவூரில் கொண்டு வந்து உய்த்து உலகினிற் பரப்பின ரென்ப. இதனைத் திருத்தொண்டர்புராணம் திருவெள்ளானைச்சருக்கம் ௫௨ ஆம் திருப்பாட்டிற் காண்க. வாகீசர் திருவதிகைக் காப்புத் திருத் தாண்டகம் ௬ ஆம் பாட்டிலும் இது காணப்பெறும்.

திருவாரூர்த் திருமூலட்டானம், திருவானைக்கா, திருவாக் கூர், திருவாவூர், திருப்பிரமபுரம், திருக்குறுக்கைவீரட்டானம், திருக்கோட்டூர், திருக்குடமூக்கு, திருக்கோழம்பம் இவை சோழ நாட்டுத் திருப்பதிகள். திருக்கழுக்குன்றம் - தொண்டைநாட்டுத் திருப்பதி. திருக்கானப்பேர் - பாண்டி நாட்டுத்திருப்பதி. பேரூர்- பேராவூர், திருப்பெருந்துறை, காம்பீலி, பிடவூர் இவை வைப்புத் தலங்கள், (உ)

இடைமரு தீங்கோ யிராமேச் சரம்
இன்னம்பர் ஏரிடவை யேமப் பேறூர்
சடைமுடி சாலைக் குடிதக் களூர்
தலையாலங் காடு தலைச்சங் காடு
கோடுமுடி குற்றாலம் கோள்ளம் பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு
கடைமுடி கானூர் கடம்பந் துறை
கயிலாய நாதனையே காண லாமே.

(பொ - ரை.) திருவிடைமருதூர், திருவீங்கோய்மலை, திரு விராமேச்சரம், திருவின்னம்பர், அழகிய திருவிடவை, ஏமப் பேறூர், சடைமுடி, சாலைக்குடி, திருத்தக்களூர், திருத்தலையாலங் காடு, திருத்தலைச்சங்காடு, திருப்பாண்டிக்கொடுமுடி, திருக்குற் றாலம், திருக்கொள்ளம்பூதூர், திருக்கோத்திட்டை, திருக்கோட் டாறு, திருக்கோட்டுக்காடு, திருக்கடைமுடி, திருக்கானூர்,

திருக்கடம்பந்துறை என்னும் இத் திருப்பதிகளிலெல்லாம் கயிலாயநாதனாகிய இறைவனைக் கண்டு வணங்கலாகும் என்றவாறு:

திருவிடைமருதூர், திருவீங்கோய்மலை, திருவின்னம்பர், திருத்தலையாலங்காடு, திருத்தலைச்சங்காடு, திருக்கொள்ளம்பூதூர், திருக்கோட்டாறு, திருக்கடைமுடி, திருக்கானூர், திருக்கடம்பந்துறை இவை சோழநாட்டுத் தலங்கள். திருவிராமேச்சரம், திருக்குற்றாலம், திருக்கோத்திட்டை இவை பாண்டிநாட்டுத் தலங்கள். கொடுமுடி - இது கொங்குநாட்டுத் தலம். இடவை; ஏமப்பேறூர், சடைமுடி, சாலைக்குடி, தக்களூர், கோட்டுக்காடு இவை வைப்புத் தலங்கள். இடவை - இஃது ஐயடிகள் காடவர்கோனாயனார் க்ஷேத்திர வெண்பா எஆம் திருப்பாட்டிற்கூறும் இடைவாய் என்று கருதப்படுகிறது. ஏமப்பேறூர் - இது நமிநந்தியடிகளாயனார் திரு அவதாரத் தலம். பெரியபுராணம் நமிநந்தியடிகளாயனார் புராணம் கஆம் திருப்பாட்டிற் காண்க. தக்களூர், இதனைக் கோயிற்புக்க திருத்தாண்டகம் அஆம் திருப்பாட்டினும், திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் (உ) அஆம் திருப்பாட்டினும் காண்க. கோத்திட்டை - பரங்குன்றம். இதனை ஆளுடைய நம்பிகள் திருப்பரங்குன்றத் திருப்பதிகத்தால் ஊகிக்கின்றோம். (௩)

எச்சில் இளமர் ஏம நல்லூர்
　　இலம்பையங் கோட்டூர் இறையான் சேரி
அச்சிறு பாக்கம் அளப்பூர் அம்பர்
　　ஆவடு தண்டுறை அழுந்தூர் ஆறை
கச்சினங் கற்குடி கச்சூ ராலக்
　　கோயில் கரவீரங் காட்டுப் பள்ளி
கச்சிப் பலதளியும் ஏகம் பத்தும்
　　கயிலாய நாதனையே காண லாமே.

(பொ - ரை.) திருவெச்சில், இளமர், திருவேமம், திருநல்லூர், திருவிலம்பையங் கோட்டூர், திருவிறையான் சேரி, திருவச்சிறுபாக்கம், திருவளப்பூர், திருவம்பர் மாகாளம், திருவாவடுதுறை, திருவழுந்தூர், திருவாறை வடதளி, திருக்கைச்சினம், திருக்கற்குடி, திருக்கச்சூராலக் கோயில், திருக்கரவீரம், திருக்காட்டுப்பள்ளி, திருக்கச்சியில் உள்ள பலதளிகள், திருக்கச்சித் திருவேகம்பம் என்னும் இத் திருப்பதிகளிலெல்லாம் கயிலாய நாதனாகிய இறைவனைக் கண்டு தொழலாகும் என்றவாறு.

திருநல்லூர், திருவம்பர், திருவாவடுதுறை, திருவழுந்தூர், திருவாறை வடதளி, திருக்கைச்சினம், திருக்கற்குடி, திருக்கரவீரம், திருக்காட்டுப்பள்ளி இவை சோழநாட்டுத் தலங்கள்.

அம்பர் - அம்பர்ப் பெருந் திருக்கோயிலுமாம். திருவிலம்பையங் கோட்டூர், திருவச்சிறுபாக்கம், திருக்கச்சூராலக் கோயில், கச்சிப் பலதளி, திருவேகம்பம், இவை தொண்டை நாட்டுத் தலங்கள். எச்சில், இளமர், ஏமம், இறையான்சேரி, அளப்பூர் இவை வைப்புத் தலங்கள். ஏமம் - திருச்சிற்றேமமாக விருக்கலாமென எண்ணப்படுகிறது: எனின் சோழநாட்டுத் தலமாகக் கொள்க. அளப்பூர் - இதனைத் திரு அடைவு திருத்தாண்டகம் ௬ஆம் திருப்பாட்டினும், ஊர்த்தொகை ௬ஆம் திருப்பாட்டினுங் காண்க. காட்டுப்பள்ளி - மேலைத் திருக்காட்டுப்பள்ளி, கீழைத் திருக்காட்டுப்பள்ளி என்னும் இரண்டுங் கொள்க. கச்சிப்பலதளி - கச்சியிலுள்ள பல திருத்தளிகள். இவை திருக்கச்சி மேற்றளி, திருவோணகாந்தன் றளி, திருக்கச்சி யனேகதங்காவதம், திருக்கச்சிநெறிக்காரைக்காடு எனும் பாடற்றிருப்பதிகளும், மற்றுமுள்ள திருப்பதிகளும் ஆம். (௬)

கொடுங்கோளூர் அஞ்சைக் களம்செங் குன்றூர்
கோங்கணம் குன்றியூர் குரக்குக் காவும்
நெடுங்களம் நன்னிலம் நெல்லிக் காவும்
நின்றியூர் நீடூர் நியம நல்லூர்
இடும்பா வனம்எழு மூரேமூர் தோமூர்
எறும்பியூர் ஏராரும் ஏமகூடம்
கடம்பை இளங்கோயில் தன்னின் உள்ளும்
கயிலாய நாதனையே காண லாமே.

(பொ - ரை). திருக்கொடுங் கோளூரில் உள்ள திருவஞ்சைக்களம், திருக்கொடிமாடச் செங்குன்றூர், திருக்கொங்கணம், திருக்குன்றியூர், திருக்குரக்குக்கா, திருநெடுங்களம், திருநன்னிலத்துப் பெருங்கோயில், திருநெல்லிக்கா, திருநின்றியூர், திருநீடூர், திருநியமம், திருநல்லூர், திருவிடும்பாவனம், திருவெழுமூர், திருவேமூர், திருத்தோமூர், திருவெறும்பியூர், அழகுபொருந்திய திருவேமகூடம், திருக்கடம்பைக் கரகோயில், திருமீயச்சூரிளங்கோயில் என்னும் இத்திருப்பதிகளிலெல்லாம் கயிலாயநாதனாகிய இறைவனைக் கண்டு கும்பிடலாகும் என்றவாறு.

கொடுங்கோளூ ரஞ்சைக்களம்: கொடுங்கோளூர் - தலம், அஞ்சைக்களம் - திருக்கோயில். இங்குநின்றே நம்பியாரூரர் சேரமான் பெருமாளுடனே திருக்கயிலாயத்திற்குப் புறப்பட்டது. செங்குன்றூர் - கொடிமாடச் செங்குன்றூர். நளிர்சுர

மெய்திய தம்மடியர் விண்ணப்பிக்கத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருநீலகண்டத் திருப்பதிகம் பாடி அந் நாட்டிலுள்ள எல்லோர்க்கும் சுரநோய் தீர்த்தருளிய தலம். செங்குன்றூ ரென்றே கொள்ளின் மலைநாட்டிலுள்ள தெனவும், விறன்மிண்ட நாயனாரது அருட்பிறப்பிடமாகவும் கொள்க. திருத்தொண்டர் புராணம், விறன்மிண்ட நாயனார் புராணம் ௧ஆம் திருப்பாட்டைக் காண்க. நியமம் - திருப்புறம்பயத் திருத்தாண்டகம் ௪ஆம் திருப்பாட்டும், திருப்பழனத் திருத்தாண்டகம் (௧) ௯ஆம் திருப் பாட்டும் இதனைக் கூறும். தோழூர் - திரு அடைவு திருத்தாண் டகம் ௪ஆம் திருப்பாட்டில் இதனைக் காண்க. ஏமகூடம் - திரு வீழிமிழலைத் திருத்தாண்டகம் (௫) ௧௦ஆம் திருப்பாட்டு இதனைக் கூறுகின்றது. திருவஞ்சைக்களம் - இது மலைநாட்டுத் திருப்பதி. செங்குன்றூர் கொங்குநாட்டுத்தலம். திருக்குரக்குக்கா, திரு நெடுங்களம், நன்னிலம், திருநெல்விக்கா, திருநன்றியூர், திருநீடூர், திருநல்லூர், திருவிடும்பாவனம், திருவெறும்பியூர், கடம்பூர்க் கரக்கோயில், மீயச்சூ ரிளங்கோயில் இவை சோழநாட்டுத் தலங் கள். கொங்கணம், குன்றியூர், நியமம், எழுமூர், ஏமூர், தோழூர், ஏமகூடம் இவை வைப்புத்தலங்கள். (௫)

மண்ணிப் படிக்கரை வாழ்கொளி புத்தூர்
வக்கரை மந்தாரம் வார ணாசி
வெண்ணி விளத்தொட்டி வேள்விக் குடி
விளமர் விராடபுரம் வேட்க ளத்தும்
பெண்ணை அருட்டுறை தண்பெண் ணாகடம்
பிரம்பில் பெரும்புலி யூர்பெரு வேளூரும்
கண்ணை களர்க்காறை கழிப்பாலையும்
கயிலாய நாதனையே காண லாமே.

(பொ - ரை.) திருமண்ணிப்படிக்கரை, திருவாழ்கொளி புத்தூர், திருவக்கரை, மந்தாரம், வாரணாசி, திருவெண்ணி, விளத் தொட்டி, திருவேள்விக்குடி, திருவிளமர், விராடபுரம், திருவேட் களம், பெண்ணையாற்றின் கரையிலுள்ளதாகிய திருவெண்ணெய் நல்லூர்த் திருவருட்டுறை, குளிர்ச்சி பொருந்திய திருப்பெண்ணா கடம், பிரம்பில், திருப்பெரும்புலியூர், திருப்பெருவேளூர், கண்ணை, களர்க்காறை, திருக்கழிப்பாலை என்னும் இத் திருப்பதி களினெல்லாம் கயிலாய நாதனாகிய இறைவனைக் கண்டு வணங்க லாகும் என்றவாறு.

மண்ணிப்படிக்கரை - இது மண்ணியாற்றின் கரையிலுள்ளமையால் இப்பெயரெய்தியது. வாழ்கொளிபுத்தூர் - இது வாளப்புத்தூர் என வழங்கும். மந்தாரம் - இதனைத் திருவெண்காட்டடிகள் திருவேகம்பர் திருவந்தாதியில் ௬அ ஆம் திருப்பாட்டுப் பேசுமென்க. வெண்ணி - இதுவே இப்போது கோயில் வெண்ணியென வழங்கப்படுவது. விளத்தொட்டி - இத் தலத்திற்கு மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்கள் புராணம் பாடியுள்ளனர். வேட்களம் - மூங்கில்வனம். அருட்டுறை - திருவெண்ணெய் நல்லூர்ச் சிவாலயம். பெண்ணாகடம் - திருப்பதி, திருக்கோயில் திருத்தூங்கானை மாடமென வழங்கும். திருமண்ணிப்படிக்கரை, திருவாழ்கொளிப்புத்தூர், திருவெண்ணி, திருவேள்விக்குடி, திருவிளமர், திருவேட்களம். திருப்பெரும்புலியூர், திருப்பெருவேளூர், திருக்கழிப்பாலை இவை சோழநாட்டுத் திருப்பதிகள்; திருவக்கரை தொண்டை நாட்டுத்தலம். திருவருட்டுறை, பெண்ணாகடம் இவை நடுநாட்டுத்தலம். மந்தாரம், வாரணாசி, விளத்தொட்டி, விராடபுரம், பிரம்பில், கண்ணை, களர்க்காறை இவை வைப்புத்தலங்கள். (௬)

வீழி மிழலை வெண்காடு வேங்கூர்
வேதி குடிவிசய மங்கை வியலூர்
ஆழி அகத்தியான் பள்ளி அண்ணா
மலையாலங் காடும் அரதைப் பெரும்
பாழி பழனம் பனந்தாள் பாதாளம்
பராய்த்துறை பைஞ்ஞீலி பனங்காட் டூர்தண்
காழி கடல்நாகைக் காரோ ணத்தும்
கயிலாய நாதனையே காண லாமே.

(பொ - ரை.) திருவீழிமிழலை, திருவெண்காடு, திருவேங்கூர், திருவேதிகுடி, திருவிசயமங்கை, திருவியலூர், கடற்கரையிலுள்ள திருவகத்தியான்பள்ளி, திருவண்ணாமலை, திருவாலங்காடு, திருவரதைப்பெரும்பாழி, திருப்பழனம், திருப்பனந்தாள் திருப்பாதாளேச்சரம், திருப்பராய்த்துறை, திருப்பைஞ்ஞீலி, திருவன்பார்த்தான். பனங்காட்டூர், குளிர்ச்சிபொருந்திய சீகாழி, திருக்கடனாகைக்காரோணம் என்னும் இத் திருப்பதிகளினெல்லாம் கயிலாய நாதனாகிய இறைவனைக் கண்டு தொழுதலாகும் **என்றவாறு.**

வேங்கூர்: இஃது ஆளுடைய நம்பிகள் ஊர்த்தொகையில் ௬ ஆம் திருப்பாட்டில் வந்துளது. அரதைப் பெரும்பாழி - அரித்

துவாரமங்கலம் என வழங்குகின்றது. பாதாளம் - பாமணி, பாம்பணி என வழங்கும். நாகைக்காரோணம் - நாகப்பட்டினம். ஆதிசேடன் வழிபட்ட காரணத்தால் நாகை எனவும், புண்டரீகமுனிவர் இறைவனது திருமேனியில் ஆரோகணமான காரணத்தால் (காய ஆரோகணம்) காரோணம் எனவும் ஆயது. திருவீழிமிழலை, திருவெண்காடு, திருவேதிகுடி, திருவிசயமங்கை, திருவியலூர், திருவகத்தியான்பள்ளி, திருவாரதைப்பெரும்பாழி, திருப்பழனம், திருப்பனந்தாள், திருப்பாதாளேச்சரம், திருப்பராய்த்துறை, திருப்பைஞ்ஞீலி, திருக்கடவூரைக்காரோணம் இவை சோழநாட்டுத் தலங்கள். திருவண்ணாமலை, திருவாலங்காடு, திருவன்பார்த்தான் பனங்காட்டூர் இவை தொண்டைநாட்டுத் தலங்கள். வேங்கூர் வைப்புத்தலம். (எ)

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஓத்தூர்
உருத்திர கோடி மறைக்காட் டுள்ளும்
மஞ்சார் பொதியின் மலைதஞ்சை வழுவூர்
வீரட்ட மாதானம் கேதா ரத்தும்
வெஞ்சமாக் கூடன்மீ யச்சூர் வைகா
வேதீச்சுரம் விவீசுரம் வெற்றி யூரும்
கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக் கையும்
கயிலாய நாதனையே காண லாமே.

(பொ - ரை.) திருவுஞ்சேனை மாகாளம், திருவூறல், திருவோத்தூர், திருவுருத்திரகோடி, திருமறைக்காடு, மேகந்தவழும் திருப்பொதியில், தஞ்சை இராசராசேச்சரம், திருவழுவூர் வீரட்டானம், மாதானம், திருக்கேதாரம், திருவெஞ்சமாக்கூடல், திருமீயச்சூர், திருவைகாவூர், திருவேதீச்சுரம், திருவிவீசுரம், திருவெற்றியூர், திருக்கஞ்சனூர், திருக்கஞ்சாறு, திருப்பஞ்சாக்கை என்னும் இத்திருப்பதிகளிலெல்லாம் கயிலாயநாதனாகிய இறைவனைக் கண்டு தொழுதலாகும் என்றவாறு.

உஞ்சேனைமாகாளம்: இஃது ஆளுடைய பிள்ளையார் திருக்ஷேத்திரக்கோவையில் கூறும் திருப்பாட்டிற் கூறபட்டமை காண்க. ஊறல் - தக்கோலம். உருத்திரகோடி - கோடி உருத்திரர் வழிபட்ட காரணத்தால் இப்பெயரெய்தியது. இது திருக்கழுக்குன்றத்தில் உள்ளது. மறைக்காடு-வேதாரணியம். பொதியில் - அகத்திய முனிவர் வாழ்வது. தஞ்சை-செருத்துணை நாயனார் பிறந்த இடம். இஃது ஆளுடைய நம்பிகள் திருநாட்டுத்

தொகை ௬ஆம் திருப்பாட்டினும், திருத்தொண்டத்தொகை ௬ஆம் திருப்பாட்டினும், கருவூர்த்தேவர் திருவிசைப்பாவினும், திருத்தொண்டர் புராணம் செருத்துணை நாயனார் புராணத்தும் கூறப்பெறுவது காண்க. வெற்றியூர் - வாகீசர் பாவநாசத் திருப்பதிகம் ௪ஆம் திருப்பாட்டிற் காண்க. சயபுரம் எனவும் பேசப்பெறும். இதற்குத் தேவகோட்டை திரு. சின்னையச்செட்டியார் அவர்கள் புராணம் பாடியுள்ளார்கள். கஞ்சனூர் - கம்சபுரம். கஞ்சாறு - மானக்கஞ்சாறநாயனார் திருப்பிறப்புத் தலம். திருத்தொண்டர் புராணம் மானக்கஞ்சாறநாயனார் புராணத்திற் காண்க. திருஊறல், திருவோத்தூர் இவை தொண்டைநாட்டுத் தலங்கள்; திருமறைக்காடு, திருமீயச்சூர், திருவைகாவூர், திருக்கஞ்சனூர் இவை சோழநாட்டுத் தலங்கள்; திருவெஞ்சமாக்கூடல், கொங்குநாட்டுத்தலம்; திருக்கேதாரம் வடநாட்டுத்தலம்; உஞ்சேனை மாகாளம், உருத்திரகோடி, பொதியின்மலை, தஞ்சை, வழுவூர் வீரட்டானம், மாதானம், வேதீச்சரம், விவீச்சரம், வெற்றியூர், கஞ்சாறு, பஞ்சாக்கை இவை வைப்புத் தலங்கள். (அ)

திண்டீச்சரஞ் சேய்ஞலூர் செம்பொன் பள்ளி
தேவூர் சிரபுரம் சிற்றேமம் சேறை
கொண்டீச் சரம்கூந்த லூர்கூழை யூர்கூடல்
குருகாவூர் வெள்ளடை குமரி கொங்கு
அண்டர் தொழும்அதிகை வீரட் டானம்
ஐயா றசோகந்தி ஆமாத் தூரும்
கண்டியூர் வீரட்டம் கருகா வூரும்
கயிலாய நாதனையே காண லாமே.

(பொ - ரை.) திண்டீச்சரம், திருச்சேய்ஞலூர், திருச்செம்பொன்பள்ளி, திருத்தேவூர், திருச்சிரபுரம், திருச்சிற்றேமம், திருச்சேறை, திருக்கொண்டீச்சரம், திருக்கூந்தலூர், திருக்கூழையூர், திருக்கூடலாலவாய், திருக்குருகாவூர்த் திருவெள்ளடை, குமரி, கொங்கு, தேவர்தொழுகின்ற திருவதிகை வீரட்டானம், திருவையாறு, திருவசோகந்தி, திருவாமாத்தூர், திருக்கண்டியூர் வீரட்டானம், திருக்கருகாவூர் என்னும் இத் திருப்பதிகளிலெல்லாம் கயிலாய நாதனாகிய இறைவனைக்கண்டு கும்பிடலாம் என்றவாறு.

திண்டீச்சரம்-திருவதிகைக் காப்புத் திருத்தாண்டகம் ௮ஆம் திருப்பாட்டிற் காண்க. சிரபுரம் - சீகாழி. சயிடிகேயன் என்

னும் அசுரன் வேற்றுருவாய்த் தேவருடன் இருந்து அமுதுண்ட காலையில் சூரியனாற் காட்டப்பெற்று விட்டுணுவால் இரு கூறு கத் துணிக்கப்பட வெட்டுண்ட தலைக்கூறாகிய இராகு பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது. காளம் உடைய பாம்பு வழிபட்டமையால் காளி எனற்பாலது காழி என்று திரிந்ததென்க. திருச்சிற்றேமம்: இஃது இப்போது சிற்றாய் மூர், சிற்றாம்பூர், எழிதூர்நேமம் எனப் பலவாறு வழங்குகின்றது. திருக்குருகாவூர்த் திருவெள்ளடை, வெள்விடை வெள்ளடை என மருவிற்று என்ப. ஈண்டு எழுந்தருளிய இறைவனுக்கு வெள்விடைநாதர் எனப் பெயருண்மையுங் கூறப்பெறும். குமரி, கொங்கு இவை தற்போது மிக்க தூரத்தே ஒன்றை ஒன்று விலகி உள்ள நாடுகளாக இருப்பினும் முற்காலத்து அவ்வாறு இருந்தன அன்று என அறியப்பெறும். இங்கன்றி மற்றும் பாவநாசத் திருப்பதிகம்முதலிய பிறவிடத்தும் "கங்கையாடிலென், கொங்கு தண்குமரித்துறை யாடிலென்" என இவை ஒருசேர உரைத் திருப்பது காண்க, "காவிரிகவிழ்த்த கொங்கும்" அருந்தமிழ்க் குரவுபூண்ட தேசிகனை அகத்தியன் எழுந்தருளிய பொதியிலும் ஒரு பெரிய மலைத்தொடரின் உள்ளனவாய்க் குமரிநாடு முற் காலத்து மிக்க பரப்பினையுடையதாகக் காணும் எனக்கூறுவது நினைவுகூரற்பாலது. அதிகை வீரட்டானம் முப்புரமெரித்த தலமாதல் பற்றி அவ்வவுணரால் மிக்க இடருற்று ஒடுங்கியிருந்த தேவர் நன்றிபாராட்டிப் பலகாலும் வந்து தொழுந்தன்மையதா தலின் "அண்டர் தொழும்" எனக் கூறலாயிற்று. அசோகந்தி - இது திருவதிகைக் காப்புத் திருத்தாண்டகத்தும் ௧0 ஆம் திருப் பாட்டில் "அந்தண்பொழில் புடைசூழயோகந்தி" என வுரைத் திருப்பது காண்க. சேய்ஞலூர், செம்பொன் பள்ளி, தேனூர், சிரபுரம், சிற்றேமம், சேறை, கொண்டீச்சரம், குருகாவூர், ஐயாறு, கண்டியூர், கருகாவூர், இவை சோழநாட்டுத் தலங்கள்; கூடல் பாண்டியநாட்டுத் தலம்; அதிகை வீரட்டானம், ஆமாத் தூர், நடுநாட்டுத் தலங்கள்: திண்டீச்சரம், கூந்தலூர், கூழையூர், குமரி, கொங்கு, அசோகந்தி வைப்புத்தலங்கள். (௬

நறையூரிற் சித்தீச் சரநள் ளாறு
நாரையூர் நாகேச் சரநல்லூர் நல்ல
துறையூர் சோற்றுத் துறைசூல மங்கை
தோணி புரம்துருத்தி சோமீச் சரம்
உறையூர் கடலொற்றி யூர்ஊற் றத்தூர்
ஓமாம் புலியூரோர் ஏட கத்தும்

கறையூர் கருப்பறியல் கன்றாப் பூரும்
கயிலாய நாதனையே காண லாமே.

(பொ - ரை.) திருநறையூர்ச் சித்தீச்சரம், திருநள்ளாறு திருநாரையூர், திருநாகேச்சரம், திருநல்லூர், நன்மை மிக்க திருத்துறையூர், திருச்சோற்றுத்துறை, மூலமங்கை, திருத்தோணிபுரம், திருத்துருத்தி, சோமீச்சரம், உறையூர், கடல் சூழ்ந்த திருவொற்றியூர், ஊற்றத்தூர், திருவோமாம்புலியூர், ஒப்பற்ற திருவேடகம், கறையூர், திருக்கருப்பறியலூர், திருக்கன்றாப்பூர் ஆகிய இத் திருப்பதிகளிலெல்லாம் கயிலாய நாதனாகிய இறைவனைக் கண்டு வணங்கலாகும் என்றவாறு.

நறையூர் - ஊர்ப்பெயர்; சித்தீச்சரம் ஆலயம். நள்ளாறு - நளன் பூசித்துத் தன்னைப்பற்றிய சனித்தொடரினின்றும் நீங்கிய தலம். ''வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி, நளன் கெழுவி நாளும் வழிபாடுசெய் நள்ளாறே'' என்னும் தேவாரம் இதனை யறிவித்தலறிக. உறையூர் - திருமூக்கீச்சரம்: இது சோழர் தலைநகர் ஐந்தனுள் ஒன்று; பராந்தகச் சோழன் காலத்து மண்மாரி பெய்து அழிவெய்திக் கரிகால் வளவன் காலத்து மீண்டும் புதுக்கப்பெற்றதாகப் புராணம் கூறும். ஊற்றத்தூர் - இஃது அடைவு திருத்தாண்டகம் ௬ஆந் திருப்பாட்டிலும் கூறப்பெற்றுளது; கறையூர்-திருப்பாண்டிக்கொடுமுடி, சுந்தரமூர்த்தி நாயனார் நமச்சிவாயத் திருப்பதிகம் காண்க. கருப்பறியலூர்-இது மேலைக் காழி எனவும், தலைஞாயிறு எனவும் வழங்கப்பெறும்; இவ்வாலயம் கொகுடிக்கோயில். நறையூரிற் சித்தீச்சரம், நள்ளாறு, நாரையூர், நாகேச்சரம், நல்லூர், சோற்றுத்துறை, தோணிபுரம், துருத்தி, உறையூர், ஓமாம்புலியூர், கருப்பறியலூர், கன்றாப்பூர் இவை சோழநாட்டுத் தலங்கள்: துறையூர் நடுநாட்டுத்தலம்; திருவொற்றியூர் தொண்டைநாட்டுத் தலம்; ஏடகம் பாண்டி நாட்டுத் தலம்; கறையூர் - கொங்குநாட்டுத்தலம்; சூலமங்கை, சோமீச்சரம், ஊற்றத்தூர் வைப்புத்தலங்கள். (௧0)

புலிவலம் புத்தூர் புகலூர் புன்னர்
புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்
வலிவலம் மாற்பேறு வாய்மூர் வைகல்
வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி
நிலமலிநெய்த் தானத்தோ டெத்தா னத்தும்
நிலவுபெருங் கோயில்பல கண்டால் தொண்டீர்

கலிவலிமிக் கோனைக்கால் விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காண லாமே.

(பொ-ரை.) திருப்புலிவலம், திருப்புத்தூர், திருப்புகலூர், திருப்புன்கூர், திருப்புறம்பயம், திருப்பூவணம், பொய்கை, திருநல்லூர், திருவலிவலம், திருமாற்பேறு, திருவாய்மூர், திருவைகல், திருவலஞ்சுழி, திருவாஞ்சியம், திருமருகல், வன்னி, நிலவுலகத்து மிக்க திருநெய்த்தானம் ஆகிய இவைகளோடும் மற்றும் பிற எந்த இடத்தும் விளங்குகின்ற பல பெரிய கோயில்களைக் கண்டால், தொண்டர்களே, அவைகளில், பாவமும் வலியும் மிக்க இராவணனைக் கால்விரலாற் செற்று வென்ற கயிலாய நாதனாகிய இறைவனைக் கண்டு வணங்கலாகும் என்றவாறு.

புலிவலம் - இஃது ஈண்டும் பிறவிடத்தும் பாண்டிநாட்டுத் தலத்தோடு சேர்த்துக் கூறப்பெறுதலால் அந்நாட்டுத் தலங்களுள் ஒன்றெனக் கருதப்பெறும் போலும். இதனைத் திருவெண்காட்டடிகள் திருவேகம்பமுடையார் திருவந்தாதி ௨௩-ஆந் திருப்பாட்டும் திருவீழிமிழலைத் திருத்தாண்டகம் ௮-ஆந் திருப்பாட்டும் கூறுதல் காண்க. பொய்கை - இது திருப்புறம்பயத் திருத்தாண்டகம் ௮-ஆந் திருப்பாட்டில் "குடமூக்கி லங்கொழியக் குளிர்தண் பொய்கை நல்லானை நல்லூரே தவிரேனென்று" என்று கூறப்பெறும். வைகல் - திருவைகன் மாடக்கோயில் - வைகல் இதன் மேற்றிசையிலுள்ள மாடக்கோயில் என்னும் இரண்டாலயங்கள் ஒன்று சேர்த்துப் பாடப்பெற்றிருத்தலின் இப்பெயரெய்தியது; கோச்செங்கட் சோழநாயனார் முன்னைப்பிறவியிற்கொண்ட யானைப்பகையினால் யானைபுகாதபடி கட்டிய பெருங்கோயில். மலைக்கோயில் என வழங்கும் மாடக்கோயில்கள் எழுபத்தெட்டனுள் ஒன்று; இவைகளையெல்லாம் "வையக மகிழ்தர வைகன் மேற்றிசைச், செய்யகண் வளவன்முன் செய்த கோயிலே" எனவும், "வம்பியல் சோலைசூழ் வைகன் மேற்றிசைச், செம்பியன் கோச்செங்கணான்செய் கோயிலே" எனவும் "பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும், பெருங்கோயி லெழுபதினோ டெட்டு மற்றும்" எனவும் வரும் தேவாரங்களால் அறிக. வன்னி - இது சோழநாட்டில் திருவீழிமிழலைக்கும் திருக்கருவிலிக்கும் இடையிலுள்ளதாகிய வன்னியூர்போலும். இறைவன் ஒருவனே எத்தேவு மேத்தும் முழுமுதற் றலைவனாகலின் அவன் ஒருவனையே நான்முகன், திருமால், இந்திரன், சந்திரன் முதலிய எல்லாத் தேவர்களும் தொழுது இருத்திய திருக்கோயில்கள் யாண்டும் இடையறாது நிலவுதலின் "எத்தானத்தும் நிலவுபெருங் கோயில்பல கண்டால்" எனவும் கூறியதென்பதறியப்படும். இப்பெற்றியை எல்லாம்,

"பதியான பாசம் தன்னில் பட்டுழல் பசுநாம் என்றே
விதியோடு மறைகள் கூறு மெய்ம்மையைத் தெளிய வேண்
இதுவென உரைப்பன் யாங்கள்இவ்வரா சியற்ற ஈசன்[டின்
அதிர்கழல் அருச்சித் தேத்தும் ஆலயம் பலவும் காண்டி"

எனவும்,

"அவனருள் பெறாது முத்தி அடைந்தனர் இல்லை அல்லால்
அவனரு ளின்றி வாழும் அமரரும் யாரு மில்லை
அவனருள் எய்தின் எய்தா அரும்பொரு ளில்லை ஆணை
அவனல திறைவ னில்லை அவனைநீ அடைதி என்றான்"

எனவும், தக்கனுக்கு நான்முகன் அறிவுறுத்தும் கந்தபுராணத் திரு விருத்தங்களால் கண்டு தெளிக. புத்தூர், பூவணம் இவை பாண்டிநாட்டுத் தலங்கள்; புகலூர், புன்கூர், புறம்பயம், நல்லூர், வலிவலம், வாய்மூர், வைகல், வலஞ்சுழி, வாஞ்சியம், மருகல், நெய்த்தானம் இவை சோழநாட்டுத் தலங்கள்; மாற்பேறு தொண்டை நாட்டுத்தலம்; புலிவலம், பொய்கை, வன்னி, வைப்புத்தலங்கள். (கக)

திருச்சிற்றம்பலம்

# சுந்தரமூர்த்திநாயனர்

## ஊர்த்தொகை

---

### பண்—பழம்பஞ்சுரம்

கோயிற்றிறம்

திருச்சிற்றம்பலம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே
　　கானப் பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூர் அரசே
　　கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய்
　　பனங்காட் டூரானே
மாட்டூர் அறவா மறவா துன்னைப்
　　பாடப் பணியாயே.

(ப - ரை.) காட்டூர் - காட்டூரில் எழுந்தருளிய, கடலே - கருணைக் கடலே, கடம்பூர் - கடம்பூரில் வீற்றிருக்கும், மலையே - குணக்குன்றமே, கானப்பேரூராய் - திருக்கானப்பேரூரில் எழுந்தருளியுள்ளவரே, கோட்டூர் - திருக்கோட்டூரில் வீற்றிருக்கும், கொழுந்தே-கொழுந்தீசரே, அழுந்தூர் - திருவழுந்தூரி லுள்ள, அரசே - அரசரே, கொழுநல் - கொழுத்த நல்ல, கொல்லேறே - பகைவரைக் கொல்லுகின்ற ஏறு போன்றவரே, பாட்டூர் - பாட்டிறைற் புகழ்ந்து பேசும் ஊர்களில், பலரும் - பலராலும், பரவப்படுவாய் - துதிக்கப் பெறுகின்றவரே, பனங்காட்டூரானே- திருப்பனங்காட்டூரில் வீற்றிருப்பவரே, மாட்டூர் - இடபத்தை ஊர்ந்தருளுகின்ற, அறவா - அறத்தின் வடிவினரே, உன்னை - கடவுளாகிய உம்மை, மறவாது - மறவாமல், பாட - பாடுமாறு, பணியாய் - பணித்தருள்வீராக என்றவாறு.

கடம்பூர் : இது மேலைக் கடம்பூர் என வழங்கும். கானப்பேர்- காளையார் கோவில். கோட்டூரில் இறைவன் கொழுந்தீசர் எனப்படுவார். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரும் திருப்பாட்டுத்தோறும்

"கோட்டூர் நற்கொழுந்தே யென்றெழுவார்கள்" எனக்கூறுமாறு காண்க. பாட்டூர் - பதிகம் பெற்ற தலங்களுமாம். பனங் காட்டூர் - வன்பார்த்தான் பனங்காட்டூர். கடம்பூர், கோட்டூர், அழுந்தூர் இவை சோழநாட்டுத் தலங்கள்; கானப்பேர் பாண்டிநாட்டுத் தலம்; பனங்காட்டூர் தொண்டைநாட்டுத்தலம்; காட்டூர் வைப்புத் தலம். (க)

கோங்கில் குறும்பில் குரக்குத்
தளியாய் குழகா குற்றாலா
மங்குல் திரிவாய் வானோர்
தலைவா வாய்மூர் மணவாளா
சங்கக் குழையார் செவியா
அழகா அவியா அனலேந்திக்
கங்குல் புறங்காட் டாடீ
அடியார் கவலை களையாயே.

(ப - ரை.) கொங்கில் - கொங்குநாட்டில், குறும்பில்- குறும்பூரிலுள்ள, குரக்குத்தளியாய் - குரக்குத்தளியை யுடைய யவரே, குழகா - குழகரே, குற்றாலா - திருக்குற்றாலத்தையுடையவரே, மங்குல் திரிவாய் - மேகத்திற் சஞ்சரிப்பவரே, வானோர் தலைவா - தேவர்கள் தலைவரே, வாய்மூர் - திருவாய்மூரில் வீற்றிருக்கும், மணவாளா - மணவாளரே, சங்கம் குழை ஆர்-சங்கக் குழையணிந்த, செவியா - திருச்செவியையுடையவரே, அழகா - அழகரே, அவியா - கெடாத, அனல் ஏந்தி - தீயேந்தி, கங்குல்- இரவில், புறங்காட்டு ஆடி - புறங்காட்டில் ஆடுபவரே, அடியார் கவலை - அடியவர்களது துன்பத்தை; களையாய் - விலக்கியருள் வீராக என்றவாறு.

குறும்பு - பாலைநிலத்துச் சிற்றூர். குரக்குத்தளி - குரங்கு பூசித்து வழிபட்ட கோயில். குரங்கு - அனுமான். குழகு - அழகு. மங்குல் திரிவாய் - முன்னோர் ஊழியில் இந்திரன் மேக உருவமாக இறைவனைத் தாங்கித் திரிந்து அருள்பெற்றனன் என்பதும், அக் கற்பமே 'மேகவான கற்பமெனப் பெயர்பெறும் என்பதும் புராணம். திருவாய்மூரிலும் அப்பமூர்த்திக்கும் சம்பந்தமூர்த்திக்கும் மறைக்காட்டு மணாளர் காட்சிகொடுத்த தனாலும் அத்திருவுருவம் இன்றும் ஆண்டுக் காணப்பெறுமாதலானும் 'வாய்மூர் மணவாளா' என்றாரென்க. அவியா அனல்- கெடாத நெருப்பு. இதுவே மாப்பிரளயந்தோறும் எல்லா உலகங்களையும் சுட்டெரிப்பதென்க. இதனை,

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமதாய்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என்னுந் திருவாக்கிற் காண்க. கங்குலிற் புறங்காட்டாடுதலை "நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே" என்னும் திருவாசகத்தானும் அறிக. நள்ளிருள் - மாப்பேரூழிப் பேரிருள். குற்றாலம்-பாண்டியநாட்டுத்தலம். வாய்மூர்-சோழநாட்டுத்தலம். குரக்குத்தளி - வைப்புத்தலம். (உ)

நிறைக்காட் டானே நெஞ்சத்
தானே நின்றி யூரானே
மிறைக்காட் டானே புனல்சேர்
சடையாய் அனல்சேர் கையானே
மறைக்காட் டானே திருமாந்
துறையாய் மாகோ ணத்தானே
இறைக்காட் டாயே எங்கட்
குன்னை எம்மான் தம்மானே.

(ப - ரை.) நிறைக்காட்டானே - நிறைக்காட்டில் எழுந்தருளியவரே, நெஞ்சத்தானே - அடியவரது மனக்கோயிலில் வீற்றிருப்பவரே, நின்றியூரானே - திருநின்றியூரில் வீற்றிருப்பவரே, மிறைக்காட்டானே - கறைக்காட்டை யுடையவரே, புனல்சேர் சடையாய் - நீர் பொருந்திய சடையை யுடையவரே, அனல்சேர் கையானே - தீ சேர்ந்த கையை யுடையவரே, மறைக்காட்டானே - திருமறைக்காட்டை யுடையவரே, திருமாந்துறையாய் - திருமாந்துறையிலெழுந்தருளியவரே, மாகோணத்தானே- சிறந்த கோணமாமலையை யுடையவரே, எம்மான் - எம்பெருமானே, தம்மானே - தம்பிரானே, உன்னை - உம்மை, எங்கட்கு- எளியோங்களுக்கு, இறைக்காட்டாய் - சிறிதுகாட்டி யருள்வீராக என்றவாறு.

நெஞ்சத்தான் - "நினைப்பவர் மனங் கோயிலாகக் கொண்டவன்" என்னுந் திருவாக்குக் காண்க. திருமாந்துறை - வடகரை மாந்துறை; திருவானைக்காவிற்கு வடகிழக்கே யுள்ளது; மருத்துவர் பூசித்த தலம். திருமங்கலக் குடிக்கு அணித்தாய் மற்றொரு மாந்துறை உள்ளது; இது தென்கரை மாந்துறை.

இதுவும் திருத்தொண்டர் புராணத்துட் கூறப்பெறும். மாகோணம் - திருக்கோணமலை. தம்மான் - தமக்கு வேறொரு தலைவனில்லாத இறைவன்; தான்றோன்றித் தம்பிரான். இறைக்காட்டாய் - இறைவன் தன்னைத்தானே தன் திருவடி ஞானத்தைக் கொடுத்துக்காட்டி யருளினாலன்றி உயிர்கள் காணப்பெறுதல் இல்லையாதலின் சிறிது காட்டியருள வேண்டுமென்னும் வேண்டுகோள் எழுந்தது என்க. நின்றியூர், மறைக்காடு, திருமாந்துறை சோழநாட்டுத் தலங்கள். மாகோணம் ஈழநாட்டுத் தலம். நிறைக்காடு, மிறைக்காடு வைப்புத் தலங்கள். (௫)

ஆரூர் அத்தா ஐயாற்
றமுதே அளப்பூர் அம்மானே
காரூர் பொழில்கள் புடைசூழ்
புறவிற் கருகா வூரானே
பேரூர் உறைவாய் பட்டிப்
பெருமான் பிறவா நெறியானே
பாரூர் பலரும் பரவப்
படுவாய் பாசூர் அம்மானே.

(ப - ரை.) ஆரூர் - திருவாரூரில் எழுந்தருளியுள்ள, அத்தா - கடவுளே, ஐயாற்று - திருவையாற்றிலுள்ள, அமுதே - அமுதமானவரே, அளப்பூர் அம்மானே - அளப்பூரில் உள்ள தந்தையே, கார் ஊர் - மேகம் தவழ்கின்ற, பொழில்கள் புடைசூழ் - சோலைகள் பக்கங்களில் சூழப்பெற்ற, புறவில் - முல்லை நிலத்துள்ள, கருகாவூரானே - திருக்கருகாவூரை உடையவரே, பேரூர் உறைவாய் - திருப்பேரூரில் உறைவீராகிய, பட்டிப் பெருமான் - பட்டீச்சுரரே, பிறவாநெறியானே - பிறவாத நெறியாகிய வீடுபேற்று நெறியை உடையவரே, பார் ஊர் - உலகத்துள்ள, பலரும் - பலராலும், பரவப்படுவாய் - வழிபடப் பெறுபவரே, பாசூர் அம்மானே - திருப்பாசூரில் எழுந்தருளிய தலைவரே என்றவாறு.

கார் ஊர் - கருநிறம் பொருந்திய என்றுமாம். பேரூர் - மேலைச்சிதம்பரம்; இங்கு எழுந்தருளிய இறைவன் காமதேனுவாகிய தெய்வப் பசுவினால் வழிபடப் பெற்ற காரணத்தால் பட்டிப் பெருமான் எனப் பெற்றார். இதனை,

'காம தேனுபுர மென்ன விந்நகரி காம மல்குபெயர் கொள்ளவும்
நேம முந்தரவின் வைக லானரசி னீடுசூழலிது பட்டியென்
றேம மேவவு நமக்குப்பெயர்மு றட்டி நாதனென ஓதவும்
ஏமமா ருலகம் முற்றும் இன்பமுற ஈண்டு னக்குவர மாக்கினம்'

என்னும் பேரூர்ப் புராணம் குழகன் குளப்புச்சுவடுற்ற படலம் க0சு-ஆவது செய்யுளானறிக. ஈண்டுக் கண்ட இறைவனது திருக் கூத்தினை நம்பியாரூரர் திருக்கோயிலிலே மீண்டும் கண்டு திளைத்து "ஆரூரன் மீகொங்கி லணிகாஞ்சிவாய்ப் பேரூர் பெரு மானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே" என்று பாடி யருளினாரென்க. அளப்பூர்-இதனைத் திருவதிகைக் காப்புத் திருத் தாண்டகம், கஉ ஆந் திருப்பாட்டினும் காண்க. ஆரூர், திருவை யாறு, கருகாவூர் இவை சோழநாட்டுத்தலங்கள்; பாசூர் தொண்டை நாட்டுத்தலம்; அடப்பூர், பேரூர் வைப்புத் தலங்கள். (௪)

மருகல் உறைவாய் மாகா
　　ளத்தாய் மதியஞ் சடையானே
அருகற் பிணிநின் அடியார்
　　மேல அகல அருளாயே
கருகற் குரலாய் வெண்ணிக்
　　கரும்பே கானூர்க் கட்டியே
பருகப் பணியாய் அடியார்க்
　　குன்னைப் பவளப் படியானே.

(ப - ரை.) மருகல் உறைவாய் - திருமருகலில் உறைப வரே, மாகாளத்தாய் - மாகாளத்தை உடையவரே, மதியம் சடையானே - பிறையணிந்த அழகிய சடையை உடையவரே, அருகல் - ஒருங்குதற்குரிய, பிணி - நோய்கள், நின் அடியார் மேல் - தேவரீரின் அடியவர்கள் மேல் உள்ளனவற்றை, அகல - ஒழியும்படி, அருளாய் - அருள்புரிவீராக, கருகல் குரலாய் - கரிய திருமிடற்றை யுடையவரே, வெண்ணிக்கரும்பே - வெண்ணியில் உறையும் கரும்பானவரே, கானூர் கட்டியே - கானூரில் எழுந் தருளிய பவளம்போன்ற திருமேனியை யுடையவரே, அடி யார்க்கு - அடியவர்க்கு, உன்னை - தேவரீரை, பருகப் பணியாய்- பருகுமாறு பணித்தருள்வீராக என்றவாறு.

மாகாளம்-அம்பர்மாகாளம், இரும்பைமாகாளம், உஞ்சேனை மாகாளம் என மூன்று உள்ளவற்றுள் மருகல் முன்னர்க் கூறிய காரணத்தால் அம்பர் மாகாளம் கொள்ளுதல் கூடும். எது கொள் ளினும் இழுக்காதென்க. அருகல் - சாதலுமாம். அடியார்மேல் அருகற்பிணி எனக் கூட்டி யுரைத்துக்கொள்க. கருகல் குரல்-நீல கண்டம். வெண்ணிக் கரும்பு: வெண்ணிக் கோயில்; வெண்ணி என்று வழங்கப்பெறும். இங்குச் சுவாமியின் திருவுருவம் கருப்பங்

கழி போன்ற அடையாளங்களையுடையது. சுயம்புத் தோற்றத் தலம். வடமொழியில் இக்ஷுபுரி எனப்பெறும். இக்ஷு-கரும்பு. இது பற்றியே நாயனார் வெண்ணிக் கரும்பென்றதென்க. காணூர்க் கட்டி: அப்ப மூர்த்திகள் பாவநாசத் திருப்பதிகத்தில் "காணூர் முளைத்த கரும்பினை" என்று கூறுமாறும் காண்க. பருகுதல்-ஆர அனுபவித்தல். படி-உருவம், வடிவம். மருகல், மாகாளம், வெண்ணி, காணூர் என்னும் இவையனைத்தும் சோழநாட்டுத் தலங்கள். (ரு)

தாங்கூர் பிணிநின் றடியார்
மேல அகல அருளாயே
வேங்கூர் உறைவாய் விளமர்
நகராய் விடையார் கொடியானே
நாங்கூர் உறைவாய் தேங்கூர்
நகராய் நல்லூர் நம்பானே
பாங்கூர் பலிதேர் பரனே
பரமா பழனப் பதியானே.

**(ப - ரை.)** வேங்கூர் உறைவாய்-வேங்கூரில் வாழ்பவரே, விளமர் நகராய்-திருவிளமரை உடையவரே, விடையார் கொடியானே - இடபக்கொடியை உடையவரே, நாங்கூர் உறைவாய்-திருநாங்கூரில வசிப்பவரே, தேங்கூர் நகராய்-தேங்கூர் நகரை உடையவரே, நல்லூர் நம்பானே-திருநல்லூரில் எழுந்தருளிய நம்பரே, பாங்கு ஊர் பலிதேர் பரனே-அழகிய ஊர்கள் தோறும் சென்று பலியினைத் தேர்கின்ற மிக்கோரே, பரமா-பரமரே, பழனப் பதியானே-திருப்பழனப் பதியையுடையாரே, நின் அடியார் மேல்-தேவரீர் தம் அடியவர்கள் மேலனவாம், தாங்கூர் பிணி-தாங்கப் பெற்றுப் பரவுகின்ற பிணிகளை, அகல-விலகும்படி, அருளாய்-அருள்செய்யக் கடவீராக என்றவாறு.

தாங்குதல்-உடம்பால் தாங்கப் பெறுதல். ஊர்தல் - மேன் மேலும் மிகுதல். மேல-குறிப்பு; வினைப்பெயர். நம்பான்; நீட்டல் விகாரம். பாங்கு - பசுமையாகிய குடிகள் நிறைந்துள்ள வளம். தேர்தல் - வீடுகள் தோறும் சென்று யாசித்தல். இரத்தலினும் இழிந்தது பிறிதில்லை யெனினும் இறைவன் இரத்தல் அத்தன்மையதன்றாய் அவனது பரத்துவத்தைக் காட்டுமென்பார் 'பலி தேர் பரனே' என்றாரென்க. விளமர், நல்லூர், பழனம் சோழ நாட்டுத் தலங்கள்; வேங்கூர், நாங்கூர், தேங்கூர், வைப்புத்தலங் கள். (௬)

தேனைக் காவல் கொண்டு
விண்ட கொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு
நின்றார் அறியா நெறியானே
ஆனைக் காவில் அரனே
பரனே அண்ணா மலையானே
ஊனைக் காவல் கைவிட்
டுன்னை உகப்பார் உணர்வாரே.

(ப - ரை.) தேனைக் காவல்கொண்டு - தேனைத் தம்மிடத்துப் பொதிந்து வைத்துக்கொண்டு, விண்ட-மலர்ந்த, கொன்றை- கொன்றை மலர்களால் ஆகிய, செழுந்தாராய் - செழுமையாகிய மாலையை உடையவரே, வானைக் காவல்கொண்டு நின்றார்-விண்ணுலகைக் காத்துவாழ்கின்ற தேவர்களும், அறியாநெறியானே- அறியாத முத்திநெறியையுடையவரே, ஆனைக்காவில் - திருவானைக் காவில் எழுந்தருளிய, அரனே-ஆன்மாக்களது பிறவியை யொழித்தருள்கின்றவரே, பரனே - மேலானவரே, அண்ணாமலையானே-திருவண்ணாமலையை உடையவரே, ஊனைக்காவல்-உடம்பினைக்காத்தலை, கை விட்டு-ஒழிந்து, உன்னை உகப்பார்-தேவரீரையே விரும்புவார், உணர்வார்-தேவரீரைத் திருவருள் உணர்த்த உணர்வார்கள் என்றவாறு.

விள்ளல் - இதழ் விரிந்து அலர்தல். கொன்றைத்தார் - திருவடையாள மாலை. வான், ஊன்: ஆகுபெயர்கள். வானைக் காவல் கொண்டு நிற்றல் - கால ஒழுங்கில் அழிந்தொழிகின்ற விண்ணுலகையும் ஆண்டுளவாகிய இன்பங்களையும் பொருளென மதித்து அவற்றின் அனுபவத்தில் அழுந்திநிற்றல். அறியாநெறி - இத்தேவர்களும் இவர்களுள் தலையாய பிரமவிட்டுணுக்களும் சிவஞானங் கைவராது அதிகாரச் செருக்கினையுடையராய்த் தற்போதங் கொண்டு காண்பவராதலின் முத்திநெறி அவரால் அறியாநெறியாயிற்று. திருவண்ணாமலையினை ஈண்டுக் கூறியது இதனைக் குறிப்பித்தற்கே போலும். ஊனைக் காவல் கைவிடுதல்-பிணி, மூப்பு, சாக்காடு முதலிய பல துன்பங்கட்கும் கொள்கலமாகிய உடம்பினை அழிதன்மாலையதெனக்கண்டு அதனிற் பற்றொழிந்து நிற்றல். ஊனைக் காவல் கைவிட்டு உன்னை உகப்பார் எனவே ஊனைப் போற்றுதலாகிய புறப்பற்றும், தம்மையுகத்தலாகிய அகப்பற்றும் ஒழிந்து செம்பொருளாகிய சிவனைக் காணும் அறிவுடையாராகிய சிவஞானிகள் இங்கு உணர்த்தப்

பெற்றன ரென்க. உணர்வார்-உணர்வுடையார் எனினும் அமையும். ஈண்டுக்கூறிய பொருளை யெல்லாம் பிண்டமாகத் திரட்டிய வழி "நல்லசிவ தன்மத்தால், நல்லசிவ யோகத்தால், நல்ல சிவ ஞானத்தால் நானழிய-வல்லதனுல், ஆரேனு மன்புசெயி னங்கே தலைப்படுங்காண், ஆரேனுங் காணு வரன்" என்னும் திருவாக்கின் கருத்துச் சிந்தித்தால் காணப்பெறும். ஆனைக்கா-சோழநாட்டுத் தலம். அண்ணுமலை-நடுநாட்டுத்தலம். (எ)

துருத்திச் சுடரே நெய்த்தா
னத்தாய் சோல்லாய் கல்லாலா
பருத்தி நியமத் துறைவாய்
வெயிலாய்ப் பலவாய்க் காற்ருனாய்
திருத்தித் திருத்தி வந்தேன்
சிந்தை இடங்கோள் கயிலாயா
அருத்தித் துன்னை அடைந்தார்
வினைகள் அகல அருளாயே.

(ப - ரை.) துருத்திச் சுடரே-திருத்துருத்தியி லெழுந்தருளியுள்ள சோதியானவரே, நெய்த்தானத்தாய்-திருநெய்த்தானத்தையுடையவரே, சொல்லாய் கல்லாலா - வேதங்கள் ஆராய்ந்தறிகின்ற கல்லாலின் கீழ் எழுந்தருளி யிருப்பவரே, பருத்தி நியமத் துறைவாய்-திருப்பருதி நியமத்து எழுந்தருளி யிருப்பவரே, வெயில் ஆய்-பகலோனுகி, பலவாகி - பல பொருள்கள் ஆகி, காற்ருனாய்-அவையன்றிக் காற்றுமா யிருக்கின்றீர், திருத்தித்திருத்தி - பல முறையும் அறியாமை நீக்கித்திருத்தம் செய்து, வந்து-எழுந்தருளி வந்து, என் சிந்தை - என் உள்ளத்தை, இடம்கொள் - இடமாகக் கொண்ட, கயிலாயா - திருக்கயிலாய மலையினரே, அருத்தித்து-விரும்பி, உன்னை அடைந்தார் - தேவரீரைச் சரண் அடைந்தவர்களின், வினைகள் - தீவினைகள், அகல-நீங்குமாறு, அருளாய்-திருவருள் புரியக்கடவாய் என்றவாறு.

துருத்திச்சுடர் - அப்பமூர்த்தியும் இத் தலத்து எழுந்தருளியுள்ள இறைவனைத் தமது திருநேரிசையில் "துருத்தியஞ் சுடரினை" எனவும், "சோதியைத் துருத்தியானை" எனவுங் கூறுமாறு காண்க. சொல் - வேதத்திற்கு ஆகுபெயர். "பருதி நியமம்" எனற்பாலது "பருத்தி நியமம்" என எதுகை நோக்கித் திரிந்து நின்றது. வெயில்-சூரியன். திருத்தித் திருத்திச் சிந்தை இடங் கொள்ளல் - உயிர்கட்கு பசுபாச ஞானங்களைப் பொருளல்ல

வெனக் கழித்துச், சிவஞானத்தை அருளி அவ்வான்மாக்களிடத் துத் தன்னைக் காட்டி யருளுதல். அருத்தி - விருப்பம். அதனை யும் முன் போந்த கருத்தினையும்,

"உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளமன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே."

என்னும் திருவாசகத்தா னறிக. பருதிநியமம்-பருதியப்பர் கோயி லென வழங்கும் கதிரவன் வழிபட்ட தலம். துருத்தி, நெய்த் தானம், பருதிநியமம் இவை சோழநாட்டுத் தலங்கள். கயிலாயம்-வடநாட்டுத் தலம், மகா கயிலாயமுமாம். (அ)

புலியூர்ச் சிற்றம் பலத்தாய்
புகலூர்ப் போதா மூதூரா
பொலிசேர் புரமூன் றெரியச்
செற்ற புரிபுன் சடையானே
வலிசேர் அரக்கன் தடக்கை
யைஞ்ஞான் கடர்த்த மதிசூடீ
கலிசேர் புறவிற் கடவூ
ராளீ காண அருளாயே.

(ப - ரை.) புலியூர் - பெரும்பற்றப் புலியூரில் விளங்கும், சிற்றம் பலத்தாய் - திருச்சிற்றம்பலத்தை யுடையவரே, புகலூர்ப் போதா - திருப்புகலூரில் எழுந்தருளியுள்ள அறிவுருவானவரே, மூதூரா - மூதூரை உடையவரே, பொலிசேர்-விளக்கமுற்ற, புர மூன்று-புரங்கள் மூன்றும், எரிய-வெந்து சாம்பராகும்படி, செற்ற-சினந்த, புரி புன் சடையானே - முறுக்கிய புல்லிய சடையை யுடையவரே, வலி சேர் - வலிமை வாய்ந்த, அரக்கன் - இரா வணன்றன், தடக் கை - பெரிய கைகள், ஐஞ்ஞான்கு-இருபதை யும், அடர்த்த - நெரித்தருளிய, மதிசூடீ - பிறை சூடியவரே, கலிசேர் - ஒலிபொருந்திய, புறவில் - முல்லை நிலத்திலுள்ள, கடவூராளி - திருக்கடவூரை ஆள்பவரே, காண - தேவரீரை யான் காணும் வண்ணம், அருளாய் - அருள் செய்வீராக என்ற வாறு.

புலியூர்ச் சிற்றம்பலம் என்ற குறிப்பால் பெரும்பற்றப் புலி யூராயிற்று. பொலிசேர் புரம் - பொன் முதலிய உலோகங்களா

னமைந்து விளங்குதல். தில்லைச் சிற்றம்பலம், திருப்புகலூர், திருக்கடவூர் இவை சோழநாட்டுத் தலங்கள். மூதூர், வைப்புத் தலம். (௯)

கைம்மா உரிவை அம்மான்
காக்கும் பலவூர் கருத்துன்னி
மைம்மாந் தடங்கண் மதுர
மன்ன மொழியாள் மடச்சிங்கடி
தம்மான் ஊரன் சடையன்
சிறுவன் அடியன் தமிழ்மாலை
செம்மாந் திருந்து திருவாய்
திறப்பார் சிவலோ கத்தாரே.

(ப - ரை.) கைம்மா - யானையினது, உரிவை - தோலையுடைய, அம்மான் - இறைவன், காக்கும் - எழுந்தருளியுள்ள, பலவூர் - பல திருத்தலங்களையும், கருத்துன்னி - மனத்தில் நினைத்து, மை - மையீட்டிய, மா - மாவடுவகிர் அன்ன, தடம் - பெரிய, கண் - கண்களையும், மதுரமன்ன - தேன் போன்ற, மொழியாள் - மொழியையும் உடையவளாகிய, மடச்சிங்கடி - மடத்தினையுடைய சிங்கடியம்மையாரின், தம்மான் - அபிமான பிதாவும், சடையன் சிறுவன் - சடைய நாயனாரது புதல்வனும், அடியன் - அடித்தொண்டனும் ஆகிய, ஊரன் - நம்பியாரூரன் உரைத்த, தமிழ்மாலை - தமிழ்ப்பதிக மாலையை, செம்மாந்து இருந்து - இறுமாந்திருந்து, திருவாய் திறப்பார் - தமது திருவாயினைத் திறந்து ஓதுவோர், சிவலோகத்தார் - சிவலோகத்தை உடையவராவார் என்றவாறு.

கைம்மா - கையையுடைய விலங்கு, யானை. காத்தல் - ஆளுதல். உன்னி என்னும் எச்சம் இருந்து திறப்பார் என இயைந்து நின்றது. உன்னுதல் - ஒவ்வொன்றாக நினைத்துச் சிந்தித்தல். மா-மாவடுவின் பிளப்பு. இவ்வுவமையை, "மாவடுவகிரன்ன கண்ணிபங்கா" என்னும் திருவாசகத்தினுங் காண்க. மதுரம் - ஆகு பெயர். மதுரம் அன்ன என்பதற்கு சுவையே வடிவாய என்றும், மதுரம் மன் அம் எனப் பிரித்துச் சுவைநிலை பெற்ற அழகிய என்றும் கொள்ளலாம். மடம் - பெண்மைக் குணம். சிங்கடிதம்மான் : நம்பியாரூரர் திருநாட்டியத்தான் குடிக்கு எழுந்தருளியபோது ஆண்டு இவரை வழிபட்டுப் பேரன்பு காட்டிக் கோட்புலிநாயனார் தம்மில்லிற் கழைத்துக்கொண்டு சென்று வழிபட்டுத், தம் புதல்வியாகிய சிங்கடியார், வனப்

பகையார் என்னும் இருவரையும் குற்றேவல் புரியக்கொள்ளு மாறு வேண்டியபோது, அவ்விருவரையும் நாயனூர் தம் புதல்விய ராகக் கருதித் திருத்தொடையில் இருத்தி உச்சிமோந்து உகந் தருளித் தம்மை வனப்பகையப்பன், சிங்கடியப்பன் எனப் பதிகத்துவைத்துப் பாடும் நியமம் பூண்டமையின் இவ்வாறு கூறினரென்க. செம்மாந்திருத்தல் - தாம் பெற்ற பெரும் பேற்றை இவ்வாறு யார் பெற்ருரெனக் கருதி மதித்திருத்தல்.

இதனை வாகீசர் தமது திருவங்க மாலையில், "இறுமாந்திருப் பன்கொலோ, ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டுச், சிறுமானேந்தி தன் சேவடிக்கீழ்ச் சென்றங் கிறுமாந்திருப்பன்கொலோ" என உரைக்குமாற்ருனுங் காண்க. திருவாய் திறத்தல் - ஓதுதல். சிவலோகத்தார் : சிவலோகம் பெறுவர் என்று, ஓதுவோர் பலன் கூறியவாறு. எகாரம் : தேற்றேகாரம். (க0)

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்
# திருவெழுகூற்றிருக்கை

---

### சிவனுருவம்

*திருச்சிற்றம்பலம்*

ஓருரு ஆயினை மானாங் காரத்து
ஈரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகள் ஆயினை
இருவரோ டொருவன் ஆகி நின்றனை
ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமூன் றாகக் கோட்டினை
இருநதி அரவமோ டொருமதி சூடினை
ஒருதாள் ஈரயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை அறுத்தனை
ஐம்புல னாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்துமுப் பொழுதுகுறை முடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி

அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை
வரபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மேச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லைநீள் நிலத்தே.

(ப-ரை.) க. ஓர் உரு ஆயினை - தத்துவங்களெல்லாவற்றையுங் கடந்து சுட்டற நின்ற தேவரீரே, உயிர்களுக்கிரங்கி ஐந்தொழில்களையுஞ் செய்யத் தன்னிச்சையாகவே ஒரு திருமேனியை எடுத்துக் கொண்டீர்.

சொரூபம் தடத்தவடிவமாயிற்று என்பது கருத்து. இத் தடத்தமும் தன்னிச்சையால் நிகழ்ந்ததன்றிப் பிறர்வயப்பட்டு வந்ததன்றாம்.

க-ச. மான் ஆங்காரத்து ஈரியல்பாய் - சத்தியை எழுப்பி அதைக்கொண்டு சத்தி சிவம் என்னும் இரண்டுருவாய், *ஒரு - சத்தி சிவமென இரண்டாகப் பிரித்தறிய முடியாமல் வேறின்றியே நின்று, விண்முதல் பூதலம் ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும் - ஆகாய முதலாக நிலம் ஈறாகவுள்ள ஐம்பெரும் பூதங்களையும் பொருந்திய ஞாயிறு திங்கள் என்னும் இருசுடர்களையும், விண்ணுலகத் துள்ளவர்களாகிய தேவர்களையும், பிறவுயிர்களையும், படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை - படைத்தற் பொருட்டும், காத்தற் பொருட்டும், அழித்தற் பொருட்டும் பிரமா, விட்டுணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளாகவும் நிற்கின்றீர்.

மான் - சத்தி. ஆங்காரம் - அதன் எழுச்சி; அச் சத்தியைக் கொண்டே சத்தி சிவம் என்னும் இரண்டு திருவுருவாய் விளங்குகின்றீர் என்றபடி. திருமேனி சத்தி என்பதை, "காயமோ மாயை யன்று, காண்பது சத்தி தன்னால்" எனவும், "சத்திதன்னுருவே தென்னிற் றடையிலா ஞானமாகும்" எனவும் வரும் சிவஞான சித்தித் திருவாக்குகளா லறிக. சத்தியாங்காரத்து உருவம் எழுந்ததை,

"ஓங்காரி என்பாள் அவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்
ஆங்காரி ஆகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே இனிதிருந் தாளே."

என்னுந் திருமந்திரத்தா னறிக. தீயிற் சூடும், நீரில் தண்மையும் போலச் சத்தி சிவத்தினின்றும் வேறு பிரித்தறிய முடியாமல் தாதான்மியமாய் நிற்கும் இயல்பு கருத்தென்க.

ஈண்டு விண் முதல் பூதலம் எனவே ஐம்பெரும் பூதமும், இருசுடர் எனவே சூரிய சந்திரர்களும், உம்பர்கள் பிறவும் எனவே உயிர்களும் கூறப்பட்டன. இறைவன் எட்டுருவாகிய இவற்றுள் எல்லா வுலகமும் அடங்கி நிற்பது காண்க. ஐம்பெரும் பூதம் - மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன.

உடம்பிற் செய்யப்படும் முத்தொழில் கூறப்படவே இவ்வுடம்பகத்துள்ள உயிரிற் செய்யப்படும் மறைத்தல் அருளல் என்னும் ஏனை இருதொழிலும் கருதப்பட்டதென்க. மும்மூர்த்தி

---

* ஒரு என்பதை விண்ணுக்கு அடையாகவும் கூறலாம்.

கள் ஆயினை எனவே, துரியனாகிய இறைவனே குணதத்துவ நிலையர்களாகிய இவரை மேற்கொண்டு காரியஞ் செய்பவன் என்பது கருத்து. இவ்வாறன்றி இறைவனை மூவருள் ஒருவனாக வைத்தெண்ணுதல் உண்மைநூற் கருத்தாகாதென்க. இறைவன் எண்வகையாகிய எல்லா உலகுமாதலை, "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் யெறியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயி றாகி யாகாச மாயட்ட மூர்த்தி யாகி" என்னுந் திருத்தாண்டகத்தானும், இவற்றைப் படைத்தலாதிய செய்து தான் அவற்றில் வேறாயும் அவற்றோடு புணர்ந்தும் நிற்பதனை, "உரைசேரு மெண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனி பேதம், நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான் கோயில்" என வரும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்கானும், மும்மூர்த்திகளையும் இடமாகக் காரியஞ் செய்தலை, "அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான், அரனா யழிப்பவனுந் தானே" எனவரும் அற்புதந்திருவந்தாதியானும், மூவரோடுவைத்தெண்ணி அவருள் ஒருவனாகக் கருதுதல் உய்தியில் பெரும்பாவமென்பதனை, "நம் மவரவரே - மூவரென் றேயெம்பி ரானொடு மெண்ணிவிண் ணாண்டு மண்மேல் - தேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே" எனவரும் திருவாசகத்தானும் அறிக.

ரு. இருவரோடு ஒருவனாகி நின்றனை - பிரம விட்டுணுக்களைத் தேவரீரது திருமேனியின் வலப்பக்கத்தும் இடப்பக்கத்தும் தோற்றுவித்தும் ஒடுக்கிக் கொண்டும் அவ்விருவரோடு ஏகபாதத் திருமூர்த்தியாய் எழுந்தருளியும் இருக்கின்றீர்.

இச் சரித்திரத்தை எல்லாம் காஞ்சிப் புராணம் காயாரோகணப் படலத்தில் விரிவாய்க் கண்டு கொள்க. இறைவன் ஏகபாதனாய் இருத்தலை, "எழுலகு மாய்நின்ற ஏகபாதா" எனும் திருவெண்காட்டுத் திருத்தாண்டகம் கூறுமென்க.

ஓருருவாயினை, இருவரோ டொருவனாகி நின்றனை என்பவற்றிற்கு, "ஒருவனா யுலகேத்த நின்றநாளோ ஓருருவே மூவுருவமான நாளோ" என்னுந் திருத்தாண்டகக் கருத்தோடு பொருத்தியுங் கூறலாம்.

கூ-அ. ஓர் ஆல் நீழல் ஒண் கழல் இரண்டும்-(மகாகயிலாயத்தில்) ஒப்பற்ற (வேதவடிவமாகிய) கல்லால மரத்தின் நிழலில் எழுந்தருளியுள்ள தேவரீரது பரஞான வடிவினவாகிய இரண்டு திருவடிகளையும், முப்பொழுதேத்திய - காலை, நண்பகல், மாலை என்னும் மூன்று காலங்களினும் தொழுது வணங்கிய, நால்வர்க்கு - சனகர், சனற்குமாரர், சனாதனர், சனந்தனர் என்னும் நான்கு முனிவர்களுக்கும், ஒளி நெறி காட்டினை - சிவஞான

நெறியை உணர்த்தி யருளினீர். ஒட்பம் - அறிவு, ஈண்டுப் பரஞானம். திருவடி, ஞானவடிவின என்பதை,

"...............உத்தமர்க்கு
ஞானச் சுடராய் நடுவே யதிப்பன நங்கையஞ்ச
ஆனையு ரித்தன காண்கவை யாற னடித்தலமே"

எனவும்,

"ஓதிய ஞானமு ஞானப் பொருளு மொலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியு மாவன விண்ணுமண்ணும்
சோதியஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன தூமதியோ
டாதியு மந்தமு மானவை யாற னடித்தலமே."

எனவும் வருந் திருவையாற்றுத் திருவிருத்தங்களா லறிக. ஒளி நெறி-காரிட்ட ஆணவக் கருவறை யிருளை யோட்டிச் சிவத்தைக் காட்டும் சிவஞான நெறி. நீழலில் காட்டினை என்று கூட்டலும் பொருந்தும்.

அ. நாட்டம் மூன்றாகக் கோட்டினை - திருக்கண்கள் மூன்றாகக்கொண்டு புறவிருளை யோட்டி யருளினீர்.

ஆன்மாக்களது கண்ணொளி பூதவிருளானும் ஆன்மபோதம் ஆணவமல விருளானும் தகையப்பட்டுக் காணுமாறு இன்மையால் சூரிய சந்திராக்கினிகளாகிய முச்சுடர்களால் பூதவிருளையும் சிவஞானத்தால் ஆணவமல விருளையும் நீக்கி யுபகரிப்ப தவசியமாதலின், இறைவன் சூரிய சந்திர அக்கினிகளைத் தன் நேத்திரமாகக் கொண்டு புறவிருளை நீக்குதல் கூறப்பட்டது.

௯. இருநதி அரவமோடு ஒருமதி சூடினை - பெரிய கங்காநதியையும் பாம்பினையும் ஒப்பற்ற பிறைச்சந்திரனையும் சூடியருளினீர்.

கங்காநதி தரணியெல்லாம் பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாக ஆயிர முகத்தோடு வானினின்று செருக்கோடிழிந்தமையால் இருநதி யெனவும், சந்திரன் இறைவன் திருமுடியை யடைந்து என்றும் முதிராத நித்தத் தன்மை யடைந்துள்ளமையின் ஒருமதியெனவும் கூறியதென்றுணர்க.

௰-௰௨. ஒரு தாள் ஈர் அயில் மூஇலைச் சூலம் - ஒரு தாளையும் ஈருகின்ற கூர்மையையும் மூன்று இலையையும் உடைய சூலத்தையும், நாற்கால் மான்மறி - நான்கு கால்களையுடைய மான் கன்றினையும், ஐந்தலை யரவம் ஏந்தினை - ஐந்து தலையினையுடைய பெரிய பாம்பினையும் திருக்கைகளில் தரித்தருளினீர்.

சூலமேந்தியதைச்; "சூலப்படையுடையார் தாமே போலும்" எனவும், "வடிவேறு திரிசூலம் தோன்றுந் தோன்றும்" எனவும் வருந் தேவாரங்களா லறிக. மான்மறி, அரவம் இவை தாருகா வனத்து இருடிகள் அபிசாரயாகத்துச் சிருட்டித்து ஏவியவை, இறைவன் ஏந்திய சூலத்தலைகள் மும்மூர்த்தியுருவ மென்றும். மான் கால்கள் நான்கும் நான்கு வேதமென்றும், நாகத்தின் ஐந் தலைகளும் திருவைந்தெழுத்தென்றுங் கூறுப. நாகத்தலை ஐந் தெழுத்தாதலை 'தங்கரவின்படம் அஞ்சுந் தம்முடை, யங்கயி லைவிர லஞ்செழுத்துமே" என்னும் பஞ்சாக்கரத் திருப்பதிகத் திருப்பாட்டானறிக. மற்றையவற்றை வந்தவழிக் கண்டு கொள்க.

கஉ-கரு. காய்ந்த நால் வாய் மும்மதத்து - தன்னிழலைக் காயும் தொங்குகின்ற வாயையும், மும்மதங்களையும், இருகோட்டு ஒரு கரி-இரண்டு கொம்பினையும் உடைய ஒப்பில்லாத யானையை, ஈடழித்து உரித்தனை - வலியைக் கெடுத்து அதன் தோலை உரித்துப் போர்த்தருளினை.

காய்ந்த கரி எனக் கூட்டுக. மும்மதம்-கன்னம், கபோலம், பீசம் என்னும் மூவிடத்துந் தோன்றுவதாய மதம். ஒரு கரி-கயாசுரன். சரித்திரம் முன்னர்க் காண்க. "போர்த்தா யங்கொ ரானையி னீருரி தோல்" என்னுந் திருவாக்குக் காண்க.

கசு-கசு. ஒரு தனு-ஒப்பில்லாத பொன்மயமான மேருமலையாகிய வில்லை, இருகால் வளைய வாங்கி - இரு குதைகளும் வளையுமாறு வளைத்து, முப்புரத்தோடு தலைத்துறும் அவுணரை-முப்புரங்களையும் அவற்றின் வாழும் அவுணரையும், நானிலம் அஞ்சக் கொன்று அறுத்தனை - பெரிய பூமியிலுள்ள யாவரும் அஞ்சுமாறு கொன்று ஒருங்கே ஒழித்தருளினீர்.

திரிபுரமெரித்ததை,

"குன்றவார்சிலை நாணரா வரிவாளி கூரெரி காற்றின் மும்மதில்
வென்றவா றெங்ங னேவிடையேறும் வேதியனே"
என்னுந் திருவாமாத்தூர்த்தேவாரத்தாற் காண்க.

கஎ-கஞ. ஐம்புலம் நாலாம் அந்தக்கரணம்-ஐம்புலங்களையும் அந்தக் கரணங்கள் நான்கினையும், முக்குணம் இருவளி - மூன்று குணங்களையும் இரண்டு வாயுவையும், ஒருங்கிய வானோர்-செயலற ஒடுங்கி ஒருமைப்பட்ட சித்தமுடையவராகிய தேவர்கள், ஏத்த நின்றனை - ஏத்துமாறு எழுந்தருளியிருக்கின்றீர்.

ஒருங்கிய: ஈண்டுப் பிறவினையாகக்கொண்டு உரைக்கப்பட்டது; தன் வினையாகவே வைத்து ஐம்புலன் முதலியவற்றை

எழுவாயாக்கி உரைப்பதும் பொருந்தும். ஐம்புலன்-சுவை, ஒளி ஊறு, ஓசை, நாற்றம். அந்தக் கரணம்-மனம், புத்தி, சித்தம், அகங் காரம். இவை உண்ணின்று காரியஞ்செய்தலால் அந்தக் கரண மெனப்பட்டன. புலன்-வெளிக்கருவிகள். முக்குணம்-சாத்து விகம், ராசசம், தாமசம் என்பன. இரு வளி-பிராணன், அபானன். ஒருங்குதல் தம் வயப்பட்டு ஒடுங்கி நிற்றல். இவை ஒடுங்கி நிற்ற லால் உலக வியாபாரமின்றி இறைவனை ஏத்துதல் சாலும். இறை வன் இத்தன்மையோரது இதயதாமரையில் எழுந்தருளியிருப்பன் என்பதை "அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற் றைம்புலனு மடக்கி ஞானப், புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளி ருக்கும் புராணர் கோயில்" என்னுந் திருஞானசம்பந்தர் திருவீழி மிழலைத் தேவாரத்தாலறிக.

கக-உச. ஒருங்கிய மனத்தோடு - மனம் விடயங்களிற் சென்று சலியாது ஒருமைப்பட்ட உள்ளத்தோடு, இருபிறப் போர்ந்து-தாம் பிறக்கும்போது ஏற்பட்ட பிறப்பும உபநயனச் சடங்கின் ஏற்பட்ட பிறப்பும் என்னும் இருவகைப் பிறப்பினையும் விசாரித்தறிந்து, முப்பொழுது குறை முடித்து - மூன்று காலங் களிலும் செய்யப்படும் சபம், தர்ப்பணம், அனுட்டானம், ஓமம் என்னும் காரியங்களைச் செய்து முடித்து, நான்மறை ஓதி-நான்கு வேதங்களையும் ஓரு, ஐவகை வேள்வி அமைத்து-ஐந்து விதமான வேள்விகளையும் செய்தமைத்து, ஆறங்கம் ஓதி - வேதாங்கம் ஆறனையும் ஓரு, முதல் எழுத்து ஓதி-வேத முதலாகிய எல்லாக் கலைகட்கும் முதலாகவுள்ள வித்தெழுத்தான சமட்டி வியட்டி பேதமான பிரணவத்தை உச்சரித்து, வரன்முறை பயின்று-யாகங் களைச் செய்யுமுறையிலேயே செய்து, எழும் வான்தனை - எழுந்து பெய்கின்ற மழையினை, வளர்க்கும்-காலந்தவறாது பெய்விக்கும், காலந்தவறாது பெய்தல், மாதம் மூன்று மழை பெய்தல். பிரமபுரம் பேணினை - திருப்பிரமபுரத்தின் கண்ணே விரும்பி எழுந்தருளி யிருக்கின்றீர்.

மூன்று சந்தி-காலை, மாலை, உச்சி யென்பன. குறை, இன்றி யமையாமை என்னும் பொருட்டு. இக்காரியங்கள் ஆன்மா உய் யும் பொருட்டு இன்றியமையாது செய்யவேண்டுவன என்க.

ஐந்து வேள்வி - சிவபூசை, குருபூசை, மாகேசுரபூசை, பிராமண போசனம், அதிதி பூசை என்பன. வேதமோதுத லாகிய பிரமயாகம், ஓமம் வளர்த்தலாகிய தேவயாகம், நீர்க் கடனாற்றலாகிய பிதுர்யாகம், விருந்தோம்பலாகிய மானுட யாகம், பலியீதலாகிய பூதயாகம் என்றுங் கூறும் பிற பக்கமு முண்டு.

அங்கம் ஆறு - மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பன. ஓதி யென்பது ஈண்டுங் கூட்டி உரைக்கப்பட்டது.

பிரணவம் வேத முதலாகிய எல்லாக் கலைகட்கும் முதல் என்பதை "ஓமென்னும் பதமதனில் வேதமாதி யுற்பவிக்கும்" என்னும் சிவதருமோத்தர வாக்கியங்கொண் டறிக. சமட்டி - தொகுத்துச் சொல்வது. வியட்டி - வகுத்துச் சொல்வது.

தேவர்களுக்கு அவி கொடுத்தலினால், பயின்று, காரணப் பொருட்டு.

காலந்தவறாது பெய்தல்—மாதம் மூன்று மழை பெய்தல். வளர்க்கும் என்னும் எச்சம் இடப்பெயர் கொண்டது. மறையோர் என்னும் எழுவாய் வருவித்துரைத்துக் கொள்க. பிரமதேவர் பூசித்துப் பேறும்பெற்றமையின் பிரமபுரம் எனப் பட்டது.

உரு. அறுபத முரலும் - ஆறுகாலுடைய வண்டுகள் பண் பாடுகின்ற (சோலைசூழ்ந்த); வேணுபுரம் விரும்பினை - வேணு புரத்தை விரும்பி எழுந்தருளி யிருக்கின்றீர்.

சூரபதுமன் போருக்குடைந்த இந்திரன் வழிபட்ட காலையில் சிவபெருமான் வேணு (மூங்கில்) வாய் முளைத்து அருள்புரிந்த காரணத்தானும், இந்திரன் ஆசாரியர்ப் பிழைத்த பழிபோகவும், விருத்திராசுரனைக் கொன்ற பழிதுடைக்கவும் அகத்திய முனிவர் உபதேசப்படி வேணுவழியாய் இத் தலத்தை யடைந்து பூசித்த காரணத்தானும் வேணுபுரம் என்பதாயிற்று.

உகூ. இகலிய மைந்து உணர் புகலி அமர்ந்தனை-(தேவர்கள் தம்மைப்) பகைத்த (சூரபதுமனது) வலியை உணர்ந்து சரணடைந்த புகலியை விரும்பி எழுந்தருளி யிருக்கின்றீர்.

இகல் - பகை. மைந்து-வலி. சூரபதுமனால் துயரடைந்த தேவர் பிரமேசரைப் புகலடைந்து வழிபட்ட காரணத்தால் புகலியாயிற்று.

உஎ. பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை- கோபித்து மிகவும் பெருகி எழுந்த நான்கு கடல்களும் சூழ்ந்த வெங்குருவைத் திருப்பதியாகக்கொண்டு விளங்குகின்றீர்.

பொங்குதல் - பெருகியெழுதல். நாற்கடல் சூழ்தல்-பிரளய வெள்ளஞ் சூழ்தல். விளங்குதல் - வழிபடும் அடியார்க்குத் தம் மைக் காட்டுவித்தல்.

பிரமதேவரால் இகழப்பட்ட அசுர குருவாகிய சுக்கிரன், நாரதமுனிவர் உபதேசம் பெற்றுவந்து வழிபட்டுத் தேவ குரு

வுக்குச் சமத்துவம் பெற்ற காரணத்தானும், யமதருமன் நரக வாசிகள் தன்னைக் கொடியவன் என்று இகழும் பழி நீங்குமாறு பூசித்து அவர் பூர்வ உணர்ச்சி பெற்று மௌனமாயிருக்க அருள் பெற்ற காரணத்தானும் வெங்குரு எனப்படுவதாயிற்று.

உஅ-உகூ. பாணி மூவுலகும் புதைய மேல்மிதந்த - ஊழி வெள்ளத்தில் மூன்றுலகங்களும் அமிழவும், தான் அழுந்தாது அவ் வெள்ளத்தின்மேல் தோணியுருவங்கொண்டு மிதந்த, தோணி புரத்துறைந்தனை-தோணிபுரத்து வசிக்கின்றீர்.

பாணி-நீர். மூவுலகு: சுவர்க்கம், மத்தியம், பாதலம் என்பன. கற்பாந்தத்தில் சிவபெருமான் உமாதேவியாரோடு சுத்த மாயையாகிய (பிரணவம்) தோணியில் வீற்றிருப்பத் தான் அழியாதிருக்கின்ற காரணத்தால் தோணிபுரமாயிற்று.

உகூ-நூO. தொலையா இருநிதி வாய்ந்த - ஒரு காலத்துங் கெடாத செல்வம் வாய்ந்த, பூந்தராய் ஏய்ந்தனை - பூந்தராயைப் பொருந்தி வசிக்கின்றீர்.

இருநிதி-சங்கநிதி பதுமநிதியுமாம். இரணியாக்கனைச் சுவேத வராக வுருக்கொடு கொன்று பூமியைக் கொம்பிலேற்று வருத்திய பழிபோகத் திருமால் பூசித்த காரணத்தால் பூந்தராய் என்னப்பட்டது. இருநிதியம் பூவுந் தாருமாய்ப் பூசித்து அழியா வரம் பெற்றமையால் ஆயதெனலும் உண்டு.

நூக. வரபுரமென்றுணர்சிரபுரத்துறைந்தனை-பூசித்தவர்க்கு வரத்தைத் தருவதாகிய நகரமென்று அறியப்பெறும் சிரபுரத்து எழுந்தருளி யிருக்கின்றீர்.

வரம் மேன்மையுமாம். சயிங்கயேன் என்னும் அசுரன் வேற்றுருவாய்த் தேவருடன் இருந்து அமுதுண்ண, சூரியனால் காட்டப்பெற்று விட்டுணுவால் வெட்டுண்ட தலைக் கூறாகிய இராகு பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் சிரபுரமாயதென்க.

நூஉ-நூநூ. ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன் - தனக்கு ஒப்புயர் வின்றி விளங்கும் திருக்கயிலாய மலையினைப் பெயர்த்தெடுத்த மிக்க வலியினையுடைய இராவணன், விறல் கெடுத்தருளினை - வீரத்தைக் கெடுத்தருளினீர்.

அரக்கன் - இராவணன். விறல் - வலியும், வெற்றியுமாம். விறல் கெடுத்தது; தோள்களும் தலைகளும் நசுங்கியழும்படி செய்தது.

நூநூ. புறவம் புரிந்தனை - புறவம் என்னும் தலத்தினை விரும்பியிருக்கின்றீர்.

புரிதல் - விரும்புதல். வேள்விக்காலத்து இந்திரன் பருந்துருவாகவும் அக்கினி புறா வுருவாகவும் வந்து தன்னைப் பரிசோதித்த போது சிபிச்சக்கிரவர்த்தி புறாவின் எடைக்குத் தன் தசையரிந்திட்டும் போதாமை கண்டு, தான் துலையேறித் தன் புகழ் நிறுத்தினனாகப் புறாவாகிய அக்கினி அப்பாவம் போமாறு வழிபட்ட காரணத்தால் புறவமாயது

௩௯-௩௪. முந்நீர்த் துயின்றோன் - பாற்கடலில் யோகநித்திரை புரிகின்ற விட்டுணு மூர்த்தியும், நான்முகன் அறியா - நான்கு முகத்தினையுடைய பிரமதேவரும் அறியாத, பண்பொடு நின்றனை - பெருமையினை யுடையராயிருக்கின்றீர்.

முந்நீர்-மூவகைநீர்; ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் நிறைந்த கடல். படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று நீர்மையுடைமையின் கடல் முந்நீர் எனப்பட்டது என்பர் நச்சினார்க்கினியர். துயில் - யோக நித்திரை. தியேயனாகிய இறைவனைத் தியானித்துச் செய்யும் யோகம். "பையஞ்சுடர் விடு நாகப் பள்ளிகொள்வா னுள்ளத்தான், திருமாலகத்தான்" என வரும் தேவாரத் திருவாக்குக்கள் காண்க. பண்பு - பெருமை. அது பசு பாச ஞானங்களால் அறியப்படாத மேன்மை. அகங்காரமுடையார்க்கு அரியனாயிருத்தல் என்றலுமாம்.

௩௪. சண்பை அமர்ந்தனை - சண்பை யென்னுந் திருப்பதியை இடமாக விரும்புகின்றீர்.

கபிலமுனிவர் சாபப்படி தங்குலத்தினன் வயிற்றிற் பிறந்த இருப்புலக்கையைப் பொடித்துக் கொட்டிய துகள் சண்பைப் புல்லாக முளைத்திருந்ததை ஆயுதமாகக் கொண்டு போர் செய்து மடிந்த யாதவர் கொலைப்பழி தம்மை யணுகாவண்ணம் கண்ணன் பூசித்த காரணத்தால் சண்பை யெனலாயிற்று.

௩௫-௩௭. ஐயுறும் அமணரும் - ஐய வுணர்வினையுடைய சமணர்களும், அறுவகைத் தேரரும் - சூனியம் கூறுகின்ற புத்தர்களும், ஊழியும் உணரா - தமது மயக்க வறிவால் யாண்டும் அறியலாகாத, காழி யமர்ந்தனை - சீகாழியை விரும்பி யிருக்கின்றீர்.

ஐயுறுதல் - தமது பொருளை நிச்சயமாகத் துணிந்து நிறுத்தாமல் பல சந்தேகங்கொண்டு கூறல். வேதப் பிரமாணத்தை ஐயுற்று ஒப்பாமையுமாம். இறைவன் மயக்க அறிவால் ஒருகாலும் அறியப் பெருமை பற்றி ஊழியுமுணரா என்றதென்க. காழி சீகாழி முதற்குறை.

நடனத்தில் தோற்ற காளியம்மையார் வழிபட்டுப் பேறுபெற்ற காரணத்தாலும், காளிதன் என்னும் சர்ப்பம் பூசித்த

காரணத்தானும், சீகாழி (ஸ்ரீகாழி) யாயிற்று, ளகரம் ழகரமாய்த் திரிந்தது.

ந அ. எச்சன் - வேள்வி யுருவனுயும், ஏழிசையோன் - ஏழிசையுருவனுயும், கொச்சையை மெச்சினை - கொச்சைவயத்தைத் திருப்பதியாக உகந்தருளினீர்.

எச்சம் - வேள்வி. "வேதமும் வேள்வியு மாயினார்க்கு" என்னும் திருவாசகம் காண்க. இறைவன் உலகமும் உலகத் தலைவனுமாயிருத்தல் போல வேள்வியும் வேள்வித் தலைவனுமாய் இருப்பனென்பது காணத்தக்கது. ஏழிசை; குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. இவை முறையே மிடறு, நா, அண்ணம், சிரம், நெற்றி, நெஞ்சு, மூக்கு என்பன வற்றை இடமாகக்கொண்டு பிறக்கும். இவையே ஏழ்சுரமெனவும், வீணையினேழ் நரம்பெனவும்படும். இன்னும் இவற்றின் தெய்வம், சுவை முதலியவற்றின் விவரங்களையும், இவற்றூற் பண் பிறக்கும் நியதியையும் இசை நூல்களிற் கண்டு கொள்க. இறைவன் ஏழிசை யுருவனுதல் "ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய்" என்னுஞ் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தானறியப்படும். கொச்சைவயம் கொச்சையென நின்றது. பராசர் தாம் மச்சகந்தியை ஆற்றிடையிற் புணர்ந்து பெற்ற துர்க்கந்தமும், பழியும் போமாறு பூசித்த காரணத்தால் இப் பெயருடையதாயிற்று.

நகூ-சக. ஆறுபதமும்-பிரத்தி, பிரத்தியாகாரம், துல்லியம், துல்லியாதீதம், வித்தை, அவித்தை என்னும் ஆறுபதங்களும்; ஐந்தமர் கல்வியும்-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், விரையம், என்கிற ஐந்து விதமான கல்வியும்; முதல்மறை நான்கும் - முதன்மையாகிய நான்கு வேதங்களும்; மூன்று காலமும் - இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலமும்; தோன்ற நின்றனை - தோன்றுவதற்கு ஏதுவாகி நிற்கின்றீர்.

சஉ. இருமையின் ஒருமையும் - உயிர்களோடு கலந்து அத்துவிதமாயும், ஒருமையின் பெருமையும் - எல்லாந் தன்னுளடங்கிய எல்லையில்லாத ஒரே சிவமாயும் நிற்கின்றீர்.

இருமையின் ஒருமை - அத்துவிதம் இரண்டல்ல எனுந் தன்மை. ஒருமையின் பெருமை - அகண்டாகார சச்சிதானந்த சொரூபத்தன்மை.

சங-சஎ. மறுவிலா மறையோர் - குற்றமில்லாத வேதங்களையுடைய அந்தணர் குலத்தில் தோன்றி, கழுமலம் - கழுவப்பட்ட மலத்தை யுடையவனுய், முதுபதி - அநாதி நித்திய சிவத்தன்மையடைந்த, கவுணிய - கவுணிய கோத்திரத்திலே தோன்றிய திரு

ஞானசம்பந்தன் உரைத்த, கட்டுரை - இத் திருவெழுகூற்றிருக்கைத் திருப்பதிகமாகிய ஆன்மாக்களுக்கு உறுதி பயக்கும் உண்மை வசனத்தை, கழுமல முதுபதி - கழுமல மென்னும் பழைய திருப்பதியை விரும்பி எழுந்தருளி யிருக்கின்ற, கவுணியன் - தலைக்கலத்து உண்கின்ற இறைவனே, அறியும் - அறிந்துகொண்டருள்வர், அனைய தன்மையை ஆதலின் - அப்படிப்பட்ட பெற்றியை உடையீர் ஆகையால், நின்னை-தேவரீரை, நினையவல்லவர் - எண்ணியேத்த வல்லவர், நீணிலத்து இலர் - பெரிய உலகில் இல்லாதவராவர் என்றவாறு.

கழுவப்பட்ட மலம் விகுதி பிரித்துக் கூட்டி மலங்கழுவப்பட்ட என்று பொருள் கொள்க. அம்மை யப்பனுய் இறைவன் எழுந்தருளி யநுக்கிரகித்த ஞான்றே நிருமல சிவத்தன்மை யடைந்தவர் பிள்ளையார் என்க.

கழுமலம் - உரோமசமுனிவர் இங்கெழுந்தருளி இறைவனை வழிபட்டு ஞானோபதேசம் பெற்றுத் தம்மலங்கழுவப் பெற்றமையான் இப் பெயர்த்தாயிற்று. முதுமை - பழைமை.

கம் - தலை. பிரம கபாலம்:—உணியன் - பலியேற் றுண்பவன்.

மறையோரது கழுமலம் என்னும் பழம்பதியிற் றோன்றிய திருஞான சம்பந்தனது கட்டுரையை அறியும் கழுமல முதுபதிக் கவுணியரே, தேவரீர் அனையதன்மையை உடையர் ஆகலின் என்று பொருள் கூறுவதும் ஒத்ததாகும். இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும் மறுவிலா மறையோர் என்றே பொருள் கொள்ளலும் ஆகும். அறியும்-உகந்தருள்வர் என்பது கருத்து.

இல்லாதவராதல் - பிறவாதவராதல்; முத்தி யடைவர் என்பது கருத்து. நினையவல்லவர் நீணிலத்து இலர் என்பதை, தேவரீரது சொரூபத் தன்மையும், தடத்தத் தன்மையும் மேலே கூறிய அரிய பெற்றியை உடையவாதலின் அவற்றைச் சிற்றறிவும் சிறு தொழிலுமுடையவராகிய உலகினர் அறிய வல்லுநரல்லர் என்று பொருள் படுத்தலும் ஒன்று. ஆயினும் முற்கூறிய பொருளே பல சுருதி கூறுதற்கு எற்றதாகின்றது.

சிவபாதவிருதயர் தமது பூசைக்காலத்துத் தினந்தோறும் பிள்ளையாரது புத்தி முத்திகளைத் தாத்தக்க திருப்பதிகங்களை ஓதும் முறைமையுமுடையவராய் இருத்தலையும், திருப்பதிகங்கள் நாளும் பெருகி எண்ணிறந்தன வாதலின் அக்கருத்து அவர்க்கு முற்றுப்பெறுதல் அரிதாதலையும் அறிந்த பிள்ளையார் இத் திருவெழு கூற்றிருக்கையைத் திருவாய் மலர்ந்தருளித் தமது

பிதாவுக்கு அருளி இதனை ஓதின் எல்லாப் பதிகங்களையும் ஓதிய பலன் கிடைக்கும் என்று கூறியருளினார் என்பது இதன் வரலாறு.

இத்திருப்பதிகத்தில் பிரமபுரம் பேணினை, வேணுபுரம் விரும்பினை, புகலியமர்ந்தனை, வெங்குரு விளங்கினை, தோணிபுரத்துறைந்தனை, பூந்தராயேய்ந்தனை, சிரபுரத்துறைந்தனை, புறவம் புரிந்தனை, சண்பையமர்ந்தனை, காழியமர்ந்தனை, கொச்சையை மெச்சினை, கழுமல முதுபதிக் கவுணியன் எனச் சீகாழியின் பன்னிரண்டு திருப்பெயர்களும் கூறப்பட்டன: இது வன்றிச் சாதாரி வழிமொழித் திருவிராகப்பதிகம், ஏகபாதம், இயமகம், பல்பெயர்ப் பத்து, திருவிருக்குக் குறள், மொழிமாற்று, சக்கரமாற்று, கோமூத்திரி, ஈரடி என்னும் பதிகங்களுள்ளும் இந்நியமம் கொள்ளப்பட்டது. சீகாழியின் ஏனைய திருப்பதிகங்களெல்லாம் இப் பன்னிரு பெயர்களுள் ஒவ்வொரு பெயரின் மேலனவாய்த் தனித்தனி கூறப்பெற்றிருக்கும். பன்னிரண்டு திருப்பெயர்களும் கூறப்பெற்ற திருப்பதிகங்களினெல்லாம் அப் பெயர்கள் ஒரே விதமான வரிசையில் முறைப்படக் கூறியிருத்தல் காணப்பெறும். அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் பெருமானும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்துள் கசஆந் திருப்பாட்டினும் இம்முறை வைப்புப் போற்றி யருளினார். இம்முறை வாளா கூறியதன்று; யாம் பாராட்டிப் போற்றியது என்பார். ஆளுடைய பிள்ளையார் திருப்பூந்தராய்ப் "பந்துசேர் விரலாள்" என்னுந் திருப்பதிகத்து இரண்டாந் திருப்பாட்டில் "ஒன்றிரண்டொரு மூன்றொடு சேர்பதி" யெனக் கூறியருளினார். "ஒன்றிரண்டொரு மூன்று" ஆறு எனப் பொருள்பட்டுப் பூந்தராய் ஆறாவது கூறப்பெறுவது என்றறிவிக்கின்றது. இம்முறை யாது பற்றிப் போற்றப் பெற்றதோ வெனின் இப்பன்னிரு பெயர்களும் முறையே பன்னீருகத்து இத்தலத்துக்குச் சரித்திரக் கிரமத்தில் ஏற்பட்டன வென்கையாலென் றறியப்படும். இப் பெற்றியைத் திருவெண்காட்டடிகள் தமது திருக்கழுமல மும்மணிக் கோவையுள் க0ஆந் திருப்பாட்டில் "வசையில் காட்சியிசைநனிவிளங்க, முன்னாணிகழ்ந்த பன்னீருகத்து, வேறுவேறு பெயரினாரின் றியன்ற, மையறு சிறப்பிற் றெய்வத் தன்மைப், புகலி நாயக இகல்விடைப் பாக" என்று விளக்கினமை காண்க. இஃதறியாது சைவத்திருமுறைகட்கு உரையெழுதப் புகுந்தார் சிலர் "ஒன்றிரண்டொரு மூன்று" என்பதை "ஒன்றிரண்டிரு மூன்று" என்று திரித்துப்பொருள் காணலாயினர். அவ்வாறு திரித்தும் அவர் கண்டது யாதோ அறிகிலம். ஒன்றிரண்டிரு மூன்று பன்னிரண்டு என்பது அவர் கண்ட பொருள். (க)

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

# திருக்கடவூர் மயானம்

*பண் - காந்தாரம்*

**சிவனுருவம்**

*திருச்சிற்றம்பலம்*

வரிய மறையார் பிறையார்
மலையோர் சிலையா வணக்கி
எரிய மதில்கள் எய்தார்
எறியும் முசலம் உடையார்
கரிய மிடறும் உடையார்
கடவூர் மயானம் அமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவா
ரவரேம் பெருமா னடிகளே.

(ப - ரை.) *வரிய - இசைப் பாட்டுருவமாகிய, மறையார் - வேதங்களை யுடையவர், பிறையார் - திங்கட் பிறையை யணிந்தவர், மலை - மலையை, ஓர் சிலையா - ஒப்பற்ற வில்லாக, வணக்கி - வளைத்து, மதில்கள் - மூம் மதில்கள், எரிய - எரிந்து போம்படி, எய்தார் - அம்பினை யெய்தவர், எறியும் - எறியப்படுகின்ற, முசலம் உடையார் - உலக்கையை உடையவர், கரிய - கருநிறம் பொருந்திய, மிடறும் உடையார் - கண்டத்தையும் உடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் - திருக்கடவூர் மயானம் என்னும் தலத்தை விரும்பி எழுந்தருளினார், பெரிய - பெரிதாகிய, விடைமேல் வருவார் - இடபத்தை ஊர்ந்து வருவார், (இனைய பெற்றியையுடைய) அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள்-எம்முடைய பெருமானாகிய கடவுளாவார் என்றவாறு.*

*வரி - இசைப்பாட்டு: வேதங்கள் சுரத்தோடு கூடிய பாட்டுருவமாயிருத்தலின் "வரிய மறை" எனப்பட்டது. மலை - மேரு மலை. முசலம் - உலக்கை; இது கையினின்று எறியும் அத்திரங்களுள் ஒன்று. கடவூர் மயானம் - கடவூரிலுள்ளதாகிய மயானம். இராதந்திர கற்பத்தில் விட்டுணுமூர்த்தி முதலிய தேவர்*

கள் புனிதமாகிய இத்தலத்தில் தாம் உண்ணும்படி கொணர்ந்த அமுதகலயத்தை வைத்து வழிபட்டபோது அது சிவலிங்கமாக எழுந்தருளினமையின் இத்தலம் கடவூராயிற்று. கடம் - கலயம். இத்தலத்தின் கீழ்ப்புறத்தில் பிரமதேவரைத் தகனம் செய்து மீண்டும் உயிர்ப்பித்து அவர்க்குப் படைப்புத் திறம் அருளினமை யின் அவ்விடம் மயானம் ஆயிற்று. இஃது ஒரு தனித்தலம். ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. (க)

மங்கை மணந்த மார்பர்
மழுவாள் வலனொன் றேந்திக்
கங்கை சடையிற் கரந்தார்
கடவூர் மயானம் அமர்ந்தார்
செங்கண் வெள்ளே றேறிச்
செல்வம் செய்யா வருவார்
அங்கை ஏறிய மறியார்
அவரெம் பெருமா னடிகளே.

(ப - ரை.) மங்கை - உமா தேவியார், மணந்த - கலந்தரு ளிய, மார்பர் - மார்பினையுடையவர், மழுவாள் ஒன்று - மழுவாயு தம் ஒன்றை, வலன் ஏந்தி - வலப்புறத்தில் தாங்கி, கங்கை - கங்கையை, சடையிற் கரந்தார் - சடையிற் கரக்கச் செய்தவர், கடவூர் மயானம் - கடவூர் மயானத்தை, அமர்ந்தார் - விரும்பின வர், செங்கண் - சிவந்த கண்களையுடைய, வெள் ஏறு ஏறி-வெண் ணிறமாகிய இடபத்தை யூர்ந்து, செல்வம் செய்யா - தம்மை வழி படுவார்க்குச் செல்வத்தைச் செய்யும்படி, வருவார் - எழுந்தருளி வருவார், அங்கை ஏறிய - அழகிய கையிற் றரிக்கப்பட்ட, மறி யார் - மான்கன்றினை யுடையவர், அவர் ஏ - இப்பெற்றியை யுடைய அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுள் ஆவார் என்றவாறு.

மழுவாள் : இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. சடையிற் கரத்தல் - பல முகத்தாற் பெருகி வருகிற கங்கையைச் செருக் கழித்துத் தம் சடையிற் புன்னுனைப் பனியொப்பச் செறித்தல். 'பகீரதற்காய்...பரந்திழியும் புனற்கங்கை பனிபோலாகச், செறித் தானை'' எனவரும் திருத்தாண்டகம் காண்க. ஏற்றினது கண் ணின் செம்மை - சினக் குறியையும், வெண்மை - புனிதத் தன்மையையும் உணர்த்தி நின்றன. செல்வம் - அழிவில்லாத திருவடிப் பேறாகிய செல்வம். செய்து எனப் பொருள்படும்

செய்யா என்பது ஈண்டுச் செய்தற்கு என்னும் பொருளில் வந்தது. (உ)

ஈடல் இடபம் மிசைய
ஏறி மழுவோன் றேந்திக்
காட திடமா உடையார்
கடவூர் மயானம் அமர்ந்தார்
பாடல் இசைகோள் கருவி
படுதம் பலவும் பயில்வார்
ஆடல் அரவம் உடையார்
அவரெம் பெருமா னடிகளே.

(ப - ரை.) ஈடுஅல் - இணையற்ற, இடபம் - விடையை, இசைய - பொருந்துமாறு, ஏறி - ஊர்ந்து, மழு ஒன்று ஏந்தி - மழுவொன்றினைத் தரித்து, காடது - புறங்காட்டினை, இடமா வுடையார் - உறைவிடமாகக் கொண்டவர், கடவூர் மயானம் அமர்ந்தார் - கடவூர் மயானத்தை விரும்பினவர், பாடல் - பாட்டினது, இசை - இசையினை, கொள் - தம்மிடத்துக் கொண்ட, கருவி - கருவிகளாகிய, படுதம் பலவும் பயில்வார் - வாத்திய விசேடங்க ளெல்லாவற்றையும் பயில்கின்றவர், ஆடல் அரவம் உடையார் - ஆடுகின்ற பாம்பினையுடையவர், அவர் ஏ - (இப் பெற்றி வாய்ந்த) அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவார் என்றவாறு.

காடது - அது பகுதிப் பொருள் விகுதி. காடு - ஈண்டுப் பொதுவாகிய சர்வ சம்மார மயானம். கடவூர் மயானம் - தலம். கருவிகள் பாட்டோசையைக் கொள்வது - பாட்டோசையோடு கருவியோசை பருந்து நிழலுமென ஒத்து நிகழ ஒலிப்பது. வாத்தியம் பலவும் பயில்வதை "குழல் மொந்தை தாளம் வீணை கொக்கரையின் சச்சரியின் பாணியானை" என்பது போன்ற திருப்பாட்டுக்களால் அறிக. ஆடல் அரவமுடைமையை "தோட்டீரே துத்தியைந்தலை நாகத்தை யாட்டீரே" என்னும் தேவாரத்தாலறிக. (௩)

இறைநின் றிலங்கு வளையாள்
இளையாள் ஒருபா லுடையார்
மறைநின் றிலங்கு மொழியார்
மலையார் மனத்தின் மிசையார்

கறைநின் றிலங்கு பொழில்சூழ்
கடவூர் மயானம் அமர்ந்தார்
பிறைநின் றிலங்கு சடையார்
அவரெம்பெருமா னடிகளே.

(ப - ரை.) இறைநின்று இலங்கு - கையிறையில் நிலை பெற்று விளங்குகின்ற, வளையாள் - வளையினை யுடையவராகிய, இளையாள் - இளமை தங்கிய உமாதேவியாரை, ஒருபால் உடையார் - ஒருபக்கத்து உடையவர், மறை நின்று இலங்கு - வேதங்கள் நின்று விளங்குகின்ற, மொழியார் - திருச்சொல்லை உடையவர், மலையார் - மயக்க வறிவில்லாதவராது, மனத்தின் மிசையார் - மனத்தின் மீது எழுந்தருளியவர், கறைநின்று இலங்கு - கருநிறம் பொருந்தி விளங்குகின்ற, பொழில்சூழ் - சோலைகள் சூழ்ந்த, கடவூர் மயானம் அமர்ந்தார் - கடவூர் மயானத்தை விரும்பினவர், பிறை நின்று இலங்கு - பிறைசசந்திரன் தங்கி விளங்கும், சடையார் - சடையினை யுடையவர், அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவார் என்றவாறு.

மறை நின்றிலங்கும் மொழி என்றது. வேதம்; அவர் திருவார்த்தை என்றபடி. மலையார் - ஐயந்திரிபின்றி இறைவனை யறிந்து துதிப்பவர். இவர் மனத்திற் குடிகொண்டிருப்பதை, "நினைப்பவர் மனங் கோயிலாகக் கொண்டவன்" என்னுந் தேவாரத்தானும். "மலர்மிசை யேகினான்" என்னும் பொய்யா மொழியானும் அறிக. கறை - கறுப்பு. மரச் செறிவினாலுண்டாகிய இருள். (௪)

வெள்ளை எருத்தின் மிசையார்
விரிதோ டொருகா திலங்கத்
துள்ளும் இளமான் மறியார்
சுடர்பொற் சடைகள் துலங்கக்
கள்ள நகுவெண் தலையார்
கடவூர் மயானம் அமர்ந்தார்
பிள்ளை மதியம் உடையார்
அவரெம் பெருமா னடிகளே.

(ப-ரை.) வெள்ளை எருத்தின் மிசையார் - வெண்ணிறமாகிய இடபத்தின்மேல் எழுந்தருளுபவர், விரிதோடு - ஒளியைப்

பெருக்குகின்ற தோட்டினையணிந்த, ஒருகாது இலங்க - இடக் காதின் பாங்கர்த் தங்குமாறு, துள்ளும் இளமான் மறியார் - துள்ளிக் குதிக்கின்ற இளமைதங்கிய மான்கன்றினையுடையார், சுடர் பொற் சடைகள் துலங்க - சுடருகின்ற பொன்னிறமாய சடைகள் விளங்க, (அவற்றின்மீது) கள்ளம் நகுவெள் தலையார் - கள்ளத்தன்மை வாய்ந்த நகுவெண் தலையையுடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் - கடவூர் மயானத்தை விரும்பினவர், பிள்ளை மதியம் உடையார் - (சடையில்) இளமபிறையை உடையவர், அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவார் என்றவாறு.

விரிதோடு - ஒளிவிரிக்கும் தோடு: வினைத்தொகை. ஒருகாதென்றது மற்றொரு காதிற் குண்டல முடைமையின் தோடொரு காது-தோட்டினையுடைய காது. இஃது இடப்புறக் காது. தாருகா வனத்துத் தம்மீது விடுக்கப்பட்டு உலகஞ்ச ஒலித்து வந்த மானினைத் தமது காதில் ஒலிக்குமாறு இறைவன் அணிந்தது கருத்து. நகுவெண்தலை - தசைகழிந்து வாயங்காந்து சிரிக்குமாறு பற்கள் தோன்ற விளங்கும் பிரமசிரம். இதனது கள்ளத்தனம்,

“ கிடந்த பாம்பருகு கண்டரிவை பேதுறக்
கிடந்த பாம்பவளை ஓர்மயிலென் றையுறக்
கிடந்த நீர்ச்சடை மிசைப்பிறையும் ஏங்கவே
கிடந்த தானகுதலைக் கெடிலவா ணரே ”

என்னுந் திருவதிகை வீரட்டானத் தேவாரத்தா னறியப்படும். பிள்ளை - முதிராத இளம்பருவத்தன்மை. மதியம்: அம் சாரியை மதி - மதுவை (அமிர்தத்தை) உடையது. சந்திரன் அமிர்த கலையையுடைய ஓஷதிநாயகன். (ரு)

பொன்று துதிரு மணங்கோள்
புனைபூங் கொன்றை புனைந்தார்
ஒன்று வெள்ளே றுயர்த்த
துடையா ரதுவே ஊர்வார்
கன்று வினஞ்சூழ் புறவிற்
கடவூர் மயானம் அமர்ந்தார்
பின்தாழ் சடையார் ஒருவர்
அவரெம் பெருமா னடிகளே.

(ப-ரை.) பொன்தாது - பொன்னிறமாகிய மகரந்தம், உதிரும் - சிந்துகின்ற, மணம்கொள் - வாசனையைக் கொண்ட, புனை- அலங்கரிக்கப்பட்ட, பூங்கொன்றை - பொலிவுடைய கொன்றை மலர் மாலையை, புனைந்தார் - அணிந்தவர், உயர்த்தது-கொடியாக உயர்த்தியதாகிய, ஒன்று - நிகரில்லாத, வெள்ளேறு - வெள்ளிய இடபத்தை, உடையார் - உடையவர், அதுவே ஊர்வார் - அதனையே ஊர்தியாகவும் ஊர்ந்தருளுவர், கன்று இனம் சூழ்புறவில்- கன்றுகளையுடைய பசுக்கூட்டங்கள் சூழ்ந்த முல்லைநிலத்தில் உள்ள, கடவூர் மயானம் அமர்ந்தார் - கடவூர் மயானத்தை விரும்பினவர், பின் தாழ்சடையார் - பின்னே தொங்குகின்ற சடையை யுடையவராகிய, ஒருவர் - ஒப்பற்றவர், அவர் ஏ-அவரே, எம்பெருமானடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவர் என்றவாறு.

கொன்றை-திருவடையாளமாலை. உயர்த்தது இடபம் உடையார் - இடபக் கொடியுடையார் என்னும் பொருளது. "கொடி மேலிடபமும் கோவணக் கீளுமோர் கொக்கிறகும்" என்னும் பொன்வண்ணத்தந்தாதி இடபக்கொடியைக் கூறும். கற்று எனற் பாலது கன்று என மெலித்தது. புறவு - முல்லைநிலம். பின்றாழ் சடை - தாழ்ந்த சடையுடைமை. "தாழ்சடை எட்டுத் திசையும் வீசி" என்று காரைக்காலம்மையார் மூத்ததிருப்பதிகங் கூறும். "பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப், பின்னாற் பிறங்க விருந்தவன் பேர்நந்தி" என்னுந் திருமந்திரமுமது. (சு)

பாச மான களைவார் பரிவார்
பரிவார்க் கமுதம் அனையார்
ஆசை தீரக் கொடுப்பார்
அலங்கல் விடைமேல் வருவார்
காசை மலர்போல் மிடற்றார்
கடவூர் மயானம் அமர்ந்தார்
பேச வருவார் ஒருவர்
அவரெம் பெருமா னடிகளே.

(ப-ரை.) பாசமான-(அடியவரின்) வினைப்பாசங்களை, களைவார் - பறித்தருள்பவர், பரிவார்க்கு-அன்பு செய்பவர்க்கு, அமுதமனையார் - அமிர்தத்தை ஒத்தவர், ஆசைதீரக் கொடுப்பார் - தம்மை வழிபடுவோரது ஆசையடக்கும்படி ஈந்தருளுபவர்,

அலங்கல்விடைமேல் வருவார் - அசையும் தன்மைத்தாகிய இடபத்தின்மேல் எழுந்தருள்பவர், காசை மலர்போல் - காயாம் பூவினைப்போன்ற, மிடற்றார் - கரிய கண்டத்தை உடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் - கடவூர் மயானத்தை விரும்பினவர், பேச வருவார் ஒருவர் - யாவரும் புகழுமாறு வருவராகிய ஒப்பற்றவர், அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவார் என்றவாறு.

பாசம் - இருவினைப்பாசம். இதனை "இருவினைப் பாசமும் மலக்க லார்த்தலின், வருபவக் கடலின்வீழ் மாக்கள்" என்னும் பெரியபுராணமும், "அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டி" என்னும் திருவாசகமும் கூறுதல் காண்க. பரிதல் - அன்பு செய்தல். அமுத மனையராதல் - நரைதிரை மூப்பிலாத நித்தத் தன்மையராக்கல். பேசுதல் - புகழ்தல். (எ)

சேற்ற அரக்கன் அலறத்
திகழ்சே வடிமேல் விரலால்
கற்குன் றடர்த்த பெருமான்
கடவூர் மயானம் அமர்ந்தார்
மற்றோன் றிணையில் வலிய
மாசில் வெள்ளி மலைபோற்
பெற்றோன் றேறி வருவார்
அவரெம் பெருமா னடிகளே.

(ப - ரை.) செற்ற அரக்கன் - சினங்கொண்ட அரக்கனாகிய இராவணன், அலற - அலறியழும்படி, திகழ் சேவடி - விளங்குகின்ற திருவடியின், மெல்விரலால்-மெல்லிய திருவிரலால், கல் குன்று - கற்களையுடைய கயிலாயமலையின் கீழ், அடர்த்த - நெருக்கி வருத்திய, பெருமான் - தலைவர், மற்றொன்று - வேறொன்று, இணை இல் - நிகரில்லாத, வலிய-வலியதாகிய, மாசு இல் - குற்றமற்ற, வெள்ளிமலை போல் - வெள்ளிமலையைப் போன்ற, பெற்றம் ஒன்று - எருது ஒன்றின்மீது, ஏறி வருவார் - இவர்ந்து வருவார், அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவார் என்றவாறு.

திருவடி - "மாணிக்க மொத்து மரகதம் போன்று வயிர மன்னி, ஆணிக் கனகமும் மொக்கும்" சுயம்பிரகாசமான ஞானப் பிழம்பினதாகலின் "திகழ்சேவடி" என்றார். சேவடி - "தேவரெல்லாந் தொழச் சிவந்த செந்தாள்" கயிலாயம் வெள்ளிமலை

யாகவும் கற்குன்றென்றது இனம்பற்றி யென்க. பெற்று - பெற்றம் என்பதன் ஈற்று அம் கெட்டு நின்றது. இது வெள்ளி மலை போல்வது என்பதை "வெள்ளிக்குன்றந் தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை" என்னும் பொன்வண் ணத்தந்தாதித் திருப்பாட்டிற் காண்க. கற்குன்றடர்த்த: ஏழாம் வேற்றுமைத் தொகை. அடர்த்த என்னும் எச்சம் வினைமுதற் பெயர்கொண்டது. (அ)

வருமா கரியின் உரியார்
வளர்புன் சடையார் விடையார்
கருமான் உரிதோல் உடையார்
கடவூர் மயானம் அமர்ந்தார்
திருமா லொடுநான் முகனும்
தேர்ந்தும் காணமுன் ஒண்ணப்
பெருமான் எனவும் வருவார்
அவரெம் பெருமா னடிகளே.

(ப - ரை.) வரும் - எதிர்த்து வந்த, மா - பெரிய, கரியின் உரியார் - யானைத்தோலை யுடையவர், வளர்புன் சடையார் - வளர்த்த புல்லிய சடையை யுடையவர், விடையார் - இடபத்தை யுடையவர், கருமான் உரிதோல் உடையார் - கருமானினது உரிக்கப்பட்ட தோலையுடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் - கடவூர் மயானத்தை விரும்பினவர், திருமாலொடு நான்முகனும் - விட்டுணு மூர்த்தியோடு நான்முகனும், முன் - முன்பு, தேர்ந் தும் - தேடியும், காண ஒண்ணு காணமுடியாத, பெருமான் என வும் வருவார் - இறைவன் என்று சொல்லவும் படுவார், அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுளா வார் என்றவாறு.

கருமான் - மானின் பேதம். இது வடமொழியில் கிருட்டின மிருக மெனப்படும். அதிக புனிதத் தன்மை வாய்ந்தது. இறை வன் மான்றோல் உடைமையை - "நெய்யாடி நின்மலனே நீல கண்டா நிறைவுடையாய் மறைவல்லாய் நீதியானே, மையாடு கண்மடவாள் பாகத்தானே மான்றோலுடையாய் மகிழ்ந்து நின் றாய்" என்னும் திருத்தாண்டகத்திற் காண்க. ஒண்ணு ஒன்று என்பதன் மரூஉ; ஈறுகெட்ட பெயரெச்சம். பெருமான் என் னும் செயப்படு பொருள் கொண்டது. (கூ)

தூய விடைமேல் வருவார்
துன்னா ருடைய மதில்கள்
காய வேவச் செற்றார்
கடவூர் மயானம் அமர்ந்தார்
தீய கருமம் சொல்லும்
சிறுபுன் தேரர் அமணர்
பேய்பே யென்ன வருவார்
அவரெம் பெருமா னடிகளே.

(ப - ரை) *தூய - புனிதமாகிய, விடைமேல் வருவார் - இடபத்தின்மீது ஊர்ந்து வருபவர், துன்னாருடைய மதில்கள் - பகைவருடைய திரிபுரங்கள், காய வேவ செற்றார் - எரிந்தொழியக் கோபித்தவர், தீய கருமம் சொல்லும் - தீய காரியங்களை நல்லனவாகச் சொல்லுகின்ற, சிறுபுன் தேரர் அமணர் - அற்பத் தன்மை வாய்ந்த புல்லிய புத்தரும் சமணரும், பேய் பேய் என்ன வருவார் - பேய் பேய் என்று இகழும்படி எழுந்தருள்வர், அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள்-எம்பெருமானாகிய கடவுளாவார் என்றவாறு.*

*விடை தருமமாதலால் தூயவிடை எனப்பட்டது. துன்னல்-நெருங்கல். செறல் - கோபித்து அழித்தல். தீய கருமம் சொல்லல் - தேரராகிய புத்தர் பிறன் கொன்றதைத் தின்னல் பாவமில்லை யென்னல், புத்தன் தாயின் விலாவைப் பீறி வெளிவருதல், வேள்வியை யிகழ்தல் முதலியனவும்; சமணர் தலைபறித்தல், பாயுடுத்தல், நின்றுண்ணல், பல் தேய்க்காமை முதலியவற்றை அறமெனக் கூறி இறைவன் கடையூழியில் பேயோடு ஆடுதல் முதலியவற்றின் பொருளறியாது இவனையும் பேய் என நிந்தித்துக் கூறுவர் என்க. தேரர் - புத்தரில் ஒருவகையினர்.* (க0)

மரவம் பொழில்சூழ் கடவூர்
மன்னும் மயானம் அமர்ந்த
அரவம் அசைத்த பெருமான்
அகல மறிய லாகப்
பரவும் முறையே பயிலும்
பந்தன் செஞ்சொல் மாலை
இரவும் பகலும் பரவி
நினைவார் வினைகள் இலரே.

(ப - ரை.) மரவம் பொழில் சூழ் - குங்கும மரச்சோலை சூழ்ந்த, கடவூர் - திருக்கடவூரில், மன்னும் - நிலைபெற்ற, மயானம் அமர்ந்த - திருமயானத்தில் எழுந்தருளிய, அரவம் அசைத்த பெருமான் - பாம்பைக் கச்சையாகக் கட்டிய இறைவனது, அகலம் - வியாபகத்தன்மை, அறியலாக - அறியப்படுமாறு, பரவும் முறையே பயிலும் - வழிபாடு செய்யும் முறைமையாகவே ஏத்துகின்ற, பந்தன் - திருஞானசம்பந்தனது, செஞ் சொன் மாலை - செவ்விய சொன் மாலையாகிய பதிகத்தை, இரவும் பகலும் - அல்லும் பகலும், பரவி நினைவார் - நினைந்து துதிப்பவர், வினைகள் இலர் - வினைகளில்லாதவராவர் என்றவாறு.

மரவம் - குங்கும மரம். அரவம் கச்சாரும் என்பதை "புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும் பொழிலாரூ ராவென்றும் போற்றா நில்லே" என்பதனால் அறிக. அகலம் - பரப்பு, வியாபகம். "அகல மளக்கிற்பா ரில்லாவடி" என்றபடி இறைவன் வியாபகம் அறிய முடியாதெனினும் பிள்ளையார் தமது சிவஞான சம்பந்தமான சிவகரணங்கொண்டு கூறுவர் என்பது தெளிக. வியாபகத் தன்மையின் அருமையை என்றும் கூறலாம். பந்தன்- திருஞானசம்பந்தன். செஞ்சொல் - செம்பொருட் டன்மை தெரிக்கும் சீரிய சொல். (கக)

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசுநாயனார்

# கோயில்திருவிருத்தம்

---

*பண் - கொல்லி*

**சிவனுருவம்**

*திருச்சிற்றம்பலம்*

பாளை யுடைக்கமு கோங்கிப்
பன்மாட நெருங்கியெங்கும்
வாளை யுடைப்புனல் வந்தெறி
வாழ்வயல் தில்லைதன்னுள்
ஆள உடைக்கழற் சிற்றம்
பலத்தரன் ஆடல்கண்டாற்
பீளை யுடைக்கண்க ளாற்பின்னைப்
பேய்த்தொண்டர் காண்பதென்னே.

**(ப - ரை.)** *பாளை உடை கமுகு - பாளைகளையுடைய கமுகு மரங்கள், ஓங்கு - உயர்ந்து, எங்கும் - எவ்விடத்தும், பல்மாடம் நெருங்கி - பலமாடங்கள் செறிந்து, வாளை உடை புனல் - வாளை மீன்கள் தன்னிடத்து இருக்கப்பெற்ற நீரானது, வந்து எறி - வந்து அலைவீசுகின்ற, வாழ்வயல் - வளம்பொருந்திய வயல்களை யுடைய, தில்லை தன்னுள் - தில்லைத் திருப்பதியில், ஆள உடை - உயிர்களை யாளும் பொருட்டு, கழல் - திருவடியினைக் கொண்ட, சிற்றம்பலத்து அரன் - சிற்சபையில் எழுந்தருளிய சிவபெருமானது, ஆடல் கண்டால் - திரு நடனத்தைத் தொழுதால், பேய்த்தொண்டர் - பேய்த்தன்மை வாய்ந்த திருத்தொண்டர், பீளைஉடை கண்களால் - பீளையையுடைய கண்களைக் கொண்டு, பின்னை - பிறகு, காண்பது-காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.*

*பொன்னம்பலத்தில் எழுந்தருளிய தூக்கிய திருவடியுடைய இறைவனது திருநடனத்தைத் தொழுதபிறகு காணத்தக்க*

தொன்றுமில்லை யென்பதாம். கமுகுகள் பாளைவிரியும் காலத்து மிக்க வாசனையை யெங்கும் பரப்பி அழகிய தோற்றத்தை யுடையவாய் விளங்கித் தாமுடைய இடங்களெல்லாம் நீர்வள முடையன வெனக் காட்டும் பெற்றி பற்றி 'பாளையுடைக்' கமுகு என்றதென்க. பன்மாடம் நெருங்கியென்றது மிகுதிபற்றி. எறிதல்-அலைவீசுதல். வாழ்தல்-தங்குதல். தில்லை மரம் அடர்ந்த வனத்தில் ஆன பதியும் தில்லை எனப்பட்டது. ஆள உடைக்கழல்-யாவரையும் ஆளும் பொருட்டு உள்ளதாகிய குஞ்சிதபாதம். இத் திருவடியே முத்திபயப்பதாம். இதனை "மூத்தி நான்ற மலர்ப் பதத்தே நாடு" என்னுந் திருவாக்காற் காண்க. ஆடல் - பஞ்சக் கிருத்திய அநுக்கிரகத் திருத்தாண்டவம். பேய்த்தொண்டர் - சிவஞானிகள் பித்தர் பேயர் பாலர் இவர்களது தன்மையுடையவ ராவர் என்பதனால் பேய்த்தொண்டர் ஆயினார். தஞ்செயல் இழந்து பரவசமாதல் இதன் கருத்து. பீளையையுடைய இழிந்த கண்களும் இறைவனைக் காணப்பெறின் பெரும் பயனுடையவாம் என்பது. சித் அம்பலம், என்பது சிற்றம்பலம் என மருவிற்று. இதனைத் தற்பவம், தத்சமம், உற்சவம் முதலியவற்றினும் காண்க. அரன் - ஆன்மாக்களின் பாவங்களைச் சேதிப்பவன். (க)

பொருவிடை ஒன்றுடைப் புண்ணிய
மூர்த்தி புலியதளன்
உருவுடை அம்மலை மங்கை
மணாளன் உலகுக்கெல்லாம்
திருவுடை அந்தணர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

(ப - ரை.) பொருவிடை ஒன்று உடை - போர் செய்கின்ற இடபம் ஒன்றினையுடைய, புண்ணியமூர்த்தி - புண்ணியத்தையே வடிவமாக உடையவனும், புலி அதளன் - புலித்தோலை ஆடையாக உடையவனும், உருஉடை - அழகினையுடைய, அ - அந்த, மலைமங்கை மணாளன் - பார்வதி தேவியாருக்கு நாயகனும் ஆகிய, உலகுக்கு எல்லாம் - எல்லா உலகுக்கும், திருவுடை அந்தணர் - முத்திச் செல்வத்தையுடைய அந்தணர்கள், வாழ்கின்ற - வசிக்கின்ற, தில்லைச் சிற்றம்பலவன் - தில்லைச் திருச்சிற்றம்பலத் தெழுந்தருளிய இறைவனது, திருவடியைக் கண்ட - திருவடிகளைத் தரிசித்த, கண்கொண்டு - கண்களால், மற்று - வேறு

இனி - மேல், காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

இறைவன் மாயா உருவனன்றி மந்திரவடிவினன் ஆகையால் புண்ணிய மூர்த்தியாயினன். பார்வதி தேவியாரது உருவின் மேன்மை "படிஎழுதலாகாத மங்கையோடு மேவனே" என, திருவாலவாய்த் திருத்தாண்டகத்திற் கூறப்படுதலும் காண்க. தில்லைவாழ் அந்தணர் திருவுடைமை, நிரதிசயமாகிய முத்தித் திருவுடைமை. ஆளுடைய பிள்ளையாரும் "செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலமேய செல்வன்" என்றார். இவர் "ஊழி முதல்வர்க் குரிமைத் தொழிற் சிறப்பால், வாழி திருத்தில்லை வாழந்தணர்," ஆயினார் என்று திருத்தொண்டர் புராணங் கூறும். முதற் திருப்பாட்டால் திருநடனமும், இத் திருப்பாட்டாற் திருவடியும் கூறப்பட்டன வென்க. (உ)

தொடுத்த மலரொடு தூபமுஞ்
சாந்துங்கொண் டெப்பொழுதும்
அடுத்து வணங்கும் அயனொடு
மாலுக்குங் காண்பரியான்
பொடிக்கொண் டணிந்துபொன் னாகிய
தில்லைச்சிற் றம்பலவன்
உடுத்த துகில்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

(ப - ரை.) தொடுத்த மலர் ஒடு - தொடுக்கப்பட்ட மலர் மாலைகளோடு, தூபமும் சாந்தும் கொண்டு - நறும்புகையும் சந்தனமும் கைக்கொண்டு, எப்பொழுதும் எப்போதும், அடுத்து வணங்கும் - நெருங்கி வழிபடுகின்ற, அயன் ஒடு மாலுக்கும்-பிரம விட்டுணுக்களுக்கும், காண்பு அரியான் - காணுதற்கரியவனும், பொடிகொண்டு அணிந்து - திருநீற்றினால் திருமேனியைச் சண்ணித்து, பொன் ஆகிய - பொன்னால் வேய்ந்து முற்றிய, தில்லை சிற்றம்பலவன் - தில்லைத் திருச்சிற்றம்பலத்தை யுடையவனுமாகிய இறைவனது, உடுத்த துகில் - அணிந்த திருவாடையை, கண்ட - தரிசித்த, கண்கொண்டு - கண்களால், மற்று - வேறு, இனி - மேல், காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

தொடுத்தமலர் - மலர்மாலை. கொண்டு: - மூன்றனுருபு. மாலுக்கும் - உம்மை உயர்வு சிறப்புப் பொருளது. பொடி - திரு

நீறு, வடமொழியிற் பற்பம் என்பர். அணிந்து என்னும் வினையெச்சம் சிற்றம்பலவன் என்னும் குறிப்பு வினைப் பெயர் கொண்டது; பொன்னாகிய அம்பலம் எனக் கூட்டுக. பெரிய தேவர்க்குங் காண்பரியவன் அடியவர்க்கு எளியன் என்பது கருத்து. "காதிரண்டு பேர் கண்டோ ரிரண்டுபேர், ஏதிலராய்க் காணு ரிரண்டுபேர் - பேதைமுலை, உண்ணு ரிரண்டுபேர் ஓங்குபுலி யூருக்குப், பெண்ணான பேரிரண்டு பேர்" என்னும் தில்லைக் கலம்பகப் பாட்டு இதனை அழகுபெறக் கூறும். இத் திருப்பாட்டில் இறைவன் திருவாடை கூறப்பட்டது. (கூ)

வைச்ச பொருள்நமக் காகுமென்
றெண்ணி நமச்சிவாய
அச்ச மொழிந்தேன் அணிதில்லை
அம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி
உந்தியின் மேலசைத்த
கச்சின் அழகுகண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே.

(ப - ரை.) நமச்சிவாய - 'நமச்சிவாய' என்னும் திருவைந்தெழுத்து, நமக்கு - பற்றுக்கோ டொன்றுமில்லாத எங்களுக்கு, ஆகும் - உற்றவிடத் துதவும், வைச்சபொருள் - வைப்புப்பொருள், என்று எண்ணி - என்று நிச்சயித்து, அச்சம் ஒழிந்தேன் - பிறவிப் பயம் ஒழியப்பெற்றேன், அணி - அழகிய, தில்லை அம்பலத்து - தில்லைத் திருச்சிற்றம்பலத்து, ஆடுகின்ற - திருக்கூத்தாடுகின்ற, பிச்சன் - பித்தனும், பிறப்பு இலி - பிறப்பில்லாதவனும், பேர் நந்தி - பெரிய நந்தி யென்னும் திருநாம முடையவனும் ஆகிய இறைவன், உந்தியின்மேல் - திருவுந்தியின் மேல், அசைத்த - கட்டிய, கச்சின் - கச்சையினது, அழகு - அழகினை, கண்டால் - பார்த்தால், பின்னை - பிறகு, கண்கொண்டு - கண்களால், காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

வைச்ச, பிச்சன் என்பன வைத்த, பித்தன் என்பவற்றின் போலி. நமச்சிவாய நமக்கு ஆகும் வைச்ச பொருள் என மாற்றியுரைக்க. வைச்ச பொருள் - சேமநிதி, புதையல். நமச்சிவாய - தூல பஞ்சாக்கரம். அச்சம் - பிறவிப்பயம். இறைவன் தன் பெருமை தானறியாத் தன்மையனும், அடியார்மாட்டுப் பெருவிருப்புடையனாய் யாதுஞ் செய்பவனுமாதலின் பித்தனாயினன் என்க. ஆளுடைய நம்பிகள் "பித்தாபிறைசூடி" யென்

பது காண்க. பேர் என்பதைப் பெயர் எனக்கொண் டுரைத்தலு மாம். நந்தி - அழிவில்லாதவன். உந்தியின்மே லசைத்த கச்சு- திருவுதாக் கச்சு. அழகு - பொலிவு. இத் திருப்பாட்டில் திரு வுந்திக் கச்சு கூறப்பட்டது. (௬)

செய்ஞ்ஞின்ற நீலம் மலர்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள்
கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த
நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற ஆடல்கண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே.

(ப - ரை.) செய்ஞ்ஞின்ற - வயல்களிற்றங்கிய, நீலம் - கருங் குவளைகள், மலர்கின்ற - மலர்ந்து கமழ்கின்ற, தில்லைச் சிற்றம்பல வன் - தில்லைத் திருச்சிற்றம்பலத்து எழுந்தருளியவனும், நெய்ஞ் ஞின்று எரியும் - நெய்தங்கி எரிகின்ற, விளக்கு ஒத்த - விளக் கொளியொத்த, நீலமணி மிடற்றான் - நீலமணிபோலும் திருமிடற் றினையுடையவனுமாகிய இறைவன், மைஞ்ஞின்ற - மைதீட்டிய, ஒண்கண் - அழகிய கண்களையுடைய, மலைமகள் - உமாதேவியார், கண்டு - தொழுது, மகிழ்ந்து நிற்க - களிகொண்டிருக்க, கைஞ் ஞின்ற - இடக்கரத்தால் தூக்கிய திருவடியைக் காட்டி நிற்கின்ற, ஆடல்-திருநடனத்தை, கண்டால் - தொழுதால், பின்னை - பிறகு, கண்கொண்டு - கண்களால், காண்பது - காணத் தக்கது, என்னே - வேறு யாதுளது என்றவாறு.

நின்ற எனற்பாலது ஞின்ற எனப் போலியாயிற்று. நீலம் - நீலோற்பலம், கருங்குவளை. மலைமகள் - சிவகாம வல்லியார். கண்டு மகிழ்ந்து நிற்றல்-இறைவனது ஞானநடனம், தொழுதோரை முத் தித் தடங்கரையிற் சேர்ப்பமதனினும், ஆன்மாக்கள் தம் ஊனக் கண்களாற் கண்டு திளைக்கமாட்டாமைபற்றி, உலகன்னை யாகிய சிவகாமவல்லியார், பாலுண்ணுங் குழவியினது பசிய குடர் மருந்து வேகத்தை யாற்றாமைபற்றி அதனைத் தாயுண்ணு மாறு போல இறைவனது திருநடனத்தைக் கண்டு ஆன்மாக் கட்கு அருளுதல். "பாலுண் குழவி பசுங்குடர் பொறாதெனை, நோயுண் மருந்து தாயுண் டாங்கு, மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப, வையமீன் றளித்த தெய்வக் கற்பின், அருள்சூற் கொண்ட வையரித் தடங்கண், திருமாண் சாயல்

திருந்திழை காணச் சிற்சபை பொலியத் திருநடம் புரியும், அற்புதக் கூத்த" என்னும் சிதம்பர மும்மணிக் கோவையா னறிக. விளக்கு: ஆகுபெயர். கைஞ்ஞின்ற ஆடல் - வீசிய கரத்தால் குஞ்சிதபாதத்தைக் காட்டியாடும் நடனம். இத் திருப் பாட்டால் இறைவன் குஞ்சிதபாதத்தைக் காட்டியாடுதல் கூறப் பட்டது. (ரு)

ஊனத்தை நீக்கி உலக
றியஎன்னை ஆட்கொண்டவன்
தேனைத் தெனக்கினி யான்தில்லைச்
சிற்றம் பலவன்எங்கோன்
வானத் தவருய்ய வல்நஞ்சை
உண்டகண் டத்திலங்கும்
ஏனத் தெயிறுகண் டாற்பின்னைக்
கண்கொண்டு காண்பதென்னே.

(ப - ரை.) ஊனத்தை நீக்கி - எனக்குற்றதாகிய குறை பாட்டை நீக்கும்படி செய்து, உலகு அறிய - உலகினர் யாவரும் அறியும்படி, என்னை - ஒன்றுக்கும் பற்றாத எளியேனை, ஆட் கொண்டவன் - ஆட்கொண்டருளியவனும், தேன் ஒத்து - தேன் போன்று, எனக்கு - அடியேனுக்கு, இனியான் - இன்பத்தைத் தருபவனும், தில்லைச் சிற்றம்பலவன் - தில்லைத் திருச்சிற்றம்பலத் தெழுந்தருளியவனும், எம்கோன் - எம் தலைவனும் ஆகிய இறைவன், வானத்தவர் உய்ய - தேவர்கள் சாவாது பிழைக் கும்படி, வல் நஞ்சை - கொடிய விடத்தை, உண்ட - உண்டருளிய, கண்டத்து - திருநீலகண்டத்தில், இலங்கும் - விளங்குகின்ற, ஏனத்து எயிறு - பன்றிக் கொம்பினை, கண்டால் - தரிசித்தால், பின்னை - பிறகு, கண்கொண்டு - கண்களால், காண்பது - காணத் தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

ஊனம் - குறைபாடு; சுவாமி நாயனார் சைவ சமயத்தை விட்டுச் சமணசமயப் படுகுழியில் வீழ்ந்திருந்த தன்மை; அது காரணமாகக் கொடுக்கப்பெற்ற சூலையுமாம். இவரை உலகறிய ஆட்கொண்டதை நாவுக்கரசு என்னும் நன்னாமம் உலகேழினும் நயப்புற வென்று இறைவன் அருளியதாகத் திருத்தொண்டர் புராணம் கூறுமாற்றால் அறிக. இறைவன் திருநடனம் கண்டோர் அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன் சொரியுங் குனிப் பாதலின் "தேனைத் தெனக்கினியான்" என்றதெனக. ஏனத்தெயிறு - திருமாலின் வராக அவதாரத்திற் பறித்த

கொம்பு, 'ஏன முளைக் கொம்பு' என்ற இடத்திற் கூறியது காண்க. இத் திருப்பாட்டில் இறைவன் திருநீலகண்டத்துத் தரித்த ஏனத் தெயிறு கூறப்பட்டது. (சு)

தெரித்த கணையால் திரிபுர
மூன்றுஞ்செந் தீயின்மூழ்க
எரித்த இறைவன் இமையவர்
கோமான் இணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

(ப - ரை.) தெரித்த-தேர்ந்தெடுத்த, கணையால்-அம்பினால், திரிபுரம் மூன்றும்-வானிலே திரிகின்ற மூன்று புரங்களையும், செந்தீயில் மூழ்க - செந்நிறமுள்ள தீயின் மூழ்குமாறு, எரித்த- எரித்தருளிய, இறைவன் - தலைவனும், இமையவர் கோமான் - தேவர்கள் பெருமானும், இணை அடிகள் - தம் இரண்டு சேவடிகளையும், தரித்த - தாங்கிய, மனத்தவர் - மனத்தினை உடைய அடியவர், வாழ்கின்ற - வசிக்கின்ற, தில்லைச் சிற்றம்பலவன்- தில்லைத் திருச்சிற்றம்பலத்து எழுந்தருளியவனும் ஆகிய இறைவனது, சிரித்த முகம் - புன்னகை புரியும் திருமுகத்தை, கண்ட- தரிசித்த, கண் கொண்டு-கண்களால், இனி - மேல், மற்று-வேறு, காண்பது-காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

தெரித்தல் - தக்கதெனத் தேர்ந்தெடுத்தல். திரிபுரம் : வினைத்தொகை; திரியும்புரம் என்பது பொருள். தரித்தல்- உள்ளக் கிழியின் உருவெழுதித் திளைத்தல். தரித்த மனத்தவர்- தில்லைவாழந்தணருமாம். சிரித்த முகம் - தன் சந்நிதியின்வரும் அடியவரை 'என்றுவந் தாயெனு மெம்பெரு மான்றன் றிருக் குறிப்பே' என்றபடி அழைத்தாட்கொள்ளும் திருக்குறிப்புடைய நகை முகம். இத் திருப்பாட்டில் இறைவன் திருமுக தரிசனங் கூறப்பட்டது. (எ)

சுற்றும் அமரர் சுரபதி
நின்றிருப் பாதம்அல்லால்
பற்றேன் றிலோமென் றழைப்பப்
பரவையுள் நஞ்சைஉண்டான்

சேற்றங் கனங்கனைத் தீவிழித்
தான்தில்லை அம்பலவன்
நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

(ப - ரை.) சுற்றும் - நாற்புறமுஞ் சூழ்ந்த, அமரர் - தேவர்களும், சுரபதி - அவ்வமரர் தலைவனாகிய இந்திரனும், நின் - தேவரீரது, திருப்பாதம் அல்லால் - திருவடியை அல்லாமல், பற்று ஒன்று இலோம் - பிறிதொரு துணை உடையோ மல்லோம், என்று அழைப்ப - என்று முறையிட்டழைக்க, பரவையுள் நஞ்சை - கடலிலெழுந்த நஞ்சினை, உண்டான் - உண்டருளின வனும், அங்கு - முன்பு திருக்கயிலாயத்தில், அநங்கன் - மன்மதன், செறு - செறும்படி, தீ விழித்தான் - அனற்கண்ணைத் திறந்தருளின வனும், தில்லை அம்பலவன் - தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளினவனுமாகிய இறைவனது, நெற்றியில் கண் - நெற்றிக் கண்ணை, கண்ட - தரிசித்த, கண்கொண்டு - கண்களால், இனி - மேல், மற்று - வேறு, காண்பது - காணத்தக்கது, என்னே - யாது உளது என்றவாறு.

சுற்றுதல் - சூழ்தல். சூழப்படுதல் தலைமையைக் குறிக்குமாற்றை உய்த்துணர்க. அமரர் - இறவாதவர்: உபசாரம். ஈண்டுத் தேவர்களும் அவர் தலைவனும் கூறப்பட்டு மற்றையோர் கூறப்படாமையால் அவர் நஞ்சினால் நலிந்து கூவி யழைத்திலர் போலுமென எற்படக் கூடிய ஐயப்பாட்டினை விலக்குவான், எங்களை யொழிந்த பிறரும் எம்போல்வாரே, இப்போது காக்கஇல்லார், நீவிர் ஒருவரே தஞ்சம் என்று அவர் அழைத் தாங்கு அவர் வாயில் வைத்துக் கூறிய சிறப்பினைக் கண்டு கொள்க. அழைத்தல் - ஓலமிட்டுக் கூவுதல். செற என்பது செற்று எனத் திரிந்து நின்றது. விழித்துச் செற்றவன் எனப் பிரித்துக் கூட்டலுமாம். அநங்கன் - அங்கமில்லாதவன், அருவன் தன் நாயகிக்கு மட்டும் அங்கனாகவும் ஏனையோர்க்கு அநங்கனாகவும் இருக்க அருளியது இறைவன் என்பதைக் கந்தபுராணத்தா லறிக. நெற்றியிற் கண் - விருபாக்ஷம்: இது தீக்கண். இத் திருப்பாட்டால் நெற்றித் திருக்கண் கூறப்பட்டது. (அ)

சித்தத் தெழுந்த செழுங்கம
லத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற
தில்லைச்சிற் றம்பலவன்

முத்தும் வயிரமும் மாணிக்கம்
தன்னுள் விளங்கியதூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு
மற்றினிக் காண்பதென்னே.

(ப - ரை.) *சித்தத்து - அன்பரது மனத்தகத்து, எழுந்த - பூத்த, செழுங் கமலத்து அன்ன - செழுவிய தாமரைமலரினை ஒத்த, சேவடிகள் - செவ்விய திருவடிகளை, வைத்த - எழுந்தருளச் செய்த, மனத்தவர் - மனத்தினை யுடையவர்கள், வாழ்கின்ற - வதிகின்ற, தில்லைச் சிற்றம்பலவன் - தில்லைத் திருச்சிற்றம்பலத் தெழுந்தருளிய இறைவனது, முத்தும் வயிரமும் - முத்தும் வயிரமுமாகிய இவை, மாணிக்கம் தன்னுள் - மாணிக்கத்தினிடத்து, விளங்கியது-மிளிர்ந்தாலொத்த, ஊமத்தமலர்-ஊமத்த மலரினை, கண்ட - தரிசித்த, கண்கொண்டு - கண்களால், இனி - மேல், மற்று - வேறு, காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.*

*சித்தத்து எழுந்த தாமரை - மனத்திற் பூத்த தாமரை: இஃது ஆதாரத் தாமரைகள் எட்டனுள் ஒன்று. இதன் விரிவை எல்லாம் யோக நூலுட் கண்டு தெளிக. செழுங் கமலத்தன்ன சேவடிகள் வைத்த மனத்தவர் என்பதை, "செழுங்கமலத் திரளனகின் சேவடி சேர்ந்தமைந்த, பழுத்த மனத்தடியார்" என்னுந் திருவாசகத்தோடு ஒப்பு நோக்குக. முத்தும் வயிரமும் போன்ற ஒளியுடன் கூடிய வெண்ணிறமுடைய ஊமத்தமலர் மாணிக்கம் போன்ற செந்நிறமுடைய இறைவன் திருச்சடைக் கற்றையில் விளங்கும் கோலம் ஈண்டுக் கருதப்பட்டது. தூமத்தம் எனப் பிரிப்பினும் அமையும். மூத்து விடப்பட்டது என்னும் பொருளது: இப்பியால் விடப்படுவது. முத்தும் வயிரமும் வெண்மணிகள், மாணிக்கம் செந்நிறமணி. இத் திருப் பாட்டால் இறைவன் திருச்சடையிற்றரித்த ஊமத்தமலர் கூறப்பட்டது.* (க)

தருக்கு மிகுத்துத்தன் தோள்வலி
உன்னித் தடவரையை
வரைக்கைக ளாலெடுத் தார்ப்ப
மலைமகள் கோன்சிரித்து
அரக்கன் மணிமுடி பத்தும்
அணிதில்லை அம்பலவன்
நெருக்கி மிதித்த விரல்கண்ட
கண்கொண்டு காண்பதென்னே.

(ப - ரை.) தருக்கு மிகுத்து - செருக்குமிக்கு, தன் தோள் வலி - தனது புயவலியை, உன்னி - அதிகமாக எண்ணி, தட வரையை - பெரிய திருக்கைலாய மலையை, வரைக்கைகளால் - மலைபோன்ற திண்ணிய கைகளால், எடுத்து - பெயர்த்தெடுத்து, ஆர்ப்ப - ஆரவாரஞ் செய்ய, மலைமகள் கோன் - பார்வதிக்கு நாயகனாகிய, அணி தில்லை அம்பலவன் - அழகிய தில்லைத் திருச் சிற்றம்பலவன், சிரித்து - நகைத்தெள்ளி, அரக்கன் - அவ்விராவ ணனது, மணிமுடி பத்தும் - கிரீடமணிந்த தலைகள் பத்தையும், நெருக்கி - மலையின்கீழ் அழுத்தி, மிதித்த - மிதித்தருளிய, விரல், திருவிரல்களை, கண்ட - தரிசித்த, கண் கொண்டு - கண்களால் - காண்பது - காணத்தக்கது, என்னே - யாதுளது என்றவாறு.

வரைக்கை - வரைகளையுடைய கை என்றலுமாம். சிரித்தல் - இவனது வலி யென்னே என்று எண்ணி நகையாடி எள்ளுதல். முடி - தலையை யுணர்த்திற்று. மிதித்த விரல் என்றது இறை வனது அளவிலாற்றலை யுணர்த்தியவாறு. இத் திருப்பாட்டால் இறைவனது திருவிரற் காட்சி கூறப்பட்டது. (க0)

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசுநாயனார்

# திருப்பூவணம்

---

## திருத்தாண்டகம்

### சிவனுருவம்

*திருச்சிற்றம்பலம்*

வடியேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழும் திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.

(ப - ரை.) *பொழில் திகழும்* - சோலைகள் விளங்குகின்ற, *பூவணத்து* - திருப்பூவணத்தில் எழுந்தருளிய, *எம்* - எம்முடைய, *புனிதனார்க்கு* - தூயராகிய சிவபெருமானுக்கு, *வடி ஏறு* - வடித்தல் ஏறிய, *திரிசூலம்* - மூவிலைச்சூலம், *தோன்றும் தோன்றும்* - தோன்றாநிற்கும் தோன்றாநிற்கும், *வளர் சடைமேல்* - நீண்ட சடைமேல், *இளமதியம்* - இளம்பிறை, *தோன்றும் தோன்றும்* - தோன்றாநிற்கும் தோன்றாநிற்கும், *கடி ஏறு* - ஒளி மிகுந்த, *கமழ்* - மணங் கமழ்கின்ற, *கொன்றைக் கண்ணி* - கொன்றை மலர்மாலை, *தோன்றும்* - தோன்றாநிற்கும், *காதில்* - திருக்காதுகளில், *வெண் குழை* - வெண்ணிறமாகிய சங்கக் குழையும், *தோடும்* - தோடும், *கலந்து* - வலப்புறத்தும் இடப்புறத்தும் சேர்ந்து, *தோன்றும்* - தோன்றாநிற்கும்; *இடி ஏறு* - இடிபோற் பிளிறுதல் மிக்க, *களிற்றுரிவை* - யானைத் தோலாகிய, *போர்வை* - போர்வை, *தோன்றும்* - தோன்றாநிற்கும்; *எழில் திகழும்* - அழகு மிக்கு விளங்கும், *திருமுடியும்* - திருமுடியும், *இலங்கித் தோன்றும்* - விளங்கித் தோன்றாநிற்கும்; *பொடி ஏறு* - திருவெண்ணீறு

சண்ணிக்கப் பெற்ற, திருமேனி - திருமேனியானது, பொலிந்து தோன்றும் - விளங்கித் தோன்றாநிற்கும் என்றவாறு.

வடி - வடித்தல்; அழகுமாம். திரிசூலம் - முத்தலைச்சூலம். தோன்றும் தோன்றும்; அடுக்கு உவகை பற்றியது. கடி - புதுமை, ஒளி. கண்ணி - முடியிற்சூடும் மாலை. குழைதோடு - முன்னர்க் கூறியது காண்க. பூவணம் - பாண்டி நாட்டுத்தலம். (க)

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட் காரமுதம் ஆகித் தோன்றும்
ஊணாகி ஊர்திரிவான் ஆகித் தோன்றும்
ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேல்
சேணாக வரைவில்லால் எரித்தல் தோன்றும்
செத்தவர்தம் எலும்பினாற் செறியச் செய்த
பூணாணும் அரைநாணும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

(ப - ரை.) ஆணாகி - ஆணுருவாயிருந்தே, பெண்ணாய - அதனோடு பெண்ணுருவுமாகிய, வடிவு தோன்றும் - திருவுருவம் தோன்றாநிற்கும்; அடியவர்கட்கு - தொண்டர்களுக்கு, ஆர் அமுதம் ஆகி-கிடைத்தற்கரிய அமுதமாகி, தோன்றும்-தோன்றாநிற்கும்; ஊண் ஆகி - பலியுணவின் பொருட்டாக, ஊர் திரிவான் ஆகித் தோன்றும் - ஊர்தோறும் திரிபவனாகித் தோன்றாநிற்கும்; ஒற்றை - ஒன்றாகிய கலையையுடைய, வெண்பிறை தோன்றும் - வெண்ணிறத்தை யுடைய பிறைச்சந்திரன் தோன்றாநிற்கும்; பற்றார் தம்மேல் - பகைவராகிய திரிபுரத்தவரை, சேண் நாக வரைவில்லால்-வானமளாவிய மேருமலையாகிய வில்லினால், எரித்தல் தோன்றும் - எரிசெய்தமை தோன்றாநிற்கும்; செத்தவர் தம் - இறந்தோரது, எலும்பினால் செறியச் செய்த - எலும்பினாற் பொருந்தக் கட்டிய, பூண் நாணும் - தரிக்கும் மாலைகளும், அரை நாணும் - அரைஞாணும், பொலிந்து தோன்றும் - விளங்கித் தோன்றாநிற்கும் என்றவாறு.

இப் பதிகத்தின் ஒவ்வொரு திருப்பாட்டின் உரைத் தொடக்கத்தும் 'பொழி றிகழும் பூவணத் தெம் புனிதனார்க்கு' என்பதற்கு உரை கூறிக்கொள்க.

ஆணாகிப் பெண்ணாய வடிவு - ஆணும் பெண்ணும் கலந்த திருவுருவம். ஆர் அமுதம் - உண்ணுமமுதமுமாம். ஆகி: செயவெனெச்சத் திரிபு. ஒற்றை - ஒன்று. செத்தவர் - ஊழியிறுதியில்

நசித்த பிரம விட்டுணுக்கள். எலும்பாபரணம் பூண்ட வுருவம் - கங்காளத் திருவுருவம். இது சிவபெருமானது இறைமைக் குணத்தை விளக்கிக் காட்டுகின்றது. இச் செய்தியை, "பெருங் கடல் மூடிப் பிரளயங்கொண்டு பிரமனும் போய், இருங்கடன் மூடி யிறக்கு மிறந்தான் களேபரமும், கருங்கடல் வண்ணன் களே பரமுங்கொண்டு கங்காளராய், வருங்கடல் மீளநின் றெம்மிறை நல் வீணை வாசிக்குமே" என்னும் திருவிருத்தத்தாற் காண்க. (உ)

கல்லாலின் நீழற் கலந்து தோன்றும்
  கவின்மறையோர் நால்வர்க்கும் நெறிக ளன்று
சொல்லாகச் சொல்லியவா தோன்றும் தோன்றும்
  சூழரவு மான்மறியும் தோன்றும் தோன்றும்
அல்லாத காலனைமுன் அடர்த்தல் தோன்றும்
  ஐவகையாய் நினைவார்பால் அமர்ந்து தோன்றும்
பொல்லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும்
  பொழில் திகழும் பூவணத்தெம் புனித ஞர்க்கே.

(ப - ரை.) கல்லாலின் நீழல் - கல்லால் மரத்தின் நீழலில், கலந்து தோன்றும் - பொருந்தித் தோன்றா நிற்கும்; கவின்-சிவப் பொலிவு வாய்ந்த, மறையோர் நால்வர்க்கும் - பிரம புத்திரர் நால் வர்க்கும், அன்று-அந்நாளில், நெறிகள்-ஞான நெறிகளை, சொல் லாக - கட்டுரைகளாக, சொல்லிய ஆறு - உணர்த்தியருளிய வகை, தோன்றும் தோன்றும்-மிகவும் தோன்றும்; சூழ் அரவும்-சுற்றிய பாம்புகளும், மான்மறியும் - மான்கன்றும், தோன்றும் தோன்றும்-தோன்றாநிற்கும் தோன்றாநிற்கும்; அல்லாத காலனை-கொடிய இயமனை, முன்-முன்பு, அடர்த்தல் தோன்றும் - வென் றமை தோன்றாநிற்கும்; நினைவார் பால் - நினைக்கின்ற அன்பர் மாட்டு, ஐவகையாய் - பஞ்சகிருத்திய மூர்த்திகளாய், அமர்ந்து தோன்றும்-விருப்பத்தோடு தோன்றாநிற்கும்; பொல்லாத புலால் எலும்பு - கொடிய ஊன் தங்கிய எலும்புகள், பூணாய்த்தோன்றும் - ஆபரணமாகத் தோன்றா நிற்கும் என்றவாறு.

கல்லாலி னீழற்கலந்து தோன்றியது - தென்முகத் தெய்வ மாய் எழுந்தருளிய காலத்தில். கவின்- அழகு, சைவத் திருவுருவப் பொலிவு. நெறி - ஞானமெய்ந்நெறி, இஃது ஐந்தெழுத்தியல்பு; இதனை "ஞான மெய்ந்நெறிதான் யாவர்க்கும் நமச்சிவாயச் சொலாம்" எனும் குன்றை முனிவர் திருவாக்கா னறிக. சொல்லாமற் சொன்னவாறு - ஆலவாய்ப்புராண தக்ஷிணாமூர்த்தி தோத்திரத்தானு மறிக; அனுபவம் வாக்குமனா தீதமாகலின்

இங்ஙனங் கூறியதென்க. அல்லாத - நல்லவன் அல்லாத. அடர்த்தல்-கொல்லல். ஐவகை - பிரம, விட்டுணு, உருத்திர, மகேச்சுர, சதாசிவத் திருவுருவங்கள். பொல்லாத - அசுத்தத் தன்மை வாய்ந்த. கெட்ட நாற்றம் என்பதிற் காண்க. (ங)

படைமலிந்த மழுவாளும் மானும் தோன்றும்
 பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியும் தோன்றும்
 நான்மறையின் ஒலிதோன்றும் நயனம் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளும் தோன்றும்
 ஊரல்வெண் சிரமாலை உலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
 பொழில் திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

(ப - ரை.) படைமலிந்த - படையிற் சிறந்த, மழுவாளும் - மழுப்படையும், மானும் - மான்கன்றும், தோன்றும் - தோன்றுநிற்கும், பன்னிரண்டு கண்ணுடைய - பன்னிரண்டு திருக் கண்களையுடைய, பிள்ளை - புதல்வர், தோன்றும் - தோன்றுநிற்பர்; நடைமலிந்த - நடையிற் சிறந்த, விடையோடு-இடபவூர்தியோடு, கொடியும் - இடபக்கொடியும், தோன்றும் - தோன்றுநிற்கும்; நான் மறையின் ஒலி-நான்கு வேதங்களின் ஒலித்தல், தோன்றும்-தோன்றுநிற்கும்; நயனம் - முக்கண்கள், தோன்றும் - தோன்றுநிற்கும்; உடைமலிந்த - உடையிற்சிறந்த, கோவணமுங் கீளும்-கோவணமுங் கீளும், தோன்றும் - தோன்றுநிற்கும்; ஊரல் வெண்சிரமாலை - நகர்தலையுடைய வெள்ளிய தலைமாலை, உலாவித் தோன்றும் - அசைந்து தோன்றுநிற்கும்; புடைமலிந்த - நாற்புறமும் மிக்குச் சூழ்ந்த, பூதத்தின் பொலிவு - பூதகணங்களின் விளக்கம், தோன்றும் - தோன்றுநிற்கும் என்றவாறு.

மலிதல் - மிகுந்து சிறத்தல். பிள்ளை - முருகக்கடவுள். நடைமலிந்த விடை - இறைவன் திருவுள்ளக் குறிப்பறிந்து நடக்கும் இடபம். இதனை "வேண்டு நடைநடக்கும் வெள்ளேறேறி வெண்காடுமேய விகிர்தனாரே" என்னும் திருத்தாண்டகத்தா லறிக. இறைவன் சந்நிதானத்து எப்போதும் நான்கு வேதங்களும் அவன் புகழைத் துதித்துக்கொண்டு நிற்பனவாகலின், "நான் மறையின் ஒலிதோன்றும்" என்றார். கீளும் கோவணமும்-"மன்னுகலை துன்னுபொருண் மறைநான்கே வான்சரடாத் தன்னையே கோவணமாச் சாத்தினன் காண்சாழலோ" என்னும் திருவாக்குக் கிணங்க, வேதவுருவாதலின் உடையிற் சிறந்தன

வாயின. முடை மலிந்த என்று பிரித்தலும் ஆம். மூரல் வெண்சிரமாலை எனக்கொண்டு நகுவெண்டலை மாலை என்று கொள்ளலுமாம். புடைமலிதல் - சூழ்ந்துபோதல். (ச)

மயலாகும் தன்னடியார்க் கருளுந் தோன்றும்
மாசிலாப் புன்சடைமேல் மதியம் தோன்றும்
இயல்பாக விடுபிச்சை யேற்றல் தோன்றும்
இருங்கடல்நஞ் சுண்டிருண்ட கண்டம் தோன்றும்
கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை
ஆயிரமா முகத்தினொடு வானில் தோன்றும்
புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.

(ப - ரை.) மயலாகும் - பெருவிருப்புடைய, தன் அடியார்க்கு - தம் தொண்டர்களுக்கு, அருளும் தோன்றும் - அருள்புரிதலும் தோன்றாநிற்கும்; மாசு இலா - குற்றமற்ற, புன் சடைமேல் - புல்லிய சடைமேல், மதியம் தோன்றும் - பிறைச் சந்திரன் தோன்றாநிற்கும்; இயல்பாக - ஒழுங்காக, இடுபிச்சை-இடப்படுகின்ற பலியை, ஏற்றல் தோன்றும் - ஏற்றுக்கோடல் தோன்றாநிற்கும்; இரும் கடல் - பெரிய கடலில் தோன்றிய, நஞ்சு உண்டு - நஞ்சையுண்டு, இருண்ட - கறுத்த, கண்டம் தோன்றும் - திருநீலகண்டம் தோன்றாநிற்கும்; கயல்பாய - கயன் மீன்கள் பாயாநிற்க, கடும்கலுழி - கடிய பெருக்கினையுடைய, கங்கைநங்கை - கங்காதேவியார், ஆயிரம்மா முகத்தினொடு - பல பெரிய முகங்களோடு; வானில் தோன்றும் - ஆகாயத்தில் தோன்றாநிற்கும்; புயல்பாய - அக்கங்கை வெள்ளம்பாயுமாறு, சடைவிரித்த - சடையை விரித்த, பொற்பு தோன்றும் - அழகு தோன்றாநிற்கும் என்றவாறு.

மயலாதல் - அவனுக்கே பித்தாதல், தன்னை மறத்தல், தன்னுமங்கெடுதல் முதலாயின. கடுமை - வேகமுடைமை முதலியன. ஆயிரமுகம்-பலமுகம். ஆயிரம் அநேகார்த்தம். புயல்: ஆகுபெயர், நீரையுணர்த்திற்று; ஈண்டுக் கங்கைவெள்ளம். (ரு)

பாராழி வட்டத்தார் பரவியிட்ட
பன்மலரும் நறும்புகையும் பரந்து தோன்றும்
சீராழித் தாமரையின் மலர்க ளன்ன
திருந்தியமா நிறத்தசே வடிகள் தோன்றும்

ஓராழித் தேருடைய இலங்கை வேந்தன்
உடல்துணித்த இடர்பாவங் கெடுப்பித் தன்று
போராழி முன்ஈந்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித ஞர்க்கே.

(ப - ரை.) பார் ஆழிவட்டத்தார் - பெரிய கடல்சூழ்ந்த நிலவுலகத்தார், பரவிஇட்ட - வழிபட்டு வணங்கிய, பல்மலரும் - பலவகைப் பூக்களும், நறும்புகையும் - மணங்கமழும் தூபமும், பரந்துதோன்றும் - விரிந்து தோன்ருநிற்கும்; சீர்ஆழி - சிறந்த வட்டமாகிய, தாமரையின் மலர்கள் அன்ன - செந்தாமரை மலர்களையொத்த, திருந்திய - திருத்தமாகிய, மாநிறத்த - அழகிய நிறத்தையுடைய, சேவடிகள் தோன்றும் - செவ்விய திருவடிகள் தோன்ருநிற்கும்; ஓர் ஆழி தேருடைய - ஒப்பற்ற சக்கரத்தையுடைய தேரைப்பெற்ற, இலங்கை வேந்தன் - இலங்கைக்கரசனுகிய இராவணனது, உடல் துணித்த - உடம்பைத் துணித்த, இடர்பாவம் - இடரினை விளைக்கும் பாவத்தை, கெடுப்பித்து - ஒழித்து, அன்று - அந்நாளில், போர்ஆழி - போர்புரிதற்கு ஏற்ற சக்கரத்தை, முன் ஈந்த - முன்கொடுத்த, பொற்பு தோன்றும் - வள்ளன்மை தோன்ரு நிற்கும் என்றவாறு.

ஆழி பார்வட்டம் என மாற்றுக. பன்மலர் - அட்டபுட்பம் முதலிய பல பேதப்பட்ட மலர்கள். நறும்புகை - நறுநெய் கலந்த கமழ்ந்த குங்கிலியத் தூப முதலியன. ஆழி - வட்டவடிவினது. "மாணிக்க மொத்து மரகதம் போன்று வயிரமன்னி ஆணிக் கனகமுமொ"ப்பது இறைவன் திருவடியிணையாதலின் திருந்திய மாநிறத்த சேவடி என்ருர். ஓராழித்தேர் - புட்பக விமானம்; குபேரனிடத்துப் பறித்தது. இலங்கை மன்னன் உடல் துணித்தது-இராமமூர்த்தி. இடர்பாவம் - பிரமக் கொலைபாவம். இராமபிரான் இறைவனைப் பூசித்து இப்பாவத்தைப் போக்கியது எல்லாப் புராணங்களாலும் கூறப்பெறும். சக்கரங்கொடுத்தது இவ் விராமாவதார காலத்தன்றெனினும் சக்கரம் பெற்ற விட்டுணு மூர்த்தியும் இடர்பாவங் கெட்ட இராமபிரானும் ஒரே மூர்த்தியின் மூல சொரூபமும், அவதார சொரூபமுமாதலின் இவ்வாறு கூறப்பட்டது. போராழி முன்னீந்ததை, "ஏறுடனேழடர்த்தா னெண்ணியா யிரம்பூக் கொண்டு, ஆறுடைச் சடையினனை யர்ச்சித்தா னடியிணைக்கீழ், வேறுமோர் பூக் குறைய மெய்ம்மலர்க் கண்ணையிண்டக், கூறுமோ ராழியீந்தார் குறுக்கைவீ ரட்டனரே" என்னுந் திருநேரிசையாற் காண்க. (சு)

தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றும்
சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்
மின்னனைய நுண்இடையாள் பாகந் தோன்றும்
வேழத்தின் உரிவிரும்பிப் போர்த்தல் தோன்றும்
துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்பும்
தூயமா மதியுடனே வைத்தல் தோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

(ப-ரை.) *தன் அடியார்க்கு-தம்முடைய திருத்தொண்டர்க்கு, அருள் புரிந்த - கருணை செய்த, தகவுதோன்றும் - மேன்மைக் குணம் தோன்றுகிற்கும்; சதுர்முகனை-நான்முகனை, தலையரிந்த - தலையினை யரிந்த, தன்மை தோன்றும் - வீரத்தன்மை தோன்று கிற்கும்; மின் அனைய - மின்னற்கொடிபோன்ற, நுண் இடையாள் - நுட்பமாகிய இடையினையுடைய உமாதேவியாரது, பாகம் தோன்றும் - இடப்பாகந் தோன்றுகிற்கும்; வேழத்தின் உரி - யானையினது தோலை, விரும்பி - உகந்து, போர்த்தல் தோன்றும்- போர்த்துக்கொள்ளுதல் தோன்றுகிற்கும்; துன்னிய - செறிந்த, செஞ்சடைமேல் - செந்நிறமாகிய சடையின்மீது, ஓர் புனலும் - ஒப்பற்ற கங்கையும், பாம்பும் - அரவமும், தூயமாமதியுடனே - புனிதமாகிய சிறந்த பிறையொடு, வைத்தல் தோன்றும் - வைத்தமை தோன்றுகிற்கும்; பொன் அனைய - பொன்போன்ற, திரு மேனி பொலிந்து தோன்றும் - திருவுருவம் விளங்கித் தோன்று கிற்கும் என்றவாறு.*

*தகவு-மேன்மைக்குணம், பெருந்தகைமை. தலை - உச்சித் தலை. இத்தலை இறைவனை யறியாது அல்லாத வார்த்தை சொன்னமையின் பறிக்கப்பட்டதென்பது சரித்திரம். இதனை, "ஆதிக்க ணான்முகத்தி லொன்று சென்று வல்லாத சொல் லுரைக்கத் தன் கைவாளால், சேதித்த திருவடியைச் செல்ல நல்ல சிவலோக நெறிவகுத்துக் காட்டுவானை" எனத் திருநள் ளாற்றுத் திருத்தாண்டகம் கூறுதல் காண்க. புனல் - கங்கையை யுணர்த்திற்று. பொன்னனைய திருமேனி - பொன்னார்மேனி, "பொன்னார் மேனியனே" என்பது தமிழ்வேதம். இரண்யவாகு முதலியன வேதவாக்குகள்.* (எ)

செறிகழலும் திருவடியும் தோன்றும் தோன்றும்
திரிபுரத்தை எரிசெய்த சிலையுந் தோன்றும்
நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்
நெற்றிமேற் கண்தோன்றும் பெற்றம் தோன்றும்

மறுபிறவி அறுத்தருளும் வகையும் தோன்றும்
மலைமகளும் சலமகளும் மலிந்து தோன்றும்
பொறியரவும் இளமதியும் பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

(ப - ரை.) *செறிகழலும் - செறியக்கட்டிய வீரக் கழலும், திருவடியும்-அதனை யணிந்த திருவடியும், தோன்றும் தோன்றும் - தோன்றாநிற்கும் தோன்றாநிற்கும்; திரிபுரத்தை எரிசெய்த - முப்புரங்களை எரித்த, சிலையும் தோன்றும் - வில்லுந் தோன்றாநிற்கும்; நெறியதனை விரித்து உரைத்த - செந்நெறியை விரிவாக அறிவுறுத்திய, நேர்மை தோன்றும் - செம்மைக்குணம் தோன்றாநிற்கும்; நெற்றிமேல்-நெற்றியின்மீது, கண்தோன்றும் - கண்தோன்றாநிற்கும்; பெற்றம் தோன்றும் - இடபம் தோன்றாநிற்கும்; மறுபிறவி-மேல்வரும் பிறவியை, அறுத்தருளும் வகையும் தோன்றும் - ஒழித்து அருள்செய்கின்ற விதமும் தோன்றாநிற்கும்; மலைமகளும் சலமகளும்-பார்வதிதேவியாரும் கங்காதேவியாரும், மலிந்து தோன்றும் - தனித்தனி விளங்கித் தோன்றாநிற்பர்; பொறி அரவும் - புள்ளிகளையுடைய பாம்பும், இளமதியும்- இளம்பிறையும், பொலிந்து தோன்றும் - விளங்கித் தோன்றாநிற்கும் என்றவாறு.*

*நெறியதனை விரித்துரைத்தது சனகாதி நால்வர்க்கு, மறுபிறவியறுத்தருளுதல் - இனிப் பிறவாமே காத்தல். தோன்றும் என்பது பலர்பாலுக்கும் ஆயிற்று.* (அ)

அரும்பொட்டு முலைமடவாள் பாகம் தோன்றும்
அணிகிளரும் உருமென்ன அடர்க்கும் கேழல்
மருப்பொட்டு மணிவயிரக் கோவை தோன்றும்
மணமலிந்த நடந்தோன்றும் மணியார் வைகைத்
திருக்கோட்டில் நின்றதோர் திறமும் தோன்றும்
செக்கர்வா னொளிமிக்குத் திகழ்ந்த சோதிப்
பொருப்பொட்டி நின்றதிண் புயமும் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

(ப - ரை.) *அரும்பு ஒட்டும் - கோங்கரும்பினைத் தாரத்து நின்ற, முலை - திருத்தனங்களையுடைய, மடவாள் - மடப்பத்தையுடைய உமாதேவியாரது, பாகம் தோன்றும் - இடப் பாகம் தோன்றாநிற்கும்; அணிகிளரும் - அழகு மிக்க, உரும் என்ன -*

இடிபோல, அடர்க்கும் கேழல்-ஆரவாரிக்கின்ற பன்றியினது, மருப்பு ஓட்டும் - கொம்பினோடு ஒட்டிய, மணிவயிரக் கோவை - வயிர மணியினது கண்டிகை, தோன்றும் - தோன்றாநிற்கும்; மணம்மலிந்த - மணமிக்க, நடம் தோன்றும் - திருநடனம் தோன்றாநிற்கும்; மணி ஆர் வைகை - மணிகளைக் கொழிக்கும் வைகை யாற்றினது, திருகோட்டின் - அழகிய கரையின்மீது, நின்றது - எழுந்தருளியிருந்ததாகிய, ஓர் திறமும் - ஒரு தன்மையும், தோன்றும் - தோன்றாநிற்கும்; செக்கர்வான் ஒளிமிக்கு - செவ்வானத்தினது ஒளிமிகுந்து, திகழ்ந்த சோதி - விளங்கிய ஒளியையுடைய, பொருப்பு ஓட்டி - மேருமலையை இகழ்ந்து, நின்ற - விளங்கிய, திண்புயமும - வலிய திருத்தோள்களும், தோன்றும்-விளங்கா நிற்கும் என்றவாறு.

அருப்பு: வலித்தல் விகாரம்: அரும்பு-தாமரை யரும்பெனலும் ஒன்று. அணிகிளரும் கோவை எனக் கூட்டுக. ஒட்டு ஓட்டு என நீட்டல் விகாரமாயிற்று. மணி - அழகுமாம். மண மலிந்த நடம்-பஞ்ச கிருத்திய மணம் வீசும் காப்புத் தாண்டவம்; மணமலிதலை, "சிவகந்தம் பரந்து நாற" என்பதாதியிற் காண்க. திருக்கோட்டினின்ற தோர்திறம் - அடியார்க்கெளியராய் எத்தகைய காரியமுஞ் செய்யுந் தன்மை; அடியார் ஈண்டு வாதஆரர்; வந்தியம்மையுமாம். வைகை வேகமுடையதென்பது. சோதியையுடைய புயம் என இயைப்பினும் ஆம். (க)

ஆங்கணைந்த சண்டிக்கும் அருளி அன்று
தன்முடிமேல் அலர்மாலை அளித்தல் தோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று
பலபிறவி அறுத்தருளும் பரிசும் தோன்றும்
கோங்கணைந்த கூவிளமு மதமத் தம்மும்
குழற்கணிந்த கொள்கையொடு கோலம் தோன்றும்
பூங்கணைவேள் உருவழித்த போற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

(ப - ரை.) ஆங்கு அணைந்த - மண்ணியாற்றங்கரையில் பாலாட்டிக் கொண்டிருந்த, சண்டிக்கும் - சண்டேச்சுர நாயனார்க்கும், அருளி - அருள்செய்து, அன்று - அந்நாளில், தன்முடிமேல் - தமது திருமுடியில் அணிந்திருந்த, அலர்மாலை - கொன்றைமலர் மாலையை, அளித்தல் தோன்றும் : கொடுத்தருளியது தோன்றாநிற்கும்; பாங்கு அணைந்து - தமது பக்கத்தை அடைந்து, பணி செய்வார்க்கு - திருத்தொண்டு செய்வோர்க்கு

அருளி - திருவருள் சுரந்து, அன்று - பண்டைக்காலந் தொட்டே, பலபிறவி அறுத்தருளும் - வரற்பாலனவாகிய பல பிறவிகளையும் ஒழித்தருளுகின்ற. பரிசும் தோன்றும் - வள்ளற் றன்மையுந் தோன்றுகிற்கும்: கோங்கு அணைந்த-வாசனை பொருந்திய, கூவிளமும் - வில்வமும், மதமத்தமும் - செழுவிய ஊமத்த மலரும் ஆகிய இவைகளை, குழற்கு அணிந்த - சடையிற்றரித்த, கொள்கையோடு கோலம் - கொள்கையோடு கூடிய அழகு, தோன்றும்-தோன்றுகிற்கும்; பூ கணை - பூவம்பினையுடைய, வேள் உருவு அழித்த - மாரவேளினது உருவத்தை எரித்தழித்த, பொற்பு தோன்றும் - வெற்றி தோன்றுகிற்கும் என்றவாறு.

சுட்டியொழிந்தது பிரசித்திபற்றி. சண்டி - சேய்ஞலூர்ப் பிள்ளையார். அருளியது - அவரை உச்சிமோந்து உடம்பு தைவந்து இனிய திருவார்த்தையருளிச் சிவாகாரமாகச் செய்தது. தன் முடிமேல் மாலை - கொன்றை மலர்மாலை. மாலையருளியது கூறவே இனம்பற்றி உண்டனவும், உடுப்பனவும், சண்டீசனுமாம் பதம் முதலியவும் கொள்க; இவ்வருளிப்பாட்டை, "அண்டர் பிரானுந் தொண்டர்தமக்கதிப னாக்கியனைத்துநா, முண்ட கலனு முடுப்பனவுஞ் சூடுவனவு முனக்காகச், சண்டீ சனுமாம் பதந்தந்தோ மென்றங் கவர்பொற் றடமுடிக்குத், துண்ட மதிசேர் சடைக்கொன்றை மாலைவாங்கிச் சூட்டினார்" என்னுந் திருத்தொண்டர் புராணத்தால் அறிக. பாங்கணைந்து பணிசெய்வார்-அணுக்கத்தொண்டர். பரிசு - தன்மை; ஈண்டு வள்ளற்றன்மை. கோங்கு: நீட்டல் விகாரம். மத்தம்: முதற்குறை. குழற்கு: உருபு மயக்கம். கொள்கையோடு கூடிய அழகாவது - கூவிளமத்தம் முதலிய பூக்கள் யாவும் பிறர் வேண்டாதவும் வெறுக்கத்தக்கவு மாகவும் அவைகளை இறைவன் தரித்துக் கொண்டமை வேண்டுதல் வேண்டாமை இலாமையாகிய பெற்றியை விளக்குதலோடு, தான் ஆன்மாக்களின் பிறவி நோயைத் தீர்க்கும் வைத்தியநாதன் என்னும் தன்மையைத் தெரிவித்தலுமாம். பொற்பு - ஈண்டு வெற்றி; இஃது இறைமைக் குணத்தைக் காட்டுதல் காண்க. (க0)

ஆருருவ உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவு தோன்றும்
நீருருவக் கடலிலங்கை அரக்கர் கோனை
நெறுநெறென அடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

(ப - ரை.) ஆர் - எவரொருவர், உருவ உள்குவார் - உறைப்புடன் நினைப்பவரோ, உள்ளத்துள்ளே - அவரது மனத்தினுள்ளே, அவ்வுருவாய் நிற்கின்ற - அவர் நினைக்கும் அவ்வுருவமாகவே விளங்குகின்ற, அருளும் தோன்றும் - திருவருட்டிறமுந் தோன்றாநிற்கும் - வார் - கச்சணிந்த, உருவம் - அழகினையுடைய, பூண் - பூணணிந்த, முலை - திருத்தனங்களையுடைய, நல் மங்கை தன்னை - நல்ல உமாதேவியாரை, மகிழ்ந்து - விரும்பி, ஒருபால் - இடப்பக்கத்து, வைத்து உகந்த - எழுந்தருள்வித்து மகிழ்ந்த, வடிவுதோன்றும் - திருவுருவம் தோன்றாநிற்கும், நீர்உருவம் கடல் - நீர் உருவமாகிய கடல்சூழ்ந்த, இலங்கை - இலங்கையையுடைய, அரக்கர்கோனை - அரக்கர் தலைவனாகிய இராவணனை, நெறுநெறென - நெறு நெறு என்னும் ஒலியுண்டாம்படி, அடர்த்திட்ட - அவனது தலை தோள் கரம் முதலியவற்றை நெருக்கியருளிய, நிலையும் தோன்றும் - நிலைமையும் தோன்றாநிற்கும், போர் உருவம் கூற்று - போர்க்கோலங் கொண்ட இயமனை, உதைத்த பொற்பு - உதைத்தருளிய வெற்றிப்பொலிவு, தோன்றும - தோன்றாநிற்கும் என்றவாறு.

ஆர்உருவம் உள்குவார் என்றும் பாடம். ஆர்உருவம் - அருமையாகிய உருவம், உருவத்தியானம். ஆர் - யார் என்பதன் மரூஉ. நெறுநெறு எனல் ஒலிக்குறிப்பு. (கக)

திருச்சிற்றம்பலம்

## சுந்தரமூர்த்திநாயனார்

# திருக்கடவூர் மயானம்

---

*பண் - பழம்பஞ்சுரம்*

**சிவனுருவம்**

*திருச்சிற்றம்பலம்*

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

(ப - ரை.) *மருஆர் - மணந்தங்கிய, கொன்றை-கொன்றை மலர் மாலையையும், மதி - பிறைத்திங்களையும், சூடி - திருமுடியில் அணிந்து, மாணிக்கத்தின் மலைபோல - மாணிக்க மலை போல, பூதப்படை சூழ - பூதப் படைகள் சூழ்ந்து வர, மகிழ்ந்து- விரும்பி, மாதோடு - உமாதேவியாரோடு, விடைமேல் வருவார் - இடபத்தை ஊர்ந்து வருகின்றவர், திருமால் பிரமன் இந்திரற்கும் - அரி அயன் இந்திரன் என்போர்க்கும், தேவர் நாகர் தானவர்க்கும் - தேவர்களுக்கும் நாகர்களுக்கும் அசுரர்களுக்கும், பெருமான் - தலைவராகிய, கடவூர் மயானத்து - திருக்கடவூர்த் திருமயானத்தி லெழுந்தருளி யிருக்கின்ற, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.*

*சூடி மலைபோல மகிழ்ந்து படைசூழ மாதோடு வருவார் பெருமானாகிய பெரிய பெருமான் என்னும் அடிகளே என்று*

கூட்டுக. "வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்குந், தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனவிடப் பாகங், கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த, வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனுர்" என்னும் திருத்தொண்டர் புராணத் திருவித்தம் ஈண்டுக் கூறிய திருக்கோலத்தையே கூறுமாறு காண்க. தேவர் - ஒளியுருவினர் எனப் பொருள்படும் வடமொழி; திவ் - ஒளி. நாகர் - பாதாள உலகத்துறைவோ ராகிய பாம்புச்சாதியர். தானவர்-அசுரர், தேவ தாயாதிகள். (க)

விண்ணோர் தலைவர் வெண்புரிநூல்
மார்பர் வேத கீதத்தர்
கண்ணார் நுதலர் நகுதலையர்
கால காலர் கடவூரர்
எண்ணார் புரமூன் றெரிசெய்த
இறைவர் இமையோர் ஒருபாகம்
பெண்ஆண் ஆவர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

(ப - ரை.) விண்ணோர் தலைவர் - தேவர்களுக்குத் தலைவரும், வெண் புரி நூல் மார்பர் - வெண்ணிறமாகிய முறுக்கப்பட்ட பூணூலணிந்த திருமார்பினையுடையவரும், வேதகீதத்தர் - வேதப்பாட்டினை யுடையவரும், கண் ஆர் நுதலர் - கண்ணொடு கூடிய திருநெற்றியினை யுடையவரும், நகுதலையர் - நகுவெண்டலையை யுடையவரும், காலகாலர்-இயமனுக்கு இயமனானவரும், கடவூரர் - திருக்கடவூரில் எழுந்தருளி யிருப்பவரும், எண்ணார் புரம் மூன்று - பகைவருடைய முப்புரங்களையும், எரி செய்த இறைவர் - எரித்த தலைவரும், இமையோர் - தேவரும், ஒருபாகம் பெண் ஆண் ஆவர் - ஒரு பாகம் பெண்ணும் ஒரு பாகம் ஆணும் ஆகியவரும், மயானத்து - திருமயானத்தில் எழுந்தருளியிருக்கின்ற, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.

வேத கீதத்தர் - வேதங்களாற் பாடப்படுவோர் எனவும், வேதப்பாட்டைப் பாடியவர் எனவும் வரும் இரு பொருளும் கொள்க. கால காலர் : நான்காம் வேற்றுமை பகைப் பொருளில் வந்த சொற்றொடர். இமையோர் - இறைவன்; இவ்வாறு கூறப்பட்டது தலைமை பற்றியே; அன்றி அவருள் வைத் தெண்ணப்படுவா ரல்லரென் றறிக. இதனை "இமையாரு மல்லர் இமைப்பாரு மல்லர்" எனவரும் திருநாவுக்கரசர் "சிவனெனு மோசை"த்

திருப்பதிகத்தால் அறிக. ஒரு பாகம் என்பதனைப் பெண் ஆண் எனும் ஈரிடத்துங் கூட்டுக. (உ)

காயும் புலியின் அதளுடையர்
கண்டர் எண்டோட் கடவூரர்
தாயும் தந்தை பல்லுயிர்க்குந்
தாமே ஆய தலைவனார்
பாயும் விடையொன் றதுவேறிப்
பலிதேர்ந் துண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழும் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

(ப - ரை.) காயும் புலியின் அதள் உடையர் - காய்தலையுடைய புலித்தோலை யுடையவரும், கண்டர் - நீல கண்டத்தை யுடையவரும், எண்தோள் கடவூரர் - எட்டுத் திருத்தோள்களை யுடைய திருக்கடவூரரும், பல் உயிர்க்கும்-எல்லா உயிர்களுக்கும், தாயுந் தந்தை - அன்னையும் பிதாவும், தாமே ஆய தலைவனார் - தாமேயாகிய தலைவரும், பாயும் விடை ஒன்று அது ஏறி - பாய்தலையுடைய இடபமொன்றின்மேல் இவர்ந்து, பலி தேர்ந்து உண்ணும் - பலியேற்று உண்கின்ற, பரமேட்டி - பரமேட்டியும், பேய்கள் வாழும் - பேய்கள் உறைகின்ற, மயானத்து - திருமயானத்தி லெழுந்தருளிய, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமானென்னும் இறைவரே யாவர் என்றவாறு.

காய்தல் - சினத்தல். தந்தையுமென்னும் உம்மை விகாரத்தாற் றொக்கது. தாமே - ஏகாரம் தேற்றம். இட்டி - யாகம்; பரமேட்டி - யாகங்களுக்குத் தலைவன் என்பது கருத்து. (ங)

நறைசேர் மலரைங் கணையானை
நயனத் தீயால் பொடிசெய்த
இறையார் ஆவர் எல்லார்க்கும்
இல்லை என்னா தருள்செய்வார்
பறையார் முழவம் பாட்டோடு
பயிலும் தொண்டர் பயில்கடவூர்ப்
பிறையார் சடையார் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

(ப - ரை.) நறை சேர் - தேன் துளிக்கின்ற, மலர் ஐங்கணை யானை - ஐந்து விதமான மலர்களாகிய அம்புகளையுடைய மன்மதனை, நயனத்தீயால் - கண்ணினின் றெழுந்த நெருப்பினால், பொடி செய்த - சாம்பராக்கிய, இறையாராவர் - இறைவர் ஆவாரும், எல்லார்க்கும் - யாவருக்கும், இல்லை என்னாது - இல்லை யென்னாமல், அருள் செய்வார் - திருவருள் புரிபவரும், பறை ஆர் முழவம் - பறையையும் பொருந்திய முழவத்தையும், பாட்டோடு பயிலும் - பாடல்களோடு பழகுகின்ற, தொண்டர் பயில் - அடியார் வாழ்கின்ற, கடவூர் - திருக்கடவூரிலெழுந்தருளிய, பிறையார் சடையார் - பிறையினை யணிந்த சடையை யுடையவரும், மயானத்து - திருமயானத்தி லெழுந்தருளிய, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.

இல்லை யென்னாதருள் செய்தல் - வேண்டியது வேண்டியாங்கருள் செய்தல். பறை - முழவம், இயச் சிறப்புகள். பறை - ஒருமுகத் தோற் கருவி. முழவம் - இருமுகத் தோற் கருவி. பாட்டோடு பயிலல் - பாட்டின் சுருதி லயங்களோடு பொருந்தி யொலித்தல். பயிலுதல் - வாசித்தல். (௪)

கொத்தார் கொன்றை மதிசூடிக்
கோள்நா கங்கள் பூணாக
மத்த யானை உரிபோர்த்து
மருப்பும் ஆமைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள்
பாடி ஆடப் பலிகொள்ளும்
பித்தர் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

(ப - ரை.) கொத்து ஆர் - கொத்தா யிருக்கின்ற, கொன்றை - கொன்றைமலர் மாலையையும், மதி - பிறையையும், சூடி - அணிந்து, கோள் நாகங்கள் - கொலைத் தன்மை வாய்ந்த பாம்புகள், பூணாக - அணிகலனாகக் கொண்டு, மத்தயானை உரி போர்த்து - மதம் பொருந்திய யானையின் தோலைப் போர்த்து, மருப்பும் - பன்றியின் கோட்டினையும், ஆமை - ஆமையோட்டினையும், தாலியார் - தாலியாகத் தரித்தவரும், பாரிடங்கள் - பூதகணங்கள், பத்திசெய்து - அன்புகொண்டு, பாடி ஆட - பாடலும் ஆடலும் செய்யாநிற்க, பலி கொள்ளும் - பலியினை ஏற்கின்ற, பித்தர் - பித்தரும், கடவூர் மயானத்து - திருக்கடவூர்த் திருமயானத்தில்

எழுந்தருளி யிருக்கும், பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமானென்னும் இறைவரே யாவர் என்றவாறு.

கோள் நாகம் - கொலைத் தொழிலையுடைய நாகங்கள். மருப்புமாமை - மருப்பினையும் ஆமையோட்டினையும் என விரிக்க. ஆமை: ஆகுபெயர். தாலி - கழுத்தணி. பாரிடம் - பூதம்; இனம் பற்றிப் பேய்களும் கொள்ளலாம். இறைவன் இவை பாடியாடப் பலி கொள்ளுதலை, "பாரிடம் பாணிசெய்ய பறைகட் சிறுபல் கணப்பேய், சீரொடும் பாடலாடல் இலயஞ் சிதையாத கொள்கை, தாரிடும்போர் விடையன் தலைவன் தலையே கலனு, ஊரிடும் பிச்சை கொள்வானுறையும் மிடம் ஒற்றியூரே" என்னும் தேவாரத் திருமொழியாற் காண்க. (௫)

துணிவார் கீளும் கோவணமும்
துதைந்து சுடலைப் பொடியணிந்து
பணிமேல் இட்ட பாசுபதர்
பஞ்ச வடிமார் பினர்கடவூர்த்
திணிவார் குழையார் புரமூன்றும்
தீவாய்ப் படுத்த சேவகனார்
பிணிவார் சடையார் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

(ப - ரை: துணிவார் - துணிந்த நீண்ட, கீளும் கோவணமும் - கீளினையும் கோவணத்தினையும், துதைந்து - உடுத்தி, சுடலைப்பொடி அணிந்து - சுடலைப் பொடியைப் பூசி, பணிமேல் இட்ட - பாம்புகளை உடம்பிற் றரித்த, பாசுபதர் - பாசுபதரும், பஞ்சவடி - பஞ்சவடியைத் தரித்த, மார்பினர் - திருமார்பினையுடையவரும், கடவூர் - திருக்கடவூரி லெழுந்தருளியுள்ள, திணிவார் குழையார் - திட்பத்தையும் நீட்சியையும் உடைய குழையை யணிந்தவரும், புரமூன்றும் - திரிபுரங்களையும், தீவாய்ப் படுத்த - எரித்த, சேவகனார் - வீரரும், பிணிவார் சடையார் - கட்டிய நீண்ட சடையுடையவரும், மயானத்து - திருமயானத்தி லெழுந்தருளிய, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.

துணி, அறுவை, வேட்டி என்பன ஒரு பொருட் பன்மொழி; எல்லாம் துணிக்கப்பட்டது என்னும் பொருளன. பாசுபதரும் பஞ்சவடி தரித்த மார்பினரும் வெவ்வேறு உட்சமயத்தவர்

என்று கொள்க. பஞ்சவடி - விரித்த வடமாயது; மயிர்ப்பூணூல். இதனைத் தரிப்பவர் மாவிரதியர். இவர் யாவர்க்கும் வெவ்வேறு கோலத்தை யுடைய சிவனே வழிபடு கடவுளாவர். சேவகம்- வீரத்தன்மை. (௬)

காரார் கடலின் நஞ்சுண்ட
கண்டர் கடவூர் உறைவாணர்
தேரார் அரக்கன் போய்வீழ்ந்து
சிதைய விரலால் ஊன்றினார்
ஊர்தான் ஆவ துலகேழும்
உடையார்க் கொற்றி யூராரூர்
பேரா யிரவர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

(ப - ரை.) கார்ஆர் - கருநிறம் பொருந்திய, கடலின் நஞ்சு உண்ட - கடலிற் றோன்றிய நஞ்சினை யுண்டருளிய, கண்டர் - திருநீல கண்டரும், கடவூர் உறைவாணர் - கடவூரில் வாழ்கின்ற வரும், தேர்ஆர் அரக்கன் - தேரினையுடைய அரக்கனாகிய இராவணன், போய் வீழ்ந்து சிதைய - மலையின் கீழகப்பட்டுப் போய் நசுக்குண்ண, விரலால் ஊன்றினார் - திருவிரலால் ஊன்றினவரும், உலகேழும் உடையார்க்கு - ஏழுலகையும் தம்ம தாக உடைய இவருக்கு, ஊர்தானவது - உறைவிடமாவது, ஒற்றியூர் ஆரூர் - திருவொற்றியூரும் திருவாரூருமாம், பேர் ஆயிரவர் - ஆயிரம் பேர்களை உடையவரும், மயானத்து - திரு மயானத்தி லெழுந்தருளிய, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.

கார் ஆர் என்பதை மிடற்றிற் கேற்றி யுரைத்தலுமாம். வாணர் - வாழ்நர் என்பதன் மரூஉ; வாழ்பவர் பேராயிரவர் ஆவதை, 'ஆயிரம் பேருகந்தானு மாரூரமர்ந்த வம்மானே' என்னும் திருமொழியானுங் காண்க. (எ)

வாடா முலையாள் தன்னோடு
மகிழ்ந்து கானில் வேடுவனாய்க்
கோடார் கேழற் பின்சென்று
குறுகி விசயன் தவமழித்து

நாடா வண்ணம் செருச்செய்து
ஆவ நாழி நிலையருள்செய்
பீடார் சடையார் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

(ப - ரை.) *வாடா - வாட்டமில்லாத, முலையாள் தன்னொடு - திருத்தனங்களையுடைய உமையம்மையாரோடு, மகிழ்ந்து - மகிழ்ச்சியுற்று, கானில் - காட்டகத்து, வேடுவனாய் - வேட்டுவக் கோலத்தோடு, கோடு ஆர் - வளைந்த பற்களையுடைய, கேழல் பின் சென்று - பன்றியின் பின்னே சென்று, குறுகி - நெருங்கி, விசயன் - அருச்சுனனது, தவம் அழித்து - தவத்தினைக் கெடுத்து, நாடா வண்ணம் - தம்மை யறியாதபடி, செருச் செய்து - போர் புரிந்து, ஆவம் நாழி நிலை - அம்புப் புட்டிலினது நிலைத்தலை, அருள்செய் - அனுக்கிரகித்த, பீடு ஆர் சடையார் - பெருமை வாய்ந்த சடையினை யுடையவர், மயானத்து - திருமயானத்தி லெழுந்தருளிய, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரே யாவர் என்றவாறு.*

*வாடாமை - சாயாத தன்மை. இதனை 'எண்ணிறந்த சராசரங்கள் ஈன்றுந் தாழாக் கொங்கை' என்னும் திருவிளையாடற் புராணத் திருப்பாட்டிற் காண்க. பாசுபதம் வேண்டி இமயமலைச் சாரலிற் றவஞ்செய்த அருச்சுனனை யழிப்பான் வந்த மூகாசுரனாகிய பன்றியை யழிக்கவும், அருள்புரியவும் இறைவன் தேவியாரோடு வேட்டுவ வுருவங் கொடுவந்து போர்செய்து திருவிளையாடல் புரிந்து பாசுபதங் கொடுத்தனன் என்பது புராணம். விசயன் - மிக்க சயத்தை உடையவன். ஆவமாகிய நாழியென்க.* (௮)

வேழம் உரிப்பர் மழுவாளர்
வேள்வி அழிப்பர் சிரமறுப்பர்
ஆழி அளிப்பர் அரிதனக்கு
ஆனஞ் சுகப்பர் அறமுரைப்பர்
ஏழை தலைவர் கடவூரில்
இறைவர் சிறுமான் மறிக்கையர்
பேழைச் சடையர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

(ப - ரை) வேழம் உரிப்பர் - யானையை உரித்தவரும், மழுவாளர் - மழுப்படையை யுடையவரும், வேள்வியழிப்பர் - தக்க யாகத்தை அழித்தவரும், சிரம் அறுப்பர் - தக்கனைத் தலையரிந்தவரும், அரிதனக்கு - விட்டுணு மூர்த்திக்கு, ஆழி அளிப்பர் - சக்கரப் படையினை யுதவினவரும், ஆன் அஞ்சு உகப்பர் - பசுவினிடத்துப் பஞ்சகவ்வியங்களை உகப்பவரும், அறம் உரைப்பர் - தர்மங்களை உபதேசிப்பவரும், ஏழை தலைவர் - உமையம்மையாருக்குத் தலைவரும், கடவூரில் இறைவர் - திருக்கடவூரி லெழுந்தருளிய இறைமைக் குணமுடையவரும், சிறுமான் மறிக் கையர் - சிறிய மான்கன்றினை யேந்திய கையினை யுடையாரும், பேழை சடையர் - பெரிய சடையினை யுடையவரும், மயானத்து - திருமயானத்தி லெழுந்தருளிய, பெரிய பெருமான் அடிகள் ஏ - பெரிய பெருமான் என்னும் இறைவரேயாவர் என்றவாறு.

வேள்வி - தக்கயாகம், அழித்த காரணம் யாகபதியாகிய தம்மை மறுத்து இகழ்ந்து செய்தமையாம். அறமுரைத்தலை 'திறங்கொண்ட வடியார்மேற் றீவினை நோய் வாராமே, அறங் கொண்டு சிவதன்ம முரைத்தபிரான் அமருமிடம்' என வரும் புள்ளிருக்கு வேளூர்த் தேவாரத்தா லறிக. தன்மம்-சிவதன்மம். (க)

மாட மல்கு கடவூரின்
மறையோர் ஏத்தும் மயானத்துப்
பீடை தீர அடியாருக்
கருளும் பெருமான் அடிகள்சீர்
நாடி நாவல் ஆரூரன்
நம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடும் அடியார் கேட்பார்மேல்
பாவம் ஆன பறையுமே.

(ப - ரை.) மாடம் மல்கு - மாடங்கள் செறிந்த, கடவூரில் - திருக்கடவூரில், மறையோர் ஏத்தும் - மறையவர் துதிக்கின்ற, மயானத்து - திருமயானத்தில் எழுந்தருளி, அடியாருக்கு - தம் தொண்டர்களுக்கு, பீடைதீர - துன்பம் தொலையும்படி, அருளும் - அருள்புரியும், பெருமான் அடிகள் - பெரிய பெருமானாகிய இறைவரது, சீர் - சிறப்பினை யெல்லாம், நாவல் - திருநாவலூரிலே தோன்றிய, ஆரூரன் நம்பி - நம்பியாரூரன், சொன்ன நற்றமிழ்கள் - சொல்லிய நல்ல தமிழ்த் திருப்பாட்டுக்களை, பாடும் அடியார் கேட்பார்மேல் - பாடும் அடியார் மேலும்

கேட்பார் மேலும், பாவம் ஆன - பாவமாயின வெல்லாம், பறையும் - கெட்டொழியும் என்றவாறு.

மல்குதல் - நிறைதல். கடவூரின் மயானம் எனக் கூட்டுக. மயானத்துப் பெருமானடிகள் என இயையும். நம்பி - நற்குண நிறைவினையுடைய ஆடவன்; ஈண்டுப் பெயர், நம்பியாகிய ஆரூரன் என்க. (௧0)

திருச்சிற்றம்பலம்

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர்
## திருவாழ்கொளி புத்தூர்

பண் - தக்கராகம்

திருவடிகள்

திருச்சிற்றம்பலம்

பொடியுடை மார்பினர் போர்விடையேறிப்
பூத கணம்புடை சூழக்
கொடியுடை ஊர்திரிந் தையங்
கொண்டு பலபல கூறி
வடிவுடை வாள்நெடுங்கண் உமைபாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலர் இட்டுக்
கறைமிடற் றுனடி காண்போம்.

(ப - ரை.) பொடி உடை மார்பினர் - திருவெண்ணீற்றைப பூசிய மார்பினை யுடையவராய், போர்விடை ஏறி - போர்செய் தலை யுடைய இடபத்தை யூர்ந்து, பூதகணம் புடைசூழ - பூத கணங்கள் பக்கத்திற் சூழ்ந்து வர, கொடி உடை ஊர் திரிந்து - கொடிகளை யுடைய ஊர்கடோறும் திரிந்து, ஐயம்கொண்டு - பிச்சையேற்று, பலபல கூறி - பற்பல சொற்களைச் சொல்லி, வடிவுடை - அழகினை யுடைய, வாள் நெடு - ஒளிபொருந்திய நீண்ட, கண் உமை - கண்களை யுடைய உமையம்மையாரை, பாகம் ஆயவன் - வாமபாகத்திற் பெற்றவராகிய, கறை மிடற்றுன் - நஞ்சுக்கறையைக் கண்டத்திலுடைய இறைவனது, அடி - திருவடியை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ் கொளி புத்தூரில், கடிகமழ் - மணம் கமழ்கின்ற, மாமலர் இட்டு - சிறந்த பூக்களைப் பெய்து அருச்சித்து, காண்போம் - காணக்கடவோம் என்றவாறு.

பொடி - திருநீறு. கொடியுடையூர் - ஊர்களுக்குக் கொடியுடைமை இன்றியமையாத மங்கலமாகக் கருதப்படு மென்க. கொடி - வெண்கொடி. 'விதானமும் வெண்கொடியு மில்லா வூரும், அவையெல்லாம் ஊரல்ல வடவி காடே' என்பது வாகீசர் திருவாக்கு. பல பல கூறுதல் - பலியிடும் பெண்கள் கூறும் இங்கித வார்த்தைகளுக்குக் கவர் பொருள்படும் பல பல வார்த்தைகளைக் கூறுதல். இதனை, 'பண்டங்கள் வந்து பலிதா வென்றான் பகலோற்கிடென்றே, னெண்டங் கடந்தவ னன்ன மென்றா னயனூர்தி யென்றேன், கொண்டிங்குளையம் பெய் யென்றான் கொடித்தேரநங்கனென்றே, னுண்டிங்கலமந்த தென்றாற் கதுசொல்ல வுணர்வுற்றது' என்பதாதி திருமொழிகளாற் காண்க. வாழ்கொளி புத்தூர் ஊர்த்தொகையிற் கூறியது காண்க. கடிகமழ் மாமலர் - புட்பவிதியிற் கூறிய இலக்கணங்கள் வாய்ந்த அன்றலர்ந்த பூக்கள். வாழ்கொளி புத்தூர்க் காண்போம் என்று முடிக்க. (க)

அரைகெழு கோவண ஆடையின்மேலோர்
ஆடர வம்மசைத் தையம்
புரைகெழு வெண்தலை ஏந்திப்
போர்விடை ஏறிப் புகழ
வரைகெழு மங்கைய தாகமோர்பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்
விரைகமழ் மாமலர் தூவி
விரிசடை யானடி சேர்வோம்.

(ப - ரை.) அரைகெழு - அரையிற் கட்டின, கோவண ஆடையின் மேல் - கோவண உடையின் மேல், ஓர் ஆடு அரவம் அசைத்து - ஒப்பற்ற ஆடுகின்ற பாம்பைக் கச்சையாகக் கட்டி, ஐயம் - பலியினை, புரைகெழு - ஓட்டையினை யுடைய, வெண்டலை ஏந்தி - தசை கழிந்த வெண்டலையிற் கொண்டு, போர்விடை ஏறி - பொருகின்ற இடபத்தை யூர்ந்து, புகழ - யாவரும் ஏத்துமாறு, வரைகெழு மங்கையது - பார்வதி தேவியாரது, ஆகம் - உடம்பினை, ஓர் பாகம் ஆயவன் - ஒரு பாகத்தில் ஆகியவனாகிய, விரிசடையான் - விரிந்த சடையுடைய இறைவனது, அடி - திருவடியை, வாழ்கொளி புத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், விரைகமழ் மாமலர் தூவி - வாசனை கமழ்கின்ற சிறந்த பூக்களை இறைத்து அருச்சித்து, சேர்வோம் - அடைவோம் என்றவாறும்.

புரைசெழு வெண்டலை - ஓட்டை வெண்டலை, 'வாட்ட மொன்றுகைக் கும்மலை யான்மகள், ஈட்டவேயிரு ளாடி யிடு பிணக், காட்டிலோரி கடிக்க வெடுத்ததோர், ஓட்டை வெண் டலைக் கை யொற்றியூரரே' என்னும் திருக்குறுந்தொகை இதனைக் கூறுமென்க. வரைசெழு மங்கை: பார்வதி. (உ)

பூணெடு நாகம் அசைத்தன லாடிப்
புன்தலைஅங்கையி லேந்தி
ஊணிடு பிச்சை யூரையம்
உண்டி என்று பலகூறி
வாணெடுங் கண்ணுமை மங்கையோர்பாக
மாயவன் வாழ்கோளி புத்தூர்த்
தாணெடு மாமல ரிட்டுத்
தலைவன தாணிழல் சார்வோம்.

(ப - ரை.) பூண் - அணிகலனுக, நெடுநாகம் அசைத்து - பெரும் பாம்புகளை யணிந்து, அனல் ஆடி - அழலில் ஆடி, புன் தலை-புல்லிய தலையை, அம்கையில் ஏந்தி-அழகிய கையிற்றங்கி, ஊண்-உணவு, இடுபிச்சை-இடப்படும் பிச்சை, ஊர் ஐயம்-பெய் கின்ற ஐயம், உண்டி-ஆகாரம், என்று பல கூறி-எனப் பலவகையிற் கூறி, வாள்நெடும்கண் - வாள்போன்ற நீண்ட கண்களையுடைய, உமை மங்கை - உமாதேவியார், ஓர் பாகம் ஆயவன் - ஒரு பாதியானவனுன, தலைவன - இறைவனுடைய, தாள் நிழல் - திருவடிகளின் நீழலை, வாழ்கொளிபுத்தூர் - திரு வாழ்கொளி புத்தூரில், தாள்நெடு மாமலர் - காம்புகளையுடைய நீண்ட சிறந்த பூக்களை, இட்டு - பெய்து அருச்சித்து, சார்வோம் - சார் பாகக் கொண்டு அடைவோம் என்றவாறு.

பூணெடுநாக மசைத்தனலாடி என்னும் பொருள் அரவா பரணன் ஆரழலாடி என்னும் இறைவன் திருநாமங் கொண்டு காணப்பெறும். உணவின் பல பெயர்களைச் சொல்லி யிரந்தலை முதற்றிருப்பாட்டுரையிற் காட்டிய பொன் வண்ணத்தந்தாதித் திருப்பாட்டிலேயே காணலாகும். ஓர் பாகம் - ஒரு பாதி. கூறி என்னு மெச்சம் ஆயவன் என்னும் குறிப்புவினைப் பெயர் கொண்டது: தாணெடு மாமலர் - நீண்ட தாள்களையுடைய தாமரை முதலியவுமாம். தாணிழல் சார்தல் - இதுவே சாரும் சார்பெனத் தெளிந்துசார்தல், பயன் - பிறவிநோய் நீக்க மென்க. "சார்புணர்ந்து" என்னும் திருவள்ளுவர் திரு மொழியினைச் சிந்திக்க. ஆன்மாக்கட்குத் திருவடி நீழலே சாரும்

சார்பெனவும், அதனை யடையும் உபாயம் இதுவெனவும் கூறியது இத்திருப்பாட்டின் கருத்தாம். தலைவனை - அகரம்: ஆறனுருபு. (௬)

தாரிடு கொன்றையோர் வெண்மதி
கங்கை தாழ்சடை மேலவைசூடி
ஊரிடு பிச்சைகோள் செல்வம்
உண்டி யென்று பலகூறி
வாரிடு மென்முலை மாதொருபாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்
காரிடு மாமலர் ஆவிக்
கறைமிடற் றானடி காண்போம்.

(ப - ரை.) தார் இடு கொன்றை - மாலையாகக் கட்டின கொன்றை மலர், ஓர் வெண்மதி - சிறந்த வெண்பிறை, கங்கை - கங்கையாறு, அவை - ஆகியவற்றை, தாழ் சடைமேல் சூடி - நீண்டு தொங்குகின்ற சடைமே லணிந்து, ஊர் இடு பிச்சை - ஊராரிடு பிச்சையே, கொள் செல்வம் உண்டி என்று - கொள்ளத்தக்க செல்வமும் உணவும் ஆம் என்று, பல கூறி - பல வார்த்தைகளைச் சொல்லி, வார் இடு - கச்சணிந்த, மென்முலை - மெல்லிய திருத்தனங்களையுடைய, மாது - உமாதேவியாரை, ஒரு பாகம் ஆயவன் - ஒரு பாகமாகக் கொண்டவனை, கறை மிடற்றான் - திருநீல கண்டத்தையுடைய இறைவனது, அடி - திருவடிகளை, வாழ்கொளி புத்தூர் - திரு வாழ்கொளி புத்தூரில், இடும் மாமலர் - இடத்தக்க சிறந்த பூக்களை, கார் தூவி - மேகம் போலச் சொரிந்து அருச்சித்து, காண்போம் - தரிசிப்போம் என்றவாறு.

தாரிடுகொன்றை - கொன்றை இடுதார் என மாற்றிக் கூறுதலுமமையும். ஊரா ரிடுகின்ற பிச்சையே கொள்ளும் செல்வமும் உணவும் ஆம் என்பதை, "ஒற்றூரொன்றில்லாத நல்கூர்ந் தான்காண் வியன்கச்சிக் கம்பன்காண் பிச்சையல்லால், மற்றூ ணொன்றில்லாத மாசதுரன்காண்" என்பது போன்ற திருமொழிகளாற் காண்க. கார் இடுமா மலர் தூவுதல் - மேகம் மழையினைச் சொரிதல் போலப் பூவினை மிகுதியாகச் சொரிந்து அருச்சித்தல். கரிய மேகம்போன்ற கரு நிறமுடைய நீலோற் பலம் முதலிய பூக்களை இட்டு அருச்சித்து என்றுமாம். தூவுதல்: இதுவும் மழையைக் குறிப்பிக்குமென்க, "தூமாமழை" என்பது காண்க. (எ)

கனமலர்க் கொன்றை அலங்கல்இலங்கக்
காதிலோர் வெண்குழை யோடு
புனமலர் மாலை புனைந்தூர்
புகுதியென் றேபல கூறி
வனமுலை மாமலை மங்கையோர்பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்
இனமலர் ஏய்ந்தன தூவி
எம்பெரு மானடி சேர்வோம்.

(ப - ரை.) கனம் மலர் - மிக்க மலர்களாற் றொடுக்கப்பட்ட, கொன்றை அலங்கல் - கொன்றைமாலை, இலங்க - விளங்க, காதில் - திருச்செவியில், ஓர் வெண்குழையோடு - ஒரு வெண்ணிறமாகிய சங்கக்குழையோடு, புனம் மலர் மாலை - புனத்தில் பூத்தனவாகிய மலர்மாலைகளையும், புனைந்து - அணிந்து, ஊர் புகுதி - பலியின் பொருட்டு ஊர்கள்தோறும் புகுவாய், என்று பல கூறி - என்று தன்னொடு கிளத்தல்போன்ற பல வார்த்தைகளைச் சொல்லி, வன முலை - அழகிய திருத்தனங்களையுடைய, மாமலை மங்கை - சிறந்த இமயமலையின் புதல்வியாரை, ஓர் பாகம் ஆயவன் - ஒரு பாகமாகக் கொண்டவனை, எம்பெருமான் - எம்பெருமானது, அடி - திருவடியை, வாழ்கொளி புத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், ஏய்ந்தன - பொருந்துவனவாகிய, இனமலர் தூவி - கூட்டமாகிய மலர்களால் அருச்சித்து, சேர்வோம் - சேரக்கடவோம் என்றவாறு.

கனம் - பொன்னுமாம். கொன்றை திருவடையாள மாலையாகலின் வேறு கூறினர். வெண்குழை - வெண்ணிறம் பொருந்திய சங்கக் குழை. புனம் - கொல்லை. புனமலர் - தும்பை, துளவு, எருக்கு முதலியவாம். பிச்சையேற்கச் செல்லுமிடங்களில் அவர் கேட்குமாறு தாம் தமக்கு வேண்டியதை அவர்பால் கேட்டு இரவாமல் தம்மொடு கிளத்திக்கொள்வதனால் அவரே பலிகொண்டு இடுமாறு பல வார்த்தைகளைச் சொல்லுதல் ஈண்டுக் கருதியது. இன மலர் - பலவகை மலருமாம். ஏய்ந்தன - இறைவனுக்கு உவப்பினைத் தரக்கூடியவென நூல்களிற் கூறியவை. (௬)

அலைவளர்நாகம் அசைத்தன லாடி
அலர்மிசை அந்தணன் உச்சிக்
கலைதலை யிற்பலி கொள்ளும்
கருத்தனே கள்வனே யென்று

வளையொலி முன்கை மடந்தையோர்பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்
தளையவிழ் மாமலர் தூவித்
தலைவன தாளிணை சார்வோம்.

(ப - ரை.) அளைவளர் - புற்றில் வளர்கின்ற, நாகம் அசைத்து - பாம்பினை யணிந்து, அனல் ஆடி - தீயின்கண் ஆடி, அலர்மிசை - திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றிய, அந்தணன்-பிரம்மதேவரது, உச்சி-மேலேயுள்ள, களைதலையில்-அறுக்கப்பட்ட தலையினிடத்து, பலி கொள்ளும் - பலியினைக் கொள்கின்ற, கருத்தனே - கருத்தையுடையவனே, கள்வனே-சோரனே, என்று-என்று கூறி, வளைஒலி - வளைகள் ஒலிக்கின்ற, முன்கை-முன்னங் கைகளையுடைய, மடந்தை-உமாதேவியாரை, ஓர்பாகம் ஆயவன்-ஒரு பாகத்திற் கொண்டவனாகிய, தலைவன் - இறைவனுடைய, தாள்இணை - இரண்டு திருவடிகளையும், வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், தளைஅவிழ் - முறுக்கவிழ்கின்ற, மாமலர் தூவி - சிறந்த மலர்களைப் பெய்து அருச்சித்து, சார்வோம்-சாரக்கடவோமாக என்றவாறு.

உச்சித்தலை என இயையும். இறைவன் கொய்தது நான்முகனது உச்சித்தலை என்பது புராணம். களை தலை : வினைத்தொகை. தளையவிழ்தல் - முறுக்கவிழ்தல்; எனவே மலரும் செவ்வியையுடைய, புதுமலர்கள் என்பது கருத்தாம். என்று: செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்; இது சார்வோம் என்னும் வினைகொண்டது. கள்வன் - பலிகொள்பவன் போல் வந்து வளையும் நிறையும் கவர்தலின் கள்வனாயினனென்றுணர்க. (௬)

அடர்செவி வேழத்தின் ஈருரிபோர்த்து
அழிதலை அங்கையில் ஏந்தி
உடலிடு பிச்சையோ டையம்
உண்டி யென்று பலகூறி
மடநெடு மாமலர்க் கண்ணியோர்பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்
தடமலர் ஆயின தூவித்
தலைவன தாணிழல் சார்வோம்.

(ப - ரை.) அடர்செவி - தகடுபோன்ற காதுகளையுடைய, வேழத்தின் - யானையினது, ஈர் உரி போர்த்து-உரித்த தோலைப் போர்த்து, அழிதலை-அழிந்த தலையை, அம் கையில் ஏந்தி - அழகிய கையிற்றாங்கி, உடல் இடு - உடம்புக் கிடுகின்ற, பிச்சையோடு - பிச்சையுடனே, ஐயம் உண்டி - ஐயம் உண்டி, என்று பலகூறி - என்று பலபடப் பேசி, மடல் நெடு மாமலர் - இதழ்களையுடைய நீண்டசிறந்த குவளைமலர் போன்ற, கண்ணி - கண்களையுடைய உமாதேவியாரை, ஓர்பாகம் ஆயவன் - ஒரு பாகத்திற் கொண்டவனுனை, தலைவன - இறைவனது, தாள் நிழல் - திருவடிநிழலை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், தடமலர் ஆயின தூவி - நீர்ப்பூக்க ளாயினவற்றைத் தூவி அருச்சித்து, சார்வோம் - சேரக்கடவோமாக என்றவாறு.

அடர் - தகடு: பெயர்ச்சொல். யானைக்காது தகடுபோன்ற தெனவும் முறம்போன்ற தெனவும் கூறுதல் வழக்கு. ஈருரி: வினைத்தொகை. இறைவன் தன் திருநகங்களினுல் வகிர்ந்து யானை உரித்தது சரித்திரம். போர்த்து அழி: குற்றுகரங் கெடாது நின்றது; 'அடித்தடித்து வக்காரமுன் றீற்றிய' என்புழிப் போல. அழி: வினைத் தொகை. உடலிடு பிச்சை - ஊனுலாகிய உடம்புவளர இடும் உணவின் பொருட்டுக் கொள்ளும் பிச்சை. தட மாமலர் - தாமரையுமாம். தடம்-தடாகம்; எனவே நீர்ப்பூ கருதப்பட்டதென்க. (எ)

உயர்வரை ஒல்க எடுத்தஅரக்கன்
ஒளிர்கட கக்கை யடர்த்து
அயலிடு பிச்சையோ டையம்
ஆர்தலை என்றடி போற்றி
வயல்விரி நீல நெடுங்கணிபாகம்
ஆயவன் வாழ்கோளி புத்தூர்ச்
சயவிரி மாமலர் தூவித்
தாழ்சடை யானடி சார்வோம்.

(ப - ரை) உயர் - உயர்ந்த, வரை - திருக்கைலாய மலையை, ஒல்க - துலங்கும்படி. எடுத்த - பெயர்த்தெடுத்த, அரக்கன் - இராவணனது, ஒளிர் - ஒளிவிடுகின்ற, கடகக்கை - கடக மணிந்த கைகளை, அடர்த்து - நசுக்கி, அயல் இடு - அயலவர் இடுகின்ற, பிச்சையோடு - பிச்சையுடனே, ஐயம்-பலியை, ஆர்தலை - உண்ணுகின்றவரே, என்று - என்று பாடி, அடி போற்றி - அடி யிணைகளை வணங்கி, வயல்விரி - வயல்களில் மலர்கின்ற, நீலம் -

நீலமலர் போன்ற, நெடும் கணி - நீண்ட கண்களையுடைய இறைவியை, பாகமாயவன் - செம்பாதியாகக் கொண்டவனாகிய, தாழ் சடையான் - தாழ்ந்த சடையையுடைய இறைவனது, அடி - திருவடிகளை, வாழ்கொளிபுத்தூர்-திருவாழ்கொளி புத்தூரில், சயம் - கூட்டமாக, விரி - மலர்கின்ற, மாமலர் தூவி - சிறந்த பூக்களை இறைத்து, சார்வோம் - சாரக்கடவோம் என்றவாறு.

கடகம் - கையணி. ஆர்தலை : ஐகாரம் முன்னிலைக்கண் வந்தது. இறைவன் பலிக்கெழுந்தருளிய போது தன்னை யறிவிக்காமல் தனது புகழினை வேதப் பாடலினாற் பாடித் தன்னையே வணங்கிப் போமாறு ஈண்டுக் கூறப்பட்டது. "மறையது பாடிப் பிச்சைக் கென்றகந் திரிந்து வாழ்வர்" என வருந் தேவாரம் இதனை யறிவிக்கும். போற்றிச் சார்வோம் என முடிப்பினும் அமையும். வயலில் நீலம் விரிதலை, "கரும்பருகே கருங் குவளை கண்வளருங் கழனிக் கமலங்கண் முகமலருங் கலைய நல்லூர் காணே" என்னுந் திருவாக்கால் அறிக. சயம் - கூட்டம். (அ)

கரியவன் நான்முகன் கைதொழுதேத்தக்
காணலும் சாரலும் ஆகா
எரியுரு வாகி ஊரையம்
இடுபலி உண்ணியென் றேத்தி
வரியர வல்குல் மடந்தையோர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்
விரிமலர் ஆயின தூவி
விகிர்தன சேவடி சேர்வோம்.

(ப - ரை.) கரியவன் - கருநிறத்தையுடைய திருமாலும், நான்முகன் - நான்கு முகங்களையுடைய பிரமனும், கைதொழுது - வணங்கி, ஏத்த-போற்றவும், காணலும் சாரலும் ஆகா-காண்பதற்கும் நெருங்குதற்கும் ஒண்ணாத, எரிஉருவாகி-தீப்பிழம்பின் உருவமாகி, ஊர் - ஊரார், இடு ஐயம் பலி - இடுகின்ற ஐயத்தையும் பலியையும், உண்ணி என்று-உண்பவரே என்று, ஏத்தி-போற்றி, வரி அரவு அல்குல் - வரிகளையுடைய பாம்பின் படம் போலும் அல்குலையுடைய, மடந்தை - இறைவியை, ஓர் பாகமாயவன் - ஒரு பாகமாகக் கொண்டவனாகிய, விகிர்தன - இறைவனது, சேவடி - சிவந்த திருவடிகளை, வாழ்கொளி புத்தூர் - திருவாழ்கொளி புத்தூரில், விரிமலராயின-முறுக்குவிட்டு அவிழ்கின்ற மலர்களை, தூவி - சிந்தி, சேர்வோம் - சேரக்கடவோம் என்றவாறு.

**கரியவன்** - விட்டுணுமூர்த்தி. இவர் பிரகிருதி யுருவின ராகையாலும், தொழில்பற்றிச் சாத்துவிக குணத்தை யுடையவ ராகக் கூறப்பெறினும் உள் தாமச குணத்தை யுடையவராகை யாலும், ஆலகால விடத்தாற் கருகிய நிறத்தையுடையவராகை யாலும், "கரியவன்" எனப் பெற்றாரென்ப. ஏத்த என்பதில் உம்மை விகாரத்தாற் றொக்கது. ஆகா - ஒண்ணாத. எரியுருவாகி- நெருப்புரு ஆகியவன் எனப் பெயருமாம்: இப் பொருட்கு இ- வினை முதற்பொருள் விகுதி. உண்ணியென்பதுமது. **ஊர் :** ஆகுபெயர். விகிர்தன் - தான் விகாரப்பாடின்றியே எல்லாப் பொருள்களையும் விகாரப்படுத்தும் இறைவன். அழிவில்லாதவ னெனலும் ஒன்று. (கூ)

குண்டம ணர்துவர்க் கூறைகள்மெய்யிற்
கொள்கையி னார்புறங் கூற
வெண்டலை யிற்பலி கொண்டல்
விரும்பினை யென்று விளம்பி
வண்டமர் பூங்குழல் மங்கையோர்பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்
தொண்டர்கள் மாமலர் தூவத்
தோன்றநின் றானடி சேர்வோம்.

(ப - ரை.) குண்டு அமணர் - இழித்த சமணர்களும், துவர் கூறைகள் - சாயவுடைகளை, மெய்யில் கொள்கையினார்-உடம்பிற் போர்ப்பவராகிய புத்தர்களும், புறங்கூற - ஏசாநிற்ப, வெண் தலையில் - தசை கழிந்த வெண்ணிறமாகிய தலைக்கலனில், பலி கொண்டல்-பலி கொள்ளுதலை, விரும்பினை என்று - விரும்பினீர் என்று, விளம்பி - கூறி, வண்டு அமர் - வண்டுகள் விரும்பிச் சேர்கின்ற, பூ குழல் - இயற்கை மணமாகிய பொலிவினைப் பெற்ற கூந்தலையுடைய, மங்கை - உமாதேவியாரை, ஓர் பாக மாயவன் - இடப்பக்கத்தி லுடையவனாகி, தொண்டர்கள்-திருத் தொண்டர்கள், மாமலர் தூவ - சிறந்த பூக்களை இறைத்து அருச்சிக்க, தோன்ற நின்றான் - வெளிப்படுகின்ற இறைவனது, அடி - திருவடிகளை, வாழ்கொளிபுத்தூர் - திருவாழ்கொளிபுத்தூ ரில், சேர்வோம் - சேரக்கடவோம் என்றவாறு.

குண்டு - இழிவு, துவர் - செந்நிறம். துவர்க்கூறைகண் மெய்யிற் கொள்கையினார் - புத்தர். புறங்கூறுதல் - முன்னர்க் கூறியது காண்க. பூ - பொலிவு, இயற்கை மணம். கூந்தலின் இயற்கை மணச்செய்தியை இறைவன் தருமிக்கெழுதியளித்த

திருவாக்கின் செய்திகொண்டறிக. பூங்குழல் - பூவினை யணிந்த குழல் என்றுமாம். தொண்டர்கள் மாமலர்தூவத் தோன்றுதல் - இறைவன் தனக்கென ஓர் உருவமில்லாதவ னெனினும் தன்னை வழிபடும் திருத்தொண்டர் பொருட்டுத் தன தருட்சத்தியாற் பல திறப்பட்ட திருமேனி கொண்டெழுந்தருளுதல். (க0)

கல்லுயர் மாக்கடல் நின்றுமுழங்கும்
கரைபொரு காழிய மூதூர்
நல்லுயர் நான்மறை நாவின்
நற்றமிழ் ஞானசம் பந்தன்
வல்லுயர் சூலமும் வெண்மழுவாளும்
வல்லவன் வாழ்கொளி புத்தூர்ச்
சொல்லிய பாடல்கள் வல்லார்
துயர்கெடு தல்லெளி தாமே.

(ப - ரை.) கல்உயர் - மலைகள் உயர்ந்த, மா கடல் - பெரிய கடல், நின்று - பொருந்தி, முழங்கும் - ஒலிக்கின்ற, கரை பொரு - கரையைப் பொருகின்ற, காழி அம் மூதூர் - சீகாழி யென்னும் அழகிய பழைய ஊரில் அவதரித்த, நல்உயர் - நல்ல உயர்ந்த, நான்மறை - நான்கு வேதங்களும் பொருந்துகின்ற, நாவின் - நாவினையுடைய, நல்தமிழ்-நல்ல தமிழில் வல்லவனாகிய, ஞானசம்பந்தன் - திருஞானசம்பந்தன், வல் உயர் - வலிய உயர்ந்த, சூலமும் - சூலத்தையும், வெண் மழுவாளும் - வெண்ணிறமாகிய மழுப்படையையும், வல்லவன் - வல்லவனாகிய இறைவனது, வாழ்கொளி புத்தூர் - திருவாழ்கொளி புத்தூரை, சொல்லிய பாடல்கள் - போற்றிய திருப்பாட்டுக்களை, வல்லார் - சொல்ல வல்லவர்களது, துயர் கெடுதல் - துன்பங் கெட்டொழிதல், எளிது ஆம் - எளிதாகும் என்றவாறு.

கல் - கல்லென்னும் ஒலியுமாம். முழங்கும், பொரு என்னும் பெயரெச்சங்கள் காழி என்னும் நிலப்பெயர் கொண்டன. நான் மறை நா - நான்கு வேதங்களையும் ஓதாதுணர்ந்து ஓதும் நா. நற்றமிழ் - இயல்வரம்பும், இனிமையும் முதலிய நலனெல்லாம் வாய்ந்த தமிழ். வெண்மை - கறைபடாத தூய்மை. (கக)

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசுநாயனுர்

# திருவதிகை வீரட்டானம்

---

## திருவடித் திருத்தாண்டகம்

### திருவடிகள்

*திருச்சிற்றம்பலம்*

அரவணையான் சிந்தித் தரற்றும் அடி
　　அருமறையான் சென்னிக் கணியாம் அடி
சரவணத்தான் கைதொழுது சாரும் அடி
　　சார்ந்தார்கட் கெல்லாம் சரணும் அடி
பரவுவார் பாவம் பறைக்கும் அடி
　　பதினெண் கணங்களும் பாடும் அடி
விரவுநீர்த் தென்கெடில நாடன் அடி
　　திருவீரட் டானத்தெஞ் செல்வன் அடி.

(ப.-ரை.) *அரவணையான் பாம்புப் பாயலையுடைய திருமால், சிந்தித்து - நினைந்து, அரற்றும் அடி - கதறிப் பரவும் திருவடி; அருமறையான் - அரிய வேதங்களையுடைய நான்முகனது, சென்னிக்கு - தலைக்கு, அணியாம் அடி - அழகு செய்கின்ற திருவடி; சரவணத்தான்-முருகக் கடவுள், கைதொழுது - வணங்கி, சாரும் அடி - சேருகின்ற திருவடி, சார்ந்தார்கட்கு எல்லாம் - அடைந்தார்கட்கெல்லாம், சரணும் அடி - அடைக்கலமாகின்ற திருவடி; பரவுவார் பாவம் - வழிபடுகின்றவர்களது பாவத்தை, பறைக்கும் அடி - ஒழித்தருளுகின்ற திருவடி; பதினெண் கணங்களும் - பதினெட்டு வகையான கணத்தவர்களும், பாடும் அடி - பாடித்தொழுகின்ற திருவடி; விரவு நீர் - மிக்க நீர்ப்பெருக்கினையுடைய, தென் கெடிலம் - தெற்கின் கண்ணதாகிய கெடில நதி சூழ்ந்த, நாடன் அடி - திருநாட்டினையுடையவனாகிய இறைவனது திருவடி; திருவீரட்டானத்து - திரு அதிகைத் திருவீரட்டானத்தில் எழுந்தருளிய, எம்...*

எம்முடைய, செல்வன் அடி - அழியாத முத்தித் திருவினையுடைய சிவனது திருவடி என்றவாறு.

அரவு - சேடன். அணை - படுக்கை. இறைவன் "சித்தமுஞ் செல்லாச் சேட்சியன்" ஆதலின், திருமால் சிந்தித்துக் கிடைக்கப் பெறாது அரற்றும் அடி எனினுமாம். மறையான் - வேதன்; இவன் வேதங்களை இறைவன்பாற் பெற்று எவ்வுலகத்தவர்கட்கும் உதவுவன் என்பது ஒத்து. படைத்தற்றொழிலைச் செய்தற்கும் இதுவே கருவியாம். சென்னிக் கணியாதல் - தலையினிடத்து அணிபோல் சூட்டி வணங்குதல். சரவணத்தான் - சரவணப் பொய்கையிற் றிருவவதாரஞ் செய்த முருகப்பிரான். சரவணம் - தருப்பை. திருமால், பிரமன், முருகக்கடவுள் இவர் எல்லாம் முதற் குரவர்கள் ஆதலால் உலகினரை ஆற்றுப்படுத்துவ ரென்க. "திருமாலிந்திரன்பிரம னுபமனியன் றபனனந்தி செவ்வே ளாதி, தருமமுது குரவருக்கும்" என்னும் திருவாக்கு ஈண்டுக் கருதத் தக்கது: பற்றொழிப்பார்க் கெல்லாம் பற்றத்தகும் பற்று இறைவன் திருவடியாதலின் "சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணமடி" என்றார்; பறைத்தல் - ஓட்டுதல். பதினெண் கணங்க ளாவார்: அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், கிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போக பூமியர் என்பவராவர். தென் கெடிலநாடு - திருமுனைப்பாடி நாடென்னும் நடுநாடு. திருவீரட்டானம் ஈண்டுத் திருவதிகைத் திருவீரட்டானம். செல்வம் - முத்தித்திரு. (க)

கொடுவினையார் என்றுங் குறுகா அடி
குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும் அடி
படுமுழவம் பாணி பயிற்றும் அடி
பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்த அடி
கடுமுரணே றூர்ந்தான் கழற்சே வடி
கடல்வையங் காப்பான் கருதும் அடி
நெடுமதியங் கண்ணி அணிந்தான் அடி
நிறைகெடில வீரட்டம் நீங்கா அடி.

(ப - ரை.) கொடுவினையார் - தீவினையாளர்கள், என்றும் - எப்போதும், குறுகா அடி - அணுகப்பெறாத திருவடி; குறைந்து அடைந்தார் - பணிந்து அடைந்தவர், ஆழாமை - நரகக் குழியில் அழுந்தாவண்ணம், காக்கும் அடி - காக்கின்ற திருவடி; படுமுழவம் - ஒலியினைச் செய்கின்ற முழவு வாத்தியத்தை, பாணி பயிற்

றும் அடி - கரதாளத்தோடு பயில்விக்கின்ற திருவடி ; பதைத்து எழுந்த - துடித்தெழுந்த, வெம் கூற்றை - கொடிய காலனை, பாய்ந்த அடி - உதைத்தருளிய திருவடி ; கடுமுரண் - பெருவலியினையுடைய, ஏறு ஊர்ந்தான் - இடபத்தை ஊர்ந்தருளுகின்ற இறைவனது, கழல்சேவடி-வீரக்கழலை யணிந்த சிவந்த திருவடி; கடல்வையம் - கடல் சூழ்ந்த உலகத்தை, காப்பான் - காத்தருள்கின்ற திருமால், கருதும் அடி - சிந்திக்கின்ற திருவடி ; நெடுமதியம் கண்ணி - நீண்ட பிறையாகிய மாலையை, அணிந்தான் அடி - அணிந்தவனுடைய திருவடி ; நிறை - நீர் நிறைந்த, கெடில வீரட்டம் - திருக்கெடில வீரட்டானத்தை, நீங்கா அடி - என்றும் விட்டு நீங்காத திருவடி என்றவாறு.

குறைதல் - தம் குறைகளைச் சொல்லி இரங்குதல்; இஃது இப்பொருளதாதலை "குறைந்த திருநேரிசை" முதலியவற்றானறிக. தாழ்ந்து, எக்கற்று நிற்றலும் ஆம். ஆழாமைக் காத்தல், "இருடரு துன்பப் படல மறைப்பமெய்ஞ் ஞானமென்னும், பொருடரு கண்ணிழந் துண்பொரு ளென்றடிப் புகலிழந்த, குருடனுந் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின், றருடரு கைக் கொடுத் தேற்றுமை யாற னடித்தலமே" என்னுந் திருவிருத்தத்திற் காண்க. படுமுழவம் பாணி பயிற்றுதல் - பூதகணங்களும் பேய்க்கணங்களும் முழவு முதலிய வாச்சியங்களையும் கரதாளங்களையும் செய்ய இறைவன் இலயம்படுமாறு நடித்தருளுதல். வையங் காத்த லென்னுங் குறிப்பு விட்டுணு மூர்த்தியை யுணர்த்திற்று. கருதுதல் - தியானித்தல். இந் நாயனாரே வேறிடங்களிலும், "பைஞ்சுடர் விடுநாகப் பள்ளி கொள்வான் உள்ளத்தான்" எனவும், "திருமாலகத்தான்" எனவுங் கூறுதல் காண்க. காக்கக் கருதும் அடி எனினுமாம். (௨)

வைதெழுவார் காமம்பொய் போகா அடி
வஞ்சவலைப் பாடொன் றில்லா அடி
கைதொழுது நாமேத்திக் காணும் அடி
கணக்கு வழக்கைக் கடந்த அடி
நெய்தொழுது நாமேத்தி ஆட்டும் அடி
நீள்விசும்பை ஊடறுத்து நின்ற அடி
தெய்வப் புனற்கெடில நாடன் அடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் அடி.

(ப - ரை.) வைது எழுவார் - இகழ்ந்தெழுகின்றவர்களது, காமம் பொய் - காமமும் பொய்யும், போகா அடி - செல்லாத

திருவடி; வஞ்ச வலை பாடு - கரவாகிய வலையிற்படுதல், ஒன்று - ஒரு சிறிதும், இல்லா அடி - இல்லாத திருவடி; நாம் - அடியோங்களாகிய நாங்கள், கைதொழுது-வணங்கி, எத்தி - புகழ்ந்து காணும் அடி - காணப்பெறுகின்ற திருவடி; கணக்குவழக்கை - கணக்கு வழக்குகளை, கடந்த அடி - தாண்டின திருவடி; நாம் - நாங்கள், தொழுது எத்தி-வணங்கிப் போற்றி, நெய்ஆட்டும் அடி - ஆனின் நெய்யால் ஆட்டுவிக்கின்ற திருவடி; நீள் விசும்பை-நீண்ட ஆகாயத்தை, ஊடறுத்துநின்ற அடி - ஊடுருவிச் சென்று நிலைபெற்ற திருவடி; தெய்வம் புனல் - தெய்வத்தன்மை பொருந்திய நீரையுடைய, கெடில நாடன் அடி - திருக்கெடில நாடனது திருவடி; திருவீரட்டானத்து எம் செல்வன் அடி - திருவீரட்டானத்து எழுந்தருளிய எம் செல்வனது திருவடி என்றவாறு.

இறைவன் திருவடி "பொய் பொருந்தாத வன்பர்க்கணியன" வாதலின் கைதொழுவார் காமம் பொய் போகாவாயின. பத்தி வலையிற்படுவோன் வஞ்சவலையிற் படுதல் இயல்பன்றே. தொழுதல் காயத் தொண்டும், எத்துதல் வாக்குத் தொண்டுமாதல் காண்க. கணக்கு வழக்கைக் கடத்தல் - இத்துணைத்து இத்தகைமைத்து என அறிய வில்லாது நிற்றல். நெய்யினலாட்டுதலை, "நெய்யும் பாலும் தயிருங் கொண்டு நித்தல் பூசனை செய்ய லுற்றால்" என்னும் ஆளுடைய நம்பிகளது திருவாக்கானறிக. நெய் கூறவே இனம்பற்றி மற்றையவும் கொள்க. குறைவிலா நிறைவினையுடைய இறைவன் திருவடி நீள்விசும்பை ஊடறுத்தல் வியப்புள்ள தென்றுணரப்படும். தெய்வப்புனல் - கெடிலம் தென்றிசையிற் கங்கை என்று முன்பு கூறியது காண்க. (க௦)

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும் அடி
அழகெழுதல் ஆகா அருட்சே வடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்த அடி
சோமனையும் காலனையும் காய்ந்த அடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும் அடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்ல அடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன் அடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் அடி.

(கக - ரை.) அரும்பித்த - உதித்தலையுடைய, செஞ்ஞாயிறு - சிவந்த ஞாயிற்றை, எய்க்கும் அடி - நிகர்க்கும் திருவடி; அழகு எழுதல் ஆகா - தமதழகினை எழுத ஒண்ணாத, அருள் சேவடி

அருண் மயமாகிய திருவடி ; சுரும்பித்த வண்டினங்கள் - சுரும்புகளோடு கூடிய வண்டுக் கூட்டங்கள், சூழ்ந்த அடி - சூழப்பெற்ற திருவடி ; சோமனையும் காலனையும் - சந்திரனையும் இயமனையும், காய்ந்த அடி - சினந்த திருவடி ; பெரும்பித்தர் கூடி - பெரிய பித்தர்களாகிய சிவனடியார் ஒருங்கியைந்து, பிதற்றும் அடி - தம் மனத்துக் கியைந்தவாறு பலபடப் பேசுகின்ற திருவடி ; பிழைத்தார் - குற்றம் செய்தவர்களது, பிழைப்பு - தவற்றினை, அறிய வல்ல அடி - உணரவல்ல திருவடி; திருந்து நீர் - திருத்தமாகிய நீரையுடைய, தென் கெடில நாடன் அடி - தெற்கின் கண்ணதாகிய திருக்கெடில நாடனது திருவடி ; திருவீரட்டானத்து எம் செல்வன் அடி - திரு வீரட்டானத் தெழுந்தருளிய எம்முடைய செல்வனது திருவடி என்றவாறு.

செம்மையின் மகரம் ஞகரமாய்த் திரிந்தது. செஞ்ஞாயிறு ; தன்னோடியையின்மை நீக்கிய விசேடணம். ஏய்த்தல் - ஒத்தல் ; நிகர்த்தல். அழகெழுத லாகாமையை, "இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே" என்னுந் திருத்தாண்டகம் கூறும். சுரும்பு - வண்டின் பேதம். திருவடி, "வானோரினந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற வினமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி நனைந்தனைய" வாதலின் சுரும்பும் வண்டும் நீங்கா வாயின. சோமனைக் காய்ந்தது தக்கன் வேள்வியில். காலனைக் காய்ந்தது மார்க்கண்டர்க்காக. இவ்விரு செய்திகளையும், "சாட வெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை, வீடவெடுத்தது காலனை" என்ற திருவிருத்தத்திற் காணலாகும். பித்தர் - பிறவியறுத்த சிவனடியார்கள் என்பதை, "வித்தினைத் தேடி முளையைக் கைவிட்டார், பித்தேறினார்களென் றுந்தீபற" என்னுந் திருவுந்தியாரா லறிக. பிதற்றுதல்-தங்கள் தங்கள் அனுபவங்களைச் சிவஞானங்கொண்டு கூறுதல். (ச)

ஒருகாலத் தோன்றாகி நின்ற அடி
 ஊழிதோ றூழி உயர்ந்த அடி
பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க்கும் அடி
 புகழ்வார் புகழ்தகைய வல்ல அடி
இருநிலத்தார் இன்புற்றங் கேத்தும் அடி
 இன்புற்றார் இட்டபூ வேறும் அடி
திருவதிகைத் தென்கெடில நாடன் அடி
 திருவீரட் டானத்தெஞ் செல்வன் அடி.

(ப - ரை.) ஒரு காலத்து - ஒரு காலத்தில், ஒன்றாகி - ஒரே பொருளாய், நின்ற அடி - நிலைபெற்ற திருவடி; ஊழிதோறூழி - ஊழிக்காலங்கள் தோறும், உயர்ந்த அடி - உயர்ந்து நின்ற திருவடி; பொருகழலும் - வீரக்கழலும், பல் சிலம்பும் - பல சிலம்புகளும், ஆர்க்கும் அடி - ஒலிக்கின்ற திருவடி; புகழ்வார் புகழ் - தம்மைப் புகழ்ந்தோரது புகழினை, தகைய வல்ல அடி - மேம்படுத்த வல்ல திருவடி; இருநிலத்தார் - பெரிய நிலவுலகத்தார், இன்புற்று - மகிழ்ந்து, அங்கு ஏத்தும் அடி - அங்குத் துதிக்கின்ற திருவடி; இன்புற்றார் - மகிழ் சிறந்தார், இட்டபூ - சாத்திய மலர்கள், ஏறும் அடி - ஏறப்பெற்ற திருவடி; திருவதிகை - திருவதிகையிற் செல்லும், தென் கெடில நாடன் அடி - தெற்கின் கண்ணதாகிய கெடில நதியாயும் நாட்டினை யுடையவன் திருவடி; திருவீரட்டானத்து - திருவீரட்டானத் தெழுந்தருளிய, எம் செல்வன் அடி - எம்முடைய செல்வன் திருவடி என்றவாறு.

ஒரு காலம் - ஒருவனாய் உலகேத்த நின்ற நாள். ஒன்றாகி நிற்றல் - எல்லாந் தன்னுள் ஒடுங்கித் தற்சொரூபமாய் நிற்றல். ஊழிதோறூழி உயர்தல் - எண்ணில் பல ஊழி கழிந்த காலத்தும் தான் மூவாது பிறவாது இறவாது ஒருபடித்தாய்ச் சிறந்து நிற்றல். கழலும் சிலம்பும் காலணிகள். பொருகழல் - போர் செய்கின்ற வீரர்கள் அணியும் வெற்றியைக் குறிக்கும் காலணி. சிலம்பு - நாதச் சிலம்பு. இதனோசை திருவடியை வழிபடுகின்ற அடியார் திருவடியிற் சேர்தற்கு உபகரிக்குமென்க. தகைய என்னும் இப் பிரயோகம் மாணந் தகைவது நீறு என்பதிலும் காணப்பெறும். இருநிலத்தார் - தேவரும் மனிதரும் ஆகிய யாவரும் என்று கொள்ளலுமாம். ஏறுதல் - உவப்பாதல். (ரு)

திருமகட்குச் செந்தா மரையாம் அடி
சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும் அடி
பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்ற அடி
புகழ்வார் புகழ்தகைய வல்ல அடி
உருவிரண்டும் ஒன்றோடொன் றொவ்வா அடி
உருவென் றுணரப் படாத அடி
திருவதிகைத் தென்கெடில நாடன் அடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் அடி.

(ப - ரை.) திருமகட்கு - திருமகளாகிய இலக்குமிக்கு, செந்தாமரையாம் அடி - செந்தாமரை மலராகின்ற திருவடி;

சிறந்தவர்க்கு - மேலோர்க்கு, தேனாய் விளையும் அடி - தேனாய் விளைந்து தித்திக்கின்ற திருவடி; பொருளவர்க்கு - பொருளுடையோர்க்கு, பொன் உரையாய் - மாற்றுயர்ந்த பொன்னின் உரை போல, நின்ற அடி - சிறந்து நிற்கின்ற திருவடி; புகழ்வார் புகழ் தகைய - புகழ்வோரது புகழினை மேம்படுத்தற்கு, வல்ல அடி - வன்மையுற்ற திருவடி; உரு இரண்டும் - ஆண் பெண் என்னும் இரண்டுருவங்களும், ஒன்றோடொன்று - ஒன்றினோ டொன்று, ஒவ்வா அடி - பொருந்தாத திருவடி; உரு என்று - திருவுருவ மென்று, உணரப்படாத அடி - அறியப்பெறாத திருவடி; திருவதிகைத் தென் கெடில நாடன் அடி - தெற்கின் கண்ணதாகிய திருக்கெடில நாடனது திருவடி, திருவீரட்டானத் தெம் செல்வன் அடி - திருவதிகை...திருவடி என்றவாறு.

திருமகட்குச் செந்தாமரை என்றது பிறப்பிட மென்னுங் கருத்தினை யுடையது. சிறந்தவர்-அன்பிற் சிறந்தவர், அடியவர். உரை - ஆணிப் பொன். பொருளவர்க்கு என்பதை உண்மைப் பொருளை ஆராய்கிற்பார்க்கு என்று பொருள் கொள்ளின் பொன் உரை என்பதைப் பொன்னை போற் போற்றும் உரையளவை அல்லது சத்தப்பிரமாண மென்னும் வேத சிவாகம வசனங்கள் என்க. உரு இரண்டு - இறைவன் இறைவி இவரது திருவுருவங்கள். "வலந்தான் கழலிடம் பாடகம் பாம்பு வலமிடமே, கலந்தான் வலநீ றிடஞ்சாந் தெரிவலம் பந்திடமென், பலந்தார் வலமிட மாடகம் வேல்வல மாழியிடஞ், சாலந்தாழ் சடைவலந் தண்ணங் குழலிடஞ் சங்கரற்கே" என்னும் சேரர்பிரான் திருவாக்கு ஒன்றோடொன் றொவ்வாமையைக் காட்டாநிற்கும். இறைவன் திருவுருவங் கொள்ளினும் அது நம்மனோரால் அறியும் பெற்றியதன்று என்றபடி. (சு)

உரைமாலை எல்லாம் உடைய அடி
உரையால் உணரப் படாத அடி
வரைமாதை வாடாமை வைக்கும் அடி
வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும் அடி
அரைமாத் திரையில் அடங்கும் அடி
அகலம் அளக்கிற்பார் இல்லா அடி
கரைமாங் கலிக்கெடில நாடன் அடி
கமழ்வீரட் டானக் காபாலி அடி.

(ப - ரை.) உரை மாலை - சொன்மாலைகள், எல்லாம் உடைய அடி - எல்லாவற்றையும் உடைய திருவடி; உரையால் -

நாட்டை யுடையவன் திருவடி ; தகைசார் - பெருமை மிக்க, வீரட்டத் தலைவன் அடி - வீரட்டானத்து எழுந்தருளிய இறைவன் திருவடி என்றவாறு.

எல்லாப் பொருள்களினும் நிறைந்து யாண்டுஞ் செறிதலின் தூரமும் சமீபமும் ஆதற்கு ஏதுவில்லையாயிற்று. "பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப் பருகுதோ றமுதமொத் தவர்க்கே, தித்தியா விருக்கும் தேவர்கா ளிவர்தந் திருவுரு விருந் தவா பாரீர்" என்னுந் திருவிசைப்பா அடியார்கட்காரமுதமாதலை விளக்குமென்க. பாங்காதல் - உரிமையாதல். பற்று - அகப் பற்று புறப்பற்று என்பவை ; உயிர்ச்சார்பு பொருட்சார்பு என்றலுமாம். இறைவன் பற்றற்றார் பற்றுதலை இந்நாயனாரே பாவநாசத் திருப்பதிகத்தில், "பற்றற்றார்சேர் பழம்பதி" என்றார். மருந்து பிறவிப் பிணி தீர்க்கும் மருந்தென்க. (க)

அந்தா மரைப்போ தலர்ந்த அடி
அரக்கனையும் ஆற்றல் அழித்த அடி
முந்தாகி முன்னே முளைத்த அடி
முழங்கழலாய் நீண்டஎம் மூர்த்தி அடி
பந்தாடு மேல்விரலாள் பாகன் அடி
பவளத் தடவரையே போல்வான் அடி
வெந்தார் சுடலைநீ றாடும் அடி
வீரட்டங் காதல் விமலன் அடி.

(ப - ரை.) அம் தாமரைப்போது - அழகிய தாமரைமலர், அலர்ந்த அடி - மலர்ந்தது போன்ற திருவடி ; அரக்கனையும்-இராவணனையும், ஆற்றல் அழித்த அடி - வலிகெடுத்த திருவடி; முந்து ஆகி - எல்லாவற்றிற்கும் முந்தினதாகி, முன்னே முளைத்த அடி - முன்னே தோன்றிய திருவடி ; முழங்கு அழலாய் - முழங்கு கின்ற நெருப்புருவமாய், நீண்ட - எழுந்து நின்ற, எம்மூர்த்தி அடி- எம்முடைய மூர்த்தியின் திருவடி; பந்தாடு மெல்விரலாள் - பந்தாடு கின்ற மெல்லிய விரல்களையுடைய அம்பிகையினது, பாகன் அடி - பாகத்தையுடையவனது திருவடி : பவளம் தடவரையே - பெரி தாகிய பவள மலையையே; போல்வான் அடி - நிகர்ப்பவரது திரு வடி ; வெந்தார் - வெந்தவரது, சுடலை நீறு ஆடும் அடி - சுடலைப் பொடியைத் தரிக்கின்ற திருவடி ; வீரட்டம் காதல் - திருவீரட் டானத்தை விரும்பி யெழுந்தருளி யிருக்கின்ற, விமலன் அடி - புனிதனாகிய இறைவன் திருவடி என்றவாறு.

முந்தாகி முன்னே முளைத்ததை, "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே" என்னுந் திருவாசகத்தாலறிக. முழங்கழலாய் நீண்ட திருவுருவம், "கரியவன் நான்முகன் கைதொழுதேத்திக் காணலுஞ் சாரலுமாகா எரியுரு." சுடலை - சாந்தியாதீத கலைவரையில் உள்ள சர்வ புவனங்களின் சம்மாரத்தால் ஆம் சுடலையாம். விமலன் - நிர்மலன்; அநாதிமல முத்தன். (க0)

திருச்சிற்றம்பலம்

## சுந்தரமூர்த்திநாயனூர்

# திருப்புன்கூர்

---

*பண் - தக்கேசி*

**திருவடிகள்**

*திருச்சிற்றம்பலம்*

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
  அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
  வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
  இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
  செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

(ப - ரை.) *அந்தணாளன்-அந்தணச் சிறுவனாகிய மார்க்கண்டன், உன் அடைக்கலம் புகுத - தேவரீரைச் சரணடைய, அவனைக் காப்பது - அவனைப் புரப்பது, காரணமாக - காரணமாகக் கொண்டு, வந்த காலன்தன் - எதிர்த்துவந்த கூற்றுவனது, ஆருயிர் அதனை - அரிய உயிரை, வவ்வினாய்க்கு உன்றன் - கவர்ந்த தேவரீருக்கு இயல்பாயுள்ள, வண்மைகண்டு - வள்ளன்மையை அறிந்து, அடியேன் - அடியவனும், எந்தைநீ - எம் தந்தையாகிய தேவரீர், எனை - என்னையும், நமன் தமர் நலியில் - எமதூதுவர் வருத்துவதாயின், இவன் என் அடியான் என - இவனும் என் அடியனென்று, விலக்கும் - விலக்கி யருளுகின்ற, சிந்தையால் - எண்ணத்தால், வந்து உன்திருவடி அடைந்தேன் - வந்து தேவரீரது திருவடியைச் சேர்ந்தேன், செழும்பொழில் - வளவிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் உளானே - திருப்புன்கூரில் எழுந்தருளிய இறைவனே என்றவாறு.*

இறைவன் காலனை அடர்த்து அடியவரைக் காக்கும் வள்ளன்மை காண்டலளவை கொண்டு கூறப்பட்டது. அக் காரணம் பற்றி யானும் தேவரீரைச் சரண் அடைந்தேன் என்பது கருத்து. "மார்க்கண்டர்க் காக மறலிபட்ட பாட்டையுன்னிப், பார்க்கின் அன்பர்க் கென்ன பயங்காண் பராபரமே" என்ற பிற்காலத் தான்றோர் திருவாக்குண்மையுங் காண்க. அந்தணாளன் - அழகிய தட்பத்தை ஆளுதலுடையவன். நமன் தமர்-யமபடர், தூதுவர். புன்கூர் - புன்கினைத் தலமரமாகவுடைய திருப்பதி. இது காவிரிக்கு வட கரையிலுள்ள சோழநாட்டுத் திருப்பதி. (க)

வையகம் முற்று மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன
ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யும் மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

(ப - ரை.) வையகம் முற்றும் - உலகம் முழுவதும், மாமழை மறந்து - சிறந்த மழை மறத்தலினால், வயலில் நீர்இலை - வயலில் நீர் இல்லையாயிற்று, மாநிலம் தருகோம் - அதிக நிலம் கொடுப்போம், எங்களை-அடியோங்களை, உய்யக் கொள்க என்ன - மழை பெய்வித்து உய்யக் கொண்டருள்க என்று வேண்ட, ஒளி கொள்- ஒளியைக் கொண்ட, வெண்முகிலாய் - வெண்ணிறமாகிய மேகங்களாகி, எங்கும் பரந்து - எவ்விடத்தும் பரவி, பெய்யும் - பெய்கின்ற, மாமழை - பெரிய மழையினாலாகிய, பெரு வெள்ளம் தவிர்த்து - பெரிய வெள்ளத்தை ஒழித்து, பெயர்த்தும் - மறுபடியும், பன்னிரு வேலி கொண்டருளும் - பன்னிருவேலி நிலங் கொண்டருளிய, செய்கை கண்டு - திருவருட் செய்கையைப் பார்த்து, நின் திருவடி அடைந்தேன் - தேவரீரது திருவடியைச் சேர்ந்தேன், செழும் - கொழுமை வாய்ந்த, திருப்புன்கூர் உளானே - திருப்புன்கூரை இடமாக உடையவனே என்றவாறு.

இத்தலத்தவர்கள் மழையை வேண்டிப் பன்னிருவேலி நிலங் கொடுப்பேமென்று இறைவனை வேண்ட, இறைவன் முகிலுருவமாகிப் பெருமழை சொரிந்து வெள்ளங் காட்டுதலும், மீண்டும் பன்னிருவேலி கொடுப்பேமென்று வேண்டி, அதனையும் தவிர்த்துக் கொண்டனர் என்பது தல வரலாறு. மழை மறத்தல் -

*மழை பெய்யாது ஒழிதல், மாநிலம்-சிறந்த நிலம். பெயர்த்தும் பன்னிருவேலி என்றமையால் முன்னும் பன்னிரு வேலி யென்பது பெற்றாம். செய்கை - வேண்டுவார் வேண்டியாங்கு ஈந்தருளும் அருட் செய்கை. நாயனார் காண்டலளவை முகத்தால் இறைவன் திருவடி யடைதலைச் சொல்லிப் பிறரையும் அடைவித்தல் இப் பதிகத்தின் கருத்தாகக் கொள்க.* (உ)

ஏத நன்னிலம் ஈரறு வேலி
  ஏயர் கோனுற்ற இரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
  கோல வெண்மணற் சிவன்தன்மேற் சென்ற
தாதை தாளற எறிந்தசண் டிக்குன்
  சடைமி சைமலர் அருள்செயக் கண்டு
பூத ஆளிநின் பொன்னடி அடைந்தேன்
  பூம்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

**(ப - ரை.)** *நல்நிலம்-நல்ல நிலம், ஈரறு வேலி-பன்னிரண்டு வேலி கொடுத்த, ஏயர்கோன் உற்ற - ஏயர்கோன் கலிக்காம நாயனார் எய்திய, ஏதம் - துன்பத்தைச் செய்யும், இரும் பிணி தவிர்த்து - பெரிய நோயினை ஒழித்து, கோதனங்களின் - பசுக் கூட்டங்களினது, பால் கறந்து ஆட்ட - பாலைக் கறந்து திருமஞ்சனஞ் செய்ய, கோலம் - அழகிய, வெண்மணற் சிவன்மேல்- வெண்ணிறமாகிய மணலினாற் செய்த சிவ அருட்குறியின் மேல், சென்ற - சிதைக்கும் பொருட்டுச் சென்ற, தாதை தாளற-தந்தையின் கால்கள் அறும்படி, எறிந்த - துணித்த, சண்டிக்கு - சண்டேச நாயனாருக்கு, உன்சடைமிசை மலர் - தேவரீரது சடையிற் றரித்த கொன்றைமலர்மாலையை, அருள் செயக்கண்டு - அருளியதைப் பார்த்து, பூத ஆளி - பூதநாதரே, பூம் - பொலிவினையுடைய, பொழில் திருப்புன்கூர் உளானே - சோலை சூழ்ந்த திருப்புன்கூரை உடையவனே, நின் - தேவரீரது, பொன் அடி அடைந்தேன் - பொன்னடியைச் சரண் அடைந்தேன் என்றவாறு.*

*தவிர்த்து, அருள்செய, கண்டு அடைந்தேன் என வினை முடிக்க. ஈரறு வேலி - ஏயர்கோன் கலிக்காம நாயனார் திருப்புன்கூரில் இறைவனுக்குப் பூசை நிபந்தம் இயற்றிக் கொடுத்தது; பிணிதவிர்த்தற் பொருட்டன்று. இதனைத் திருத்தொண்டர் புராணத்துக் கண்டு கொள்க. பிணிதவிர்த்தது சுந்தரமூர்த்தி நாயனாரைக் கொண்டு சூலைநோய் நீக்கியருளி, அவரோடு நட்புச்செய்*

வித்தது. கோதனங்களின் பால் கறந்தாட்டிச் சண்டேசர் அருள் பெற்றதை, 'வந்தமண லாலிங்க மண்ணியின்கட் பாலாட்டும், சிந்தைசெய்வோன் றன்கருமந் தேர்ந்துசிதைப் பான்வருமத், தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக், கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே" என்னுந் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரத்தாலறிக. பூதவாளி-பூதங்களை ஆளுதலுடையவர். (௫)

நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதனற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரண்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே.

(ப - ரை.) நல் தமிழ் வல்ல - நல்ல தமிழ்ப் பாடலில் வன்மையுற்ற, ஞானசம்பந்தன் - திருஞான சம்பந்தரும், நாவினுக்கரையன் - திருநாவுக்கரசரும், நாளைப் போவானும் - திருநாளைப் போவாரும், கற்ற சூதன் - கற்றுவல்ல மூர்க்க நாயனாரும், நல்சாக்கியன் - நல்ல சாக்கிய நாயனாரும், சிலந்தி - சிலந்திப் பூச்சியும், கண்ணப்பன் - கண்ணப்ப நாயனாரும், கணம் புல்லன் - கணம்புல்ல நாயனாரும், என்று இவர்கள் - என்று கூறும் இவர்கள் யாவரும், குற்றம் செய்யினும் - பலவிதமாகிய குற்றஞ் செய்தாலும், குணமெனக் கருதும் - அவற்றைக் குணமாகக் கொண்டருளின, கொள்கை கண்டு - தேவரீரது திருவருட் கொள்கையைப் பார்த்து, பொன் திரள் - பொற்றிரளும், மணி - மணிகளும், கமலங்கள் - தாமரைகளும், மலரும் - பரந்து விளங்கும், பொய்கைசூழ் - தடாகங்கள் சூழப்பெற்ற, திருப்புன்கூர் உளானே - திருப்புன்கூரில் எழுந்தருளிய பெருமானே, நின் - தேவரீரது, குரைகழல் - ஒலிக்கின்ற - வீரக்கழலை யணிந்த திருவடியை, அடைந்தேன் - சரணமடைந்தேன் என்றவாறு.

நற்றமிழ்வல்ல என்பதை நாவினுக் கரையருக்குஞ் சேர்த்துரைக்க. உம்மை தொக்க இடங்களி லெல்லாங் கூட்டி யுரைத்துக் கொள்க. கற்ற என்பதைச் சூதாட்டத்தை நன்கு பயின்று கற்ற என்று உரைக்க. சாக்கியன் - முன்னர்ப் புத்த சமயங்

கொண்டு நின்றவராதலால் சாக்கியரெனப்பட்டார். சிலந்தி - கோச்செங்கட் சோழரது முற்பிறப்பு. கண்ணப்பர் - கண்ணை யப்பி வழிபட்டவர். கணம்புல்லர் - கூட்டமாகிய அறுகம் புல்லினை யரிந்துவிற்றுத் தொண்டு செய்தவர். மலர்தல் - விளங்குதல்.

திருஞானசம்பந்தர் - பரமுத்திக் கருகரல்லாத பலரையும் நமச்சிவாயப் பதிகமுரைத்து, ஆட்படுத்திச் சிற்சோதியிற் புகவிட்டதும்,

திருநாவுக்கரசர் - சமண் சமயம்புக்கு இறைவனைப் பண்டிகழ்ந்தமையும்,

திருநாளைப் போவார் - தம்மரபிற் கடுத்ததல்லதாகிய சிதம்பரஞ் சென்று தரிசிக்க எண்ணினமையும்,

சூதர் - குற்றமாகக் கருதப் பெறும் சூதாட்டத்தை மேற்கொண்டதும், அவ்வாட்டத்தில் மறுத்தவரைச் சுரிகையிற் குத்தி மூர்க்கரானதும்,

சாக்கியர் - கல்லா லெறிந்ததும்,

சிலந்தி - முற்பிறப்பில் வாயினூலாற் பந்தர் அமைத்ததும் யானையிடத்துப் பகைமை கொண்டதும், சோழராய்ப் பிறந்த பொழுது பழம் பகை யுணர்ச்சியால் யானைபுகா மாடக்கோயில் கட்டி அவ்வுணர்ச்சியை விடாதிருந்ததும்,

கண்ணப்பர் - இறைவன் திருமுடிப்பூக்களைச் செருப்புக் காலால் நீக்கியதும், வாய் நீர் உமிழ்ந்ததும், குஞ்சிப்பூச் சொரிந்ததும், ஊனருத்தியதும்,

கணம்புல்லர் - இறைவன் சந்நிதானத்தில் தலை மயிரினை விளக்கில் மாட்டி யெரித்ததும்,

ஆகிய இவை யாவும் இவர் மாட்டுக் குற்றமாகவும், இறைவன் இவைகளைக் குணமாகக் கொண்டு அருளினமை ஈண்டுக் கருதப்பட்டது என்று அறிக. (௪)

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோளர வுசுற்றிக் கடைந்தெ ழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீலம் ஆர்கடல் விடந்தனை உண்டு
கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலம் கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

(ப - ரை.) கோலம் மால்வரை - அழகிய பெரிய மந்தர மலையை, மத்தென நாட்டி - மத்தாக நிறுத்தி, கோள் அரவு சுற்றி - அம் மலை யிடத்துத் துன்பஞ் செய்கின்ற வாசுகியாகிய பாம்பினைத் தாம்பாகச் சுற்றி, கடைந்து - பாற்கடலைக் கடைதலால், எழுந்த - அதில் தோன்றிய, ஆலம்நஞ்சு கண்டு - ஆலகால விடத்தைப் பார்த்து, அவர் - கடைந்த தேவர்களும் அசுரர்களும், மிக இரிய - மிகவும் அஞ்சித் திசைகள் தோறும் ஓட, அமரர்கட்கு - அவருட் டேவர்கட்கு, அருள்புரிவது கருதி - அருள் புரிந்து காத்தல் கருதி, நீலமார்கடல் விடந்தனை - நீல நிறம் பொருந்திய கடலில் எழுந்த விடத்தினை, உண்டு - பானம் பண்ணி, கண்டத்தே - திருமிடற்றிலே, வைத்த - தரித்தருளிய, பித்த - பித்தரே, நீ செய்த - தேவரீர் செய்தருளிய, சீலம் கண்டு - அருளிரக்கமுள்ள குணத்தைப் பார்த்து, செழும்பொழில் - செழுவிய சோலை சூழ்ந்த, திருப்புன்கூர் உளானே - திருப்புன்கூரில் எழுந்தருளியவரே, நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - அடைக்கலம் புகுந்தேன் என்றவாறு.

அருள்புரியக் கருதியதை விடத்தை யுண்டு காத்தவகையானும், பிறகு பிழைத்த அவர் அமுதமுண்ணச் செய்த வகையானும் காண்க. "அமரர்கள் பின்னமுதுண்ணத் தான் முன்னஞ்சுண்டானை" என்னுந் தமிழ்மறை இதனை உணர்த்தும். கண்டத்தில் வைத்தது தேவர்கள் திருநீலகண்டத்தைக் காணுந்தோறும் தமது எளிமையையும், இறைவனது மேன்மையையும் அருட்டன்மையையுங் கண்டு செருக் கொழிதலினுல் அவர் உய்வின் பொருட்டென்க. இதனைப் புராண இதிகாசங்கள் பலபடி பாராட்டி உரைத்தலைக் கண்டு கேட்டுத் தெளிக. சீலம் - உபகார குணம். (௫)

இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கம் இல்புலி வானரம் நாகம்
வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்
அயர்ப்போன் றின்றிநின் திருவடி அதனை
அர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு
திகைப்போன் றின்றிநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

(ப - ரை.) இயக்கர் - கந்தருவர்கள், கின்னரர் - கின்னரர்கள், யமனொடு-இயமனோடு, வருணர்-வருணர், இயங்குதீ - விளங்கு

கின்ற அக்கினி, வளி - வாயு, ஞாயிறு - சூரியன், திங்கள் - சந்திரன், மயக்கமில் புலி - மயக்கமில்லாத புலி, வானரம் - குரங்கு, நாகம் - பாம்பு, வசுக்கள் - வசுக்கள், வானவர் - தேவர்கள், தானவர் - அசுரர்கள், எல்லாம் - ஆகிய இவர் எல்லாரும், அயர்ப்பு ஒன்று இன்றி - சோர்வு சிறிதுமின்றி, நின் திருவடி அதனை - தேவரீரின் திருவடிகளை, அர்ச்சித்தார் - வழிபட்டவராய், பெறும் - அவர் பெற்ற, ஆர் அருள் கண்டு - பெறுதற்கரிய திருவருளைப் பார்த்து, செழும்பொழில்—, திருப்புன்கூருளானே—, திகைப்பு ஒன்று இன்றி - மயங்குதல் சிறிது மில்லாமல், நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - வந்து சேர்ந்தேன் என்றவாறு.

இயக்கர், கின்னரர், வசுக்கள், வானவர், தானவர் இவர் யாவரும் பதினெண் கணத்தி னெண்ணப்படும் தொகுதியர். யமன், வருணன், அக்கினி, வாயு இவர் திசைகாப்பாளர்கள். ஞாயிறு திங்கள் - இருசுடர்கள். புலி, வானரம், நாகம் முதலியவை முன்னைப் பிறவியின் செய்த குற்றம் காரணமாக இவ் யோனிகளிற் பிறந்தும் முன்னைய உணர்ச்சியால் புண்ணியப் பயன் வந்தெய்திய காலத்தில் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றனவென் றுணர்க. ஒரு பிறப்பிற் செய்த புண்ணியம் கற்ற கல்வி முதலியவை எழு பிறப்பினுஞ் சென்று உதவு மென்பது நூற்றுணிபாதல் அறியப்படும். அயர்ப்பு - அயர்ச்சி, சோர்வு. திகைப்பு - ஐயம். (சு)

போர்த்த நீள்செவி யாளர்அந் தணர்க்குப்
பொழில்கோள் ஆல்நிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்
தருளி னுய்பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை
நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த
தீர்த்த னேநின்றன் திருவடிய டைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

(ப - ரை.) போர்த்த - பொத்தின, நீள் - நீண்ட, செவி யாளர் - செவிப்புலனை யுடையவர்களாகிய, அந்தணர்க்கு - மறை யவர்களுக்கு, பொழில்கொள் - சோலையினது தன்மையைப் பெற்ற, ஆல்நிழல்கீழ் - கல்லாலின் நீழலில், அறம் புரிந்து - தருமத்தை உபதேசித்து, பார்த்தனுக்கு - அருச்சுனனுக்கு,

அன்று - அந்நாளில், பாசுபதம் - பாசுபதக் கணையை, கொடுத்தருளினாய் - கொடுத்தருளினீர், பகீரதன் வேண்ட - பகீரதன் இரந்து வேண்ட, ஆர்த்து வந்து இழியும் - ஆரவாரித்து வானினின்று இறங்கும், புனற்கங்கை நங்கையாளை - புனலுருவாகிய கங்கை நங்கையை, நின் சடைமிசை - தேவரீரது சடையில், கரந்த - ஒளிக்கச்செய்த, தீர்த்தனே - புனிதனே, செழும் பொழில்—, திருப்புன்கூருளானே—, நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - வந்து சேர்ந்தேன் என்றவாறு.

தீர்த்தனே, திருப்புன்கூருளானே, அந்தணர்க்கு அறம் புரிந்து பார்த்தனுக்கு அருளினாய் நின் திருவடி அடைந்தேன் எனக் கூட்டுக. போர்த்தல் - பொத்துதல். பயனில் சொல் சேளாமல் அடைத்தல். நீளுதல் - நீண்ட கேள்வியுடைய தாதல். அந்தணர்-சனகாதியர்களாவர். பார்த்தன்-பிருதை (குந்திதேவி) யின் மகன், பகீரதன் - சூரியகுலத்துச சக்கரவர்த்தி. சரித்திரம் முன்னர்க் கூறியது காண்க. கரத்தல் - புன்னுனிப் பனி யொப்ப உருத்தெரியாது ஒளியச் செய்தல். கங்கையை அணிந்தமையால் புனிதனாதை வின்மையைத் தெரிவித்தற் பொருட்டுத் தீர்த்தன் என்றது கண்டு கொள்க. (எ)

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரில்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரேன் றேவிய பின்னை
ஒருவ னீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநட மகிழ
மணிமு ழாமுழக் கவருள் செய்த
தேவ தேவநின் திருவடிய டைந்தேன்
செழும்போ ழில்திருப் புன்கூ ருளானே.

(ப - ரை.) மூ எயில் - மூன்று புரங்களையும், செற்றஞான்று - எரித்த நாளில், உய்ந்த மூவரில் - சாவாது பிழைத்த மூவர்களின், இருவர் - இரண்டு பேர், நின் திருக்கோயிலின் வாய்தல் - தேவரீரது திருக்கோயிலின் திருவாயிலில், காவலாளர் என்று - வாயிற் காப்பாளரென்று, ஏவிய பின்னை - நியமித்த பிற்பாடு, ஒருவன் - மற்றொருவன், நீ - தேவரீர், கரிகாடு அரங்காக - கருநிறமுள்ள சுடுகாடே திருவம்பலமாக, மானை நோக்கி - உமாதேவியாரைப் பார்த்து, மகிழ - அவர் மகிழுமாறு செய்யும், ஓர் மாநடம் - ஒப்பற்ற பெரிய திருக்கூத்தில், மணிமுழா முழக்க - அழகாகிய

முழவு வாத்தியத்தை முழக்கும்படி, அருள் செய்த - இரங்கி யருளிய, தேவதேவ - தேவ தேவரே, செழும்பொழில்—, திருப்புன்கூ ருளானே—, நின் - தேவரீரது, திருவடி அடைந் தேன் - திருவடியைச் சேர்ந்தேன் என்றவாறு.

மூவர் - தாருகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி என்பவர். இவர் சிவபூசையை விடாது செய்தமை பற்றி, இறைவன் இவரைத் திரிபுர மெரித்த காலத்தில் வேவாது பிழைப்பித்தார் என்பது வரலாறு. இதனை, "உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண், டெய்யவல் லானுக்கே யுந்தீபற" என்றும், "எண்ணுடைமூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக், கண்ணுதலெந்தை கடைத்தலைமு னின்றதற்பின்" என்றும் வருந் திருவாசகத்தா லறிக. அரங்கு - சபை. தேவதேவன் - தேவர் களுக்குத் தேவன்; வடமொழிச்சந்தி. மாதேவன் என்னும் பொருளது. (அ)

அறிவி னன்மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து
எறியும் மாகடல் இலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகோள் பாடலின் இன்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

(ப - ரை.) அறிவினல் மிக்க - மெய்யறிவினல் மேம்பட்ட, அறுவகை சமயம் - அறுவகைச் சமயங்களிலும், அவ் வவர்க்கு - அவ்வச் சமயங்களை யுடையவர்க்கு, அங்கே - அவ்வச் சமயத்தே, ஆர் அருள் புரிந்து - அரிய திருவருளைச் செய்து, எறியும் மா கடல் - அலை யெறிகின்ற பெரிய கடல் சூழ்ந்த, இலங்கையர் கோனை - இலங்கையர்க்கரசனை இராவணனை, துலங்க - நடுங்கு மாறு, மால் வரைகீழ் - பெரிய கைலாய மலையின் கீழ், அடர்த் திட்டு - நசுக்கி, குறிகொள் - இரங்கியருளல் வேண்டு மென்னும் குறிப்பினையுடைய, இன்னிசையின் - இனிய இசையோடு கூடிய, பாடல் கேட்டு - பாட்டினைக் கேட்டு, கோலம் - அழகிய, வாள் ஒடு நாள் அது கொடுத்த - வாளோடு ஆயுளையும் கொடுத்தருளிய, செறிவு கண்டு - திருவருட் செய்தியைப் பார்த்து, செழும்

பொழில்—, திருப்புன் கூருளானே—, நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - சரண் புகுந்தேன் என்றவாறு.

அறுவகைச் சமயம் - ஈண்டு உட்சமயங்கள் ஆறு. புறப்புறச் சமயத்திலும் புறச் சமயமும், புறச் சமயத்திலும் அகப்புறச் சமயமும், அவற்றினும் அகச் சமயமும் இறைவனது உண்மைச் சொரூபத்தினைக் கண்டு வழிபடுதலில் மேம்படுதலால் அறிவிலுன் மிக்கனவாயின. குறிகொள் - இரக்கக் குறிப்பினைக் கொண்ட பாடலினின்னிசை என்பதை இன்னிசையின் பாடல் என மாற்றி உரைக்கப்பட்டது; பாவத்துக்கு இராகம் அங்கமாவதன்றி, இராகத்திற்குப் பாவம் அங்கமாகாமையின் என்க. ஈண்டுச் சாமகானம் விடயம். வாளும் நாளும் கொடுத்தது புராணம். செறிவு - நிறைந்த அன்பு. (கூ)

கம்ப மால்களிற் றின்னுரி யானைக்
காமற் காய்ந்ததோர் கண்ணுடை யானைச்
செம்பொ னேயொக்கும் திருவுரு வானைச்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானை
உம்பர் ஆளியை உமையவள் கோனை
ஊரன் வன்தொண்டன் உள்ளத் தாலுகந்து
அன்பி னாற்சொன்ன அருந்தமி ழைந்தோ
டைந்தும் வல்லவர் அருவினை இலரே.

(ப - ரை.) கம்பம் - அசைதலையுடைய, மால்களிற்றின் - மதமயக்கத்தையுடைய யானையினது, உரியானை - தோலையுடையவனை, காமன் காய்ந்தது - மாரவேளை எரித்ததாகிய, ஓர் கண் உடையானை - ஒப்பற்ற நெற்றிக்கண்ணை யுடையவனை, செம்பொன் ஏ ஒக்கும் - செந்நிறத்தையுடைய பொன்னையே ஒப்பாகின்ற, திருவுருவானை - திருமேனி யுடையானை, செழும் பொழில்—, திருப்புன் கூருளானை—, உம்பர் ஆளியை - தேவர்களிற் சிறந்தவனை, உமையவள் கோனை - உமாதேவியாரின் தலைவனை, ஊரன் வன்தொண்டன்-ஊரனாகிய வன்றொண்டன், உள்ளத்தால் உகந்து-மனத்தால் விருப்பங்கொண்டு, அன்பினால் சொன்ன - அன்பினால் உரைத்த, அரும் தமிழ் - அருமையாகிய தமிழ்ப் பாட்டுக்கள், ஐந்து ஒடு ஐந்தும்-பத்தும், வல்லவர்-கற்று ஓதவல்லவர்கள், அருவினை இலர் - நீங்குதற்கரிய வினைகளை இல்லாதவராவர் என்றவாறு.

கம்பம் - கட்டுத்தறியெனவும், கண்டோர் எய்தும் நடுக்கம் எனவுமாம். உம்பர் ஆளி - உம்பர்களுக்குள் ஆளிபோன்றவன்; ஆளி: ஒரு மிருக விசேடம்; யானையாளி. ஆளி - ஆளுதலை யுடையனென்றுமாம். கோன்-தலைவன். சுந்தரமூர்த்தி நாயனருக்கு வன்றொண்டர் என்னும் நாமம் இறைவனுற் கொடுக்கப் பெற்றது. இதனை, "தன்மையினு லடியேனைத் தாமாட் கொண்ட நாட் சபைமுன், வன்மைகள் பேசிட வன்றொண்ட னென்பதோர் வாழ்வுதந்தார்" என இந் நாயனரே தமது திருநாவலூர்த் திருப்பதிகத்திற் கூறுமாறு காண்க. இத் திருப்பதிகம் ஆளுடைய நம்பிகள் திருப்பெருமங்கலத்தில் ஏயர்கோன் கலிக்காம நாயனர்க்குற்ற சூலையினைத் தீர்த்து நட்புக்கொண்டு அவரோடு திருப்புன்கூரை யடைந்து ஓதியருளிய தென்க. (க0)

திருச்சிற்றம்பலம்

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

## திருப்பூந்தராய்

---

### பண் - காந்தாரபஞ்சமம்

அருச்சனை

திருச்சிற்றம்பலம்

பந்துசேர்விரலாள் பவளத்துவர் வாயினாள்
        பனிமாமதி போல் முகத்து
அந்த மில்புக ழான்மலை
        மாதோடும் ஆதிப்பிரான்
வந்துசேர்விடம் வானவரெத் திசையுந்நிறைந்து
        வலஞ்செய்து மாமலர்
புந்தி செய்திறைஞ் சிப்பொழி
        பூந்தராய் போற்றுதுமே.

(ப - ரை.) பந்து சேர் - பந்து சேர்ந்த, விரலாள் - திருவிரலினை யுடையவரும், பவளம் - பவளம் போன்ற, துவர் வாயினாள் - சிவந்த திருவாயை யுடையவரும், பனி மா மதி போல் முகத்து - குளிர்ச்சி பொருந்திய நிறைமதி போன்ற திருமுகத்தையுடைய, அந்தம் இல் புகழான் - முடிவில்லாத பெரும் புகழினை யுடையவருமாகிய, மலை மாதொடும் - பார்வதி தேவியாரோடும், ஆதிப்பிரான் - முதற் பெருந் தேவராகிய சிவபெருமான், வந்து சேர்வு இடம் - எழுந்தருளிவந்து சேர்தலை உடைய இடமாகிய, வானவர் - தேவர்கள், எத்திசையும் - எல்லாப் பக்கங்களிலும், நிறைந்து - நெருங்கி, வலம் செய்து - வலம் வந்து, புந்தி செய்து - இவர் நம்மையாளும் இறைவர் என்று புத்தி பண்ணி, இறைஞ்சி - வணங்கி, மாமலர் - சிறந்த பூக்களை, பொழி - மிகுதியாகத் தூவுகின்ற, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

உமாதேவியார் பந்துசேர் விரலாராதலை, "பந்தணை விரலாள் பங்கநீ யல்லால், பற்றுநான் மற்றிலேன் கண்டாய்" என்னுந் திருவாசகத்தாலுங் காண்க. துவர் - சிவப்பு. மாமதி - சிறந்த மதியுமாம். ஆதிப்பிரான் - மூவர்க்கும் முதல்வனாய் மாசங்காரத்தினைச் செய்து மீண்டும் மலங்காரணமாக உலகினைப் படைக்கும் ஆதியாகிய இறைவன். பூந்தராய் - சீகாழி. ஆதிப்பிரான் வந்து சேர்விடம் பூந்தராய் போற்றுதும் எனக் கூட்டிக் கொள்க. (க)

காவியங்கருங் கண்ணினாள்கனித் தொண்டைவாய்க்
கதிர்முத்தநல் வெண்ணகைத்
தூவி யம்பெடை யன்ன நடைச்சுரி
மென்குழலாள்
தேவியுந்திரு மேனியோர்பாக மாயொன்றிரண்
டொருமூன் றொடுசேர்பதி
பூவி லந்தணன் ஒப்பவர் பூந்தராய்
போற்றுதுமே.

(ப - ரை.) காவி - நீல மலர்போலும், அம் - அழகிய, கரும் கண்ணினாள் - கரிய கண்களையுடையவரும், தொண்டை கனி - கொவ்வைக் கனிபோலும், வாய் - திருவாயினையும், கதிர் முத்தம் - ஒளி விரிக்கும் முத்துக்கள் போலும், நல் - நல்ல, வெண் நகை - வெண்நகையையும், தூவி - இறகுகளையுடைய, அம் - அழகிய, பெடை அன்னம் நடை - பெண் அன்னத்தின் நடையையும், சுரி மென் குழலாள் - சுருண்ட மெல்லிய அளகத்தையும் உடையவரும் ஆகிய, தேவியும் - உமாதேவியாரும், திருமேனி ஓர்பாகமாய் - திருமேனியில் ஒரு பாகமாயும். (தாமொருபாகமாயும் இறைவன் எழுந்தருளியுள்ள) ஒன்று இரண்டு ஒரு மூன்று ஒடு சேர் - ஆறுவது என்னும் கிரமத்தில் பொருந்திய, பதி - திருப்பதியாகிய, பூவில் அந்தணன் - தாமரை மலரில் எழுந்தருளிய பிரமதேவரை, ஒப்பவர் - நிகர்ப்பவராகிய மறையவர் வசிக்கின்ற, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

தூவி - அன்னத்தின் சிறகு. தேவியுந் திருமேனி ஓர் பாகமாய் எனவே தாமும் ஓர் பாகமாய் எனவும், பொருளை நிரப்புதற்கு இறைவன் எழுந்தருளியுள்ள எனவும் கூட்டி யுரைக்கப் பட்டது. ஒன்றிரண்டொரு மூன்று-ஆறு; சீகாழியினது பன்னிரு பெயர்களுள் பூந்தராய் ஆறுவது என்பது ஈண்டுக் கருதி

யது. இஃதறியாது பாட்டைத் திருத்திப் பொருளுரைத்தார் பிறர். இதன் விரிவையெல்லாம் திருவெழுகூற்றிருக்கை உரையி னிறுதியிற் கூறியது கொண்டு காண்க. மறையவர் பூவிலந்தணன் ஒப்பவர் என்பதை இந்நாயனாரே "பெருந்தண்மா மலர்மிசை யயனவ னனையவர் பேணுகல்வித், திருந்துமா மறையவர் திருநெல்வேலி" என வேறிடத்துங் கூறுவது காண்க. (உ)

பையராவரும் அல்குல் மெல்லியல் பஞ்சின்னேரடி
வஞ்சிகோள் நுண்ணிடைத்
தைய லாளொரு பாலுடை
யெம்மிறை சாருமிடம்
செய்யெலாங்கழு நீர்கமலம்மலர்த் தேறலூறலிற்
சேறுல ராதநற்
பொய்யி லாமறை யோர்பயில்
பூந்தராய் போற்றுதுமே.

(ப - ரை.) பை அரா வரும் - படத்தையுடைய பாம்பினைப் போலும், அல்குல் - அல்குலையும், மெல்இயல் - மெல்லிய சாயலினையும், பஞ்சின் நேர் அடி - பஞ்சினை நிகர்த்த திருவடியையும், வஞ்சிகொள் நுண்ணிடை - வஞ்சிக்கொடியினை யொத்த இடையினையும் உடைய, தையலாள் - உமாதேவியாரை, ஒரு பால்உடை எம் இறை - ஒரு பாகத்திற் கொண்ட எம் இறைவர், சாரும் இடம் - எழுந்தருளிய தலமாகிய, செய் எலாம் - வயல்களிலெல்லாம், கழுநீர் கமலம் மலர் - செங்கழுநீர்ப்பூவும் தாமரைப்பூவும் ஆகிய இவற்றின், தேறல் ஊறலில் - தேன் பாய்தலினால், சேறு உலராத - சேறு புலராத, நல் - நல்ல வளமுள்ள, பொய் இலா மறையோர் பயில் - பொய்யினை யறியாத வேதியர் வாழ்கின்ற, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும்-வணங்குவோம் என்றவாறு.

இடம் நல்பூந்தராய் எனக் கூட்டுக. அராவரும் என்பதில் வரும் உவம உருபு. தையலாள் - அழகினையுடையவள், பெண். பொய்யிலா மறையோர் - வாய்மையாளர். வேதத்தில் முக்கிய தருமமாகக் கூறும் சத்தியத்தை மேற்கொண்டவரென்பது பொருள்; "சத்யம்வத" என்பது சுருதி. நாயனார் ஒவ்வொரு திருப்பாட்டினும் இறைவியை வருணித்துக் கூறுவது இறைவன் அம்மையப்பராகப் போந்து தம்மை யாட்கொண்ட முறைபற்றியாகும். (௩)

முள்ளிநாள்முகை மொட்டியல் கோங்கினரும்பு
தேன்கொள் குரும் பைமூவா மருந்து
உள்ளி யன்றபைம் பொற்கல
சத்திய லொத்தமுலை
வெள்ளிமால்வரை அன்னதோர் மேனியின்
மேவி னார்பதிவீ மருதண்பொழில்
புள்ளி னந்துயில் மல்கிய
பூந்தராய் போற்றுதுமே.

(ப - ரை.) முள்ளி நாள் முகை-தாமரையின் புதிய முகை, மொட்டுஇயல் கோங்கின் அரும்பு - புதுமொட்டின் தன்மை வாய்ந்த கோங்கரும்பு, தேன் கொள் குரும்பை - தேனினைக் கொண்ட தென்னங்குரும்பை, மூவாமருந்து - அமிர்தமானது, உள் இயன்ற - உள்ளே நிறைந்த, பைம்பொன் கலசத்து இயல் - பைம்பொன்னாற் செய்த கலயம் ஆகிய இவற்றின் தன்மையினை, ஒத்த - நிகர்த்த, முலை - திருத் தனபாரங்களையுடைய பெரிய நாயகியார், வெள்ளிமால்வரை அன்ன - பெரிய வெள்ளி மலையை யொத்த, ஓர் - ஒப்பற்ற, மேனியின் மேவினார் - திருமேனியில் எழுந்தருளப் பெற்றவராகிய இறைவரது, பதி - திருப்பதியாகிய, வீமரு தண் பொழில் - பூக்களையுடைய குளிர்ந்த சோலைகளில், புள் இனம் துயில் மல்கிய - பறவைக் கூட்டம் தூங்குகின்ற, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

முள்ளி - தாமரை, முள்ளையுடையது எனக் காரணப்பெயர். நாள்முகை - மலரவேண்டிய புது அரும்பு. மொட்டு இயல் - மொட்டினது தன்மை; இறைவன் திருமேனி பவளநிறமென மேற்கொண்ட காரியம்பற்றிக் கூறப்படுமெனினும் சுத்தப்படிக நிறமெனவே அறியத்தக்கதாம். படிகம் தனக்கென ஒரு நிறமில்லாது சேர்ந்த பொருளின் நிறத்தைத் தோயாது தோய்தல்போல இறைவனும் தனக்கென ஒரு நிறமின்றியே பொருந்திய செயலுக்கேற்ப நிறங்கொள்வன் என்பது நூற்றுணிபு ஆளுடையபிள்ளையாரும் இறைவனைத் திருவாலவாய்த் தேவாரத்தில், "சுத்தமார் பளிங்கின் பெருமலையுடனே சுடர்மரகதம் மடுத்தாற்போல், அத்தனொருமையோ டின்புறுகின்ற வாலவாயாவது மிதுவே" எனக் கூறிப்போந்தார். பதி மல்கிய பூந்தராய் எனக் கூட்டுக. வீ - மலர். (௬)

பண்ணியன்றெழு மென்மொழியாள் பகர்கோதை
யேர்திகழ்பைந் தளிர்மேனியோர்
பெண்ணி யன்றமொய்ம் பிற்பெருமாற்
கிடம்பெய் வளையார்
கண்ணி யன்றெழு காவிச்செழுங்கரு
நீலமல்கிய காமருவாவிநற்
புண்ணி யருறை யும்பதி
பூந்தராய் போற்றுதுமே.

(ப - ரை.) பண் இயன்று எழும் - பண்ணமைந் தெண்டாகின்ற, மென்மொழியாள் - மெல்லிய மொழிகளையுடையவராகிய, பகர் - சொல்லுகின்ற, கோதை - அளகபாரத்தையும், ஏர்திகழ் - அழகு விளங்குகின்ற, பைதளிர் - பசிய தளிர்போலும், மேனி - திருமேனியையும் உடைய, ஓர் பெண்இயன்ற - ஒப்பற்ற உமையம்மையார் பொருந்திய, மொய்ம்பின் - திருத்தோள்களையுடைய, பெருமாற்கு இடம் - சிவபெருமானுக்கு இடமாகவுள்ள, பெய் வளையார் - இடப்பட்ட வளைகளையுடைய பெண்களது, கண் இயன்று எழு - கண்ணை ஒத்து மலர்கின்ற, காவி செழும் கரு நீலம் - காவிமலரோடு செழுமிய கரிய நீல மலர்களும், மல்கிய - செறிந்த, காமரு வாவி - அழகிய தடாகங்களை உடைய, நல் புண்ணியர் உறையும் - நன்மைமிக்க புண்ணியர் வாழும், பதி - பதியாகிய, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

பண்ணியன்றெழு மென்மொழி - பண்ணின் அமைதியைப் பெற்ற மெல்லிய சொல். 'பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ' என்னும் அப்பமூர்த்திகளது திருவாக்குங் காண்க. காவி, கருநீலம் மிக்க அழகையும் மணத்தையும் உடைய நீர்ப்பூக்கள். நற்புண்ணியம்-மேலாகிய சிவபுண்ணியம். காமரு - காமர் என்பது உகரச்சாரியை பெற்று நின்றது. (௬)

வாணிலா மதிபோல் நுதலாள் மடமாழை
ஒண்கணாள் வண் தரளங்கை
பாணி லாவிய இன்னிசை
யார்மொழிப் பாவையோடும்

சேணிலாத்திகழ் செஞ்சடையெம் அண்ணல்
சேர்வதுசிக ரப்பெருங்கோயில்சூழ்
போணி லாநுழை யம்பொழிற்
பூந்தராய் போற்றுதுமே.

(ப - ரை.) வாள் நிலா மதிபோல்-ஒளியையுடைய நிலவைப் பரப்பும் சந்திரனைப்போன்ற, நுதலாள் - நெற்றியை யுடையவரும், மடம் - மடப்பத்தையுடைய, மாழை - மாவடுப்போலும், ஒண்கணாள் - ஒள்ளிய கண்களை யுடையவரும், வண்தாளம் நகை - வளவிய முத்துப்போன்ற நகையையும், பாண்நிலாவிய இன் இசை ஆர் - பண்ணோடு கூடிய இனிய இசை சேர்ந்த, மொழி - வார்த்தைகளையும் உடையவருமாகிய, பாவை ஒடும் - உமாதேவியாரோடும், சேண் நிலாதிகழ் - தூரத்தே விளங்குவதாகிய சந்திரனையுடைய, செம் சடை எம் அண்ணல் - சிவந்த சடையையுடைய எம் இறைவர், சேர்வது - எழுந்தருளி யிருப்பதாய, சிகரம் பெரும்கோயில் சூழ் - சிகரங்களையுடைய பெரிய கோயில்கள் சூழப்பெற்ற, போழ்நிலா நுழையும் - போழ்ந்த சந்திரன் நுழைகின்ற, பொழில் - சோலைகளையுடைய, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

நிலா - சந்திரிகை. மாழை - அழகுமாம். வண்தாளம்-அளவாலும், நிறத்தாலும், ஒளியாலும் சிறக்க விளைந்த முத்துக்கள். பண் - நீட்டல் விகாரம் பெற்றுப் பாண்என நின்றது. பண்ணுக்கும் இசைக்கும் உள்ள பொருத்தத்தை, "பண்ணொன்ற விசை பாடும் அடியார்கள்" என்னுந் திருவாக்கானறிக. பெருங்கோயில் - மாடக்கோயிலுமாம். போழ்நிலா - பிளந்த நிலா; நிரம்பா மதியென்பது. போணிலா : மரூஉ. (சு)

காருலாவிய வார்குழலாள் கயற்கண்ணி ணுள்புயற்
காலொளி மின்னிடை
வாருலாவிய மென்முலையாள்
மலைமா துடனாய்
நீருலாவியசென் னியன்மன்னி நிகருநாம
முந்நான்கு நிகழ்பதி
போரு லாவெயில் சூழ்பொழிற்
பூந்தராய் போற்றுதுமே.

(ப - ரை.) கார்உலாவிய - கருநிறம் பொருந்திய, வார் குழலாள் - நீண்ட கூந்தலை யுடையவரும், கயல் கண்ணினாள் - கயல்மீன் போலும் கண்களை யுடையவரும், புயல்கால் ஒளிமின் - மேகங்களினிடையிற் றோன்றுகின்ற ஒளியினையுடைய மின்னலை நிகர்க்கும், இடை - இடுப்பினையும், வார்உலாவிய - கச்சணியப் பெற்ற, மென்முலையாள் - மெல்லிய திருத்தனங்களையும் உடைய வரும் ஆகிய, மலை மாது - பார்வதிதேவியார், உடனாய் - உடனாக, நீர் உலாவிய - கங்கை நீர் தங்கிய, சென்னியன் - திருமுடியை உடைய இறைவன், மன்னி - எழுந்தருளி யிருக்கப்பெற்ற, நிகரும் - தன்னைத்தான் நிகர்க்கும், நாமம் முந்நான்கு - பன்னிரண்டு திருப்பெயர்கள், நிகழ்பதி - பெற்று விளங்கும் திருப் பதியாய, போர் உலா எயில் - போரிற்கெடாத தன்மை வாய்ந்த திருமதில், சூழ் - சூழ்ந்த, பொழில் - சோலைகளையுடைய, பூந் தராய் - பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

உடனாக என்பது உடனாய் எனவும், மன்னிய என்பது மன்னி எனவும் திரிந்து நின்றன. உடனாக மன்னிய பதியாகிய பூந்தராய் என்க. போர் உலா எயில் - போர் செய்தற்குரிய பல பொறிகளும் திண்மையும் உயர்வும் முதலிய அமைந்து சிறந்த மதில். (எ)

காசைசேர்குழ லாள்கய லேர் தடங்கண்ணி
காம்பனதோட் கதிர்மென்முலைத்
தேசு சேர்மலை மாதமருந்
திருமார் பகலத்து
ஈசன்மேவும் இருங்கயிலை எடுத்தானை அன்ற
டர்த்தான் இணைச்சேவடி
பூசை செய்பவர் சேர்பொழிற்
பூந்தராய் போற்றுதுமே.

(ப - ரை.) காசை சேர் குழலாள் - காயாம் பூப்போலும் கருநிறத்தையுடைய கூந்தலை யுடையவரும், கயல் ஏர் தடம் கண்ணி - சேற் கெண்டை போலும் அழகிய பரந்த திருக்கண் களையுடையவரும் ஆகிய, காம்பு அனதோள் - மூங்கிலை ஒத்த தோளையும், கதிர் மென்முலை - பொன்னிறம் வாய்ந்த மெல்லிய திருத்தனங்களையும் உடைய, தேசு சேர் - சிவஞான ஒளிவாய்ந்த மலைமாது - உமாதேவியார், அமரும் - விரும்பத்தக்க, திருமார்பு அகலத்து - பரந்த திருமார்பினையுடைய, ஈசன் மேவும் - சிவ பெருமான் எழுந்தருளியிருக்கும், இரும்கயிலை எடுத்தானை -

பெரிய கயிலாய மலையை எடுத்தவனாகிய இராவணனை, அன்று - அந்நாளில், அடர்த்தான் - நசுக்கி யொடுக்கிய இறைவனது, இணைசேவடி - செவ்விய இரண்டு திருவடிகளையும், பூசை செய்பவர் - பூசிப்பவர்களாகிய பெரியார், சேர் - சேரப் பெற்ற, பொழில் - சோலை சூழ்ந்த, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

காசை - காயாம் பூ ; முதலாகு பெயர். கயல் உவமையாதல். பிறழ்தல், ஒளி, நீட்சி முதலியவற்றாற் கொள்க. காம்பு - மூங்கில், தேசு - சிவஞானம். "சத்தியின் னுருவே தென்னிற் றடையிலா ஞானமாகும்" என்னும் சிவஞான சித்திப் பிரமாணங் கொண்டு உமாதேவியாரது திருவுருவம் சிவஞானப் பிரகாசமுடையதென வறிக. அமர்தல் - விரும்புதல். பூசை செய்பவர்-கிரியாவான்கள்.

(அ)

கோங்குசேர்குழ லாள்நிழல் வெண்ணகைக்
 கோவ்வைவாய்க் கோடியே ரிடையாளுமை
பங்கு சேர்திரு மார்புடையார்
 படர்தீ உருவாய்
மங்குல்வண்ணனும் மாமலரோனும் மயங்க
 நீண்டவர் வான்மிசை வந்தெழு
போங்கு நீரின்மி தந்தநற்
 பூந்தராய் போற்றதுமே.

(ப - ரை.) கொங்கு சேர் - மணந்தங்கிய, குழலாள் - கூந்தலையுடையவரும், நிழல் வெண்நகை - ஒளி பொருந்திய வெண்ணிறம் வாய்ந்த நகையினையும், கொவ்வைவாய் - கொவ்வைக் கனிபோலும் இதழ்களையும், கொடி ஏர் இடையாள் - கொடி போலும் இடையினையும் உடையவரும் ஆகிய, உமை பங்கு சேர் - உமாதேவியார் ஒரு பாகத்திற் சேர்ந்த, திருமார்பு உடையார் - திருமார்பினையுடையவராகும், படர் - படர்ந்த, தீ உருவாய் - நெருப்புருவமாகி, மங்குல் வண்ணனும் - மேக வண்ணனாகிய திருமாலும், மாமலரோனும் - சிறந்த தாமரை மலரிலிருக்கும் பிரமனும், மயங்க - மயங்கும்படி, நீண்டவர் - நீண்டருளிய இறைவரது, வான் மிசை வந்து எழு - ஆகாயம் அளாவுமாறு மேலெழுந்த, பொங்குநீரின்-பொங்கிய கடலின் மேல், மிதந்த - தோணியாக மிதந்த, நல் - நல்ல, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

திருமார் புடையார், நீண்டவர் பூந்தராய் என்க. சொல்லை : ஆகுபெயர். (க)

கலவமாமயி லாரியலாள் கரும்பன்ன
மென்மொழி யாள்கதிர்வாள்நுதல்
குலவு பூங்குழ லாளுமை
கூறனை வேறுரையால்
அலவைசொல்லுவார் தேரமண் ஆதர்களாக்கினான்தனை
நண்ணலும் நல்குநற்
புலவர் தாம்புகழ் பொற்பதி
பூந்தராய் போற்றுதுமே.

(ப - ரை.) கலவம்மா மயில்ஆர்-கலாபத்தையுடைய அழகிய மயில் போலும். இயலாள் - சாயலையுடையவரும், கரும்பு அன்ன - கரும்பு போலும், மென் மொழியாள் - மெல்லிய சொற்களை யுடையவரும், கதிர்வாள் நுதல் - ஒளிபொருந்திய நெற்றியையும், குலவு பூ குழலாள் - விளக்கமுற்ற மலரினை யணிந்த கூந்தலையும் உடையவரும் ஆகிய, உமை - உமையம்மையாரை, கூறனை - ஒரு பாகத்தினுடைய இறைவனை, வேறு உரையால் - மனம் வேறு பட்ட விகற்ப வார்த்தைகளினால், அல்லவை - தகாதவற்றை, சொல்லுவார் - சொல்வோராகிய, தேர் அமண் - புத்தர்களையும் சமணர்களையும், ஆதர்கள் ஆக்கினான் - அறிவில்லாதவர்களாக்கி னானது, தனை நண்ணலும் - தன்னை வந்து அடைதலும், நல்கும் - வேண்டியதைக் கொடுக்கும், நல் - நல்ல, புலவர் புகழ் - புலவர் புகழாநின்ற, பொற்பதி - அழகிய தலமாகிய, பூந்தராய் - திருப் பூந்தராயை, போற்றுதும் - வணங்குவோம் என்றவாறு.

ஆக்கினனது நல்கும் நல் புலவர் புகழ்பொற்பதி பூந்தராய் எனக் கூட்டுக. கரும்பு - சுவைக்குவமை. அலவை - அல்லவை; தகாதவை. தேர் அமண் - தேரரும் அமணரும். ஆதர் - அறிவில் லாதவர். இத் திருவூர் தன்னை அடைந்தவர்களை வேண்டியது பெறச் செய்யும் இயல்பினது என்பது கருத்து. நற்புலவர் - அருட்புலமை யுடையோர். (கo)

தேம்பல் நுண்ணிடை யாள்செழுஞ் சேலன
கண்ணியோ டண்ணல்சேர் விடங்தேனமர்
பூம்பொ ழில்திகழ் பொற்பதி
பூந்தராய் போற்றுதுமென்று.

ஓம்புதன் மையன் முத்தமிழ் நான்மறை
ஞானசம்பந்தன் ஒண்தமிழ் மாலைகொண்டு
ஆம்ப டியிவை ஏத்தவல்
லார்க் கடை யாவினையே.

(ப - ரை.) தேம்பல் நுண் இடையாள் - வருந்தும் இயல்புடைய நுண்ணிய இடையை உடையவரும், செழும் சேல் அன கண்ணி ஓடு - செழுவிய கெண்டைமீன் போன்ற கண்களையுடையவருமாகிய இறைவியோடு, அண்ணல் சேர்வு இடம் - பெருமை மிக்க இறைவன் எழுந்தருளிய இடமாய், தேன் அமர் - தேன் தங்கிய, பூம்பொழில் - பூஞ்சோலைகள், திகழ் - விளங்குகின்ற, பொற்பதி - அழகிய திருப்பதியாகிய, பூந்தராய் - திருப்பூந்தராயை, போற்றுதும் என்று - வணங்குவோம் என்று, ஓம்பு தன்மையன் - கடைபோகப் பாதுகாக்கின்ற நற்குணமுடையானும், முத்தமிழ் நான்மறை - முத்தமிழையும் நான்கு வேதங்களையும் உடைய, ஞான சம்பந்தன் - திருஞான சம்பந்தன் பாடிய, ஒண் மாலை இவை கொண்டு - ஒள்ளிய தமிழ் மாலையாகிய இவற்றைக் கொண்டு, ஆம்படி - தமக்கு இயைந்த வண்ணம், ஏத்த வல்லார்க்கு - போற்ற வல்லவர்களுக்கு, வினை அடையா - வினைகள் சேராவாம் என்றவாறு.

தேம்பல் - மெலிதல். முத்தமிழ் - இயல் இசை நாடகத் தமிழ், ஆம்படியேத்துதல் "ஏழையடியார்கள் கோழைமிடருக் கவி கோளுமிலவாக இசைகூடு வகையால் வந்தவாறு" கூறுதல்.
(கக)

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு நாயனார்

## திருக்கயிலாயம்

---

### திருத்தாண்டகம்

அருச்சனை

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
 மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
 ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
 ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
 கயிலை மலையானே போற்றி போற்றி.

(ப - ரை.) விண்ணாகி - வானமாகி, வேற்றாகி - அதனின் வேறாய பூதங்களுமாகி, நின்றாய் - நின்றவரே, போற்றி - உமக்கு வணக்கம்; என்னை - அடியேனை, மீளாமே - திரும்பாமல், ஆள் கொண்டாய் - ஆட்கொண்டவரே, போற்றி-வணக்கம்; ஊற்றாகி-ஊறுதலை யுடையதாகி, உள்ளே - என்னுள்ளே, ஒளித்தாய் - ஒளித்தவரே, போற்றி - வணக்கம்; ஓவாத - நீங்காத, சத்தத்து ஒலியே - நாத ஒலியானவரே, போற்றி - வணக்கம்; ஆற்றாகி - தணிவுடையையாய், அங்கே - அவ்விடத்தில், அமர்ந்தாய் - எழுந்தருளி யிருப்பவரே, போற்றி - வணக்கம்; நால்வேதம் - நான்கு வேதங்களும், ஆறு அங்கம் - ஆறங்கமும், ஆனாய் - ஆனவரே, போற்றி - வணக்கம்; காற்றாகி - காற்றுருவமாகி, எங்கும் - எவ்விடத்தும், கலந்தாய் - வியாபித்தவரே, போற்றி - வணக்கம்; கயிலை மலையானே - திருக்கயிலாய மலையி லெழுந் தருளியவரே; போற்றி போற்றி - வணக்கம் வணக்கம் என்றவாறு.

விண்ணாகி எனவே வேற்றாகி என்பதற்கு அதனின் வேறாய எனினும் அதனிற் றோன்றுவனவாயும் ஒடுங்குவனவாயும் உள்ள ஏனைய பூதங்களென்று பொருள் கூறப்பட்டது. மீளாமே யாளென்னைக் கொண்டாய் எனவே ஒருகாலும் தவிர்தலில்லாத அடிமை கொண்டனர் என்பதாம். இதனை "மீளாவடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே" என்னுந் திருமொழியானுமறிக. இறைவன் ஆன்மாக்களின் உள்ளே அமுத ஊற்றாக இருந்து எழுகின்ற தன்மையுடையார் என்பது பற்றி ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் எனப்பட்டது. இதனை "மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்புலனைந்தின் வழியடைத் தமுதே, யூறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி யுள்ளவா காணவந் தருளாய்" என்னும் திருவாசகமும், "வென்றுளே புலன்களைந்தார் மெய்யுணர் வுள்ளந்தோறுஞ், சென்றுளே யமுதமூற்றுந் திருவருள் போற்றி" என்னுந் திருவிளையாடற் புராணமும் வலியுறுத்துமாறு காண்க. நாதவொலி இடையறாத தன்மையதாதல் பற்றி ஓவாத என்றது; சிதாகாசத்தில் எழும் அருள் நாதமே ஈண்டுக் கருதப்பட்டது. பூதாகாசத் தெழும் மருள் நாதம் ஓசையெனப் படுமாகலின், எல்லாப் பொருள்களையும் கடந்த மனவாக்குக் கெட்டா இடமே இறைவனதிடமாதலின் ஆற்றாகி யங்கே யமர்ந்தாய் என்றார். ஆற்று - தணிவு. இத் திருப்பாட்டானும் இனிவருந் திருப்பாட்டுக்களானும் இறைவனது எல்லாமாந்தன்மை கூறப்பட்டதென்க. போற்றி - இகர விகுதி பெற்ற போற்று என்னும் பகுதி யடியாகப் பிறந்த தொழிற்பெயர்; போற்றுதல் என்பது பொருள்; துதித்தல். வேண்டிக் கோடற் பொருளை யுடையதெனக் கொள்ளின் யகர விகுதி புணர்ந்து கெட்ட முற்றெனக் கொள்ளுக. துதிக்கக் கடவேன் என்பது பொருளாகும். இதனை, "வாழியவென்னுஞ் செயவென் கிளவி - யிறுதியகரங் கெடுதலு முரித்தே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில் ஒன்றென முடித்தலான் வைத்துணர்க. (க)

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
    பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாட னன்று முகந்தாய் போற்றி
    மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொச்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி
    போகாதென் சிந்தைபு குந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி.

(ப - ரை.) பிச்சு ஆடல் - பிச்சாடலை, பேயோடு - பேய்களுடன், உகந்தாய் - விரும்பினவரே, போற்றி - வணக்கம்; பிறவி அறுக்கும் - பிறப்பை ஒழித்தருள்கின்ற, பிரானே - தலைவரே, போற்றி - வந்தனம்; வைச்சு ஆள்தல் - திருவடியின்கீழ் இருத்தி ஆட்கொள்ளுதலை, நன்று - மிகவும், உகந்தாய் - விரும்பினவரே, போற்றி - வந்தனம்; என்சிந்தை - அடியேன் சிந்தையுள்ளே, மருவி - கலந்து, புகுந்தாய் - புகுந்தவரே, போற்றி - வந்தனம்; பொய்ச்சார் - நின் திருவடி பிழைத்தவர்களது, புரம் மூன்றும் - திரிபுரங்களையும், எய்தாய் - எய்து எரித்தவரே, போற்றி - வந்தனம்; போகாது - நீங்காமல்; என்சிந்தை - என் மனத்தில், புகுந்தாய் - புகுந்தவரே, போற்றி - வந்தனம்; நாகம் - பாம்பினை, கச்சு ஆக அசைத்தாய் - அரைக்கச்சையாகக் கட்டினவரே, போற்றி - வந்தனம்; கயிலை மலையானே—, போற்றி போற்றி—, என்றவாறு.

பிச்சாடல் - பித்தர்கள் ஆடும் ஆடல்கள். பிச்சாடல், வைச்சாடல் பொய்ச்சார் இவைகளில் தகரத்திற்குச் சகரம் போலியாய் வந்தது. யாவர்க்கு மேலாய இறைவன் தமது சிந்தை மருவிப் புகுந்ததை நாயனார் பாராட்டிக் கூறியாங்குப் பிறரும், "அன்னமாய் விசும்பு பறந்தயன் றேட வங்ஙனே பெரியநீ சிறிய, என்னையாள் விரும்பி யென்மனம் புகுந்த வெளிமையை யென்று நான் மறக்கேன" என்று கூறியது காண்க. பொய்ச்சார் - பொய்த்தார், திருவடி பிழைத்தார், சிவாபராதம் செய்தவர். இக்குற்றம் உய்தியில் பெருங் குற்றமாதலின் அவரது புரம் எரித்தொழிக்கப்பட்டதென்க. போகாமை - நீங்காமை (உ)

மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி ஓடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

(ப - ரை.) மருவார் - பகைவரது, புரம் மூன்றும் - முப்புரங்களையும், எய்தாய் - எய்தவரே, போற்றி வந்தனம்; மருவி - கலந்து, என் சிந்தை - என் மனத்தில், புகுந்தாய் - புகுந்தவரே, போற்றி - வந்தனம்; உருவாகி - உருவங் கொண்டு, என்னை - அடியேனை, படைத்தாய் - படைத்தவரே, போற்றி - வந்தனம்-

உள் - உடலகத்துள்ள, ஆவி - உயிரை, வாங்கி-ஆவணஞ்செய்து; ஒளித்தாய் - அவ்வுயிர்க் குயிராய் ஒளித்தவரே, போற்றி வந்தனம்; திருவாகி - மோக்கப் பொருளாகி, நின்ற - என்றும் நிலை பெற்ற, திறமே - தன்மை யுடையவரே, போற்றி - வந்தனம், தேசம் - உலகத்தவர்களால், பரவப் படுவாய் - துதிக்கப்படுவோரே, போற்றி - வந்தனம், கருஆகி ஓடும் - எல்லாப் பொருள்களுக்கும் பிறப்பிடமாகிச் செல்லுகின்ற, முகிலே - மேகம் போன்றவரே, போற்றி - வந்தனம், கயிலை மலையானே—, போற்றி போற்றி—, என்றவாறு.

இறைவன் தனக்கென ஒருருவமில்லாதவனாகியும் உலகினைப் படைத்தற் பொருட்டுத் தானுருவுடையவனாகியும், தான் என்றுங் கருப்புகாதவனாகியும், உயிர்க் குயிராய்க் கலக்குமாறு பற்றிக் கருவெலாமுடையவனாகியும் வரும் நியமம், உருவாகி யென்னைப் படைத்தாய் என்பதனாலும், கருவாகியோடு முகில் என்பதாலும் கருதப்பட்டதாகும்; ஆளுடைய பிள்ளையார் இதனை மிகவும் அழகு பெறக் "கருவினா லன்றியே கருவெலா மாயவன், உருவினா லன்றியே வுருவுசெய்தானிடம்" எனத் திட்டைத் தேவாரத்துக் கூறுதல் காண்க. ஆவி வாங்குதல்— "உயிராவணஞ் செய்திட்டுன் கைத்தந்தால் உணரப்படுவாரோ டொட்டி வாழ்தி" என வாகீசரும், "ஆவணஞ் செய் தானுங் கருக்கொண்டு வரைதுகிலொடு பட்டு வீக்கி" என ஆளுடைய நம்பிகளும் இதனைக் கூறுவர். கருவாகியோடும் முகில் - நீரைக் கொண்டு ஓடும் மேகம் எனவும் கூறலமையும். (கூ)

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ ஆடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

(ப - ரை.) வானத்தார் - தேவர்கள், போற்றும் - வணங்கியேத்தும், மருந்தே - அமிர்தமானவரே, போற்றி - வந்தனம், வந்து - எழுந்தருளி வந்து, என் தன் சிந்தை - என் மனத்தில், புகுந்தாய் - புகுந்தவரே, போற்றி - வந்தனம்; ஊனத்தை - அடியேங்களது குற்றத்தை, நீக்கும் - நீக்கியருளுகின்ற, உடலே - திருவுருவுடையவரே, போற்றி - வந்தனம்; அழலாய் - நெருப்புரு

வாய், ஓங்கி நிமிர்ந்தாய் - ஓங்கி யுயர்ந்தவரே, போற்றி - வந்தனம்; தேனத்தை - தேனை, வார்த்த - வடித்த, தெளிவே - தெளிவு போன்றவரே, போற்றி - வந்தனம்; தேவர்க்குந் தேவனாய் - தேவர்களுக் கெல்லாந் தேவனாய், நின்றாய் - நின்றவரே, போற்றி - வந்தனம்; கானம் தீ ஆடல் - காட்டுத் தீயோடு ஆடுதலை, உகந்தாய் - விரும்பினவரே, போற்றி - வந்தனம்; கயிலை மலையானே—, போற்றி போற்றி என்றவாறு.

ஊனத்தை நீக்குதலையும், தேனைத்தினித்தலையும் இந்நாயனாரே பிறிதோரிடத்து "ஊனத்தை நீக்கி யுலகறியவென்னை யாட்கொண்டவன், தேனைத் தெனக் கினியான் தில்லைச் சிற்றம்பலவன்," எனக் கூறுமாற்றால் அறிக. ஊனம் - மலக்குற்றம். உடல் - இறைவன் திருவுருவம். தேனத்தை - அத்துசாரியை. வார்த்தல் - வடித்தெடுத்தல். "தேறலின் தெளிவே" என்பது திருவாசகம். கானம் - மயானம், நன்காடு. (ச)

ஊராகி நின்ற உலகே போற்றி
 ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
 பேராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி ஆன நிழலே போற்றி
 நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
 கயிலை மலையானே போற்றி போற்றி.

(ப - ரை.) ஊர் ஆகி - எல்லா வூர்களுமாகி, நின்ற உலகே - நிலைபெற்ற உலகமானவரே, போற்றி - வந்தனம்; அழலாய் - நெருப்புருவாய், ஓங்கி நிமிர்ந்தாய் - ஓங்கி உயர்ந்தவரே, போற்றி - வந்தனம்; பேர் ஆகி - பெருவடிவாகி, எங்கும் - எவ்விடத்தும், பரந்தாய் - வியாபித்தவரே, போற்றி - வந்தனம்; பேராது - நீங்காமல், என் சிந்தை - என் மனத்தில், புகுந்தாய் - புகுந்தவரே, போற்றி - வந்தனம்; நீராவி ஆன - நீராவியாகிய, நிழலே - நிழலானவரே, போற்றி - வந்தனம்; நேர்வார் - உம்மை ஒப்பவர், ஒருவரையும் - பிறரொருவரையும், இல்லாய் - இல்லாதவரே, போற்றி - வந்தனம்; கார் ஆகி நின்ற - கருநிறங் கொண்டு நின்ற, முகிலே - மேகமானவரே, போற்றி - வந்தனம்; கயிலை மலையானே போற்றி போற்றி-, என்றவாறு.

பேர் - பெரியது, அகண்டமாயது. பேராது - நீங்காமல், நீர் ஆவி - நீர்ப்புகை இது நீரினின்றும் உண்டாகும் வேறு பொருளன்று; நீரே மாறியாகும் புகை. (ரு)

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

(ப - ரை) சில் உருவாய் - சிறியனவாகி அணுவுருவமாய், சென்று - பிரிந்து சென்று, திரண்டாய் - மீட்டும் திரண்டு பேருருவத்தையெய்தியவரே, போர்றி - வந்தனம் தேவர் அறியாத - தேவர்களா லறியப்படாத, தேவே - தேவரே, போற்றி - வந்தனம்; புல் உயிர்க்கும் - சிறிய உயிர்கட்கும், பூட்சி - உடம்பினை, புணர்த்தாய் - கூட்டியவரே, போர்றி - வந்தனம்; போகாது - நீங்காமல், என் சிந்தை - என் மனத்தில், புகுந்தாய் - புகுந்தவரே, போற்றி - வந்தனம்; பல் உயிராய் - பல உயிர்களாகி, பார்தோறும் - எல்லா வுலகங்களிலும் நின்றாய் - நின்றவரே, போற்றி - வந்தனம்; உலகை - உலகத்தினைப் பற்றி, விடாதாய் - கலந்து நீங்காதவரே, போற்றி - வர்தனம்; கல் உயிராம் - கல்லுருவாகிய மலையினிடத்து உயிராகி, நின்ற - நின்ற, கனலே - நெருப்பானவரே, போற்றி - வந்தனம்; கயிலைமலையானே -, போற்றி போற்றி -, என்றவாறு.

சிறியனவாகிய அணு உருவமும், பிறகு அவை திரண்ட பெரியனவாகிய மகத்துருவமும் எல்லாமானவர் என்பது கருத்து. கட்புலனாகாத மிகச் சிறிய உயிர்க்கும் பல அவயவப் பகுப்புடைய உடற்பேதங்களைக் கூட்டுவிப்பவன் இறைவனாதலைப் புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் என்றார். பல்லுயிராய்ப் பார்தோறு நிற்றலைச் சிவஞான போதம் இரண்டாவது சூத்திரத்து "அவையே தானேயாய்" என்பதில் "அவையேயாய்" என்பதில் வைத்துணர்க. பற்றியுலகை விடாமையை, "அவையே தானேயாய்" என்பதில் வைத்துணர்க. கல்லுயிராய் நின்ற கனலே என்றது இறைவன் நெருப்புமலையாய் எழுந்தருளினமை குறித்தென்க. (சு)

பண்ணின் இசையாக நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி

விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கு மேலாக நின்றாய் போற்றி
கண்ணின் மணியாக நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

(ப - ரை) பண்ணின் இசையாகி - பண்ணிற் பொருந்தப் பாடும் இசைகளாகி, நின்றாய் - நின்றவரே, போற்றி - வந்தனம்; பாவிப்பார் - நினைப்பவராது, பாவம - பாவத்தை, அறுப்பாய் - ஒழிப்பவரே, போற்றி - வந்தனம்; எண்ணும் - எண்ணுகின்ற, எழுத்தும் சொல்லும் - எழுத்துக்களும் சொற்களும், ஆனாய் - ஆனவரே, போற்றி - வந்தனம்; என - அடியனது, சிந்தை - மனத்தை, நீங்கா இறைவா - நீங்காத இறைவரே, போற்றி - வந்தனம்; விண்ணும் - வானமும், நிலனும் - பூமியும், தீ - நெருப்பும், ஆனாய் - ஆனவரே, போற்றி - வந்தனம்; மேலவர்க்கும்-மேலோருக்கும், மேலாகி - மேலானவராய் நின்றாய் - நின்றவரே, போற்றி - வந்தனம; கண்ணின் - கண்ணிடத்து, மணியாகி - கருவிழியாகி, நின்றாய் - நின்றவரே. போற்றி - வந்தனம்; கயிலைமலையானே—, போற்றி போற்றி—, என்றவாறு.

பண்ணின் இசை - பண்ணிற் பொருந்தப்பாடும் இசை; பண் - கட்டபாடை, கொல்லி, இந்தளம், காந்தாரம், கௌசிகம், காந்தார பஞ்சமம், பழம்பஞ்சுரம் முதலியவை. இசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. இவற்றாற் பொருந்து இராகங்கள்: பைரவி, தோடி, சங்கராபரணம், நாட்டை, பூபாளம், சாவேரி, காம்போதி முதலியன. இசைகள் ஒன்றோடொன்று பலபடி இயைதலால் பண்கள் பிறக்குமென்ப, இவற்றின் விரிவெல்லாம் இறந்தனபோக எஞ்சி நிற்கும் பழைய இசைநூலுட் கண்டுகொள்க. எண் எனபதைப் பெயராகக் கொண்டு தருக்கமென்று கூறுதலும் பொருந்தும். மேலவர்க்கு மேலாகி நிற்றலை இந்நாயனார் திருவாரூர்த் திருத்தாண்டகத்தும், "மேலோர்க்கு மேலோர்க்கு மேலாய் போற்றி' என்று கூறுவதும் காண்க. யாவர்க்கும மேலோன் என்பது பொருள். மணி-கருமணி. இக் கருத்து, "கருவே என் கற்பகமே கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய் காவாய்" எனத் திருவாவடுதுறைத் திருத்தாண்டகத்தும் காணப்படுகிறது. சொல்லும் தீயும் என்னும் உம்மைகள் தொக்கன. (எ)

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத் தணைத்தாய் போற்றி
ஊழியே யூான ஒருவா போற்றி

அமையா வருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

(ப - ரை.) இமையாது - இமையாமலும், உயிராது - உயிர்க்காமலும், இருந்தாய் - இருந்தவரே, போற்றி - வந்தனம்; என் அடியேனது, சிந்தை - மனத்தை, நீங்கா - நீங்காத, இறைவா - இறைவரே, போற்றி - வந்தனம், உமை பாகம் - உமாதேவியாரது பாகத்தை, ஆகத்து அணைத்தாய் - திருமேனியிற் சேர்த்தவரே, போற்றி - வந்தனம். ஊழி எழ் ஆன ஒருவா - எழூழிகளுமாயிருக்கின்ற ஒருவரே, போற்றி - வந்தனம்; அமையா - தாங்கற் கொண்ணாத, அரு நஞ்சம் - கொடியவிடத்தை, ஆர்ந்தாய் - பருகினவரே, போற்றி - வந்தனம்; ஆதி புராணன் ஆய் - ஆதி புராணனாகி, நின்றாய் - நின்றவரே, போற்றி - வந்தனம்; கமை ஆகி நின்ற - பொறுமையாய் நின்ற, கனலே - நெருப்புருவரே, போற்றி-வந்தனம்; கயிலைமலையானே-, போற்றி போற்றி-, என்றவாறு.

இமைத்தல் - இமை கொட்டுதல். உயிர்த்தல்-மூச்சுவிடுதல். உயிர் இயற்கையைக் கடந்தவன் என்பது கருத்து. ஆதிபுராணன் - பழைமையுடைய எல்லாவற்றிற்கும் முதன்மையாகிய பழைமையுடையன். இவ்வாட்சியை, "ஆலனையாதி புராணனை நாமடி போற்றுவதே" எனவரும் திருப்பூந்துருத்தித் திருவிருத்தத்திற் காண்க. கமை - பொறுமை; க்ஷமா என்னும் வடமொழியினது திரிவு. (அ)

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் கொழுந்தே போற்றி
சென்றேறி எங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

(ப - ரை.) மூவாய் - மூவாதவரே, பிறவாய் - பிறவாதவரே, இறவாய் - இறவாதவரே, போற்றி - வந்தனம்; முன்னமே - எல்லாவற்றிற்கும் முன்னமேயே, தோன்றி முளைத்தாய் - தோன்றி முளைத்தவரே, போற்றி - வந்தனம்; தேவாதி தேவர் -

தேவாதி தேவர்களுக்கும், கொழுந்தே - கொழுந்தானவரே, போற்றி - வந்தனம்; சென்று ஏறி-சென்று கலந்து, எங்கும் பரந்தாய் - எவ்விடத்தும் பரந்தவரே, போற்றி - வந்தனம்; ஆ ஆ—, அடியேனுக்கு எல்லாம்-அடியேனுக்கு எல்லாமானவரே, போற்றி-வந்தனம்; அல்லல் - துன்பம், நலிய - வருத்த, அலந்தேன் - வருந்தினேன், போற்றி - வந்தனம்; கனகம் திரளே - பொற்றிரள் போன்றவரே, காவாய் - காக்கக் கடவீர், போற்றி - வந்தனம்; கயிலைமலையானே, போற்றி போற்றி-, என்றவாறு.

தேவாதி தேவர் - பெரிய தேவர்; பிரமவிட்டுணுக்கள் போல்வார். ஆ ஆ: வியப்புப் பொருளில் வந்த இடைச்சொல் அடுக்கு. ஆவா என்பதை யகரவீறு கெட்ட முன்னிலை வினைமுற்றாகக்கொண்டு உரைத்தலுமாம். அல்லல் - பிறவித்துயர். (௬)

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலிப் போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

(ப - ரை.) நெடிய - நீண்ட, விசும்பொடு - ஆகாயத்தோடு, கண்ணே-மற்றுள்ள இடமும் ஆனவரே, போற்றி-வந்தனம்; நீள அகலம் - நீளமும் அகலமும், உடையாய்-உடையவரே, போற்றி - வந்தனம்; அடியும் முடியும் - அடியையும் முடியையும், இகலி - பிரமவிட்டுணுக்கள் தம்முட் பகைத்து, அங்கு - அவ்விடத்தில், ஒன்று அறியாமை - ஒரு சிறிதும் அறிய முடியாமல், நின்றாய்-நின்றவரே, போற்றி - வந்தனம்; கொடிய - கொடுமை பொருந்திய, வன் கூற்றம் - வலிய இயமனை, உதைத்தாய்-உதைத்தவரே, போற்றி - வந்தனம்; என் சிந்தை - என் மனத்தை, கோயில் ஆக கொண்டாய் - திருக்கோயிலாகக் கொண்டவரே, போற்றி - வந்தனம்; கடிய - கடுமையாகிய, உரும் ஒடு - இடியோடு, மின்னே - மின்னுமானவரே, போற்றி - வந்தனம்; கயிலை மலையானே-, போற்றி போற்றி-, என்றவாறு.

கண் - இடம். போற்றி யென்பதை ஈற்றிற் சேர்த்து அடியு முடியு மிகலி யங்கொன் றறியாமை நின்றாய் என்று கூட்டிப் பொருள் கொள்க. "நினைப்பவர் மனங் கோயிலாகக் கொண்ட

வன்" என்பது சிந்தையைக் கோயிலாக் கொண்டதை யறிவிக்கும். (௧௦)

உண்ணு துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி
எண்ணு இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணார் இசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணாய் உலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

(ப - ரை) உண்ணாது உறங்காது - உண்ணாமலும் உறங்காமலும், இருந்தாய் - இருந்தவரே, போற்றி - வந்தனம்; ஓதாமே - ஓதாமலே, வேதம் உணர்ந்தாய் - வேதங்களை யுணர்ந்தவரே, போற்றி-வந்தனம், எண்ணா - அகந்தையினால் மதியாத, இலங்கைகோன் தன்னை - இலங்கைக் கரசனாகிய இராவணனை, இறை - சிறிதே, விரலால் - திருவிரலினால், வைத்து உகந்த ஊன்றி மகிழ்ந்த, ஈசா - ஈசரே, போற்றி - வந்தனம்; பண்ணார் - பண் பொருந்திய, இசையின் சொல் - இசையோடு கூடிய பாடலை, கேட்டாய் - கேட்டவரே, போற்றி - வந்தனம்; பண்டே - பண்டைக் காலத்திலேயே, என் - அடியேனது; சிந்தை புகுந்தாய் - மனத்திற் புகுந்தவரே, போற்றி - வந்தனம்; உலகுக்கு - உலகத்துக்கு, கண்ணாய் - கண்ணாக, நின்றாய் - நின்றவரே, போற்றி - வந்தனம்; கயிலைமலையானே-, போற்றி போற்றி-, என்றவாறு.

இலங்கைக்கோன் றன்னை விரலால் வைத்து உகந்த ஈசன் என்று முடிக்க. இறை - நொடிப்பொழுதில் என்றுமாம்; பண்ணார் இசையின் சொல் கேட்டாய் என்பதைப் பொது வகையிற் கொள்வதன்றி இராவணனது பண்ணா ரிசையின் சொல் கேட்டாய் என்று கொள்ளலுமாம். சொல - பாடலுக்கு ஆகு பெயர். பண்டே - அநாதியே. இறைவனையின்றி உலகம் காணாமையின் உலகுக்குக் கண் ணென்றது என்க. (௧௧)

திருச்சிற்றம்பலம்

### சுந்தரமூர்த்திநாயனார்

# திருக்கழுக்குன்றம்

### பண் - நட்டபாடை

அருச்சனை

*திருச்சிற்றம்பலம்*

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்றபாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்றுசென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.

(ப - ரை) *கொன்று செய்த* - பிற வுயிரை வதைத்துச் செய்த, *கொடுமையால்* - கொடுமை காரணமாக, *பல சொல்ல* - உலகத்தார் பலவிதமாக இழித்துரைக்கும்படி, *நின்ற* - பொருந்திய, *பாவ வினைகள் பல* - தீவினைகள் பலவும், *நீங்க* - நீங்கும் பொருட்டு, *தேவர்பிரான் இடம்* - தேவர் பெருமானாகிய இறைவனது இடமாகிய, *கன்றினோடு* - யானைக் கன்றுகளோடு, *பிடி சூழ்* - பெண் யானைகள் சூழுகின்ற, *தண்* - குளிர்ச்சி பொருந்திய, *கழுக்குன்றம்* - திருக்கழுக்குன்றத்தை, *சென்று சென்று* - பல காலும் சென்று, *தொழுமின்* - வணங்குங்கள் என்றவாறு.

பல சொல்லுதல் - பலவாறு ஏசிப்பேசுதல். சென்று சென்று என்னும் அடுக்குச் செல்லுதற் பன்மையை உணர்த்தி நின்றது. இத் திருப்பதிகத்துள்ள திருப்பாட்டுக்களுட் பல உலகத்தினரை நோக்கி அறிவுறுத்தும் வகையிற் கூறப்பட்டன. கழுக்குன்றம் - தொண்டைநாட்டுத் தலங்கள் முப்பானிரண்டனுள் ஒன்று: இறைவன் இறைவியிடத்தில் கழுகுகளாகச் சாபமேற்ற இருடி புத்திரர் இருவர் நான்கு யுகத்திலும் வெவ்வேறு பெயர்களோடு பூசிக்கும் முறைமையால் பெற்ற பெயர். (க)

இறங்கிச்சென்று தொழுமின் இன்னிசை பாடியே
பிறங்குகொன்றைச் சடையன் எங்கள் பிரானிடம்

நிறங்கள் செய்த மணிகள் நித்திலம் கொண்டிழி
கறங்குவெள்ளை அருவித் தண்கழுக் குன்றமே.

(ப - ரை.) பிறங்கு - விளங்குகின்ற, கொன்றை - கொன்றை மாலையைச் சூடிய, சடையன் - சடையை யுடையவராகிய, எங்கள் பிரானிடம்-எங்கள் பெருமானுக்கு இடமாகிய, நிறங்கள் செய்த - பலவித நிறங்களையுடைய, மணிகள் - மணிகளையும், நித்திலம் - முத்துக்களையும், கொண்டு - வாரிக்கொண்டு, இழி - இழிகின்ற, கறங்கு - ஒலித்தலையுடைய, வெள்ளை - வெண்ணிறமாகிய, அருவி - மலையருவிகளை யுடைய, தண் - குளிர்ச்சி பொருந்திய, கழுக்குன்றம் - திருக் கழுக்குன்றத்தை, இன் இசை பாடி - இனிய இசைகளைப் பாடிக்கொண்டு, இறங்கி சென்று - தாழ்ந்து சென்று, தொழுமின் - வணங்குங்கள் என்றவாறு.

இறங்கிச் செல்லுதல் - பணிவோடு செல்லுதல். பிறங்கு கொன்றை - பொன்போற் பொலிந்து விளங்கும் கொன்றை; ஓங்கார வடிவினதாக விளங்கும் கொன்றையுமாம். நிறங்கள் செய்த மணிகள்-வயிரம், பச்சை, மாணிக்கம் நீலம், கோமேதகம் வயிடூரியம் முதலியன. நித்திலம் - தலசம் என்னும் முத்துக்கள், மூங்கில் முதலியவற்றில் உண்டாவன. கொண்டிழிதல் - கொழித்தல். (உ)

நீளநின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும்நம்ம வினைகள் அல்கி அழிந்திடத்
தோளுமெட்டும் உடைய மாமணிச் சோதியான்
காளகண்டன் உறையும் தண்கழுக் குன்றமே.

(ப - ரை.) ஆளும் - நம்மை ஆளாகக்கொண்டு அரிக்கின்ற, நம்ம - நம்முடைய, வினைகள் - வினைப் பகுதிகள், அல்கி-சுருங்கி, அழிந்திட - அழிந் தொழியும்படி, தோளும் எட்டும் உடைய - எட்டுத் திருத்தோள்களை யுடைய, மாமணி சோதியான் - மாணிக்க மணியின் ஒளியை யுடையவரும், காள கண்டன் - திருநீலகண்டத்தை யுடையவருமாகிய இறைவர், உறையும் - எழுந்தருளி யிருக்கின்ற, தண் - குளிர்ச்சி பொருந்திய, கழுக்குன்றம் - திருக்கழுக்குன்றத்தை, நித்தலும் - தினந்தோறும், நீதியால் - முறைமைப்படி, நீள நின்று தொழுமின்-நெடிது நின்று வணங்குங்கள் என்றவாறு.

நீள - அதிகமாக; இது நீள நினைந்து என்பது போன்றது. ஆளும் நம்ம வினைகள் - வினைகள் நம்மை ஆளாக உடைமையை ஒழித்துக்கொண்டு இறைவனுக்கு ஆட்படுதல் முறைமை என்க.

வாகீசப் பெருந்தகையார் "செங்கனகத் தனிக்குன்றைச் சிவனை யாரூர்ச் செல்வனைச் சேர்வே னும்மாற் செலுத்துவேனே" என்று கூறுவதனால் இவ்வியல்பை யறிக. அல்குதல் - சுருங்குதல். தோளும் எட்டும் - உம்மைகள் இசைநிறைப் பொருளன. மா மணிச் சோதியான் - இறைவன். இவ்வியல்பினராதலை, "விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போன், மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" என்ற திருக்குறுந்தொகையானு மறிக. காளம் - காலகூடவிடம்: கறுப்புமாம். (௯)

வெளிறுதீரத் தொழுமின் வெண்பொடி ஆடியை
முளிறிலங்கு மழுவாளன் முந்தி உறைவிடம்
பிளிறுதீரப் பெருங்கைப் பெய்ம்மதம் மூன்றுடைக்
களிற்றோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.

(௰ - ரை.) முளிறு இலங்கும் மழுவாளன் - கூர்மையுடைய மழுவேந்திய இறைவன், முந்தி உறைவு இடம் - முற்பட்டு வசித்தலையுடைய இடமாகிய, பிளிறு தீர - பிளிறுதல் ஒழிய, பெரும் கை - பெரிய துதிக்கையையும், பெய் மதம் மூன்று உடை - பொழிகின்ற மும்மதங்களையும் உடைய, களிறின் ஓடு-ஆண்யானைகளோடு, பிடிசூழ் - பெண்யானைகள் சூழ்கின்ற, தண் - குளிர்ச்சி பொருந்திய, கழுக்குன்றம் - திருக்கழுக்குன்றத்தில், வெண் பொடி ஆடியை - திருவெண்ணீறு சண்ணித்த இறைவனை, வெளிறு தீர - அறியாமை நீங்கும்படி, தொழுமின் - வணங்குங்கள் என்றவாறு.

வெளிறு - அறிவின்மை. வெண்பொடி - திருவெண்ணீறு. முந்தி உறைதல் - மற்றைய தலங்களிலும் இதனை முற்பட்டு விரும்பி எழுந்தருளியிருத்தல். தம் பிடிகளைக் காணாது வருந்தும் களிறுகளோடு பிடிகள் சேர்ந்த மாத்திரத்தில் பிளிறுதல் ஒழிவது கூறப்பட்டது. பெய்தல் - பொழிதல். (௪)

புலைகள்தீரத் தொழுமின் புன்சடைப் புண்ணியன்
இலைகொள்சூலப் படையன் எந்தை பிரானிடம்
முலைகளுண்டு தழுவிக் குட்டி யோடுமுசுக்
கலைகள்பாயும் புறவின் தண்கழுக் குன்றமே.

(ப - ரை.) புன் சடை புண்ணியன் - புற்கென்ற சடையினை யுடைய புண்ணியரும், இலை கொள் சூலப்படையன் - இலை வடிவ மாகிய சூலப் படையை யுடையவரும், எந்தை - எம் பிதாவுமாகிய, பிரான் இடம் - பெருமானது இடமாகிய, முலைகள் உண்டு -

மூலகளையுண்டு, தழுவி - அணைத்துக் கொண்ட, குட்டியொடும் - குட்டிகளோடும், முசுக்கலைகள் - முசுக்களும் அவற்றின் ஆண் களும்; பாயும் - பாய்கின்ற, புறவில் - குறிஞ்சி நிலத்தையுடைய, தண் - குளிர்ந்த, கழுக்குன்றம் - திருக்கழுகுன்றத்தை, புலைகள் தீர - புலைத்தன்மை ஒழியும்படி, தொழுமின் - வணங்குங்கள் என்றவாறு.

புன்மை - நிறத்தின்மேற்று. குரங்கின் குட்டி தானே தாயைத் தழுவிக் கொள்ளுதலும், பூனை குட்டியைக் கவ்விக் கொள்ளுதலும் இயல்பு; இவைகளையே மார்க்கட மார்ச்சால நியாயமென்பர். முசு - ஒருவிதக் குரங்கு. கலை - குரங்கின் ஆண். புறவு - குறிஞ்சியிடம். (டு)

மடமுடைய அடியார் தம்மனத் தேயுற
விடமுடைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமுடைய அரவன் தான்பயி லும்மிடம்
கடமுடைய புறவின் தண்கழுக் குன்றமே.

(ப - ரை.) மடம் உடைய - மற்றவற்றில் அறியாமையை யுடைய, அடியார் தம் - அடியார்களது, மனத்தே - மனத்தின் கண்ணே, உற - பொருந்துமாறு, விடம் உடைய - நஞ்சை யுடைய, மிடறன் - கண்டத்தினை யுடையவரும், விண்ணவர் மேலவன் - தேவர்களுக்கு மேலாயவரும், படம் உடைய அரவன் - படத்தையுடைய பாம்பினை யுடையவரும் ஆகிய இறைவர், பயிலும் இடம் - எழுந்தருளியிருக்கும் இடமாவது, கடம் உடைய - செல்லுதற்கரிய நெறிகளுள்ள, புறவின் - குறிஞ்சி நிலத்தை யுடைய, தண் - குளிர்ச்சி பொருந்திய, கழுக்குன்றமே - திருக் கழுக் குன்றமே யாம் என்றவாறு.

மட முடைய அடியார் - தம்முணர்வை இறைவன்பால் இழந்து நிற்கும் மெய்யடியார். படமுடைய அரவைக் கச்சை யாகவும், அரைஞாணாகவும், அணிகளாகவும் உடையவன் என்க. கடம் - அருநெறி. தம், தான்: சாரியை. (சு)

ஊனமில்லா அடியார் தம்மனத் தேயுற
ஞானமூர்த்தி நட்டம் ஆடி நவிலுமிடம்
தேனும்வண்டு மதுவுண் டின்னிசை பாடியே
கானமஞ்ஞை உறையும் தண்கழுக் குன்றமே.

(ப- ரை) ஊனம் இல்லா - குற்ற மில்லாத, அடியார் தம் - தொண்டர்களது, மனத்தே உற - மனத்தில் பொருந்தும்

படி, ஞானமூர்த்தி - ஞானமே உருவமாக உடைய இறைவன், நட்டமாடி - திருநடனம் செய்து, நவிலும் இடம் - பழகுகின்ற இடமாவது, தேனும் வண்டும் - தேன் வண்டுகளும் கருவண்டு களும், மது உண்டு - தேனையுண்டு, இன் இசை பாடி - இனிய இசைகளைப் பாட, கான மஞ்ஞை - காட்டில் வாழ்வனவாகிய மயில்கள், உறையும் - ஆடி உறைகின்ற, தண் - குளிர்ச்சி பொருந் திய, கழுக்குன்றமே - திருக்கழுக்குன்றமேயாம் என்றவாறு.

ஊனம் - குற்றம். ஞானமூர்த்தி - ஞானத் திருவுருவன். நட்டமாடி : பெயருமாம். நவிலுதல் - பழகுதல். தேன்-வண்டின் பேதம். வண்டுகள் பாட, மயில்கள் ஆடும் கழுக்குன்றம் என்ப தாம். இக் கருத்தை, "வண்டு பாட மயிலால மான்கன்று துள்ள வரிக் கெண்டைபாயச் சுனை நீல மொட்டலரும் கேதாரமே" என்னும் ஞானசம்பந்தர் திருவாக்காலு மறிக. பாடி : எச்சத் திரிபு. (எ)

அந்தமில்லா அடியார் தம்மனத் தேயுற
வந்துநாளும் வணங்கி மாலோடு நான்முகன்
சிந்தைசெய்த மலர்கள் நித்தலும் சேரவே
சந்தநாறும் புறவின் தண்கழுக் குன்றமே.

(ப - ரை.) அந்தம் இல்லா - பெருமைக்கு முடிவில்லாத, அடியார் - திருத்தொண்டர்களது, மனத்தே உற - மனத்தில் பொருந்துமாறு, நாளும் - வைகலும், மாலொடு நான்முகன் - விட்டுணு மூர்த்தியோடு பிரமதேவர், வந்து - வந்து, வணங்கி - பணிந்து, சிந்தை செய்த மலர்கள் - மனத்தாற் சிந்தித்து அருச் சித்த மலர்கள், நித்தலும் - தினந்தோறும், சேர - சேர்தலால், புறவின் - குறிஞ்சி நிலத்தையுடைய, தண் - குளிர்ச்சி பொருந்திய, கழுக்குன்றம் - திருக்கழுக்குன்றம், சந்தம் நாறும் - நறுமணங் கமழாநிற்கும் என்றவாறு.

அந்தம் - முடிவு; எல்லை. சேர : காரணப் பொருட்டு. சந்தம் - அழகு ; ஈண்டு நன்மை. (அ)

பிழைகள்தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன்தான் உறையுமிடம்
மழைகள்சாலக் கலித்து நீடுயர் வேயவை
குழைகொள்முத்தம் சொரியும் தண்கழுக் குன்றமே.

(ப - ரை.) பின் சடை பிஞ்ஞகன் - பின்னுற் பிறங்கும் சடையையுடைய பிஞ்ஞகரும், குழை கொள் காதன் - குழையினை

யணிந்த திருச்செவியை யுடையவரும், குழகன் - பேரழகுடைய வருமாகிய இறைவர், உறையும் இடம் - வசிக்கும் இடமாகிய, மழைகள் - மேகங்கள், சால - மிகுதியும், கலித்து: முழங்குத லால், நீடு உயர் - மிகவும் உயர்ந்த, வேய் அவை - மூங்கில்களா னவை, குழை கொள் - வளப்பங் கொண்ட, முத்தம் - முத்துக் களை, சொரியும் - சொரிகின்ற, தண் - குளிர்ச்சி பொருந்திய, கழுக்குன்றம் - திருக்கழுக்குன்றத்தை, பிழைகள் - குற்றங்கள், தீர - நீங்கும்படி, தொழுமின் - வணங்குங்கள் என்றவாறு.

பின் சடை - பின்னிய சடையுமாம். பிஞ்ஞகன் - சிவன்; தலைக்கோல முடையயன் என்பது பொருள். கலித்து : எச்சத் திரிபு. மேக முழக்கத்தால் சொரியும் என்பது கருத்து. (௯)

பல்லில்வெள்ளைத் தலையன் தான்பயி லும்மிடம்
கல்லில்வெள்ளை அருவித் தண்கழுக் குன்றினை
மல்லின்மல்கு திரள்தோள் ஊரன் வனப்பினால்
சொல்லல்சொல்லித் தொழுவா ரைத்தொழு மின்களே.

(ப - ரை.) பல் இல் - பல் இல்லாத, வெள்ளைத் தலையன் - வெண்டலையை யுடையவனாகிய இறைவன், பயிலும் இடம் - வாழ்கின்ற இடமாகிய, கல்லில் - பாறைகளின்மேற் றவழ்கின்ற, வெள்ளை அருவி - வெண்ணிறமாகிய நீரருவிகளை யுடைய, தண் கழுக்குன்றினை - குளிர்ந்த திருக்கழுக்குன்றத்தை, மல்லின் மல்கு - வலியால் நிறைந்த, திரள் தோள் ஊரன் - திரண்ட தோள்களையுடைய திருநாவலூரன், வனப்பினால் - அழகுபெற, சொல்லல் - சொல்லிய திருப்பாட்டுக்களை, சொல்லித் தொழு வாரை - ஓதி வணங்குகின்றவர்களை, தொழுமின் - வணங்குங்கள் என்றவாறு.

பல்லில் வெள்ளைத்தலை-பல்லில்லாத ஓடு; இறைவன் இதனை யுடையராதலை, 'பல்லிலோட்டினர் பலிகொண் டுண்பவர் பட்டினத்துறை பல்லவ னீச்சரத், தெல்லி யாட்டுகந் தாரிவர் தன்மை யறிவா ரார்' என்னும் ஆளுடைய பிள்ளையார் திரு வாக்கானும் அறிக. சொல்லல்: ஆகுபெயர். (௧0)

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர்

# கோளறு திருப்பதிகம்

## பண் - பியந்தைக் காந்தாரம்

அடிமை

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனுன்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

(ப - ரை.) வேய் உறு தோளி - மூங்கில்போலும் தோள்களை யுடைய உமையம்மையாரை, பங்கன் - இடப்பாகத்தில் உடையவரும், விடம் உண்ட கண்டன் - நஞ்சைப் பருகிய திருநீல கண்டத்தை யுடையவரும் ஆகிய இறைவர், மிக நல்ல - மிகவும் நன்மையாகிய, வீணை தடவி - வீணையை வருடி, மாசு அறு - குற்றமில்லாத, திங்கள் கங்கை - சந்திரனையும் கங்கையையும், முடிமேல் அணிந்து - திருமுடியின்மீது சூடி, என் உளம் - அடியேனது உள்ளத்தில், புகுந்த அதனுல் - எழுந்தருளிய காரணத்தினுல், ஞாயிறு - சூரியனும், திங்கள் - மதியும், செவ்வாய் - செவ்வாயும், புதன் - புதனும், வியாழன் - குருவும், வெள்ளி - சுக்கிரனும், சனி - சனியும், பாம்பு இரண்டும் உடனே - இராகுவும் கேதுவும் ஆகிய பாம்புகளுடனே, அடியார் அவர்க்கு - திருத்தொண்டர்களுக்கு, மிகவே - மிகுதியாகவே, ஆ சறு - குற்றமற்றனவாய், நல்ல நல்ல - நல்லன நல்லன; அவை - அவைகள், நல்ல நல்ல - நல்லன நல்லன என்றவாறு.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் திருமறைக்காட்டில் ஒருங்கே எழுந்தருளியிருந்த காலத்தில், பாண்டிநாட்டில் அரசன் சமண் சமயச் சார்பினனாய் நாடு நவை நெறியுற்ற காரணத்தால் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாரும் மிகவும் வருந்தி, ஆளுடைய பிள்ளையாரைத் தம்நாட்டிற்கெழுந்தருளிச் சமணையொழித்துச் சைவத்தை நிலைநிறுத்தி ஞானத் திருநெறி நடைபெறச் செய்யுமாறு வேண்டி அனுப்பிய விண்ணப்பத்தை மேற்கொண்டு, ஞானபோனகர் புறப்பட்டபோது வாக்கின்தனிமன்னர் பிள்ளையாரை, "நாளகளும் கோள்களும் வலியில; செல்லற்க" எனத் தடுத்தபோது, சிரபுரச் செல்வர், "ஆசறு நல்ல நல்ல; அவை நல்ல நல்ல அடியவாரவர்க்கு மிகவே" என இத் திருப்பதிகத்தை ஓதியருளினரென்பது வரலாறு. கோள்களால் வரற்பாலனவாய துன்பங்களை அறுத்தற்கேதுவாய திருப்பதிகமாதலின், "கோளறு திருப்பதிகம்" என்றனென்க. நாள்களும் கோள்களும் இறைவன் ஆணையின் ஏவல் செய்யுந் தன்மையனவாக, அவை எவ்வாறு ஆசறு நல்லனவாகும் என்னின், இந் நாயன்மார்கள் காரணங்களெல்லாங் கடந்து நின்ற கறைமிடற்றன் சரணங்களே சார்ந்து மரணம் பிறப்பென்றிவையிரண்டின் மயக்கறுத்த சிவசமானர்களாய், நின்மல துரியாதீதத்தைச் சாக்கிரத்தே புரியுந் தன்மையர்களாய்த் தஞ்செயலற்றுச் சிவஞ் செயலுடையார்களாதலின், "தான் செய்யுந் தன்மைகளும் ஆக்கியிடு மன்பர்க் கவன்" என்னுந் திருமொழிக்கேற்ப யாவும் செயவல்லவர்க ளென்க. இவர்கள்பால் முதற்பெருந் தேவர்களெல்லாம் ஏவல் கேட்குந் தன்மையராதலை யறிவேமெனின், இந் நாள்களும் கோள்களும் என்செய வல்லவென்றொழிக. மிக நல்ல வீணை - மிக்க நன்மை பயத்தற்கேதுவாகிய வீணை: ஆன்மாக்கள் மலமொழிந்து வீடுபேறடைதற்கான உலக சிருட்டியைச் செய்வது இவ் வீணைநாதமாதலின் நன்மை பயப்பதாயிற்று. இறைவன் வீணைநாதத்தினால் நாதத்தை எழுப்பி உலகத்தைத் தோற்றுவிப்பன் என்பதாம். இதனை, "பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும் போய், இருங்கடன் மூடி யிறக்கு மிறந்தான் களேபரமும், கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு கங்காளராய், வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" என்னும் வாகீச நாயனாரது திருவிருத்தத்தால் அறிக. தடவுதல் - வருடல், வாசித்தல். உளத்திற் புகுதல்-உளத்தில் அபிவியஞ்சக முறுதல். ஆசறு நல்ல நல்ல - ஆசுற்ற இவை தீயனவெனினும், அடியார்க்கு ஆசறு நல்லனவாகும் என்பது கருத்தாம். பொதுவகையால் அடியார்க்கு நல்ல எனவே, தமக்கு நல்ல என்பது

கூறவேண்டாவாயிற்று; இத் திருப்பாட்டில் நாள்களும் கோள்களும் நல்லன வென்பது கூறப்பட்டது. (௬)

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

(ப - ரை.) என்பொடு கொம்பொடு ஆமை - எலும்பும் பன்றிக்கோடும் ஆமையோடும், இவை - ஆகிய இவைகள், மார்பு இலங்க - திருமார்பில் விளங்காநிற்க, பொன் பொதி - பொலிவுடன் கூடிய, மத்தமாலை - ஊமத்த மலர் மாலையையும், புனல் - கங்கையையும், சூடி - திருமுடியிற் றரித்து, ஏழையுடனே - உமாதேவியாரோடும், எருதேறி - விடையை யூர்ந்து, வந்து - எழுந்தருளி வந்து, என் உளமே புகுந்த அதனால் - அடியேனது உள்ளத்தில் புகுந்த காரணத்தினால், ஒன்பது - ஒன்பதாவது நாளும், ஒன்பதொடு ஒன்று - பத்தாவது நாளும், ஒன்பதொடு ஏழு - பதினாறாவது நாளும், பதினெட்டு - பதினெட்டாவது நாளும், ஆறும் - ஆறாவது நாளும், உடனாய நாள்கள் - இவைகளோடு சேர்த்தெண்ணப்படும் நாள்களும், அவை - ஆகிய அவைகள் யாவும், அடியார் அவர்க்கு - திருத்தொண்டர்களுக்கு, மிக - மிகவும், அன்பொடு - அன்புடன், நல்ல நல்ல - நல்லன நல்லன; அவை - அவைகள், நல்ல நல்ல - நல்லன நல்லன என்றவாறு.

இத் திருப்பாட்டில் வழிநடைக்கு ஆகாதனவாய நாட்கள் அடியார்க்கு நல்லன வென்பது கூறப்பட்டது. வழிநடைக்கு ஆகாத நாட்கள்:—பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயிலியம், மகம், பூரம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், பூரட்டாதி என்பனவாம். ஒன்பதாவது - ஆயிலியம், பத்தாவது - மகம், பதினாறாவது - விசாகம், பதினெட்டாவது - கேட்டை, ஆறாவது - திருவாதிரை. உடனாய நாட்கள் - பிற ஏழு நாட்கள். இவ்வாறன்றிப் பலபடி யெண்ணுவோர் எண்ணிய தெய்தாது இடர்ப்படுவரென்க. (௨)

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி சயமாது பூமி
திசைதெய்வம் ஆன பலவும்
அருநெதி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

(ப - ரை.) உரு வளர் - அழகு மிகுகின்ற, பவள மேனி - பவளம் போலும் செம்மேனியில், ஒளி நீறு அணிந்து - ஒளிமிக்க திருவெண்ணீற்றை அணிந்து, முருகு அலர் - மணங்கமழ்ந்து அலர்கின்ற, கொன்றை - கொன்றை மாலையையும், திங்கள் - பிறையினையும், முடிமேல் அணிந்து - திருமுடியிற் சூடி, வெள்ளை விடைமேல் - வெண்ணிறம் வாய்ந்த எருதின்மேல், உமையோடும் - உமையம்மையாரோடும், என் உளமே புகுந்த அதனால் - அடியேனது உள்ளத்தில் எழுந்தருளிய காரணத்தால், திருமகள் - பொன்மகளும், கலை அது ஊர்தி - நாமகளும், சயமாது - கொற்றவையும், பூமி - பூமகளும், திசை தெய்வம் - திசை காப்பாளர்களும், ஆன பலவும் - ஆகிய பல தெய்வங்களும், அடியார் அவர்க்கு - திருத்தொண்டர்களுக்கு மிக - மிகுதியும், அரு நெதி - அரிய முறை உடையன வென்றாலும், நல்ல நல்ல - நல்லன நல்லன, அவை - அவைகள், நல்ல நல்ல - நல்லன நல்லன என்றவாறு.

ஒளிநீறு - அணிவோர்க்குச் சிவஞான ஒளியைப் பயக்கும் நீறு என்னலுமாம். திருமகள் - செல்வத்திற்குரிய கடவுளாகிய பொன் மகள். கலையூர்தி - கல்விக்குரி கடவுளாகிய நாமகள், சய மாது என வேறு வருதலின். கலையூர்தி என்பதற்குக் கொற்றவை யென்னுது நாமகள் எனப் பொருள் கொள்ளப்பட்டது. கலையது : அது : பகுதிப்பொருள் விகுதி. திசை காப்பாளர்-இந்திரன், அங்கி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவராவர். ஆனபலவும் என்பதால் ஒழிந்த தெய்வங்களும் கொள்ளப்பெறும்- திசைத்தெய்வம் என்பது தகர வொற்றுக் கெட்டு வந்தது. நெதி - நியதி, முறை. (௩)

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியோடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்

கோதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

(ப - ரை.) மதி நுதல் மங்கையோடு - பிறைபோலும் நெற்றியையுடைய உமையம்மையோடு, வடபால் இருந்து - வட திசையின்கண் ணிருந்து, மறை யோதும் - வேதங்களைத் திருவாய் மலர்ந்தருளுகின்ற, எங்கள் பரமன் - எங்கள் சிவபெருமான், நதியொடு - கங்கா நதியொடு, கொன்றை மாலை - கொன்றை மலர் மாலையை, முடிமேல் அணிந்து - திருமுடியிற் சூடி, என் - அடியேனது, உளமே புகுந்த அதனால் - உள்ளத்திற் புகுந்த காரணத்தால், கொதி யுறு - சினத்தலையுடைய, காலன் - காலனும், அங்கி - தீயும், நமனோடு - நமனும், தூதர் - இயம தூதர்களும், கொடுநோய்கள் - கொடிய நோய்களும், ஆன - ஆகிய, பலவும் - எல்லாம், அடியாரவர்க்கு - திருத்தொண்டர்களுக்கு, மிகவே - மிகவும், அதிகுணம் - அதிக குணஞ் செய்யக் கூடியவாய், நல்ல நல்ல - நல்லன நல்லன; அவை - அவைகள், நல்ல நல்ல - நல்லன நல்லன என்றவாறு.

வடபால் - வட திசையிலுள்ள திருக்கயிலாய மலையிலிருந்து வேத சிவாகமங்களைத் தேவர்க்கு ஓதி யருளினன் என்பது புராணம். கொதி - கொதித்தல், சினத்தல். இயமனும் தீயும் முன்பு திக்குப் பாலகருள் வைத்தெண்ணப்படினும், ஈண்டு உயிர்களுக்கு இறுதி செய்யும் கொடுமை யுடைமைபற்றி வேறு வகையில் வைத்து எண்ணப்பட்டார் என்க. காலன் இயமனது மந்திரிகளுள் ஒருவன். தூதர்கள் - இயம கிங்கரர்கள். குணம்-நன்மை. இத் திருப்பாட்டில் இயமன் இயம தூதுவர் முதலாயினோர் நன்மை செய்தல் கூறப்பட்டது. (௮)

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடு
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூதமவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

(ப - ரை.) நஞ்சணி கண்டன் - நஞ்சை யணிந்த திருநீல கண்டத்தை யுடையவரும், எந்தை - எம் தந்தையும்: மடவாள் தன்னேடு - உமாதேவியாரோடு விடைஏறும்-ஆனேற்றை ஊர்ந் தருள்கின்ற, எங்கள் பரமன்-அடியோங்களது மேலோரும் ஆகிய இறைவர், துஞ்சு - நிலைபெற்ற, இருள் - கருநிறத்தை யுடைய, வன்னி - வன்னியையும், கொன்றை - கொன்றை மலரையும், முடிமேல் அணிந்து-திருமுடியிற்றரித்து, என் உளம்-அடியேனது உள்ளத்தில், புகுந்த அதனல் - எழுந்தருளிய காரணத்தால், வெம் சினம் - கொடிய சினத்தையுடைய, அவுணரோடும் - அசுர ரோடும், உரும் இடியும் - அச்சத்தை விளைக்கும் இடியும், மின்னும் - மின்னலும், மிகையான - மிகுதியையுடைய, பூதம் அவையும் - பூதங்களும், அடியாரவர்க்கு - திருத் தொண்டர்களுக்கு, மிகவே - மிகுதியும் அஞ்சிடு - பயப்படும் தன்மை யுடையனவாகி, நல்ல நல்ல - நல்லன நல்லன; அவை - அவைகள், நல்ல நல்ல - நல்லன நல்லன என்றவாறு.

வன்னித்தளிர் மிகுதியும் கருநிறமுடைமையால் துஞ்சிருள் வன்னி என்றது. உரும் - அச்சம். பூதம் பல பெரிய சிறிய உருவங்களை யுடையனவாகி யாண்டுஞ் செய்தலின் மிகையான பூத மெனப்பட்டது. ''பூதமைந்தின் விலங்கலில் விகாரப்பாட்டின் வேறுபாடுற்ற வீக்கம்'' என்றார் பிறருமென்க. இத் திருப்பாட்டில் அவுணர் இடி முதலியன நலவாதல் கூறப்பட்டது. (௬)

வாள்வரி அதள தாடை வரிகோவ ணத்தர்
மடவாள் தனேடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனல்
கோளரி உழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

(ப - ரை.) வாள் - ஒளியையும், வரி-கோடுகளையும் உடைய, அதள் ஆடை - புலித்தோ லாடையாகிய, வரி கோவணத்தர் - கட்டின திருக்கோவணத்தை யுடைய இறைவர், நாள் மலர் வன்னி - புதிய மலர்களோடு கூடிய வன்னியையும், கொன்றை - கொன்றை மாலையையும், நதி - கங்கையையும், சூடி - திருமுடியிற் சூடி, மடவாள் தன்னேடும் உடனாய் - உமாதேவியாருடன், வந்து-எழுந்தருளி வந்து, என் உளம்-அடியேனது உள்ளத்தில், புகுந்த

அதனால் - புகுந்த காரணத்தால், கோள் அரி - கொலைத் தொழில் வாய்ந்த சிங்கம், உழுவை ஓடு-புலியோடு, கொலை யானை-கொல்லு கின்ற யானை, கேழல் - பன்றி, கொடு நாகமோடு - கொடிய பாம்பினோடு கரடி - கரடி, ஆள் அரி - மனிதத் தன்மை வாய்ந்த குரங்கு ஆகிய இவைகள், அடியாரவர்க்கு - திருத்தொண்டர் களுக்கு, மிகவே - மிகுதியும், நல்ல நல்ல - நல்லன நல்லன; அவை - அவைகள், நல்ல நல்ல - நல்லன நல்லன என்றவாறு.

கோள் - கொலை : சிங்கம் என்னும் பெயரும் கொலைசெய் என்னும் பொருளதாகிய ஹிம்சி என்னும் வடமொழிப் பகுதி எழுத்துக்கள் நிலைமாறுதலால் பிறந்த பெயராதல் அறிக. மனித இயற்கை வாய்ந்த பெரிய குரங்குகள் துன்பஞ் செய்வனவாத லின், ஆளரி என்பதற்குக் குரங்கென்று பொருள் கூறப்பட்டது. இத் திருப்பாட்டில் சிங்கம், புலி முதலான மிருகங்கள் யாவும் நல் லனவாதல் கூறப்பட்டது. (௬)

சேப்பிள முலைநன் மங்கை ஒருபாகம் ஆக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

(ப - ரை.) செப்பு - செப்பின் தன்மை வாய்ந்த, இள முலை- இளமை வாய்ந்த திரு முலைகளையுடைய, நல் மங்கை - நன்மை வாய்ந்த உமாதேவியார், ஒரு பாகம் ஆக - ஒரு பக்கத்தில் அமர, விடை ஏறு செல்வன் - இடபத்தை ஊர்ந்தருளுகின்ற செல்வ ராகிய இறைவர், அடைவோர் - தம்மை அடைவோர், ஒப்பு - விரும்பத்தக்க அழகும், இள - இளமையும் வாய்ந்த, மதியும் - திங்களையும், அப்பும் - கங்கை நீரையும், முடிமேல் அணிந்து- திருமுடியிற் றரித்து, என் உளம் - அடியேனது உள்ளத்தில், புகுந்த அதனால் - எழுந்தருளிய காரணத்தால், வெப்பொடு குளி ரும் - வெப்பத்தோடு குளிர்ச்சியும், வாதம் - வாதமும், மிகை யான பித்தும் - அதிகரித்த பித்தமும், வினையான - மற்றும் தீவினைகளும், அடியாரவர்க்கு - திருத் தொண்டர்களுக்கு, மிகவே - அதிகமாக, வந்து நலியா அப்படி - வந்து வருத்தாத

அவ்விதத்தில், நல்ல நல்ல - நல்லன நல்லன; அவை - அவைகள், நல்ல நல்ல - நல்லன நல்லன என்றவாறு.

செப்பு - வள்ளம்; புகழ்ந்து பேசுதற்குரிய என்றுமாம். ஒப்பு - அழகு. வெப்பு - வெப்பு நோயும், குளிர் - குளிர்ச்சுரமுமாம். வாதம் - வாயு நோய். மிகையான பித்து உன்மத்தமுமாம். வினையான - பழ வினையான் வரும் நோய்கள்; மற்றைய பகுதி பேதத்தால் வரும் நோய்களாதலின்; அப்படி - அவ்வளவு. இத்திருப்பாட்டில் வெப்பம் குளிர்ச்சி முதலிய நோய்கள் நல்லன வாதல் கூறப்பட்டது. (எ)

**வேள்படவிழிசெய் தன்று விடைமேல் இருந்து**
**மடவாள் தனோடும் உடனாய்**
**வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஏழ்கடல் சூழி லங்கை அரையன்றனோடும்**
**இடரான வந்து நலியா**
**ஆழ்கடல் நல்ல நல்ல அவைநல்ல நல்ல**
**அடியா ரவர்க்கு மிகவே.**

(ப - ரை.) வேள் பட - மன்மதன் பட்டொழியும்படி, அன்று - அந்நாளில், விழி செய்து - விழித்து நோக்கி, மடவாள் தனோடும் உடனாய் - உமாதேவியாரோடும் கூடினவராய், வாள் மதி - ஒளியுடைய சந்திரனையும், வன்னி - வன்னியையும், கொன்றை மலர் - கொன்றை மலரையும், சூடி - சிரசிற் றரித்து, விடைமேல் இருந்து வந்து - எருதின் மேல் எழுந்தருளி வந்து, என் உளம் - அடியேனது உள்ளத்தில், புகுந்த அதனால் - புகுந்த காரணத்தால், எழ் கடல் சூழ் - ஏழு கடல்களும் சூழ்ந்த, இலங்கை அரையன் தன்னோடு - இலங்கைக்கரசனாகிய இராவணனோடு, ஆழ் கடல் - ஆழ்ந்த கடல்களும், இடர் ஆன - பிற துன்பங்களும், வந்து நலியா - நெருங்கி வருத்தமாட்டாவாய், அடியார் அவர்க்கு - திருத்தொண்டர்களுக்கு, மிகவே - அதிகமாக, நல்ல நல்ல - நல்லன நல்லன; அவை - அவைகள், நல்ல நல்ல - நல்லன நல்லன என்றவாறு.

வேள் - விருப்பம்; அதனைச் செய்பவன் மன்மதன். படுதல் - இறத்தல். விழி செய்து - விழித்து. ஏழ்கடல் - உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் என்னும் இவற்றாலாயன. இத் திருப்பாட்டில் இராவணன் முதலியோரால் வருந் துன்பங்கள் இலவாதல் கூறப்பட்டது. (அ)

பலபல வேடம் ஆகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெ ருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனுன்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

(ப - ரை.) பலபல வேடம் ஆகும்-பலபலவான திருவுருவங்களோடு கூடிய, பரன் - பரமரும், நாரி பாகன் - பெண்ணொரு பாகரும், பசு ஏறும் எங்கள் பரமன் - விடையை ஊர்கின்ற அடியோங்களது மேலோருமாகிய இறைவர், சல மகளோடு - கங்கை நங்கையாருடன், எருக்கு - எருக்கு மலரையும், முடிமேல் அணிந்து - திருமுடியிற் றரித்து, என் - அடியேனது, உளம் புகுந்த அதனுல் - உள்ளத்தில் எழுந்தருளிய காரணத்தால், மலர் மிசையோனும் - தாமரை மலர்மே விருப்பவராகிய நான்முகத் தேவரும், மாலும் - காத்தற் கடவுளும், மறையோடு - வேதங்களோடு, தேவர் - பிற தேவர்களும், வரு காலம் - சுழன்றுவரும் காலமும், அலைகடல் - அலைகின்ற கடலும், மேரு - மேரு மலையும், ஆன பலவும் - ஆகிய எல்லாமும், அடியார் அவர்க்கு - திருத்தொண்டர்களுக்கு, மிகவே - அதிகமாக, நல்ல - நல்லன, அவை - அவைகள், நல்ல நல்ல - நல்லன நல்லன என்றவாறு.

பரன் - மேலானவன். எருக்கு : முதலாகு பெயர். மறை - வேதம்; இலைமறை காய்போல் எல்லாவற்றையும் தன்னிடத்து மறைத்து வைத்துக்கொண்டிருப்பது. தேவர் : திவ் என்னும் பகுதியடியாகப் பிறந்த பெயர். (திவ்-ஒளி) ஒளியுருவர். அலை கடல்: வினைத்தொகை. இத் திருப்பாட்டில் திருமால் நான்முகன் முதலிய தேவர்களும் கடல் முதலியவும் நல்லன வென்று கூறப்பட்டன. (க)

கோத்தலர் குழலி யோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனுல்

புத்தரோ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

(ப - ரை.) கொத்து அலர் - பூக்கொத்துக்கள் பரந்த, குழலியோடு - கூந்தலையுடைய உமாதேவியாரோடு, விசயற்கு - அருச்சுனனுக்கு, நல்கு - அருள் செய்த, குணம் ஆய - நன்மையையுடைய, வேடு விகிர்தன் - வேடராகிய இறைவர், மத்தமும் - ஊமத்த மலரையும், மதியும் - திங்களையும், நாகம் - பாம்பையும், முடிமேல் அணிந்து - திருமுடியிற் றரித்து, என் - அடியேனது, உளம் புகுந்த அதனால் - உள்ளத்தில் எழுந்தருளிய காரணத்தால், அண்ணல் திருநீறு - பெரியவராகிய இறைவரது திருவெண்ணீறு, புத்தரோடு - புத்தர்களுடனே, அமணை - சமணரை, வாதில் - வழக்கில், அழிவிக்கும் - தோல்வியடைந்து கெடச் செய்யும்; செம்மை திடம் - இது வாய்மையும் உறுதியுமாம்; அத்தகு - அந்தத் தகுதியினால், அடியார் அவர்க்கு - தொண்டர்களுக்கு, மிகவே - மிகுதியாகவே, அவர்களால் வரும் (தீயன யாவும்); நல்ல நல்ல - நல்லன நல்லன: அவை - அவைகள், நல்ல நல்ல - நல்லன நல்லன என்றவாறு.

பிள்ளையார் பாண்டி நாட்டிற்கு எழுந்தருளுங் காரணமும், அதற்குத் திருநீறு துணையாவ தென்பதும் குறிப்பிக்கப்பட்டன. இத் திருப்பாட்டில் புத்தர் சமணர் முதலிய புறச் சமயிகளால் வருந் துன்பம் இலவாதல் கூறப்பட்டது (௧௦)

தேனமர் பொழில்கொள் ஆலைவிளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதிஆய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரைவந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும்அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

(ப - ரை.) செம்பொன் - செம்பொன்னனது, எங்கும் நிகழ - எவ்விடத்தும் வழங்கும்படி, தேன் அமர் - தேன் பொருந்திய, பொழில்கொள் - சோலைகளைக் கொண்ட, ஆலை - கரும்பு

களும், விளை செந்நெல் - விளைகின்ற செந்நெல்லும், துன்னி வளர் - நெருங்கி வளர்கின்ற, நான்முகன் ஆதியாய - பிரமதேவர் முதற்கட் பூசித்த, பிரமா புரத்து - பிரமாபுரம் என்கின்ற சீகாழியில் அவதரித்த, மறைஞானம் - வைதிக ஞானத்தை யுடைய, ஞான முனிவன் - திருஞான சம்பந்தன், உறு - உற்ற, கோளும் நாளும் - கோள்களும் நாள்களும், அடியாரை - திருத் தொண்டரை, வந்து - மேவி, நலியாத வண்ணம் - வருத்தாத வாறு, உரை செய் - உரைத்த, ஆன - நன்மை பயத்தற்காகிய, சொல் மாலை - சொன் மாலையாகிய திருப்பதிகத்தை, ஓதும்- ஓதுகின்ற, அடியார்கள் - திருத்தொண்டர்கள், வானில்-மேலுல கத்தில், அரசாள்வர் - அரசராக ஆளக் கடவர்கள்; நமது ஆணை- இது நமது கட்டளை என்றவாறு.

கரும்புகள் சோலையாக வளர்தலின், பொழில் கொள் ஆலை எனப்பட்டது. ஆலை - கரும்பு. கரும்புகளோடு செந்நெல் துன்னி விளைதல் - ஒன்றின் பக்கல் ஒன்று நெருங்கி விளைதல். இதனை, "அரும்புயர்ந்த வரவிந்தத் தணி மலர்களேறி யன்னங்கள் விளை யாடு மகன்துறையி னருகே, கரும்புயர்ந்து பெருஞ் செந்நெ னெருங்கிவிளை கழனிக காளுட்டு முள்ளூரிற் கண்டு தொழு தேனே" என்னும் ஆளுடைய நம்பிகள் திருவாக்கா னறிக கரும்புஞ் செந் நெல்லும் வளம்பட விளைதலின், செம்பொன் மலிவதாயிற்று என்பது. நான்முகன் ஆதியாய - சீகாழிக்கு உளவாய பன்னிரு பெயர்களில் பிரமபுரமே முதலதாய், அப் பெயர்க் காரணமாகிய பிரமதேவர் பூசித்ததே எல்லாவற்றிற்கும் முன்னிகழ்ந்ததாதலின், இவ்வாறு கூறப்பட்டது. மறை ஞான ஞான முனிவன் எனவே, வேத முதலிய கலை ஞானமும், அவற்றிற் கப்பாலாகிய பரஞானமும் ஆகிய எல்லா ஞானமு முடைய ரென்பதாம். நாளும் கோளும் தமக்கு நல்லனவல்ல, வலியில என்று வாகீசத் திருமுனிவராற் கூறப்பட்ட இவை, அடி யார்க்கு நல்ல எனவே, அவருள் ளொருவராகிய தமக்கும் நல்ல வென்பது சொல்லாதே அமைவதாயிற்று. ஆன - நன்மைக் கேதுவாய. நமது ஆணை: நின்மல துரியா தீதத்தைச் சாக் கிரத்தே புரியும் சிவகரணமுடையராதலின் இவ்வாறு கூறிய தென்க. (கக)

திருச்சிற்றம்பலம்

# திருநாவுக்கரசுநாயனர்

# திருவாரூர்த் திருவிருத்தம்

## பண் -கொள்ளி

### அடிமை

திருச்சிற்றம்பலம்

குலம்பலம் பாவரு குண்டர்முன்
னேநமக் குண்டுகொலோ
அலம்பலம் பாவரு தண்புனல்
ஆரூர் அவிர்சடையான்
சிலம்பலம் பாவரு சேவடி
யான்திரு மூலட்டானம்
புலம்பலம் பாவரு தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

(ப - ரை.) அலம்பு அலம்பாவரு - ஒலித்தலைச் செய்கின்ற, தண்புனல் - குளிர்ந்த கங்கை நீரைத் தரித்த, அவிர் சடையான் - விளங்கும் சடையினை யுடையாரும், சிலம்பு - நாதச் சிலம்புகள், அலம்பாவரு - சத்திக்கின்ற, சேவடியான் - திருவடியை யுடையாரும் ஆகிய இறைவரது, ஆரூர் திருமூலட்டானம்-திருவாரூர்த் திருமூலட்டானத்தில், புலம்பு அலம்பாவரு - வருந்தி அழுது வருகின்ற, தொண்டர்க்கு - திருத்தொண்டர்களுக்கு, தொண்டராம் - தொண்டு செய்பவராகும், புண்ணியம் - சிவபுண்ணியமானது, குலம் - கூட்டமாகவும, பலம்-திண்மையோடும், பாவரு-பரவுகின்ற, குண்டர் முன்னே - சமணர் முன்னே, நமக்கு - எங்களுக்கு, உண்டு கொல் - கிடைத்தல் கூடுமோ என்றவாறு.

குண்டர் - சமணர். திருவாரூர் மூலாதாரத் திருவுருவாதலால் மூலட்டானம் எனப்பட்டது. தொண்டர்களின் இலக்கணங்களுள் அழுதல் மிக முதன்மையானதெனவும், அத் துணை

யால் இறைவனைப் பெறுதல் ஆம் எனவும் கூறுப. இதனை, "முழு முதலே யைம்புலனுக்கு மூவர்க்கு மென்றனக்கும், வழிமுதலே நின்பழவடியார் திரள்வான் குழுமிக், கெழுமுதலே யருடந் திருக்க விரங்குங் கொல்லோவென், றழுமதுவேயன்றி மற்றென் செய்கேன் பொன்னம்பலத் தரைசே" எனவும், "யானே பொய்யென் னெஞ்சம் பொய்யென் னன்பும்பொய், யானால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே, தேனே யமுதே கரும்பின் றெளிவே தித்திக்கு மானே யருளா யடியே னுனைவந் துறுமாறே" எனவும், பிறவுமாக வருந் திருமொழிகளைக் கண்டு தெளிந்து கொள்க. (௧)

மற்றிடம் இன்றி மனைதுறந்
தல்லுணா வல்லமணர்
சொற்றிடம் என்று துரிசுபட்
டேனுக்கும் உண்டுகொலோ
விற்றிடம் வாங்கி விசயனொ
டன்றொரு வேடுவனாய்ப்
புற்றிடங் கொண்டான்தன் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே

(ப-ரை.) மற்று இடமின்றி - வேறிடமில்லாமல், மனை துறந்து - வீட்டினை விட்டு, அல் உணா - இரவில் உண்ணாத, வல் அமணர் - வலிய சமணர்களது, சொல் திடமென்று - குருமொழி உறுதி பயப்பதென்று, துரிசு பட்டேனுக்கும் - குற்றத்தை யடைந்த எனக்கும்; வில் திடம் வாங்கி - வில்லைத் திடமாக வளைத்து, விசயனொடு - அருச்சனனோடு, அன்று - அந்நாளில், ஒரு வேடுவனாய் - ஒரு வேடுவனாகி, புற்று இடங்கொண்டான் தன் - புற்றிடங் கொண்டவராகிய இறைவரது, தொண்டர்க்கு - திருத்தொண்டர்களுக்கு, தொண்டராம் - தொண்டராதற்குரிய, புண்ணியம் - சிவபுண்ணியம், உண்டு கொலோ - கிடைத்தல் கூடுமோ என்றவாறு.

அல் லுணாமை சமணர்கள் வழக்கங்களுள் ஒன்று. சொல் - குருமொழி. துரிசு - குற்றம். புற்றிடங் கொண்டான் - வன்மீக நாதன். திருமூலட்டானத்தில் இறைவன் சொரூபம் வன்மீகரூப மாகிய பிருதிவி லிங்க மென்க. புண்ணியம் - நித்தியமாகிய சிவப் பேற்றை யளிக்கும் சிவ புண்ணியம். ஏனைய வெல்லாம் அழிதன் மாலையவாகிய பத போகங்களை யளிப்பன வென்க. வேடுவனாய் விசயனொடு வில் வாங்கி என மாற்றிக்கொள்க. (௨)

ஒருவடி வின்றிநின் றுண்குண்டர்
முன்நமக் குண்டுகோலோ
செருவடி வெஞ்சிலை யாற்புரம்
அட்டவன் சென்றடையாத்
திருவுடை யான்திரு வாரூர்த்
திருமூலட் டானன் செங்கண்
பெருவிடை யானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

(ப - ரை.) செரு - போரில், வடி - தேர்ந்த, வெம் சிலையால் - கொடிய வில்லினால், புரம் அட்டவன் - திரிபுரங்களையும் எரித்தவரும், சென்று அடையா - சென்று அடைய முடியாத, திருவுடையான் - பேரின்பச் செல்வமுடையவரும், திருவாரூர்த் திருமூலட்டானன் - திருவாரூர்த் திருமூலட்டானத்தை யுடையவரும், செங்கண் - சிவந்த கண்களையுடைய, பொருவிடையான் - போர் செய்கின்ற ஆனேற்றை யுடையவரும் ஆகிய இறைவரது, அடித் தொண்டர்க்கு - திருவடித் தொண்டர்களுக்கு, தொண்டராம் - தொண்டராகின்ற, புண்ணியம் - சிவ புண்ணியமானது, ஒரு வடிவு இன்றி - யாதொரு விதமான பொலிவும் இல்லாமல், நின்று உண் குண்டர்முன் - நின்று உண்ணுகின்ற அமணர்க்கு முன்னே, நமக்கு - எமக்கு, உண்டுகொல் - உண்டாகுமோ என்றவாறு.

சமணர்கள் - ஒரு பக்கத்தார் ஆடையில்லாத திகம்பரராயும், மற்றொரு பக்கத்தார் உடையுடையவரெனினும், பாயுடை யுடையராய், புண்ணுடைய பறிதலையுடையராய், மயிற்பீலி குண்டிகை முதலிய வேந்திய கையராய், பாசிப் பல்லராய், விகாரத் தோற்றமுடையராதல் பற்றி ஒரு வடிவில்லாதவ ரெனப்பட்டார். நின்று உண்ணுதல் - சமண சீலங்களுள் ஒன்று. வடி - இது தக்கதென்று தேர்ந்தது. சென்றடையாத் திரு - இறைவன் திருவருளின்றிக் கிடைக்காத முத்திச் செல்வம். (௩)

மாசினை ஏறிய மேனியர்
வன்கண்ணர் மொண்ணரைவிட்டு
ஈசனை யேநினைந் தேசறு
வேனுக்கும் உண்டுகோலோ

தேசனை ஆரூர்த் திருமூலட்
டானனைச் சிந்தைசெய்து
பூசனைப் பூசுரர் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

(ப - ரை.) *தேசனை - ஞானத் திருவுருவுடையவரை, ஆரூர்த் திருமூலட்டானனை - திருவாரூர்த் திருமூலட்டானரை, சிந்தை செய்து - சிந்தித்து, பூசனை - பூசிக்கின்ற, பூசுரர் - வேதியர்களது, தொண்டர்க்கு - தொண்டர்களுக்கு, தொண்டராம் - தொண்டராகின்ற, புண்ணியம் - சிவ புண்ணியமானது, மாசினை ஏறிய - அழுக்கடைந்த, மேனியர் - உடம்பை யுடையவரும், வன்கண்ணர் - கொடியவரும் ஆகிய, மொண்ணரை விட்டு - சமணரை விட்டு, ஈசனையே நினைந்து - சிவபிரானையே சிந்தித்து, ஏசு அறுவேனுக்கும் - குற்றமற எண்ணிய அடியேனுக்கும், உண்டுகொல் - உண்டாகுமோ என்றவாறு.*

*சமணர் வன்கண்ணராதல் - தம் மதச் சார்பில்லாதவர் மீது இழிவேள்வி செய்து பூத முதலியவற்றை ஏவுதல், அன்னோர் வாழ்மட முதலிய இடங்களில் தீ வைத்தல் முதலிய செய்தல். ஏசு - குற்றம். சிவனை இகழ்ந்த குற்றம் முதலிய ஏசுதலுமாம். தேசு - ஞானவொளி. பூசனைப் பூசுரர் - முப்போதுந் திருமேனி தீண்டுவார்.* (௯)

அருந்தும் பொழுதுரை யாடா
அமணர் திறமகன்று
வருந்தி நினைந்தர னேயென்று
வாழ்த்துவேற் குண்டுகொலோ
திருந்திய மாமதில் ஆரூர்த்
திருமூலட் டானனுக்குப்
பொருந்தும் தவமுடைத் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

(ப - ரை.) *திருந்திய - திருத்தமாகிய, மா மதில் - பெரிய மதில் சூழ்ந்த, ஆரூர்த் திருமூலட்டானனுக்கு - திருவாரூர்த் திருமூலட்டானனுக்கு, பொருந்தும் - பொருத்தமாகிய, தவம் உடை - தவச் செயலை மேற்கொண்ட, தொண்டர்க்கு - திருத்தொண்டர்களுக்கு, தொண்டராம் - தொண்டராகின்ற, புண்ணியம் - சிவபுண்ணியமானது, அருந்தும் பொழுது - உண்ணும் பொழுது, உரையாடா - பேசாத, அமணர் திறம் அகன்று -*

சமணர்களது வலிய கூட்டத்தை விட்டு, வருந்தி - வருத்தப்பட்டு, அரனே என்று - சிவனே யென்று, நினைந்து - சிந்தித்து, வாழ்த்துவேற்கு - வாழ்த்துகின்ற எனக்கு, உண்டுகொல் - உண்டாகுமோ என்றவாறு.

உண்ணும்போது வேறு வார்த்தைகள் சொல்லுதல் விலக்கப் பட்டதெனினும், நிறைவுண்டாக வேண்டுவனவற்றைக் கேட் டற்கும்வாய்திறவாது ஊமைபோல வுண்ணுதல் குற்றமாதலின், 'அருந்தும் பொழுதுரை யாடா வமணர்' என்றார். திறம் - தன்மையுமாம். வருந்துதல் - முன்னை நிலையைக் குறித்து இரங் குதல். திருந்திய மதில் - இலக்கணமெல்லாம் அமைந்த மதில்.(௫)

வீங்கிய தோள்களும் தாள்களு
மாய்நின்று வெற்றரையே
மூங்கைகள் போலுண்ணும் மூடர்முன்
னேநமக் குண்டுகொலோ
தேங்கமழ் சோலைத்தேன் ஆரூர்த்
திருமூலட் டானன்செய்ய
பூங்கழ லானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

(ப - ரை.) தேம் கமழ் - தேன் மணக்கின்ற, சோலை - சோலைகளையுடைய, தென் - அழகிய, ஆரூர்த் திருமூலட்டானன்- திருவாரூர்த் திருமூலட்டானன் ஆகிய, செய்ய - செவ்விய, பூங் கழலான் - தாமரை மலர்போலும் திருவடிகளையுடைய இறைவனது, அடித் தொண்டர்க்கு - திருவடித் தொண்டர் களுக்கு, தொண்டராம் - தொண்டாகின்ற, புண்ணியம் - சிவ புண்ணியமானது, வீங்கிய தோள்களும் தாள்களும் ஆய் - பருத்த தோள்களையும் கால்களையும் உடையராய், வெற்றரையே நின்று - உடையின்றித் திகம்பரராய் நின்று, மூங்கைகள்போல் - ஊமை களைப்போல, உண்ணு மூடர் முன்னே - உண்ணுகின்ற மூடர்க ளாகிய சமணர்களுக்கு முன்னே, நமக்கு - எமக்கு, உண்டுகொல் - உண்டாகுமோ என்றவாறு.

மூங்கைகள்போல் உண்ணுதல் - உரையாடா துண்ணுதல். தென் - தென்றிசையுமாம். (௬)

பண்ணிய சாத்திரப் பேய்கள்
பறிதலைக் குண்டரைவிட்டு
எண்ணில் புகழீசன் தன்னருள்
பெற்றேற்கும் உண்டுகொலோ

திண்ணிய மாமதில் ஆரூர்த்
திருமூலட் டானனெங்கள்
புண்ணியன் தன்னடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

(ப - ரை.) *திண்ணிய - திட்பம் வாய்ந்த, மா மதில் - சிறந்த திருமதிலையுடைய, ஆரூர்த் திருமூலட்டானன் - திருவாரூர்த் திருமூலட்டானரும், எங்கள் புண்ணியன் - எங்களது புண்ணியத் திருவுரு வுடையவருமாகிய இறைவரது, அடித்தொண்டர்க்கு - திருவடித் தொண்டர்களுக்கு, தொண்டராம் - தொண்டராதற் குரிய, புண்ணியம் - சிவ புண்ணியமானது, பண்ணிய - கட்டி யுரைக்கும், சாத்திரப் பேய்கள் - சாத்திரப் பேய்களாயுள்ள, பறிதலைக் குண்டரைவிட்டு - மயிர் பறிக்கப்பட்ட தலைகளை யுடைய சமணர்களைவிட்டு, எண்ணில் புகழ் - எண்ண முடியாத பெரும் புகழையுடைய, ஈசன் - சிவபிரானது, அருள் பெற் றேற்கும் - அருள் பெற்றவனாகிய எனக்கும், உண்டு கொல் - உண்டாகுமோ என்றவாறு.*

*பண்ணிய சாத்திரம் - குறைந்த அறிவினை யுடையராகிய மனிதர்களால் பூர்வபட்சப் பொருள்களைச் சித்தாந்தமாகக் கட்டி யுரைத்த நூல்; புனைந்துரை என்றபடி. சாத்திரப் பேய்கள் - இறைவனை யேத்தி யடைதல் நூற்கருத்தென்று அறியாது சாத்தி ரங்களைப் பேசிச் செருக்கித் திரிகின்ற வீணர். இக்கருத்தை இந் நாயனார், "பட்டராகிலென் சாத்திரங் கேட்கிலென், இட்டு மட்டியு மீதொழில் பூணிலென், எட்டுமொன்று மிரண்டு மறியி லென், இட்ட மீசனென் றுதவர்க் கில்லையே" எனவும், "சாத்தி ரம் பல பேசுஞ் சழக்கர்காள், கோத்தி ரமுங் குலமுங் கொண் டென் செய்வீர், பாத்திரஞ்சிவ மென்று பணிதிரேல், மாத்தி ரைக்கு ளருளுமாற் பேரரே" எனவும் கூறுமாற்றாற் காண்க. பறிதலைக்கையாதலை, "தலையெலாம் பறிக்குஞ் சமண்கையரு ணிலையினுன் மறைத்தால் மறைக்கொண்ணுமே" என்னுந் திருப் பாட்டினுங் காண்க. எண் - அளவுமாம்.* (எ)

கரப்பர்கள் மெய்யைத் தலைபறிக்
கச்சுகம் என்னுங்குண்டர்
உரைப்பன கேளாதிங் குய்யப்போந்
தேனுக்கும் உண்டுகொலோ

திருப்பொலி ஆரூர்த் திருமூலட்
டானன் திருக்கயிலைப்
பொருப்பன் விருப்பமர் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

(ப - ரை.) திரு பொலி - எல்லாவிதமான செல்வமும் பொலிந்த, ஆரூர்த் திருமூலட்டானன் - திருவாரூர்த் திருமூலட்டானரும், திருக்கயிலைப் பொருப்பன் - திருக்கயிலாய மலையையுடையவருமாகிய இறைவரிடத்து, விருப்பு அமர் - விருப்பங்கொண்ட, தொண்டர்க்கு - திருத்தொண்டர்களுக்கு, தொண்டராம் - தொண்டராகின்ற, புண்ணியம் - சிவ புண்ணியமானது, மெய்யை - தம்முடம்பை, கரப்பர்கள் - பாய்கொண்டு மறைப்பாராய், தலைபறிக்க - தலைமயிரைப் பறிக்க, சுகம் என்னும் - நலமென்று சொல்லுகின்ற, குண்டர் - சமணர்கள், உரைப்பன - சொல்லுவனவற்றை, கேளாது - கேளாமல், இங்கு - இவ்விடத்தில், உய்யப்போந்தேனுக்கும் - பிழைக்க வந்தவனாகிய எனக்கும், உண்டுகொல் - உண்டாகுமோ என்றவாறு.

காத்தல் - மறைத்தல்; பாயினால் மறைத்தல் ஈண்டுக் கருதப்பட்டதென்க. தலையினை மழித்தலால் பேன் முதலிய இறந்துபடுமென்று கருதித் தலைமயிரைப் பறிக்குங்கொள்கை சமணர்களது நோன்பென்றுணரப்படும். உரைப்பன - உரைக்கும் பொய்யுரைகள். திரு - செல்வம்; கல்வி, வீடு என்பனவெல்லாங் கொள்க. (அ)

கையில் இடுசோறு நின்றுண்ணும்
காதல் அமணரை விட்டு
உய்யும் நெறிகண்டிங் குய்யப்போந்
தேனுக்கும் உண்டு கொலோ
ஐயன் அணிவயல் ஆரூர்த்
திருமூலட் டானனுக்குப்
பொய்யன் பிலாஅடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

(ப - ரை.) ஐயன் - உலகத் தந்தையாகிய, அணிவயல் - அழகிய வயல்கள் சூழ்ந்த, ஆரூர்த் திருமூலட்டானனுக்கு - திருவாரூர்த் திருமூலட்டானனுக்கு, பொய்அன்பு-பொய் பொருந்திய அன்பு, இலா - இல்லாத: அடித்தொண்டருக்கு - திருவடித்

தொண்டர்களுக்கு. தொண்டராம் - தொண்டராகின்ற, புண்ணியம் - சிவ புண்ணியமானது, கையில் இடுசோறு - கையில் இடுகின்ற சோற்றை, நின்று உண்ணும் - நின்றபடி யுண்ணுகின்ற, காதல் - ஆசையையுடைய, அமணரை விட்டு - சமணரைவிட்டு நீங்கி, இங்கு - இவ்விடத்தில், உய்யும் நெறி கண்டு - பிழைக்கும் நன்னெறியை அறிந்து, உய்யப்போந்தேனுக்கும் - உய்யுமாறு வந்தடைந்த எனக்கும், உண்டுகொல் - உண்டாகுமோ என்றவாறு.

கையில் ஏற்றுண்ணுதலும் சமண நோன்புகளுளொன்றென்க. ஐயன் - தலைவன், தந்தை. பொய் அன்பிலா என்றது. உண்மையன்புடைய என்றபடி. "பொய்பொருந்தா, அன்பர்க்கணியன காண்க ஐயாற னடித்தலமே" என்னுந் திருவாக்கும் அது. (௯)

குற்ற முடைய அமணர்
திறமது கையகன் றிட்டு
உற்ற கருமஞ்செய் துய்யப்போந்
தேனுக்கும் உண்டு கொலோ
மற்பொலி தோளான் இராவணன்
தன்வலி வாட்டுவித்த
பொற்கழ லானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

(ப - ரை) மற்பொலி - மற்போரால் பொலிவுற்ற, தோளான் - தோள்களையுடையவனாகிய, இராவணன்றன் - இராவணனது, வலி - வலியை, வாட்டுவித்த - அடர்த்தழித்த, பொற்கழலான் - பொன்போலும் விளங்கும் திருவடிகளையுடைய திருமூலட்டானரது, அடித்தொண்டர்க்கு - திருவடித் தொண்டர்களுக்கு, தொண்டராம் - தொண்டராகின்ற, புண்ணியம் - சிவபுண்ணியமானது, குற்றமுடைய - குற்றத்தையுடைய, அமணர் திறம் அது - சமணர்களது சமயத்திறத்தை, கையகன்றிட்டு - விட்டு நீங்கி, உற்ற கருமம் செய்து - பொருந்திய திருத்தொண்டின் காரியங்களைச் செய்து, உய்யப் போந்தேனுக்கும் - பிழைக்கப் போந்தவனாகிய எனக்கும், உண்டுகொல் - உண்டாகுமோ என்றவாறு.

திறம் - சமயத்திறம். கையகன்றிட்டு: கையகன்றிடு: பகுதி, ஒருசொல்; விட்டு நீங்கி என்பது பொருள். உற்ற கருமம் - திருத்தொண்டுக்கான நற்கருமங்கள். பொற்கழல் — "ஆணிக்கனகமொக்குமையாற னடித்தலம்." (௧௦)

திருச்சிற்றம்பலம்

### சுந்தரமூர்த்திநாயனார்

# திருத்தொண்டத்தொகை

---

## பண் - கொல்லிக்கௌவாணம்

**அடிமை**

*திருச்சிற்றம்பலம்*

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற்கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(ப - ரை.) ஆரூரில் அம்மானுக்கு - திருவாரூரில் எழுந்தருளிய இறைவருக்கு, ஆள் - ஆட்பட்டவனாகிய, ஆரூரன் - ஆரூரனாகிய யான், தில்லைவா ழந்தணர்தம் - தில்லைவா ழந்தணருடைய, அடியார்க்கும்-அடியவர்க்கும், அடியேன் அடியவனாகின்றேன்; திருநீலகண்டத்து-திருநீலகண்டமென்று சொல்லும்,குயவனார்க்கு-வேட்கோவராகிய திருநீலகண்ட நாயனார்க்கு அடியேன் - அடியவனாகின்றேன்; இல்லையே என்னாத-அடியவர்க்குத் தம்மிடத்துள்ள வெவைதையும் இல்லை யென்று சொல்லாத, இயற்பகைக்கும்- இயற்பகை நாயனாருக்கும், அடியேன் - அடியவனாகின்றேன்; இளையான்றன் குடிமாறன் - இளையான்குடிமாற நாயனாரது, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன் - அடியவனாகின்றேன்; வெல்லுமாறு - வெற்றிபெறுந் தன்மையில், மிகவல்ல - அதிக வன்மை வாய்ந்த, மெய்ப்பொருளுக்கு - மெய்ப்பொருனாயனாருக்கு, அடியேன் - அடியவனாகின்றேன்; விரிபொழில் சூழ் - விரிந்த சோலைகள் சூழ்ந்த, குன்றையார் - திருச்செங்குன்றூரிற்

றிருவவதாரஞ் செய்தவராகிய, விறன் மிண்டற்கு-விறன்மிண்ட நாயனாருக்கு, அடியேன் - அடியவனாகின்றேன், அல்லி - அக விதழ்களையுடைய, மெல்-மெல்லிய, அம்-அழகிய, முல்லையந்தார்-முல்லை மாலை யணிந்தவராகிய, அமர்நீதிக்கு - அமர்நீதி நாயனாருக்கு, அடியேன் - அடியவனாகின்றேன் என்றவாறு.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரிலே கடவுள் வணக்கஞ் செய்யச் சென்றபோது தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளி யிருந்த அடியார்களைச் சிந்தித்து இவர்க்கு நாம் ஆளாகும் நாள் எந்நாள் என்று எண்ணிச் செல்ல, அப்போது அங்கு எழுந்தருளி யிருந்த விறன்மிண்ட நாயனார், "இவன் அடியவரை வணங்காது செல்லுகின்றான்; நமது சமயத்திற்குப் புறகு; இவனைப் பொருளென வாண்ட இறைவரும் புறகு" என்று கூறியதைக் கேட்டுக் கடவுள் திருமுன்னில் விண்ணப்பித்துக்கொள்ள, கடவுள் "இவரைப் பாடு" என்ன, நம்பியாரூரர் "இவரது பெருமையை என்னென்றறிந்து எவ்வாறு பாடுவேன்" என்று வேண்டிக்கொள்ள, இறைவர் இவருக்கு அடியார் பெருமையெல்லாம் நன்குவிளக்கித், "தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்" என்று அடியெடுத்துக் கொடுக்க, இத் திருப்பதிகத்தைப் பாடியருளினார் என்பது இதன் வரலாறு. இத் திருத்தொண்டத் தொகை யொன்று இல்லையேல் இதன் வகையாகிய திருத்தொண்டர் திருவந்தாதியும், அதன் விரிவாகிய திருத்தொண்டர் புராணமும் இல்லையாய், நிலவுலகத்து அடியவர் பெருமை வெளிப்படுவதற்கு ஏதுவில்லை யென்க. திருத்தொண்டத் தொகை - திருத்தொண்டர்களது கூட்டம். அது பிறகு அதன் சிறங்கூறிய திருப்பதிகத்தை யுணர்த்துகின்றது. தில்லைவாழந்தணர் - இவர் தொகை யடியார் ஒன்பதின்மருள் முதற்றொகுதியார், ஊரும்மரபுந் தொகையும் அறிந்தவர். இளையான்றன்குடி - இளையான்குடி. தன் - சாரியை. அமர்நீதி நாயனார் வணிகராதலின் அவரது மரபுக்குரிய முல்லைமாலை கூறப்பட்டது. ஆரூரில் அம்மானுக்கு அடிமைப் பட்டவன் அவனது அடியார்க்கும் அடிமைப்பட்டேன் என்பது கருத்து. அடியார்க்குமடியேன் என்றது, அடியவர் சென்று சேர்தற்கரிய பெரியர் ஆதலின் அவர் அடியவர்க்கடிமை யாதலே சாலும் என்றபடி. இஃது எல்லையில்லாத பெருமையை யுணர்த்தி நிற்கின்றது. இறைவனுக் கடிமைப்பட்டும் அடியவர்க் கடிமைப் படுதலில்லையேல், அவரை யிறைவன் உகவாமற் புறக்கணிப்பன் என்பது நூற்றுணிபென் றறிக. இதனை, "ஈசனுக்கன் பில்லா ரடியவர்க்கன்பில்லா ரெவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்குமன்பில் லார், பேசுவதென் னறிவில்லாப் பிணங்களைநா மிணங்கிற் பிறப் பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ, யாசையொடு மர னடியா ரடியாரை யடைந்திட் டவர்கரும முன்கரும மாகச்

செய்து, கூசிமொழிந் தருண்ஞானக் குறியினின்று கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே" என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா லறிக. (க)

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தற் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(ப - ரை.) ஆரூரில் அம்மானுக்கு—, ஆள்—, ஆரூரன்—, இலைமலிந்த - இலைவடிவு மிக்க, வேல் - மழுப் படையைத் தாங்கிய, நம்பி - நம்பியாகிய, எறிபத்தற்கு - எறிபத்த நாயனாருக்கு, அடியேன்—, ஏனாதிநாதன் - ஏனாதிநாத நாயனாருடைய, அடியார்க்கும்—, அடியேன்—; கலைமலிந்த - நூலறிவு மிக்க, சீர் - முன்னை ஞானச் சிறப்பினையுடைய, நம்பி - நம்பியாகிய, கண்ணப்பற்கு - கண்ணப்ப நாயனாருக்கு, அடியேன்—; கடவூரில் - திருக்கடவூரில் எழுந்தருளியிருந்த, கலயன் - குங்குலியக் கலய நாயனாரது, அடியார்க்கும்—, அடியேன்—, மலைமலிந்த - மலை போலும் பருத்த, தோள் - தோளிணைகளையுடைய, வள்ளல் - வள்ளன்மை வாய்ந்த, மானக்கஞ்சாறன் - மானக்கஞ்சாற நாயனார், எஞ்சாத - குறைதல் இல்லாத, வாள்-வாளையுடைய, தாயன்-அரிவாட்டாய நாயனார் ஆகிய இவர்களது; அடியார்க்கும்—, அடியேன்—; அலைமலிந்த - அலைகள் மிகுந்த, புனல் - நீர் சூழ்ந்த, மங்கை - மங்கலத்தில் எழுந்தருளிய, ஆனாயற்கு - ஆனாய நாயனாருக்கு, அடியேன்—; என்றவாறு:

இலைமலிந்த வேல், ஈண்டுப் பரசு என்னும் மழுவென்பது திருத்தொண்டர் புராணத்தா லறிக. கலைமலிந்த - நூல்களாற் புகழ்தல் மிகுதியும் உடைய எனினுமாம். நம்பி - ஆடவரிற் சிறந்தான். கலயர் - இறைவனது பெயரைத் தமது பெயராகக் கொண்டவர். கலயம் - அமிர்தகடம். எஞ்சாத - குறைவு இல்லாத; தமது தொண்டுக்கு முட்டுப்பட்ட காலத்தில் தங் கையரிவாளினால் ஊட்டியை யறுத்துக்கொண்டு அதனை எஞ்சாத தாக்கினார் என்பதுணர்க. அலைமலிந்த புனல் மங்கை - திருமங்கலம். (உ)

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினுல் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(ப - ரை.) *ஆரூரில் அம்மானுக்கு—, ஆள்—, ஆரூரன்—, மும்மையால் - மூன்று கருவிகளால், உலகு ஆண்ட - உலகத்தை யாண்ட, மூர்த்திக்கும் - மூர்த்தி நாயனுருக்கும், அடியேன்—; முருகனுக்கும் - முருக நாயனுருக்கும், உருத்திர பசுபதிக்கும் - உருத்திர பசுபதி நாயனுருக்கும், அடியேன்—; செம்மையே - செம்பொருட் டன்மையோடு, திருநாளைப் போவார்க்கும் - திருநாளைப் போவார் நாயனுருக்கும், அடியேன்—; திருக்குறிப்புத் தொண்டர் - திருக்குறிப்புத் தொண்டநாயனுருடைய, அடியார்க்கும் - அடியவர்க்கும், அடியேன்—; மெய்ம்மையே - உண்மை யன்போடு, திருமேனி - உடையவரை, வழிபடா நிற்க - பூசியா நிற்ப, வெகுண்டெழுந்த - சினந்தெழுந்த, தாதையை - தம் தந்தையை, மழுவினுல் எறிந்த - மழுவினுல் வெட்டிய, அம்மையான் - வீட்டைத் தருவானுகிய இறைவனது, அடிச்சண்டிப் பெருமானுக்கு - திருவடி யடைந்த சண்டேசுர நாயனுருக்கும், அடியேன்—; என்றவாறு.*

*மும்மை - மூன்றென்னும் பொருளில் வந்தது. "இருமை வகை தெரிந்து" என்பதில் இருமை இரண்டெனப் பொருள் படுவது போல. மூன்றுவகைக்கருவி திருநீறு, கண்மணி, சடைமுடி என்பன. செம்மை — செம்பொருட்டன்மை. மெய்ம்மை - உண்மை யன்பு. திருமேனி - அருளடையாளத் திருமேனி. இது மண்ணியாற்றங் கரையில் மணலில் செய்த அருட்குறி. அம்மையான் - சேய்மைத்தாய வீட்டைத் தருவோன். பெருமான் - தலைவர், நாயனுர்.* (ரு)

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்

ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(ப - ரை.) ஆரூரில் அம்மானுக்கு—, ஆள்—, ஆரூரன்— திருநின்ற - வீடுபேறாகிய செல்வத்திற்கு இருப்பிடமாகிய, செம்மையே - செம்பொருளேயே, செம்மையாக - செவ்விய பற்றுக்கோடாக, கொண்ட - கொண்டருளிய, திருநாவுக்கரையன் - திருநாவுக்கரசு நாயனாருடைய, அடியார்க்கும்—, அடியேன்—; பெருநம்பி - பெருமை தங்கிய நம்பியாகிய, குலச்சிறை - குலச்சிறை நாயனாரது, அடியார்க்கும்—, அடியேன்—, பெருமிழலைக் குறும்பற்கும் - பெருமிழலைக் குறும்ப நாயனாருக்கும், பேயார்க்கும் - பேயுருவடைந்த காரைக்காலம்மையாருக்கும், அடியேன்—; ஒரு நம்பி - ஒப்பற்ற நம்பியாகிய, அப்பூதி - அப்பூதியடிகள் நாயனாரது அடியார்க்கும்—, அடியேன்—; ஒலிபுனல்சூழ் - ஒலிக்கின்ற நீர் சூழ்ந்த, சாத்தமங்கை - சாத்தமங்கையில் அருளால் தோன்றிய, நீலநக்கற்கு - திருநீல நக்க நாயனாருக்கும், அடியேன்—; அருநம்பி - அரிய நம்பியாகிய, நமிநந்தி - நமிநந்தியடிகள் நாயனாரது, அடியார்க்கும்—, அடியேன்—; என்றவாறு.

திரு - பேரின்பம். செம்மை - முன்னையது செம்பொருளெனவும் ; பின்னையது செவ்விய பற்றெனவும் கொள்க. பேயார்-பேயுருவினை யடைந்தார். பேய் - இறைவன் கணங்களி லொரு கணம். (௪)

வம்பறு வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(ப - ரை.) ஆரூரில் அம்மானுக்கு—, ஆள்—, ஆரூரன்—, வம்பு அறு - வாசனை நீங்காத, வரி வண்டு - வரிகளையுடைய வண்டு, கள் - மணம், நாற - வாசனை வீசுமாறு, மலரும் - மலரா

திற்கும், மது - தேன் பொருந்திய, மலர்நல் கொன்றையான் — நல்ல கொன்றை மலரினையுடைய இறைவனது, அடி அலால் பேணு - திருவடியை யல்லாது வேறொன்றையும் விரும்பாத, எம்பிரான - எம் தலைவராகிய, சம்பந்தன் - திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரது, அடியார்க்கும்—, அடியேன்—: ஏயர்கோன் கலிக்காமன் - ஏயர்கோன் கலிக்காம நாயனாரது, அடியார்க்கும் , அடியேன்—: நம்பிரான் - நம் பெருமானாகிய, திருமூலன் - திருமூல நாயனாரது அடியார்க்கும்—, அடியேன்— ; நாட்டமிகு - கண்கள் காணப்பெற்ற, தண்டிக்கும் - தண்டியடிகளாயனாருக்கும், மூர்க்கர்க்கும் - மூர்க்க நாயனாருக்கும், அடியேன்-; அம்பரான் - திருவம்பரில் அருள் தோற்றஞ் செய்தவராகிய, சோமாசிமாறனுக்கும் - சோமாசிமாற நாயனாருக்கும், அடியேன்— ; என்றவாறு.

வம்பறு மது மலர் எனக் கூட்டுக. கொன்றையான் - கொன்றையைத் திருவடையாள மாலையாகவுடைய சிவபெருமான். கொன்றையான் அடியலாற் பேணாமை - சிவபெருமானையன்றி வேறொருவரையும் பொருளென வெண்ணாமை என்றபடி. திருமூல நாயனார் - திருக்கயிலாயத்தினின் றெழுந்தருளிப் பசுக்களது துன்பந் தவிர்த்தற் பொருட்டுத் திருமூலராய்த் திருவாவடுதுறையிற் றங்கிச் சிவாகமத்தமிழ் செய்தவராதலின் நம்பிரான் எனத் தலைமை கூறப்பட்டது. தண்டியடிகள் பிறவிக்குருடராயிருந்து சமணரோடு வழக்கிட்டுத் திருஐந்தெழுத்து ஓதிச் சிவனருளாற் கண் பெற்றமையால் நாட்டமிகும் என்றதென்க. (௬)

வார்கொண்ட வனமுலையாள் உமையங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
சேங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே.

(ப - ரை ) ஆரூரில் அம்மானுக்கு—, ஆள்—, ஆரூரன்— ; வார்கொண்ட - கச்சணிந்த—, வனமுலையாள் - அழகிய திருக்கொங்கைகளையுடையவராகிய, உமைபங்கன் கழலே - உமைபங்காளராகிய இறைவன் திருவடியையே, மறவாது - மறவாமல், கல்எறிந்த - கல்லாலெறிந்த, சாக்கியற்கும் - சாக்கிய நாயனாருக்

கும், அடியேன்-; சீர்கொண்ட-சிறப்பினையுடைய, புகழ்வள்ளல்- புகழினையுடைய வள்ளலாகிய, சிறப்புலிக்கும் - சிறப்புலி நாய னருக்கும், அடியேன்—; செங்காட்டங் குடிமேய - திருச்செங் காட்டங்குடியி லெழுந்தருளிய, சிறுத்தொண்டற்கும் - சிறுத் தொண்ட நாயனருக்கும், அடியேன்—; கார்கொண்ட கொடை - மேகம் கொண்ட கொடை போன்ற கொடையினை யுடைய, கழறிற்றறிவார்க்கும் - கழறிற்றறிவார் என்னும் திருப்பெய ரினையுடைய சேரமான்பெருமாணயனருக்கும், அடியேன்—; கடற்காழி-கடல் சூழ்ந்த சீகாழியில் எழுந்தருளிய, கணநாதன் - கணநாத நாயனரது, அடியார்க்கும்—அடியேன்—; ஆர் கொண்ட - கூர்மை வாய்ந்த, வேல் - வேற்படையை யுடைய, களந்தைக்கோன் - களந்தைக் கிறைவராகிய, கூற்றன் - கூற்றுவ நாயனருக்கு, அடியேன்—; என்றவாறு.

சாக்கியன் - புத்த சமயத்தவரது வடிவந்தாங்கியவர். சிறப் புலிநாயனர் பெருங்கொடை வள்ளலென்பது திருத்தொண்டர் புராணத்துக் காண்க. இவரது திருப்பதியாகிய ஆக்கூரும் பெருங் கொடையாளர் வதிந்த பதியென ஆளுடைய பிள்ளையாரும், நாவலர் காவலரும் கூறுமாறு காணத்தக்கது. "இன்மையாற் சென்றிரந்தார்க் கில்லையென்று நீந்துவர்க்கும், தன்மையா ராக் கூரிற் றான்றோன்றி மாடமே" என்பது தேவாரம். "பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க், குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ், குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச், செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க" எனத் திருவாலவாயுடைய இறைவன் அருளிய திருமுகப் பாசுரத்தும் இவரது கொடைக்குக் கார் உவமையாணமை காண்க. கழறிற்றறிவார் - யாவரும் யாண்டும் கூறுவதைத் தாமிருந்த விடத்திலறியும் பேறு பெற்றவர்; இவ் வரலாற்றைப் பெரியபுராணத்துக் காண்க. (கூ)

போய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
　பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற் கடியேன்
　விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
　கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
　ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(ப - ரை.) ஆரூரில் அம்மானுக்கு—, ஆள்—, ஆரூரன்—; பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் - பொய்யடிமையில்லாத புலவர்க்கும், அடியேன்—; பொழில் - சோலைகள் சூழ்ந்த, கருவூர் துஞ்சிய - கருவூரில் திருவடி நீழலடைந்த, புகழ்ச்சோழற்கு - புகழ்ச் சோழநாயனாருக்கு, அடியேன்—; மெய்யடியான் - மெய்யடியவராகிய, நரசிங்கமுனை யரையற்கு-நரசிங்கமுனையரைய நாயனாருக்கு, அடியேன்—; விரிதிரைசூழ் - விரிந்த அலைகள் சூழ்ந்த, கடல்நாகை - கடல்புடையுடுத்த நாகபட்டினத்தில் தோன்றி யருளிய, அதிபத்தற்கு - அதிபத்த நாயனாருக்கு, அடியேன்—; கைதடிந்த - கையை வெட்டிய, வரிசிலையான் - வரிந்த வில்லையுடையவராகிய, கலிக்கம்பன் - கலிக்கம்ப நாயனார், கலியன் - கலியநாயனார், வரிஞ்சையர்கோன் - வரிஞ்சியூரி லுள்ளார்க்குத் தலைவராகிய, சழற்சத்தி - வீரக்கழலைபணிந்த சத்திநாயனார் ஆகிய இவர்களின், அடியார்க்கு—, அடியேன்—; ஐயடிகள் காடவர்கோன் - ஐயடிகள் காடவர்கோனாயனாரின், அடியார்க்கும்—, அடியேன்—; என்றவாறு.

பொய்யடிமை யில்லாத புலவர் - தொகையடியார் ஒன்பதின் மருள் இரண்டாவது தொகுதியார். புகழ்ச்சோழர் - குடபுலத் தரசர் திறைபெறும் பொருட்டுக் கருவூரடைந்திருந்த காலத்தில் தம் படைவீரர் அதிக னென்பவனை வென்று கொணர்ந்த தலைகளுள் சடைத்தலையொன் றிருக்கக் கண்டு மிகவிரங்கி அரசுரிமையை மைந்தர்பால் சேர்த்தித் திருநீற்று நெறிவிளங்க அரசாளும்படி கட்டளையிட்டுத் தாம் அத்தலையைப் பொற்றட்டில் ஏந்தித் திருஐந்தெழுத்து எண்ணிக்கொண்டு தீயில் வீழ்ந்து திருவடி யடைந்தமையின், "கருவூர்த் துஞ்சிய" என்றனர். வரிஞ்சையர்கோன் - வரிஞ்சியூரில் அருளால் தோன்றி வேளாண் டலைமை வாய்ந்தவராதல் பற்றி இவ்வாறு கூறியதென்க. (எ)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவாற் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(ப - ரை.) ஆரூரில் அம்மானுக்கு—, ஆள்—, ஆரூரன்—, கறைக்கண்டன் - விடக்கறைவாய்ந்த திருமிடற்றினையுடைய

இறைவனது, கழல் அடியே - வீரக்கழல் அணிந்த திருவடியையே, காப்புக்கொண்டிருந்த - மனத்தினிறுத்தி இடையறாது எண்ணுதலையுடைய, கணம்புல்ல நம்பிக்கும் - நற்குண நிறைந்த கணம்புல்ல நாயனாருக்கும், காரிக்கும் - காரி நாயனாருக்கும், அடியேன் —; நிறைக்கொண்ட சிந்தையான் - நிறைவடைந்த மனமுடையவராகி, நெல்வேலி வென்ற - வடபுலத்தரசரைத் திருநெல்வேலிச் செருக்களத்தில் வென்று மேம்பட்ட, நின்றசீர் - நிலைத்த புகழையுடைய, நெடுமாறன் - நெடுமாற நாயனாரது, அடியார்க்கும் —, அடியேன் —; துறைக்கொண்ட - கடற்றுறைகளிலுள்ள, செம்பவளம் - சிவந்த பவளங்கள், இருள் அகற்றும் - இருளையகற்றுகின்ற, சோதி ஒளி மிக்க, தொல்மயிலை - பழையதாகிய திருமயிலாப்பூரில் (அருளால் தோன்றிய), வாயிலான் - வாயிலார் நாயனாரின், அடியார்க்கும் —, அடியேன் —; அறைக்கொண்ட - அறுத்தலையுடைய வேல்நம்பி - வேலைத்தாங்கிய ஆடவரிற் சிறந்தவராகிய, முனையடுவார்க்கு - முனையடுவார் நாயனாருக்கு அடியேன் —; என்றவாறு.

கறை - விடக்கறை, கறுப்பு. அடியே காப்புக் கொள்ளல் - திருவடியை மனத்தில் வைத்து இடையறாது நினைத்தல். நிறை - நிறைவு. நெல்வேலி வென்ற: ஏழாம் வேற்றுமை. நெடுமாறர் - ஆளுடைய பிள்ளையார் திருமொழியில் கூனிமிர்ந்து நெடுமாற நாயனார். மயிலை - இறைவியார் இறைவனை மயிலாய்ப் பூசித்த தலம். அறை - அறுத்தல்; தொழிற்பெயர். ஐ - விகுதி. (அ)

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன் [யேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(ப - ரை.) ஆரூரில் அம்மானுக்கு —, ஆள் —, ஆரூரன் —, கடல் சூழ்ந்த - கடலாற் சூழப்பட்ட, உலகு எலாம் - உலக முழுவதும், காக்கின்ற பெருமான் - ஆளுகின்ற பெருமை வாய்ந்தவராய, காடவர்கோன் - காடவர் மன்னராகிய, கழற்சிங்கன் - கழற்சிங்க நாயனாரது, அடியார்க்கும் —, அடியேன் —; மடல் சூழ்ந்த தார் - இதழ்களையுடைய பூமாலை யணிந்த, நம்பி இடங்கழிக்கும் -

நற்குணம் நிறைந்த இடங்கழி நாயனாருக்கும், தஞ்சை மன்னவனும் - தஞ்சை மாநகரிற் சிறந்தவராகிய, செருத்துணை அடியார்க்கும் - செருத்துணை நாயனாரின் அடியார்க்கும், அடியேன்-; புடைசூழ்ந்த - பக்கத்தில் சூழவுடுக்கப்பட்ட, புலியதள் மேல் - புலித்தோலின்மேல், அரவு ஆட - பாம்பு ஆடும்படி, ஆடி - திருநடனஞ் செய்பவராகிய இறைவரது, பொன் அடிக்கே - பொன் போலும் திருவடிக்கே, மனம் வைத்த - மனம் வைத்த, புகழ்த் துணைக்கும் - புகழ்த்துணை நாயனாருக்கும், அடியேன்—; அடல் சூழ்ந்த - வெற்றி பொருந்திய, வேல் - வேற்படையையுடைய, நம்பி - நம்பியாகிய, கோட் புலிக்கும் - கோட்புலி நாயனாருக்கும், அடியேன்—; என்றவாறு.

காடவர் - குறுநில மன்னர். புகழ்த்துணை நாயனார் இறைவனுடைய திருவடியை மிக நீண்டநாள் வற்கடமாய்ப் பெரும் பஞ்சமுண்டாய காலத்தும், பட்டினிகிடந்து பூசிக்கும் நியம முடையவராய் இருந்தமையின் 'பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணை' என்றார். ஒருநாள் கைசோர்ந்து குடத்தை இறைவன் முடிமீது வீழ்த்திட்டுச் சோர்ந்து இறைவனிடத்துப் படிக்காசும் பெற்றவர் இவர். கோட்புலியார் அரசனிடத்துச் சேனை வீரராய்ப் போர் புரியும் வெற்றியுடையராதலின் 'அடல் சூழ்ந்த வேல் நம்பி' எனப்பட்டார். (க)

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

(ப - ரை.) ஆரூரில் அம்மானுக்கு—, ஆள்—, ஆரூரன்—, பத்தராய்ப் பணிவார்கள் - பத்தராய்ப் பணிவார்கள், எல்லார்க்கும் - எல்லோருக்கும், அடியேன்—; பரமனையே பாடுவார் - பரமனையே பாடுவாரின், அடியார்க்கும்—, அடியேன்—; சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் - சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர்க்கும், அடியேன்—; திருவாரூர்ப் பிறந்தார்கள் - திருவாரூர்ப் பிறந்தார்கள், எல்லார்க்கும் - எல்லார்க்கும், அடியேன்-; முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கு - முப்போதுந் திருமேனி

தீண்டுவார்களுக்கும், அடியேன்—; முழுநீறு பூசிய முனிவர்க்கும்- முழுநீறு பூசிய முனிவர்க்கும், அடியேன்—; அப்பாலும் அடிச் சார்ந்த அடியார்க்கும் - அபபாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும், அடியேன்—; என்றவாறு.

பத்தராய்ப் பணிவார்கள், பரமனையே பாடுவார், சித்தஞ் சிவன்பாலே சேர்த்தார், திருவாரூர்ப் பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலு மடிச் சார்ந்தார் எனும் இவ்வேழு தொகுதியரும் தில்லைவாழந்தணர், பொய்யடிமை யில்லாத புலவர் எனும் இருவரோடுஞ் சேர்த்துத் தொகையடியார் ஒன்பதின்மராவர் என்க. இவருள் தில்லைவா ழந்தணர் திருவாரூர்ப் பிறந்தார் எனும் இருவரும் ஊரறிந்தவர் கள். தில்லைவாழந்தணரும், பொய்யடிமையில்லாத புலவரும் தொகையறிந்தவர்கள். தில்லைவாழந்தணரும் முப்போதுந் திரு மேனி தீண்டுவாரும் மரபறிந்தவர்கள். பொய்யடிமை யில்லாத புலவர் பெயரறிந்தவர்கள். மற்றையர் ஊரும் பேரும் தொகை யும் மரபும் அறியாதவர். (௧௦)

மன்னியசீர் மறைநாவல் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே.

(ப - ரை.) மன்னிய - நிலைபெற்ற, சீர் - சிறப்புவாய்ந்த, மறைநாவன் - வேதங்களை யுணர்ந்த நாவினையுடையவராகிய, நின்றவூர் - திருநின்றவூரில் அருளால் தோன்றிய, பூசல் - பூசலார் நாயனாருக்தம், வரிவளையாள் - வரிவளையை யணிந்தவராகிய, மானிசகும் - மானியார் என்னும் மங்கையர்க்கரசியாருக்கும், நேசனுக்கும் - நேச நாயனாருக்கும், அடியேன்—; தென்னவனாய் - பாண்டிநாட்டு ஆட்சிக்குரியராய், உலகாண்ட - உலகத்தை யாண்ட, செங்கணார்க்கு - கோச்செங்கட் சோழ நாயனாருக்கும், அடியேன்—; திருநீலகண்டத்துப் பாணனார்க்கு - திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாருக்கும், அடியேன்—; என்னவனாம் - எம் தலைவராகிய, அரன் அடியே - சிவபெருமானது திருவடி களையே, அடைந்திட்ட - சரண்புகுந் தருளிய, சடையன் - சடைய

நாயனார், இசைஞானி - இசைஞானியார், காதலன் - இவர் இருவருடைய புதல்வனும், திருநாவலூர்க்கோன் - திருநாவலூருக்குத் தலைவனும் ஆகிய, அன்னவன் ஆம்-அத்தன்மையனாகிய, ஆரூரன்-நம்பியாரூரனது, அடிமை கேட்டு - அடிமைத் தொண்டினைச் சிறப்பித்துப் பாடிய இத் திருத்தொண்டத் தொகையைக் கேட்டு, உவப்பார் - உவப்பார்கள், ஆரூரில் அம்மானுக்கு - திருவாரூரிலெழுந்தருளிய அம்மானாகிய இறைவருக்கு, அன்பராவார் - அன்பர் ஆவார்கள் என்றவாறு.

மறைநாவலன் - வேதங்களை யோதுகின்ற நாவர். நின்றவூர்-திருநின்றவூர்; தொண்டைநாட்டிலுள்ள வைப்புத்திருவூர். மானி-மங்கையர்க்கரசியார். வரிவளையாள் மானி - 'மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை வரிவளைக்கை மடமானி' என்பது ஆளுடைய பிள்ளையார் திருமொழி. சோச்செங்கட் சோழர் - இவர் சோழ மன்னராகவும் பாண்டிநாட்டரசுரிமையும் பெற்ற காரணத்தால் தென்னவனா யுலகாண்ட செங்கணார் எனப்பட்டார். இக் காரணங் கருதியே நம்பியாண்டார் நம்பிகளும் தமது திருவந்தாதியில் இவரை, "நிம்ப நறந்தொங்கற் சோச்செங்க ணானனை நித்தனையே" எனக் கூறினரென்க. முற்பிறப்பாய சிலந்தியின் செங்கண்ணோடு திருவவதாரஞ் செய்தனராதலின் செங்கணார் ஆனார். சடைய நாயனார் சுந்தரமூர்த்தி நாயனாருடைய தந்தையும், இசை ஞானியார் தாயுமாவர். திருநாவலூர் - சுந்தரமூர்த்தி நாயனார் திருவவதாரத் திருவூர். திருத்தொண்டத் தொகை அடிமைத் தன்மையை நாட்டிய திருப்பதிகங்கள் மூன்றனுள் ஒன்றாதலை அடிமைகேட்டுவப்பார் என்று குறிக்கப்பட்ட குறிப்பானுணர்க. அன்பராவர் - திருத்தொண்டராவர் என்க. இப் பதினொரு திருப்பாட்டிலும் ஒன்பது தொகையடியாரோடு அறுபத்து மூன்று தனியடியார்கள் கூறப் பட்டனர் என்க. (கக)

திருச்சிற்றம்பலம்

## அகத்தியமுனிவர் தேவாரத்திரட்டு

## மூலமும் உரையும்

## முற்றுப்பெற்றன.

# மூவர் வணக்கம்

## திருஞானசம்பந்தர்

பயனாகும் நல்லாண் பனைக்கு விடத்திற்கு
மயிலாகும் நோய்க்கு மருந்தாம்—உயிராகும்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்தன் இயம்புதிருப் பாட்டு.

## திருநாவுக்கரசர்

வீட்டிற்கு வாயில் எனும்தொடை
சாத்துசொல் வேந்தபொது
ஆட்டிற்கு வல்லன் ஒருவற்கு
ஞான அமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய்
நினக்குமுன் நல்கினுமென்
பாட்டிற்கு நீயும் அவனும்ஒப்
பிரொப் படியினுமே.

## சுந்தரர்

அறிந்து செல்வம் உடையானும்
அளகைப் பதியான் தோழமைகொண்டு
உறழ்ந்த கல்வி உடையானும்
ஒருவன் வேண்டும் எனஇருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை
துணைவா நினைத்தோழமைகொண்டான்
சிறந்த அறிவு வடிவமாய்த்
திகழும் நுதற்கண் பெருமானே.

—சிவப்பிரகாச அடிகள்.

திருச்சிற்றம்பலம்

# பாட்டு முதற்குறிப்பகராதி


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அஞ்சினர்க் | ௭௯ |
| அடர்செவி | ௧௮0 |
| அட்டானம் என் | ௮௮ |
| அணியனவும் | ௧௯௩ |
| அண்ணாமலை | ௮௭ |
| அந்தணாளனுன் | ௧௯௬ |
| அந்தமில்லா | ௨௩௧ |
| அந்தாமரைப்போ | ௧௯௪ |
| அம்மானை | ௯௬ |
| அரவணையான் | ௧௮௫ |
| அருத்தம | ௪௨ |
| அருநெறி | ௧௮ |
| அருந்தும் பொழுதுரை | ௨௪௭ |
| அருப்போட்டு | ௧௬௨ |
| அரும்பித்த | ௧௮௮ |
| அலைகெழு | ௧௭௯ |
| அலைவளர்நாகம் | ௧௭௬ |
| அறப்பள்ளி | ௮௯ |
| அறிவினான் மிக்க | ௨0௪ |
| ஆங்கணைந்த | ௧௬௩ |
| ஆணாகிப்பெண்ணாகி | ௧௫௬ |
| ஆருருவ உள்குவார் | ௧௬௪ |
| ஆரூர் அத்தா | ௧௧௪ |
| ஆரூர் தில்லை | ௮௬ |
| ஆரூர்மூலட் | ௯௯ |
| ஆறைவடமா | ௯0 |
| ஆற்றல்அடல் | ௪௬ |
| இடுக்கட்பட் | ௬௮ |
| இடைமருதீங்கோ | ௧00 |
| இட்டனும்மடி | ௭௬ |
| இமையாதுயிரா | ௨௨௩ |
| இயக்கர்கின்னரர் | ௨0௧ |
| இயமன்தூதரும் | ௬0 |
| இராவணன்மே | ௪௩ |
| இலங்கைமன்னன் | ௬௩ |
| இலைமலிந்த | ௨௫௪ |
| இல்லகவிளக்கது | ௭௧ |
| இறங்கிச்சென்று | ௨௨௭ |
| இறைவின்றிலங்கு | ௧௩௭ |
| ஈடல் இடபம் | ௪௩௭ |
| உஞ்சேனைமா | ௧0௫ |
| உண்ணாதுறங்கா | ௨௨௯ |
| உயர்ந்மேதன் | ௨௯ |
| உயர்வரைஒல்கு | ௧௮௧ |
| உருவளர் | ௨௩௬ |
| உரைமாலை எல்லாம் | ௧௬௧ |
| ஊராகின்ற | ௨௨௧ |
| ஊனத்தைநீக்கி | ௪௫0 |
| ஊனமில்லா | ௨௩0 |
| ஊனாய் உயிரா | ௩௫ |
| ஊனில் உயிர்ப் | ௪௯ |
| எச்சில் இளம | ௧0௧ |
| எயிலது அட் | ௪௩ |
| எல்லையில்பு | ௭௮ |
| என்பொடு | ௨௩௫ |
| ஏடுவான் இளந் | ௪0 |
| ஏதநன்னிலம் | ௧௯௮ |
| ஏற்றூர்புர | ௩௬ |
| ஒருகாலத் தொன்றாகி | ௧௮௯ |
| ஒருமைபெண்மை | ௧௨ |
| ஒருவடிவின்றின் | ௨௪௬ |
| ஓருருஆயினை | ௧௨௨ |
| ஓவுநாளுணர் | ௭௭ |
| கஞ்சிமண்டையர் | ௬௪ |
| கடல் சூழ்ந்த | ௨௯0 |
| கம்பமால்களிற் | ௨0௫ |
| கரப்பார்கள் | ௨௪௯ |
| கரியவன் நான்முகன் | ௧௮௨ |
| கலவமாமயி | ௨௧௫ |
| கல்லாலின்நீழற் | ௪௫௭ |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| கல்லுயர்மாக்கடல் | ௧௮௪ | சுற்றும் அமரர் | ௧௫௧ |
| கறைகண்டன் | ௨௫௯ | செப்பிளமுலை நன் | ௨௩௯ |
| கனமலர்க்கொன்றை | ௧௭௯ | செம்பொனே | ௮௨ |
| காசைசேர்குழ | ௨௧௩ | செய்ஞ்ஞின்ற | ௧௪௯ |
| காட்டூர்க்கடலே | ௧௧௧ | செறிகழலும் | ௧௬௧ |
| கானஇனியது | ௪௧ | செற்றஅரக்கன் | ௧௪௧ |
| காதல் ஆகிக் | ௫௮ | சொற்றுணை | ௬௬ |
| காத்தாள்ப | ௨௪ | தண்ணார்மதி | ௩௪ |
| காயும் புலியின் | ௧௬௮ | தருக்குமிகுத்துத் | ௧௫௩ |
| காரார்கடலின் | ௧௭௧ | தன்னடியார்க் | ௧௬௧ |
| காருலாவிய | ௨௧௨ | தாங்கூர்பிணி | ௧௧௬ |
| காரூர்புனல் | ௩௭ | தானுதல்செ | ௧௬ |
| கார்வனன்கான் | ௫௪ | தாரிடுகொன்றை | ௧௭௮ |
| காவியங்கருங் | ௨௦௮ | திண்டீச்சரஞ் | ௧௦௬ |
| குண்டமணர் | ௧௮௨ | திருநின்ற செம்மையே | ௨௫௫ |
| குண்டிகைக் | ௪௫ | திருமகட்குச் செந்தா | ௧௯௦ |
| குத்தங்குடி | ௬௪ | தில்லைச்சிற்றம் | ௯௮ |
| குலம்பலம்பாவரு | ௨௪௪ | தில்லைவாழ் | ௨௫௨ |
| குலாவதிங் | ௬௩ | துஞ்சலும் | ௪௭ |
| குற்றமுடைய | ௨௫௧ | தூணிவார்கீளும் | ௧௭௦ |
| கூற்றுயின | ௧௯ | தும்மல் இருமல் | ௫௨ |
| கைம்மா உரியவை | ௧௨௦ | துருத்திச்சுடரே | ௧௧௮ |
| கையில் இடுசோறு | ௨௫௦ | தூயவிடைமேல் | ௧௪௩ |
| கொங்கலா | ௫௦ | தெரித்தகணையால் | ௧௫௧ |
| கொங்கில் குறும்பல் | ௧௧௨ | தேம்பல் நுண்ணிடை | ௨௧௫ |
| கொங்குசேர்குழ | ௨௧௪ | தேனமர் பொழில் | ௨௪௨ |
| கொடுங்கோளூர் | ௧௦௨ | தேனைக்காவல் | ௬௧௮ |
| கொடுவினையார் | ௧௮௬ | தொடுத்தமலரொடு | ௧௪௭ |
| கொத்தவர் | ௨௪௧ | தோடுடையசெவி | ௭ |
| கொத்தார் | ௧௬௯ | நஞ்சணிகண்டன் | ௨௩௭ |
| கொல்வாரே | ௬௧ | நந்திநாமம் | ௬௫ |
| கொன்று செய்த | ௨௨௭ | நம்புவார்ஈமர் | ௫௯ |
| கோணியபிறை | ௮௪ | நரகம் ஏழ்புக | ௬௨ |
| கோலமாள்வரை | ௨௦௦ | நல்லவர்தீய | ௫௦ |
| சடைமுயங் | ௧௪ | நறுமலராய் | ௧௯௨ |
| சலமினல் | ௭௦ | நறைசேர் | ௧௬௮ |
| சலம்பூவோ | ௨௫ | நரையூரிற் | ௧௦௭ |
| சாரணன் | ௮௩ | நற்றமிழ்ஞான | ௫௬ |
| சித்தெழுந்த | ௧௫௨ | நற்றமிழ்வல்ல | ௧௯௧ |
| சில்லுருவாய் சென்று | ௨௨௨ | நாயேன்பல | ௩௨ |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| நிறைக்காட் | ௧௧௩ | மங்கை மணந்த | ௧௩௬ |
| நீர்பரந்த | ௧௧ | மடமுடைய | ௨௩0 |
| நீளநின்று | ௨௨௮ | மண்ணிப்படிக் | ௧0௩ |
| நெக்குளார்வம் | ௬0 | மதிநுதல்மங்கை | ௨௩௬ |
| நெஞ்சம் உமக் | ௨௧ | மந்தரம்அன | ௬௧ |
| நெடியவிசும்பொடு | ௨௨௫ | மந்திரம்நான் | ௪௮ |
| நெற்குன்றம் | ௯௩ | மந்திரம் ஆவது | ௩௮ |
| படைமலிந்த | ௧௫௮ | மயலாகும் | ௧௫௯ |
| பணிந்தாரண | ௨௨ | மரவம்பொழில்சூழ் | ௧௪௩ |
| பண்ணியசாத்திரப் | ௨௪௮ | மருகல் உரை | ௧௧௫ |
| பண்ணியன்றெழு | ௨௧௧ | மருவார்கொன்றை | ௧௬௬ |
| பண்ணின் இசையாக | ௨௨௨ | மருவார்புரமூன்றும் | ௨௧௯ |
| பத்தராய்ப் | ௨௬௧ | மழுவாள்வல | ௩௬ |
| பந்துசேர்விரலாள் | ௨0௭ | மறைகலந்த | ௧௩ |
| பலபலவேடம் | ௨௪௧ | மற்றிடம் இன்றி | ௨௪௫ |
| பல்லில்வெள்ளை | ௨௩௨ | மற்றுப்பற் | ௭௫ |
| பாசமான | ௧௪0 | மனவஞ்சர் | ௯0 |
| பாதம்பணி | ௩௪ | மன்னியசீர் | ௨௬௨ |
| பாராழிவட்டத்தார் | ௧௫௯ | மன்னேமற | ௩௨ |
| பாளையுடைக்கமு | ௧௪௫ | மாசிளை எறிய | ௨௪௬ |
| பிச்சாடல் | ௨௧௮ | மாடமல்கு | ௧௭௩ |
| பித்தாபிறை | ௩௧ | மாட்டூர்மட | ௬௨ |
| பிழைகள்தீரத் | ௨௩௧ | மாப்பிணைதழுவிய | ௭௩ |
| புத்தரோடு | ௧௬ | மாலொடைய | ௪௪ |
| புத்தர்சமண் | ௫௫ | முடியேன்இனிப் | ௩௩ |
| புலியூர்ச்சிற்றம் | ௧௧௬ | முத்திதருவ | ௪0 |
| புலிவலம் | ௧0௮ | மும்மையால் உலகாண்ட | ௨௫௫ |
| புலைகள்தீரத் | ௨௨௯ | முள்ளிநாள்முகை | ௨௧0 |
| பூசஇனியது | ௪௨ | முற்றலாமை | ௧0 |
| பூணெடுநாகம் | ௧௭௭ | முன்னம் அடியேன் | ௨௩ |
| பூவினுக்கருங்கலம் | ௬௭ | முன்னெறியா | ௭௨ |
| பையராவரும் | ௨0௯ | மூவாய்பிறவாய் | ௨௨௪ |
| பொடியுடை | ௧௭௫ | மூவெயில்செற்ற | ௨0௩ |
| பொய்யடிமை | ௨௫௮ | வடியேறுதிரிசூலம் | ௧௫௫ |
| பொருவிடை | ௧௪௬ | வண்டம | ௫௪ |
| பொன்போ | ௨௮ | வம்பறுவரிவண்டு | ௨௫௬ |
| பொன்னூது திரு | ௧௩௯ | வரியமறையார் | ௧௩௫ |
| போதன்போதன | ௬௩ | வருமாகரியின் | ௧௪௨ |
| போர்த்தநீள்செவி | ௨0௨ | வலித்தேன் | ௨௭ |
| போர்த்தாய்அங் | ௨௯ | வாடாமுலையாள் | ௧௭௧ |

| பாட்டு | பக்கம் | பாட்டு | பக்கம் |
|---|---|---|---|
| வாணிலாமதிபோல் | ௨௧௧ | வீழிமிழலை | ௧௦௪ |
| வார்கொண்ட | ௨௫௭ | வெந்தநீறருங் | ௬௯ |
| வாள்வரிஅதள | ௨௩௮ | வெளிறுதீரத் | ௨௨௯ |
| வானத்தார்போற்றும் | ௨௨௦ | வெள்ளை எருத்தின் | ௧௩௮ |
| விண்ணுற | ௬௮ | வேதத்தில் | ௩௯ |
| விண்மகிழ் | ௧௨ | வேயுறுதோளி | ௨௩௩ |
| விண்ணோர் தலைவர் | ௧௬௭ | வேழம் உரிப்பார் | ௧௭௨ |
| வியரிலங் | ௧௫ | வேள்பட விழிசெய் | ௨௪௦ |
| விரும்பிநின் | ௮௧ | வேற்றாகி விண்ணாகி | ௨௧௭ |
| வீங்கிய தோள்களும் | ௨௪௮ | வைச்சபொருள் | ௧௪௮ |
| வீடினார் உலகி | ௭௧ | வைதெழுவார் | ௧௮௭ |
| வீடுபிறப்பை | ௫௩ | வையகம் முற்று | ௧௯௭ |

விலை ரூ. 3-50.